# பொதுத் தமிழ்

## (செய்யுள் - உரைநடை)

### மேல்நிலை – முதலாம் ஆண்டு

### பகுதி I - தமிழ்

தீண்டாமை ஒரு பாவச்செயல்.
தீண்டாமை ஒரு பெருங்குற்றம்.
தீண்டாமை மனிதத்தன்மையற்ற செயல்.

தமிழ்நாட்டுப்
பாடநூல் கழகம்

கல்லூரிச் சாலை, சென்னை –600 006.



©தமிழ்நாடு அரசு
,முதற்பதிப்பு – 2004

**குழுத் தலைவர்**

முனைவர் **இரா. கு. நாகு**
(தமிழ்த்துறைத் தலைவர் – ஓய்வு,
மாநிலக் கல்லூரி),
169, சிரீதரன் தெரு, அய்யாவு குடியிருப்பு,
சென்னை – 600 029.

***நூலாசிரியர்கள்***

புலவர். **இ கோமதிநாயகம்**
முதுகலைத் தமிழாசிரியர்,
அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி,
வில்லிவாக்கம்,
சென்னை – 600 049.

புலவர். **தங்க அன்புவல்லி**
தலைமையாசிரியை,
அரசு மேல்நிலைப்பள்ளி,
இராசாமடம்,
தஞ்சை மாவட்டம்.

புலவர் **ச. மகாலிங்கம்**
தலைமையாசிரியர்,
அரசு உயர்நிலைப்பள்ளி,
சேங்காலிபுரம்,
திருவாரூர் மாவட்டம்.

புலவர் **ச. நலங்கிள்ளி**
முதுகலைத் தமிழாசிரியர்,
எஸ்.பி.ஓ.ஏ. இளநிலைக் கல்லூரி,
அண்ணாநகர் மேற்கு,
சென்னை–600 101.

***மேலாய்வாளர்கள்***

முனைவர் **தெ. ஞானசுந்தரம்**
(தமிழ்த்துறைத் தலைவர்–ஓய்வு,
பச்சையப்பன் கல்லூரி)
149, பூங்காச் சாலை,
அண்ணாநகர் மேற்கு விரிவாக்கம்,
சென்னை – 600 101.

முனைவர். **திருமதி.லில்லி தி.ஸ்டுவார்ட்**
தமிழ்த்துறை,
தூய கிறித்தோபர் கல்வியியல் கல்லூரி,
வெப்பேரி,
சென்னை – 600 007.

முனைவர் **கோ. பெரியண்ணன்**
தலைமையாசிரியர்,
அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி,
செங்கற்பட்டு,
காஞ்சிபுரம் மாவட்டம்.

விலை ரூ.

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா

பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா

விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா

தவ சுப நாமே ஜாகே
தப சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா

ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா

ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

– மகாகவி இரவீந்திரநாத தாகூர்

## நாட்டுப் பண் – பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற
நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.

நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும்
மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒரிசாவையும்,
வங்காளத்தையும், உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமய மலைத் தொடர்களில்
எதிரொ லிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின்
இன்னொ லியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால்
வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன.

இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே, உனக்கு
வெற்றி! வெற்றி! வெற்றி!



## தேசியப்பாடல்

வந்தே மாதரம்;
ஸுஜலாம், ஸுபலாம் மலயஜ ஸ்ரீதலாம்
ஸஸ்ய ஸ்யாமலாம் மாதரம்

ஸுப்ர ஜ்யோத்ஸ்நா புலகித யாமிநீம்
புல்ல குஸுமித த்ரும் தள ஸோபிநீம்

ஸுஹாஸிநீம், ஸுமதுர பாஷிநீம்
ஸுகதாம், வரதாம், மாதரம்!
வந்தே மாதரம்!
வந்தே மாதரம்!

*பங்கிம் சந்திர சாட்டர்ஜி*

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன்பிறப்புகள்.

எனது நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்பிற்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன். எல்லோரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.

# தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும், ஒருமைப்பாட்டையும் பேணிக் காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று உளமார நான் உறுதி கூறுகின்றேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன்' என்றும் 'சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல் – பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கின்றேன்.

## தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே !
உன் சீரிளமைத் திறம் வியந்து
செயல் மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

-மனோன்மணீயம் பெ. சுந்தரம்பிள்ளை.



# பொருளடக்கம்
## செய்யுட்பகுதி


1. வாழ்த்து:
   - (அ) இறை வாழ்த்து * 1
   - (ஆ) மொழி வாழ்த்து * 2
   - (இ) நாட்டு வாழ்த்து * 3
2. தொகைநூல்கள்:
   - (அ) புறநானூறு * 11
   - (ஆ) அகநானூறு 13
   - (இ) ஐங்குறுநூறு 15
3. அறஇலக்கியம்: திருக்குறள்
   - (அ) அடக்கமுடைமை * 23
   - (ஆ ஒப்புரவறிதல் 25
   - (இ) காலமறிதல் 27
   - (ஈ) வ– யறிதல் * 29
4. தொடர்நிலைச்செய்யுள்:
   - (அ) சீவகசிந்தாமணி (பாடல் 2, 10) * 35
   - (ஆ) சீறாப்புராணம் (பாடல் 15) * 45
   - (இ) மனோன்மணீயம் 53
   - (ஈ) குயில்பாட்டு 58
5. சிற்றிலக்கியங்கள்:
   - (அ) அழகர் கிள்ளைவிடு தூது (கண்ணிகள் 1–5)* 61
   - (ஆ) க– ங்கத்துப் பரணி (பாடல் 1–3) * 65
   - (இ) முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ் 68
   - (ஈ) பெத்தலகேம் குறவஞ்சி (பாடல் 2)* 70
6. மறுமலர்ச்சிப் பாடல்கள்:
   - (அ) எந்நாளோ (பாடல் 1)* 75
   - (ஆ) பூக்கட்டும் புதுமை 77
   - (இ) விடுதலை விளைத்த உரிமை 79
   - (ஈ) தளை 81
   - (உ) கண் 83
   - (ஊ) தண்ணீர் வங்கிகள் 86
7. வழிபாட்டுப் பாடல்கள்: 88
   - (அ) தேவாரம்
   - (ஆ) திருப்பாவை
   - (இ) இரட்சணியயாத்திரிகம்
   - (ஈ) வீரசோழியம் (மேற்கோள்)


(உடுக்குறியிடப்பட்ட பகுதிகள் மனப்பாடப் பகுதியைக் குறிக்கும்)

## உரை நடைப்பகுதி


1. கல்வியே அழியாச் செல்வம் – மறைமலையடிகளார் 93
2. வீரச்சுவை – ந.மு.வேங்கடசாமிநாட்டார் 100
3. காளத்திவேடனும் கங்கைவேடனும்– ரா.பி. சேதுப்பிள்ளை 107
4. குடிமக்கள் காப்பியம் – தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் 114
5. ஒய்வு – பேரறிஞர் அண்ணா 119
6. சமயங்களின் பொதுநீதி – குன்றக்குடி அடிகளார் 125
7. கல்வெட்டுகள் – தி.வை. சதாசிவப் பண்டாரத்தார் 132
8. தமிழக மகளிர் – அ. காமாட்சி குமாரசாமி 138

# செய்யுட்பகுதி

## 1. வாழ்த்து

தொடங்கும் செயல் இனிதே நிறைவுற இறையை வாழ்த்தும் மரபின்படி இறைவாழ்த்தும், பேசும் மொழியும், பிறந்த நாடும் அவ்விறையோடு ஒப்ப வைத்து எண்ணப்படுத–ன் அவற்றையும் வாழ்த்துதலே முறையாதலின் மொழி வாழ்த்தும் நாட்டு வாழ்த்தும் இப்பகுதியுள் இடம் பெற்றுள்ளன.

### (அ) இறை வாழ்த்து

அருள்பழுத்த பழச்சுவையே கரும்பே தேனே
ஆரமிர்தே என்கண்ணே அரிய வான
பொருளனைத்தும் தரும்பொருளே கருணை நீங்காப்
பூரணமாய் நின்றவொன்றே புனித வாழ்வே
கருதரிய கருத்ததனுட் கருத்தாய் மேவிக்
காலமும்தே சமும்வகுத்துக் கருவி ஆதி
விரிவினையும் கூட்டிஉயிர்த் திரளை ஆட்டும்
விழுப்பொருளே யான்சொலும்விண் ணப்பங் கேளே.

– தாயுமானவர்

இறைவாழ்த்தாக அமைந்துள்ள இப்பாடல் தாயுமானவரால் இயற்றப்பட்டது. தாயுமானவர்பாடல்கள் என்னும் தொகைநூலிலிருந்து இப்பாடல் தெரிவு செய்யப்பட்டதாகும்.

இந்நூல் 1452 பாடல்களைக் கொண்டதாகும். இறைநெறியை வலியுறுத்தும் இந்நூல் தமிழ் மொழியின் உபநிடதம் எனப் போற்றப் படுகின்றது.

தாயுமானவர் எல்லாரும் இன்புற்றிருக்க நினைத்தவர். அன்பர் பணி செய்ய ஆர்வங் கொண்டவர். அவர் வேதாரண்யம் எனப்படும் திருமறைக்காடு என்னும் ஊரில் கேடிலியப்ப பிள்ளை என்பார்க்கும், கெஜவல்லி அம்மையாருக்கும் மகனாகத் தோன்றியவர். திருச்சிராப்பள்ளியில் கோவில் கொண்டுள்ள இறைவன் பெயர் தாயுமானவர். அப்பெருமான் அருளால் பிறந்தமையால் பெற்றோர் அவருக்குத் தாயுமானவர் எனப் பெயரிட்டனர்.

கேடிலியப்ப பிள்ளை திருச்சிராப்பள்ளியை ஆண்ட விஜயரங்க சொக்கநாத நாயக்கர் என்ற அரசரிடம் கணக்கராகப் பணிபுரிந்து வந்தார். அவர் மறைவுக்குப் பின்னர்த் தாயுமானவர் அப்பணியை ஏற்றார். விஜயரங்க சொக்க நாத நாயக்கர் ஆட்சியிலும், அவர் மனைவி இராணி மீனாட்சி ஆட்சியிலும் கணக்கராகப் பணியாற்றினார். மட்டுவார்குழலி



என்னும் மங்கையை மணந்து வாழ்ந்தார். பின்னர்த் துறவு வாழ்க்கையில் நாட்டங்கொண்டு துறவு பூண்டார். திருமூலர் மரபில் வந்த மௌனகுரு என்பாரின் அருளும், ஆசியும் பெற்றுச் சிறந்து விளங்கினார். அவர் முக்தி பெற்ற இடம் இராமநாதபுரத்தின் ஒரு பகுதியிலுள்ள இலட்சுமிபுரமாகும். அவர் வாழ்ந்த காலம் கி.பி.18 ஆம் நூற்றாண்டாகும்.

#### அருஞ்சொற்பொருள்

ஆரமிர்தே – அரிய அமிழ்தே; பூரணமாய் – முழுமையாய்; புனிதம் – தூய்மை; கருவி ஆதி –கருவிகள் முதலான; உயிர்த்திரளை ஆட்டும் – அனைத்து உயிர்க் கூட்டங்களையும் ஆட்டுவிக்கும்; கருதரிய கருத்ததனுள் கருத்தாய் மேவி – எண்ணிப்பார்க்க முடியாத கருத்துகளுக்கும் உட்பொருளாய் உள்ள; விழுப் பொருளே – மேலான பொருளே. **பாவகை : எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.**

#### இலக்கணம்

பழச்சுவை – ஆறாம் வேற்றுமைத் தொகை – ஆரமிர்து (அருமை + அமிர்து) பண்புத்தொகை; **தரும்** பொருளே – செய்யும் என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சம்; **நீங்காப்** பூரணமாய் – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; கால**மும்** தேச**மும்** – எண்ணும்மை; உயிர்த்திரள் – ஆறாம் வேற்றுமைத் தொகை; சொலும் – சொல்லும் என்பதன் இடைக்குறை விகாரம்; *விழுப்பொருள் – உரிச் சொற்றொடர்;*

### (ஆ) மொழி வாழ்த்து

வைய மீன்றதொன் மக்க ளுளத்தினைக்
கையி னாலுரை கால மிரிந்திடப்
பைய நாவைய சைத்த பழந்தமிழ்
ஐயை தாடலை கொண்டு பணிகுவாம்.

– பள்ளியகரம் நீ. கந்தசாமிப் புலவர்.

இப்பாடலை இயற்றியவர் பள்ளியகரம் நீ. கந்தசாமிப் புலவர் ஆவார். அவர் தஞ்சையின் புறநகர்ப் பகுதியில், தற்பொழுது 'பள்ளியக்கிரகாரம்' என்று வழங்கப்படும் 'பள்ளியகரம்' என்னும் ஊரில் 9–6–1898 அன்று பிறந்தார். அவர் தந்தையார் நீலமேகம் பிள்ளை; தாயார் சௌந்தரவல்லி அம்மையார்.

பள்ளி இறுதி வகுப்பு வரை பயின்ற அவர், தன் சொந்த முயற்சியாலும், பல்வேறு அறிஞர் பெருமக்கள் தொடர்பாலும் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்து பெரும்புலவராக விளங்கினார். மேலும் அவர் தாமே முயன்று ஆங்கிலம், பிரஞ்சு, இலத்தீன், வடமொழி ஆகிய மொழிகளைக் கற்று அம்மொழிகளிலும் புலமை மிக்கவராகத் திகழ்ந்தார்.

பன்மொழிப் புலவராகிய அவ்வறிஞர் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் பல ஆண்டுகள் அமைச்சராக விளங்கியுள்ளார். ஆங்கிலத்திலும் தமிழிலும் பல நூல்களைப் படைத்துள்ளார். தாமஸ்கிரே என்பார் எழுதிய ஆங்கிலக் கவிதை ஒன்றைத் தமிழில் செய்யுள் வடிவில் 'இரங்கற்பா' என்னும் தலைப்பில் மொழி பெயர்த்துள்ளார். தமிழறிஞர்களின் பெருமதிப்பிற்குரியவராய்த் திகழ்ந்த நீ.கந்தசாமிப்புலவர் அவர்கள் 18–06–1977 இல் மறைந்தார்.

### அருஞ்சொற் பொருள்

வையம் – உலகம்; தொன்மக்கள் – பழங்காலத்து வாழ்ந்த மக்கள்; உளத்தினை – தம் மனக்கருத்தை; கையினாலுரை காலம்– சைகையால் உரைத்த காலம்; இரிந்திட – விலகிட; பைய – மெல்ல; நாவையசைத்த பழந்தமிழ் – பேச்சு மொழியாகத் தோன்றிய பழந்தமிழ்; தாள் – திருவடி; ஐயை – தாய். **பாவகை: கலி விருத்தம்**

### இலக்கணம்

தொன்மக்கள்–பண்புத்தொகை; உள்ளம்–ஆகுபெயர்; உரைகாலம்–வினைத்தொகை; பழந்தமிழ்–பண்புத் தொகை; ஐயைதாள் – ஆறாம் வேற்றுமைத் தொகை; தாள் தலை– (தாளைத் தலையால்) – இரண்டாம் வேற்றுமைத்தொகை; பணிகுவாம் –(தன்மைப் பன்மை வினைமுற்று)

## (இ) நாட்டு வாழ்த்து

திருநி றைந்தனை தன்னிக ரொன்றிலை
 தீது தீர்ந்தனை நீர்வளஞ் சார்ந்தனை
மருவு செய்களின் நற்பயன் மல்குவை
 வளனின் வந்ததோர் பைந்நிறம் வாய்ந்தனை
பெருகு மின்ப முடையை குறுநகை
 பெற்றொ ளிர்ந்தனை பல்பணி பூண்டனை
இருநி லத்துவந் தெம்முயிர் தாங்குவை
 எங்கள் தாய்நின் பதங்கள் இறைஞ்சுவாம்.

**- சுப்பிரமணிய பாரதியார்**

இப்பாடலை இயற்றியவர் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் ஆவார். அவர் பாடல்கள் 'பாரதியார் கவிதைகள்' என்னும் தலைப்பில் தொகுக்கப்பெற்று வெளிவந்துள்ளன. அந்நூ–ல் தேசீய கீதங்கள் என்னும் பகுப்பில் இப்பாடல் இடம்பெற்றுள்ளது. வங்க மொழியில் பங்கிம் சந்திர சட்டோபாத்தியாயர் எழுதிய "வந்தே மாதரம்" என்னும் பாடலின் மொழிபெயர்ப்பே இப் பாடலாகும்.

தேசியகவி என்று போற்றப்படும் பாரதியார் எட்டயபுரத்தில் 11–12–1882–இல் சின்னசாமிஅய்யருக்கும் இலக்குமிஅம்மாளுக்கும் மகனாகத் தோன்றினார். இளைமையிலேயே கவிபாடும் திறன் பெற்றிருந்தார். அவர் பாடல்கள் வெள்ளையர் ஆட்சியின் கீழ் அடிமைப்பட்டுக் கிடந்த இந்திய மக்களின் உள்ளங்களில் விடுதலை வேட்கை என்னும் காட்டுத்தீயை மூட்டும் அக்கினிக் குஞ்சுகளாய் அமைந்தன.

பாரதியார் மதுரையில் உள்ள சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராகவும், பின்னர்ச் சென்னையிலிருந்து வெளிவந்த சுதேசமித்திரன் பத்திரிகைக்கு உதவி ஆசிரியராகவும் 'சக்கரவர்த்தினி' என்ற பத்திரிகைக்கு ஆசிரியராகவும், 'இந்தியா' என்ற வாரப்பத்திரிகைக்கு ஆசிரியராகவும் திகழ்ந்துள்ளார். அவர் தமிழுக்கு வளஞ்சேர்க்கும் இலக்கியங்களைப் படைத்தார். கீதையை மொழிபெயர்த்துள்ளார். மேலும், கண்ணன் பாட்டு, குயில்பாட்டு, பாஞ்சாலிசபதம் ஆகிய சிறு காவியங்களையும் படைத்துள்ளார். 11–09–1921 அன்று மறைந்தார்.



### அருஞ்சொற்பொருள்

திரு– செல்வம், வளம்; தன்னிகர் ஒன்றிலை – ஒப்பிட்டுக் கூறமுடியாத உயர்வினை உடையை; மருவு – பொருந்திய; செய் – வயல்; மல்குதல் – நிறைதல்; குறுநகை – புன்னகை; பல்பணி – பல அணிகலன்கள்; இருநிலம் – பெரிய பூவுலகு; பூண்டனை – அணிந்துள்ளாய்; பதங்கள் – திருவடிகள்; இறைஞ்சுவாம் – வணங்குவாம்.**பாவகை : எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.**

### இலக்கணம்

நிறைந்தனை, ஒன்றினை, தீர்ந்தனை, சார்ந்தனை, வாய்ந்தனை, பூண்டனை – இவை முன்னிலை ஒருமை வினைமுற்றுகள்; மருவு செய் – வினைத்தொகை; **பெருகும்** இன்பம் – செய்யும் என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சம்; நற்பயன்; பைந்நிறம் – பண்புத்தொகைகள்.

### புணர்ச்சி விதிகள்

1. நிலைமொழியின் ஈற்றெழுத்து மெய்யாகவும் வருமொழியின் முதலெழுத்து உயிராகவும் இருப்பின் அவ்விரு சொற்களும் புணரும்பொழுது நிலைமொழி ஈற்று மெய்யுடன் வருமொழி முதலில் உள்ள உயிர் சேர்ந்து விடும்.

எ.கா.
பொருள் + அனைத்தும்
 ள
பொரு(ள் +அ) னைத்தும் = பொருளனைத்தும்

விதி: ''உடல் மேல் உயிர்வந் தொன்றுவ தியல்பே''
 – நன்னூல் 204

குறிப்பு: நிலைமொழியில் தனி நெடில் முன் மெய் வந்தாலும், பல எழுத்துகளைத் தொடர்ந்து இறுதியில் மெய் வந்தாலும் மட்டுமே இவ்விதி பொருந்தும். நிலைமொழியில் தனிக்குறில் முன் மெய்வரின் எவ்வாறு புணருமென்பதை அடுத்துவரும் விதியில் காண்க.

2. நிலைமொழியில் தனிக் குற்றெழுத்தின் முன் மெய்வந்து, வருமொழி முதலில் உயிர்வரின் முதலில் நிலைமொழி இறுதி மெய் இரட்டும்.

எ.கா.
எம்+உயிர்
எம்ம் + உயிர் = எம்முயிர்

''தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்'' பின்னர் ''உடல்மேல் உயிர்வந் தொன்றுவ தியல்பே'' என்னும் விதிப்படி

 மு
எம் (ம் + உ) = எம்முயிர் என்று புணரும்.

## 3. உடம்படு மெய்

நிலைமொழி ஈறும், வருமொழி முதலும் உயிர்களாக இருப்பின் அவ்விரு சொற்களும் புணர்ச்சியில் விட்டிசைக்கும். சேர்ந்திசைக்க வேண்டி, உடம்படாத அவ்விரண்டும் உடம்படுதற் பொருட்டு இடையே யகரமும், வகரமும் உடம்படு மெய்களாக வரும்.

நிலைமொழியீறு இகர, ஈகார, ஐகாரமாயின் யகர உடம்படு மெய்யும், ஏனைய உயிர்களாயின் வகர உடம்படுமெய்யும், ஏகாரமாயின் யகரம், வகரம் ஆகிய இரு உடம்படு மெய்களும் வரும்.

விதி : இ, ஈ, ஐ வழி யவ்வும் ஏனை
உயிர்வழிவவ்வும், ஏமுன் இவ்விருமையும்
உயிர்வரின் உடம்படு மெய்யென்றாகும்.

எ.கா.

ல்+இ
1. வ– + அறியார்
ய
வ– (ய் + அ) றியார் = வ–யறியார்

த்+ஈ
2. தீ + எரிந்தது
யெ
தீ (ய் +எ) ரிந்தது = தீயெரிந்தது

வ் + ஐ
3. நாவை + அசைத்த
ய
நாவை (ய் + அ) சைத்த = நாவையசைத்த

ற்+அ
4. நின்ற + ஒன்றே
வொ
நின்ற(வ் + ஒ)ன்றே = நின்றவொன்றே

(ச்+ஏ)
5. சே + அழகு
ய
சே(ய் + அ) ழகு = சேயழகு
வ
சே(வ்+அ) ழகு = சேவழகு

இவ்வாறு உடம்படுமெய் பெற்றபின் ''உடல்மேல் உயிர்வந் தொன்று வதியல்பே'' என்னும் விதிப்படி நிலைமொழி ஈற்று மெய்யுடன் வருமொழி முதலில் உள்ள உயிர் ஏறிப் புணரும்.

குறிப்பு : நிலைமொழியிறுதி உயிராக இருந்தும் குற்றியலுகரமாகவிருப்பின் இவ்விதி பொருந்தாது. அதற்கு மேல்வரும் குற்றியலுகரப் புணர்ச்சியைக் காண்க.



## 4. குற்றியலுகரப் புணர்ச்சி

நிலைமொழியின் இறுதி எழுத்து குற்றியலுகரமாக இருந்து, வருமொழியின் முதலெழுத்து உயிராக இருப்பின் குற்றியலுகரம் தான் ஊர்ந்து வந்த வல்லின மெய்யை நிற்கச் செய்து தான் மட்டும் மறையும். பின் “உடல்மேல் உயிர்வந் தொன்றுவதியல்பே” என்னும் விதிப்படி நிலைமொழியீற்று வல்லின மெய்யுடன் வருமொழி முதலில் உள்ள உயிரேறிப் புணரும்.

எ.கா.

(த்+உ)
கருத்து + அதனுள்
த
கருத் (த்+அ) தனுள் = கருத்ததனுள்

‘உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்’

– நன்னூல்

நிலைமொழியிறுதிக் குற்றியலுகரம், யகர முதன்மொழியோடு புணரும் பொழுது இகரமாகத் திரிந்து புணரும்.

எ.கா.

(க்+உ) இ
கொக்கு + யாது = கொக்கியாது
அவ்வாறு திரியும் இகரம் குற்றிய–கரமாகும்.

‘யவ்வரின் இய்யாம்’

சில இடங்களில் நிலைமொழி இறுதி முற்றுகரம் உயிர் முதன்மொழியோடு புணரும்பொழுது தான் ஊர்ந்து வந்த மெய்யைவிட்டு மறையும். பின் ''உடல்மேல் உயிர்வந் தொன்றுவ தியல்பே'' என்னும் விதிப்படி புணரும்.

எ.கா.

கதவு + அடைப்பு = கத(வ்+அ)டைப்பு = கதவடைப்பு,
(வ்+உ)
செலவு + அயர்ந்திசின் = செலவயர்ந்திசின்.

''உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்
யவ்வரின் இய்யாம் முற்றுமற் றொரோவழி''
– நன்னூல் 164

உக்குறள் – குற்றியலுகரம்; யவ்வரின் – யகரம் வரின்; இய்யாம்–இகர மாகும்; முற்றும் – முற்றுகரமும்; அற்று – குற்றுகரம் போல மெய்விட்டோடும். ஒரோ வழி – சில இடங்களில்.

நெடில் தொடர்க் குற்றியலுகரம், உயிர்த் தொடர்க் குற்றியலுகரம் ஆகியவற்றுள் டகரத்தையும், றகரத்தையும் ஊர்ந்து வரும் குற்றியலுகரங்கள் வருமொழியோடு புணரும் பொழுது அவை ஊர்ந்து வரும் ஒற்று இரட்டித்துப் புணரும்.

எ.கா.

1. கோடு + உகிர்
கோட்டு + உகிர் – டகர ஒற்று இரட்டியது, பின்னர் உயிர்வரின் உக்குறள் என்னும் விதிப்படி
(ட்+உ)
கோட்டு + உகிர் = கோட்டுகிர்
என்று புணர்ந்தது.

2. வயிறு + வலி = வயிற்றுவலி
வயிற்று + வலி = றகர ஒற்று இரட்டியது பின்னர் வயிற்று வலி என்று புணர்ந்தது.

விதி: ''நெடிலோடு டுயிர்த் தொடர்க் குற்றுக ரங்களுள்
டறவொற் றிரட்டும் வேற்றுமை மிகவே''

– நன்னூல் 183

(ல்+ஆ)

5. பலா + பழம்

இதில் நிலைமொழியின் இறுதிஎழுத்து இயல்பாக உயிரெழுத்தாக அமைந்துள்ளது.

கானம் + பறவை

இதில் நிலைமொழி இறுதி மகர ஒற்றாகும். அது வருமொழியோடு புணரும் பொழுது மவ்வீ றொற்றழிந்து என்னும் விதியினால் மகரமெய் அழிந்து,

கான + பறவை
(ன்+அ)
கான + பறவைஎன்பதில் நிலைமொழி உயிரீறாக மாறுகின்றது.

இதுபோல் இயல்பாகவும், விதியினாலும், உயிரீறாக நிற்கும் சொல்முன் வல்லெழுத்தை (க,ச,த,ப) முதலாகவுடைய சொற்கள் வந்து புணரின் அவ்வல்லெழுத்து மிக்குப் புணரும்.

பலா + பழம் = பலாப்பழம்
கானம் + பறவை = கானப்பறவை

விதி: ''இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன்
கசதப மிகும்வித வாதன மன்னே''
– நன்னூல் 165

6. 1. திசைப் பெயர்களோடு வேறு திசைப்பெயர்களோ, பிற சொற்களோ வந்து புணரும்பொழுது நிலைமொழியின் இறுதியில் உள்ள உயிர் மெய்யெழுத்தும் (கு)

ககர ஒற்றும் (க்), நீங்கிப் புணரும்.

2. அவை நீங்கியபின் நிலைமொழியின் இறுதியில் உள்ள றகரம் (ற்)



நகரமாகவோ(ன்) லகரமாகவோ (ல்) திரிந்தும் புணரும்.

எ.கா.

வடக்கு + மேற்கு = வடமேற்கு
ஈற்று உயிர்மெய்யும், ககர ஒற்றும் நீங்கிப் புணர்ந்தது.
தெற்கு + கிழக்கு = தென்கிழக்கு
ஈற்று உயிர்மெய் நீங்கி றகரம் னகரமாகத் திரிந்து புணர்ந்தது.
மேற்கு + நாடு = மேல்நாடு
ஈற்று உயிர்மெய் கெட்டு றகரம் லகரமாகத் திரிந்து புணர்ந்தது.

''திசையொடு திசையும் பிறவும் சேரின்
நிலையீற் றுயிர்மெய் கவ்வொற்று நீங்கலும்
றகரம் னலவாத் திரிதலும் ஆம்பிற.''

– நன்னூல் 186.

## பண்புப் பெயர்ப்புணர்ச்சி

"ஈறுபோதல் இடையுகரம் இய்யாதல்
ஆதி நீடல் அடியகரம் ஐயாதல்
தன்னொற் றிரட்டல் முன்னின்ற மெய்திரிதல்
இனமிகல் இனையவும் பண்பிற் கியல்பே."

– நன்னூல் 136

நற்பயன்
நன்மை + பயன்
'ஈறுபோதல்' நன் + பயன்
ண, ன வல்–னம் வர டறவும் நற் + பயன் = நற்பயன்

பழந்தமிழ்
பழமை + தமிழ்
ஈறுபோதல் பழ + தமிழ்

இனமிகல் (வருமொழி முதல் தகரத்திற்கு இனமாகிய நகரம் மிகுந்தது) பழந் + தமிழ் = பழந்தமிழ்

சிறியன்
சிறுமை + அன்
ஈறுபோதல் சிறு + அன்
ற்+உ)இ
இடையுகரம் இய்யாதல் சிறு + அன்
சிறி + அன்
யகர உடம்படுமெய் பெற்று சிறிய்+அன்=சிறியன்

தொல்கவின் தொன்மை + கவின்
ஈறுபோதல் தொன் + கவின்

| | |
|---|---|
| முன்னின்ற மெய்திரிதல் | தொல் + கவின் |
| | தொல்கவின் |
| பைந்நிறம் | பசுமை + நிறம் |
| ஈறுபோதல் | பசு + நிறம் |
| இனையவும் என்றதனால் இடையுகரம் | |
| சகரத்தோடு கெட்டது | பசு+நிறம் |
| அடியகரம் ஐயாதல் | ப = பை + நிறம் |

'குறில் வழி யத்தனி யைந்நொது முன்மெ– மிகலுமாம்'

என்னும் விதிப்படி வருமொழி முதலில் உள்ள மெல்லினம்(ந்) மிகுந்தது பைந் + நிறம்= பைந்நிறம்.

## பயிற்சி

**I. பெருவினா:**

1. குறிப்பு வரைக.
   அ) தாயுமானவர் ஆ) நீ.கந்தசாமிப் புலவர் இ) சுப்பிரமணிய பாரதியார்
2. இறைவனின் இயல்புகளாகத் தாயுமானவர் தெரிவித்துள்ளன யாவை?
3. நீ. கந்தசாமிப்புலவர் அவர்கள் தமிழ்த்தாயின் பெருமையை எங்ஙனம் போற்றிப் புகழ்ந்துள்ளார்?
4. பாரதத்தாயின் பெருமைகளைப் பாரதியார் எவ்வாறு புகழ்ந்துரைத் துள்ளார்?

**II. இலக்கணக்குறிப்பு எழுதுக.**

**நீங்காப்** பூரணமாய், காலமும் தேசமும், உயிர்த்திரள்
தொன்மக்கள் உரைகாலம் பழந்தமிழ், பணிகுவாம்
நற்பயன் பைந்நிறம்

**III. பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

நின்ற,மேவி, கூட்டி, அசைத்த,
பணிகுவாம், நிறைந்தனை, பூண்டனை இறைஞ்சுவாம்.

**IV. பொருத்துக**

**1.**

| கவிஞர் | பிறந்த ஊர் |
|---|---|
| தாயுமானவர் | எட்டயபுரம் |
| கந்தசாமிப்புலவர் | திருமறைக்காடு |
| பாரதியார் | திருவரங்கம் |
| | பள்ளியகரம் |



**2**

| கவிஞர் | நூல் |
|---|---|
| தாயுமானவர் | பாஞ்சாலிசபதம் |
| கந்தசாமிப்புலவர் | தாயுமானவர் பாடல்கள் |
| பாரதியார் | திருவருட்பா |
| | இரங்கற்பா |

**V. விடை தேர்க:**

1. தமிழ் மொழியின் உபநிடதம்
   அ) கண்ணன் பாட்டு, ஆ) இரங்கற்பா இ) தாயுமானவர் பாடல்கள்.
2. தாயுமானவர் ஆற்றிய பணி,
   அ) அமைச்சர் ஆ) படைத்தலைவர் இ) அரசுக்கணக்கர்
3. பாரதியார் ஆசிரியராக இருந்த வாரப்பத்திரிகை
   அ) சுதேசமித்திரன் ஆ) இந்தியா இ) சக்கரவர்த்தினி
4. பாரதியார் மொழி பெயர்த்த நூல்,
   அ) இராமாயணம் ஆ) பாரதம் இ) கீதை.

# 2. தொகை நூல்கள்

பத்துப்பாட்டும், எட்டுத் தொகையும் சங்க இலக்கியங்களாகும். அவற்றை மேற்கணக்கு நூல்கள் என்று வழங்குவர். எட்டுத்தொகையுள் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்னும் எட்டும் அடங்கும். இதனை,

'நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூ(று)
ஒத்த பதிற்றுப்பத்(து) ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியோ(டு) அகம்புறம் என்(று)
இத்திறத்த எட்டுத் தொகை.'

என்ற பழம்பாடல் உணர்த்துகின்றது. இந்நூல்கள் ஒவ்வொன்றிலும் உள்ள பாடல்கள் பல்வேறு காலத்தில் வாழ்ந்த புலவர் பலரால் பல்வேறு சூழல்களில் பாடப்பட்டவையாகும். எட்டுத்தொகை நூல்களுள் பதிற்றுப்பத்தும், புறநானூறும் புறப்பொருள் இலக்கியங்களாகும். ஏனைய ஆறும் அகப்பொருள் இலக்கியங்களாகும். எனினும் இப்பொழுது நம்மிடை வழங்கும் பரிபாடல் தொகை நூலுள் புறப்பாடல்கள் மிகுதியாக உள்ளன. அதனால் பரிபாடலை அகமும் புறமும் கலந்த பாடல் தொகுதி எனலாம். பழம்பெரும் இலக்கண நூலாகிய தொல்காப்பியம் கூறும் அகப்பொருள், புறப்பொருள் இலக்கணங் களுக்கு எட்டுத்தொகை நூல்கள் இலக்கியங்களாய்த் திகழ்கின்றன.

புறப்பொருள் இலக்கியமான புறநானூற்றிலிருந்து ஒரு பாடலும், அகப்பொருள் இலக்கியங்களான அகநானூறு, ஐங்குறுநூறு ஆகியவற்றிலிருந்து ஒவ்வொரு பாடலுமாக மூன்று பாடல்கள் பாடமாக அமைக்கப்பட்டுள்ளன.

## (அ) புறநானூறு

புறம்+நான்கு+நூறு = புறநானூறு. புறப்பாட்டெனவும், புறம் எனவும் வழங்கப்படுகின்ற இந்நூல் 400 அகவற்பாக்களைக் கொண்டிலங்குகின்றது. அப் பாடல்கள் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்து கி.பி. இரண்டாம் நூற்றாண்டு வரை உள்ள காலப்பகுதியில் வாழ்ந்த புலவர் பலரால் பாடப்பட்டவையாகும். புறநானூற்றுத் தொகுதியின் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் பாரதம்பாடிய பெருந்தேவனார். இவர் பிற்காலத்து வாழ்ந்தவர்.

புறநானூற்றுப் பாடல்கள் வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை என வழங்கப்பெறும் புறத்திணைகளுக்குரிய துறைப்பொருள்கள் கொண்டு அமைந்தவையாகும்.

முடியுடை மூவேந்தர்கள், சிற்றரசர்கள், அமைச்சர்கள், சேனைத் தலைவர்கள், வீரர்கள், கடையெழு வள்ளல்கள், கடைச்சங்கப் புலவர்கள் எனப் பலருடைய வரலாற்றுக் குறிப்புகளும்,



அக்காலத்துள்ளாருடைய நடை முதலியனவும் இந்நூலால் நன்கு புலப்படும். இந்நூலின் சில பாடல்களை அறிஞர் ஜி.யுபோப் அவர்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்.

புறநானூற்றுப் பாடல்களைத் திணை, துறைகளோடு இயைத்துப் படித்தல் வேண்டும்.

அறுகுளத் துகுத்து மகல்வயற் பொழிந்தும்
உறுமிடத் துதவா துவர்நில மூட்டியும்
வரையா மரபின் மாரி போலக்
கடாஅ யானைக் கழற்கால் பேகன்
கொடைமடம் படுத லல்லது
படைமடம் படான்பிறர் படைமயக் குறினே

– பரணர்.

**திணை :** பாடாண் **துறை :** இயன்மொழி

**பாடியோர்:**

இப்பாடலை இயற்றியவர் பரணர். இவர் வரலாற்றுக் குறிப்புகளைப் பாடல்களுள் பொதிந்து வைத்துப் பாடுவதில் வல்லவர். கபிலர் போல மிக்க புகழுடன் வாழ்ந்தவர்; கபில பரணர் என்னும் தொடரால் இது விளங்கும். இவர் பதிற்றுப்பத்தில் ஐந்தாம்பத்து பாடிக் கடல்பிறக் கோட்டிய செங்குட்டுவனிடம் உம்பற்காட்டு வாரியையும், அவன் மகன் குட்டுவன் சேரலையும் பரிசிலாகப் பெற்றவர்.

**பாடப்பட்டோர்:**

இப்பாடல் வையாவிக்கோப்பெரும்பேகன் என்னும் குறுநில மன்னனைப் புகழ்ந்து பாடியதாகும்.பேகன் கடையெழு வள்ளல்களுள் ஒருவன். கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய புகழுக்குரியவன்; இவன் மலைநாட்டை யுடையவன். இவனது ஊர் நல்லூர் என்பதும், இவன் ஆவியர் குடியில் பிறந்தவன் என்பதும் தெரிய வருகின்றன.

**திணைவிளக்கம்:** பாடாண் திணை.

ஒரு மன்னனது புகழ், வலிமை, வள்ளன்மை, அருள் முதலானவற்றை ஆய்ந்து கூறுவது பாடாண் திணையாகும். பாடப்படுகின்ற ஆண்மகனது ஒழுகலாற்றைக் கூறுவது இத்திணையின் நோக்கமாகும்.

**துறைவிளக்கம் :** இயன்மொழி.

ஒரு வேந்தனெதிர்சென்று அவன் தன்மையைக் கூறிப் புகழ்வது இயன்மொழி வாழ்த்து என்னும் துறையாகும். ஒருவனின் இயல்பைப் புகழ்ந்துகூறி வாழ்த்துவது இத்துறையின் உயிர்ப்பாகும்.

### அருஞ்சொற்பொருள்

அறுகுளம் = நீர் வற்றிய குளம்; உகுத்தும் = பெய்தும்; உறுமிடத்து உதவாது = குளம், வயல் ஆகிய பொருத்தமான இடத்துப் பெய்யாது; உவர்நிலம் = களர்நிலம்; ஊட்டியும் = சாலப் பெய்தும்; வரையாமரபு = எல்லையிடாத முறைமை; மாரி = மழை; கடாஅ யானை – மதக்களிறு; கழற்கால் = வீரக்கழல் அணிந்த கால்கள்; கொடைமடம் = வரையறையின்றிக் கொடுத்தலாகிய இயல்பு; படைமடம் = போர் நெறிக்கு மாறுபட்டுப் போர் புரிதலாகிய இயல்பு; படான் = (போர்) செய்யான்; படைமயக்குறுதல் = படைகள் ஒன்றோடு ஒன்று கலத்தல். **பாவகை : நேரிசை ஆசிரியப்பா**

### கொடைமடம்

இல்லாதவர்க்கும், உள்ளவர்க்கும், இரந்தவர்க்கும், இரவாதவர்க்கும் பாகுபாடின்றி வரையாது கொடுத்தல்.

**படைமடம்**

வீரர் அல்லாதார் மேலும், முதுகிட்டார் மேலும், புண்பட்டார் மேலும், மூத்தார் இளையார் மேலும் செல்லுதல்.

### இலக்கணம்

அறுகுளம், அகல்வயல் – வினைத்தொகைகள்; **வரையா** மரபு – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; கடாஅ – இசைநிறையளபெடை; கழற்கால் – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை.

## (ஆ) அகநானூறு

அகம் + நான்கு + நூறு = அகநானூறு. அகப்பொருள் இலக்கணத்திற்கு இலக்கியமாய்த் திகழும் 400 பாடல்கள் அமைந்த நூல் அகநானூறு ஆகும். இந்நூல் களிற்றியானைநிரை, மணிமிடைபவளம், நித்திலக்கோவை என்னும் மூன்று பிரிவுகளையுடையது. களிற்றியானைநிரையில் 120 பாடல்களும், மணிமிடைபவளத்தில் 180 பாடல்களும், நித்திலக்கோவையில் 100 பாடல்களும் உள்ளன. அகநானூற்றில் அமைந்துள்ள பாடல்கள் 13 அடிச் சிறுமையும் 31 அடிப் பெருமையும் கொண்டவை. இந்நூல் நெடுந்தொகை என்றும் வழங்கப்படும்.

இந்நூலில் 1,3,5 என ஒற்றைப்படை எண்களாக வருவன பாலைத்திணைப் பாடல்களாகவும், 2, 8 என வருவன குறிஞ்சித்திணைப் பாடல்களாகவும், 4,14 என வருவன முல்லைத்திணைப் பாடல்களாகவும், 6,16 என்று வருவன மருதத்திணைப் பாடல்களாகவும், 10,20 என்று வருவன நெய்தல்திணைப் பாடல்களாகவும் அமைத்து அழகுறத் தொகுக்கப்பட்டுள்ளன. இந்நூலைத்தொகுத்தவர், மதுரை உப்பூரிகுடிகிழார்மகனார் உருத்திரசன்மர் ஆவார். தொகுப்பித்தோன், பாண்டியன் உக்கிரப்பெருவழுதி ஆவான்.

### பாலை

ஓங்குமலைச் சிலம்பில் பிடவுடன் மலர்ந்த
வேங்கை வெறித்தழை வேறுவகுத் தன்ன
ஊன்பொதி அவிழாக் கோட்டுகிர்க் குருளை
மூன்றுடன் ஈன்ற முடங்கர் நிழத்த
துறுகல் விடரளைப் பிணவுப்பசி கூர்ந்தெனப்
பொறிகிளர் உழுவைப் போழ்வாய் ஏற்றை
அறுகோட்டு உழைமான் ஆண்குரல் ஓர்க்கும்
நெறிபடு கவலை நிரம்பா நீளிடை
வெள்ளி வீதியைப் போல நன்றுஞ்
செலவயர்ந் திசினால் யானே பலபுலந்து
உண்ணா உயக்கமொடு உயிர்செலச் சாஅய்த்
தோளும் தொல்கவின் தொலைய நாளும்
பிரிந்தோர் பெயர்வுக் கிரங்கி
மருந்துபிறி தின்மையின் இருந்துவினை இலனே

- **ஔவையார்**

**திணை** : பாலை

**துறை** : செலவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் சொல்லியது.



இப்பாடலைப் பாடியவர் ஔவையார். அவர் சங்ககாலப் பெண்பாற்புலவருள் சிறந்து விளங்கியவர்; அவர் அதியமான் நெடுமானஞ்சி என்னும் குறுநில மன்னனுடன் ஆழ்ந்த நட்புக் கொண்டவர். அம்மன்னன் அவைக்களப் புலவராகத் திகழ்ந்தவர். நீண்டநாள் வாழச் செய்யும் அமிழ்தத்தை ஒத்ததோர் அரிய நெல்லிக்கனியைத் தான் உண்ணாது அதியமான் ஔவைக்கு ஈந்து மகிழ்ந்த செய்தியைப் புறநானூற்றால் அறியலாம். ஔவையார் பாடிய பாடல்களைப் புறநானூற்றிலும், நற்றிணையிலும், குறுந்தொகையிலும் காணலாம்.

### அருஞ்சொற்பொருள்

ஓங்குமலை = உயர்ந்தமலை; சிலம்பு = மலைச்சாரல்; வேங்கை பிடவு; = மலைநிலத்தே வளரும் மரங்கள்; பிடவம்பூ வேங்கைப் பூவுடன் ஒரு சேரத் தோன்றும் காட்சி புலிக்குருளைகட்கு உவமையாயிற்று. சிறுபொறிகளையுடைய பிடவம்பூவும் மஞ்சள் நிறத்துடன் உள்ள வேங்கைப்பூவும் அடர்ந்த தழைகளுடன் தோன்றும் போது கண்விழிக்காத புனிற்றிளம் புலிக்குருளைகளின் வடிவோடு ஒப்பத் தோன்றும்.

ஊன்பொதியவிழாக் கோட்டுகிர் – தசைப்பகுதியினின்று வெளிவராத நகங்கள் (புலிக்கு நகங்கள் கால் தசைக்குள்ளே பொதிந்திருக்கும். இரைமேற்பாயும் பொழுது அவை வெளிவந்து இரையைக்கிழிக்கும். இங்கே புலியின் குருளைகள் அப்பொழுதுதான் பிறந்தவையாதலால் அவற்றின் நகங்கள் தசைப்பகுதியினின்று வெளிவராது பொதிந்திருந்தன என்றவாறு) நிகழ்த்த – வலிமையற்று ஒய்ந்த. பசிகூர்ந்தன = பசி மிகுந்ததாக; உழுவை = ஆண்பு–; முடங்கர்–முடுக்கான இடம்; ஓர்க்கும் – உற்றுக் கேட்கும் கவலை – (இரண்டாகப் பிளவுபட்ட) கிளைவழி; உண்ணா உயக்கம் – உணவும் உண்ணாத வருத்தம்; சாஅய் – மெலிவுற்று, பெயர்வு–நீக்கம் (நீங்குதல்) மருந்து பிறிது இன்மை – வேறு மருந்தொன்றும் இன்மையான்; வினையிலேன் = செயலற்றுப் போயினேன்.

பிணவின் பசிக்கு இரங்கி உழைமானின் குரலை ஓர்க்கும் உழுவையேற்றை அலையும் நீளிடையே சென்றவராததால் நம் தலைவர் நம்நோய்க்கு இரங்கி விரைய வருவார் என்னும் கருத்துப்படத் தலைவி குறிப்பால் உணர்த்தினாள்

பெண்புலியின் பசிக்கு இரங்கி உழைமானின் குரலை உற்றுக்கேட்கும் ஆண்புலி வழங்கும் சுரம் என்றதால் நம்தலைவரும் நமது துன்ப நோய்க்கு இரங்கி விரைய வருவார் என்பது இறைச்சி.

வெள்ளிவீதியார் சங்க காலத்தில் வாழ்ந்த பெண்பாற்புலவர்களுள் ஒருவராவர். கரிகாலன் மகள் ஆதிமந்தி என்பவள் தன் கணவனைத் தேடிஅலைந்தது போல இவளும் தன் கணவனைத் தேடி அலைந்தாள் என்பதனைச் சங்கப் பாடல்கள் சிலவற்றிற் காண்கிறோம். வெள்ளிவீதியார் கணவனைத் தேடியலைந்த செய்தியை நமக்குப் பாடமாக வந்துள்ள ஔவையார் பாட–ற் காண்கிறோம், ‘காலே பரிதப்பினவே கண்ணே, நோக்கி நோக்கி வாளிழுந்தனவே’ என்ற இவர் பாடலைக் குறுந்தொகையிற் படிக்கும் பொழுது கற்போர் நெஞ்சம் உருகும். இவர் பாடியனவாகக் குறுந்தொகையில் எட்டும் நற்றிணையில் இரண்டும் அகநானூற்றில் இரண்டும் திருவள்ளுவமாலையில் ஒன்றும் காணக் கிடைக்கின்றன.

### இலக்கணம்

ஓங்குமலை – வினைத்தொகை; **அவிழாக்** கோட்டுகிர் – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; நிரம்பா **நீளிடை** – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; நீளிடை – வினைத்தொகை; **உண்ணா** உயக்கம் – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; சாஅய் – இசைநிறையளபெடை; தொல்கவின் – பண்புத்தொகை; பிரிந்தோர் – வினையாலணையும் பெயர்.

## (இ) ஐங்குறுநூறு

ஐந்து + குறுமை + நூறு = ஐங்குறுநூறு. ஐங்குறு நூற்றில் மூன்றடிச் சிறுமையும் ஆறடிப் பெருமையும் கொண்ட 500 பாடல்கள் உள்ளன. மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை, முல்லை என்னும் வரிசைமுறையில் அமைக்கப்பட்டு, ஒவ்வொருதிணையும் 100 பாடல்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொருதிணையிலுமுள்ள 100 பாடல்களும் பத்துப்பத்துப்பாடல்கள் கொண்ட பத்துப்பகுதிகளாகத் தனித்தனித் தலைப்புகளின் கீழ்ப் பகுக்கப்பட்டுள்ளன. இந்நூலில் உள்ள மருதத்திணைப்பாடல்களை ஓரம்போகியாரும், நெய்தல்திணைப் பாடல்களை அம்மூவனாரும், குறிஞ்சித்திணைப்பாடல்களைக் கபிலரும், பாலைத்திணைப் பாடல்களை ஓதலாந்தையாரும், முல்லைத்திணைப்பாடல்களைப் பேயனாரும் பாடியுள்ளனர். இதனை

மருதமோ ரம்போகி நெய்த லம்மூவன்
கருதுங் குறிஞ்சி கபிலன் – கருதிய
பாலையோத லாந்தை பனிமுல்லை பேயனே
நூலையோ தைங்குறு நூறு

என்னும் பழம் பாடலால் அறியலாம். ஐந்து நூறுகளையும் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார். தொகுப்பித்தவர் கோச்சேரமான் யானைக்கண்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்னும் சேரமன்னன். இந்நூற்குப் பாரதம்பாடிய பெருந்தேவனார் கடவுள் வாழ்த்துப் பாடலொன்றைப் பாடிச் சேர்த்துள்ளார்.

### பாடியோர்

இப்பாடலை இயற்றியோர் கபிலர். ''புலனழுக் கற்ற அந்தணாளன்'' என்று புகழப்பட்டவர் கபிலர். வள்ளல் பாரியின் அவைக்களப் புலவராக விளங்கியவர். பாரிமீது அளவற்ற அன்பு கொண்டவர்.

குறிஞ்சிப்பாட்டு, ஐங்குறு நூற்றில் குறிஞ்சித் திணைப்பாடல்கள் நூறு, பதிற்றுப்பத்தில் ஏழாம்பத்து, கலித்தொகையில் குறிஞ்சிக் கலியிலுள்ள 29 பாக்கள் முதலியன இவர் இயற்றியனவாகும். இவரது பாட்டுவன்மைக்குப் பழைய இலக்கண உரைகளில் உதாரணமாகக் காட்டப்படும் ''கபிலரது பாட்டு'' என்னும் தொடரே சான்றாகும்.

### மஞ்ஞைப்பத்து

எரிமருள் வேங்கை யிருந்த தோகை
இழையணி மடந்தையிற் றோன்று நாட!
இனிதுசெய் தனையா நுந்தை வாழியர்
நன்மனை வதுவை யயரவிவள்
பின்னிருங் கூந்தன் மலரணிந் தோயே

- கபிலர்

**திணை** : குறிஞ்சி

**துறை** : வதுவை செல்லா நின்றுழித் தலைமகற்குத் தோழி கூறியது.



வதுவையில் தலைவிக்கு மலரணியக் கண்ட தோழி இவ்வாறாம்படி அன்றே சூட்டினை எனச் சொல்லியவாறாம்.

மலர்ந்த வேங்கைக்கண் இருந்த தோகை
பொன்னணி மடந்தையில் தோன்றும் நாட – என்றது

'தலைவனே, நின் உறவினர் இன்று தலைவிக்குத் திருமணம் கருதிப் பூச்சூட்டிச் சிறப்புச் செய்தனர்; நீயோ அவளோடு பழகியிருந்த நாள்களிலேயே அவளுக்கு மணமகட்கோலம் போல அழகு செய்து மகிழ்ந்திருந்தனை' என்று உள்ளுறை உவமம் தோன்ற நின்றது.

### அருஞ்சொற்பொருள்

எரிமருள்வேங்கை = நெருப்பையொத்த வேங்கைமரம்; மருள் = உவமவுருபு; தோகை = மயில்; மலர்ந்த வேங்கை பொன்னிழைக்கும் அதன்கண் உள்ள தோகை மடந்தைக்கும் உவமைகள்; ஆல் = அசைநிலை; வதுவை = திருமணம்; அயர=நிகழ்த்த; பின்னிருங்கூந்தல் = பின்னப்பட்ட பெரிய (கரிய) கூந்தல்; நுந்தை வாழியர் என்றது தலைவனின் பெற்றோரை வாழ்த்தியது. இஃது பயந்தோர்ப்பழிச்சல் எனப்படும். மலரணிந்தோய்! நுந்தை வாழியர் இனிது செய்தனை என்றவாறு; தோழி களவுக் காலத்துற்ற வருத்தத்தின் நீங்கினமை உரைத்தாள்.

### இலக்கணக்குறிப்பு

**இருந்த**தோகை – பெயரெச்சம்; மருள் – உவமவுருபு; இழையணி – வினைத்தொகை; நாட – அண்மைவிளி; நுந்தை – நும்தந்தை என்பதன் மரூஉ மொழி; வாழியர் – வியங்கோள் வினைமுற்று; நன்மனை – பண்புத்தொகை.

### புணர்ச்சி விதிகள்

1. பூ என்னும் பெயரின் முன் வல்லின முதன்மொழி வந்து புணருமிடத்து அவ்வல்லெழுத்துக்கு இனமான மெல்லெழுத்து மிக்குப் புணரும்.

   எ.கா. பூ + கொடி = பூங்கொடி

   வருமொழி முதலில் உள்ள 'க்' என்னும் வல்லின எழுத்துக்கு இனமான 'ங்' என்னும் மெல்லெழுத்து மிக்குப் புணர்ந்தது.

   ''பூப்பெயர் முன்இன மென்மையுந் தோன்றும்''

   – நன்னூல் –200

   மென்மையுந் தோன்றும் என்றதனால் வல்லெழுத்து வருதலும் வழக்கில் உண்டு என்பது பெறப்பட்டது. பூ + கூடை = பூக்கூடை

2. 1. மகர ஈற்றுச் சொற்கள் வருமொழியோடு புணரும்போது மகரம் கெட்டு உயிரீறாய் நின்று, உயிர் முதன்மொழியோடு உடம்படுமெய் பெற்றும், வல்லின முதன்மொழியோடு வல்லெழுத்து மிக்கும் புணரும்.

2. சில இடங்களில் வல்லின முதன்மொழியோடு புணரும்போது மகரம் கெடாது. வருமொழியின் வல்லெழுத்திற்கு இனமான மெல்லினமாகத் திரிந்தும் புணரும்.

3. மெல்லின, இடையின முதன்மொழியோடு புணரும்போது மகரம் கெட்டு இயல்பாகப் புணரும்.

மரம் + அடி
மர (வ்+அ) டி = மரவடி
மகரம் கெட்டு உடம்படுமெய் பெற்றுப் புணர்ந்தது.
மரம் + கிளை
க்
மரம் + கிளை = மரக்கிளை

ஈறுகெட்டு வல்லெழுத்து மிக்குப் புணர்ந்தது
பழம் + தின்றான்
ந்
பழம் + தி)ன்றான் = பழந்தின்றான்

நிலைமொழி ஈற்று மகரம் கெட்டு வருமொழி முதலிலுள்ள 'த்' என்னும் வல்லின மெய்க்கு இனமான 'ந்' என்னும் மெல்லின மெய்யாகத் திரிந்து புணர்ந்தது.

மரம் + வேர் = மரவேர்

மகர ஈற்று மொழி இடையின முதன்மொழியோடு புணரும்போது மகரம் கெட்டு இயல்பாகப் புணர்ந்தது.

மரம் + நார் = மரநார்

மகர ஈற்று மொழி மெல்லின முதன்மொழியோடு புணரும்போது மகரம் கெட்டு இயல்பாகப் புணர்ந்தது.

''மவ்வீ றொற்றழிந் துயிரீ றொப்பவும்
வன்மைக் கினமாத் திரிபவும் ஆகும்''

– நன்னூல் 219

3. வேற்றுமைப் புணர்ச்சியில் நிலைமொழியீற்று 'ண' கரம் வல்லின முதன்மொழியோடு புணரும்போது 'ட' கரமாகத் திரியும்

மண் + கலம் = மட்கலம்

நிலைமொழியீற்று 'ன' கரம் வல்லின முதன் மொழியோடு புணரும் போது 'ற' கரமாகத் திரியும்.

பொன் + குடம் = பொற்குடம்

''ணனவல் லினம் வரட் டறவும் பிறவரின்
இயல்பும் ஆகும் வேற்றுமைக் கல்வழிக்
கனைத்துமெய் வரினும் இயல்பா கும்மே''

– நன்னூல் 209,



4. வேற்றுமைப் புணர்ச்சியில்:
நிலைமொழியீற்று லகரமும், ளகரமும், வல்லின முதன் மொழியோடு புணரும்போது லகரம் றகரமாகத் திரியும்; ளகரம் டகரமாகத் திரியும்
எ.கா
கழல் + கால் = கழற்கால்
கள் + குடம் = கட்குடம்

நிலைமொழியீற்று லகரமும், ளகரமும் மெல்லின முதன்மொழியோடு புணரும்போது லகரம் னகரமாகவும் ளகரம் ணகரமாகவும் திரியும்.
எ.கா
சொல்+ மாலை = சொன்மாலை
அருள் + மொழி= அருண்மொழி

லளவேற் றுமையிற் றடவும் அல்வழி
அவற்றோ டுறழ்வும் வலிவரி னாமெலி
மேவி னணவும் இடைவரின் இயல்பும்
ஆகும் இருவழி யானும் என்ப.

– நன்னூல் 227.

5. நிலைமொழி ஈற்றில் னகரமோ, லகரமோ நின்று வருமொழி முதலில் தகரம் வரின் அது றகரமாக மாறும்; நகரம் வரின் அது னகரமாக மாறும்.
எ.கா.
பொன் + தீது = பொன்றீது
கல் + தீது = கற்றீது
பொன் + நன்று = பொன்னன்று
கல் + நன்று = கன்னன்று

நிலை மொழி ஈற்றில் ணகரமோ, ளகரமோ நின்று வருமொழி முதலில் தகரம் வரின் அது டகரமாகவும் நகரம் வரின் அது ணகரமாகவும் மாறும்.
எ.கா.
மண் + தீது = மண்டீது
முள் + தீது = முட்டீது
கண் + நீர் = கண்ணீர்
முள் + நன்று = முண்ணன்று
''னலமுன் றனவும் ணளமுன் டணவும்
ஆகும் தநக்கள் ஆயுங் காலே.''

– நன்னூல் : 237

6. பல என்னும் சொல்முன் பல என்னும் சொல்லும் சில என்னும் சொல்முன் சில என்னும் சொல்லும் வந்து புணரும்போது.

1. இயல்பாகப் புணரும்
பல + பல = பலபல
சில + சில = சிலசில

2. மிக்குப் புணரும்
பல + பல = பலப்பல
சில + சில = சிலச்சில

3. நிலைமொழி இறுதியிலுள்ள அகரம் கெட எஞ்சி நிற்கும் லகரம் றகரமாகத் திரிந்து புணரும்.
எ.கா
பல + பல
(ல்+அ)
பல் + பல
ல் ற்
பல் + பல = பற்பல
(ல்+அ)
சில +சில
சில் + சில = சிற்சில

4. பல, சில என்னும் சொற்கள் முன் பிற சொற்கள் வந்து புணரின் நிலைமொழி இறுதி அகரம் கெட்டும் புணரும்; கெடாமலும் புணரும்.
(ல்+அ)
பல + பணி = பல்பணி
பல + பணி = பலபணி
(ல்+அ)
சில + வளை = சில் வளை
சில + வளை = சிலவளை

பல சில எனுமிவை தம்முன் தாம்வரின்
'இயல்பும் மிகலும் அகரம் ஏக
லகரம் றகரம் ஆகலும் பிறவரின்
அகரம் விகற்பம் ஆகலும் உளபிற'

– நன்னூல் 170

## பயிற்சி

### I. சிறுவினா:

1. புறநானூறு பற்றிக் குறிப்பு வரைக.
2. 'வரையா மரபின் மாரி போல'. உவமையை விளக்கிப் பொருளுடன் பொருத்துக.
3. கழற்கால் பேகனைப் பரணர் எங்ஙனம் புகழ்ந்துரைத்துள்ளார்?
4. அகநானூறு பற்றிக் குறிப்பு வரைக.
5. ஔவையார் பற்றிக் குறிப்பு வரைக.
6. நிரம்பா நீளிடை எத்தகையது?
7. அகநானூற்றில் அமைந்த குறிப்புப் பொருளைத் தெளிவுபடுத்துக.
8. ஐங்குறு நூறு பற்றிக் குறிப்பு வரைக.
9. கபிலர் பற்றிக் குறிப்பு வரைக.
10. தலைமகற்குத் தோழி கூறியன யாவை?
11. ஐங்குறு நூற்றுப்பாடலால் அறியவரும் உள்ளுறைப் பொருளைத் தெளிவு படுத்துக.

### II. நெடுவினா:

1. செலவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் சொல்லியவற்றை விளக்குக.



### III. இலக்கணக்குறிப்பு வரைக.

அறுகுளம், கடாஅ யானை, கழற்கால்,
ஓங்குமலை, நிரம்பாநீளிடை, தொல்கவின், வெண்மருப்பு.

### IV.பிரித்துப் புணர்ச்சிவிதி தருக.

உறுமிடம், கழற்கால், கோட்டுகிர், செலவயர்ந்திசின்.

### V.பகுபத உறுப்பிலக்கணம் தருக.

பொழிந்து, ஈன்ற, புலந்து,
தொலைய, பிரிந்தோர் இரங்கி, மறந்தனன்.

### VI.விடைதேர்க.

1. புறநானூற்றில் சில பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்.
அ) கால்டுவெல் ஆ) பெஸ்கி இ) ஜி.யு. போப்

2. கடையெழு வள்ளல்களில் ஒருவன்.
அ) குட்டுவன் சேரல் ஆ) பேகன் இ) பாண்டியன் உக்கிரப் பெருவழுதி.

3. கான மஞ்ஞைக்குக் க–ங்கம் ஈந்தவன்.
அ) பாரி ஆ) காரி இ) பேகன்

4. களிற்றியானை நிரையில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை.
அ) 100 ஆ) 120 இ) 180

5. ஔவைக்கு அரிய நெல்–க்கனியை ஈந்தவன்.
அ) அதியமான் ஆ) ஆய் இ) வல்வில் ஓரி

### VII.பொருத்துக

1. சொல் – பொருள்

| சொல் | | பொருள் |
|---|---|---|
| உகிர் | – | பெண் |
| குருளை | – | பன்றி |
| பிணவு | – | நகம் |
| கேழல் | – | தந்தம் |
| | | குட்டி |

2. திணை – ஆசிரியர்

| திணை | | ஆசிரியர் |
|---|---|---|
| மருதம் | – | ஓதலாந்தையார் |
| நெய்தல் | – | பேயனார் |
| குறிஞ்சி | – | ஓரம்போகியார் |
| பாலை | – | அம்மூவனார் |
| முல்லை | – | கபிலர் |
| | | நக்கீரர் |

# பகுபதஉறுப்பிலக்கணம்

நினைவிற்கொள்ள வேண்டியவை

| | |
|---|---|
| இறந்தகால இடை நிலைகள் | – த், ட், ற், இன் |
| நிகழ்கால இடைநிலைகள் | – கிறு, கின்று, ஆநின்று |
| எதிர்கால இடைநிலைகள் | – ப் , வ் |
| எதிர்மறை இடைநிலைகள் | – ஆ, அல், இல் |
| தன்மை ஒருமை வினைமுற்று விகுதிகள் | – என், ஏன், அல், அன், கு,டு, து, று |
| தன்மைப் பன்மை வினைமுற்று விகுதிகள் | – எம், ஏம், அம், ஆம், ஒம் ஓம், கும், டும், தும், றும். |
| முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதிகள் | – ஐ, ஆய் |
| முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதிகள் | – இர், ஈர் |
| ஏவல் ஒருமை வினைமுற்று விகுதி | – இ |
| ஏவல் பன்மை வினைமுற்று விகுதி | – மின் |
| படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதிகள் | – அன், ஆன் |
| படர்க்கைப் பெண்பால் வினைமுற்று விகுதிகள் | – அள், ஆள் |
| படர்க்கைப் பலர்பால் வினைமுற்று விகுதிகள் | – அர், ஆர், ப, மார் |
| படர்க்கை ஒன்றன்பால் வினைமுற்று விகுதிகள் | – து, று |
| படர்க்கை பலவின்பால் வினைமுற்று விகுதிகள் | – அ, ஆ |
| வியங்கோள் வினைமுற்று விகுதிகள் | – க, இய, இயர் |
| தெரிநிலைப் பெயரெச்ச விகுதிகள் | – அ, (உம்) |
| தெரிநிலை வினையெச்ச விகுதிகள் | – உ, இ. |

த், க், ப் – என்னும் மூன்று எழுத்துகளுள் ஒன்றே பெரும்பாலும் சந்தியாக வரும். சந்தி வரவேண்டிய இடத்தில் புள்ளியில்லாத எழுத்து வந்தால் அதனைச் சாரியை எனக் குறிப்பிடப்படவேண்டும்.

அன், அ– என்னும் இரண்டனுள் ஒன்றே சாரியையாக வரும், சாரியை வரவேண்டிய இடத்தில் புள்ளி பெற்ற எழுத்து உயிர் ஏற இடமளித்து வந்தால் அதனை எழுத்துப் பேறு எனக் குறிப்பிடல் வேண்டும். விகுதி தனியே வராமல் துணையாகப் பெற்று வரும் எழுத்தே எழுத்துப் பேறு ஆகும்.

# 3. அற இலக்கியம்

## திருக்குறள்

தமிழ்மாதின் இனிய உயிர்நிலை என்று உலகோரால் பாராட்டப்பெறும் நூல் திருக்குறள். இதுவே தமிழர் திருமறை; உலகப் பொதுமறையுமாகும். 'குறள்' என்பது இரண்டடி வெண்பாவைக் குறிக்கும். அது திரு என்ற அடை மொழி பெற்று நூலைக் குறித்தது. (அடையடுத்த கருவியாகு பெயர்) இது பதினெண் கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்று.

திருக்குறள் அறத்துப்பால் பொருட்பால் காமத்துப்பால் என்னும் மூன்று பெரும் பிரிவுகளைக் கொண்டு விளங்குகிறது. நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களையும் அதிகாரத்திற்குப் பத்துப் பாக்கள் வீதம் ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட்பாக்களையும் கொண்டுள்ளது.

அறத்துப்பால் முப்பத்தெட்டு அதிகாரங்களை உடையது. அது பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல், ஊழியல் என்னும் நான்கு இயல்களைக் கொண்டு விளங்குகிறது என்பர் அறிஞர்.

பொருட்பால் எழுபது அதிகாரங்களையும் அரசியல், அங்கவியல், ஒழிபியல் என்னும் மூன்று இயல்களையும் கொண்டு அமைந்துள்ளது.

காமத்துப்பால் இருபத்தைந்து அதிகாரங்களையும் களவியல், கற்பியல் என்ற இரண்டு இயல்களையும் கொண்டு விளங்குகிறது.

''திருவள்ளுவன் வாய் விளைத்தவற்றுள்
இல்லாததில்லை இணையில்லை முப்பாலுக் கிந்நிலத்தே''

என்று தமிழரை விம்மித முறவைப்பது இத்தெய்வநூல். இந்நூலுட் கூறப்பட்டுள்ள கருத்துகள் யாவர்க்கும் எக்காலத்திற்கும் பொருந்துவனவாக விளங்குகின்றன. உலகப் பெருமொழிகள் பலவற்றிலும் மொழி பெயர்க்கப்பட்டு பலராலும் படிக்கப்பெற்று வருகிறது. உலகம் முழுவதும் ஒப்பக் கூடிய சிறந்த கருத்துகளைக் கொண்டுள்ள இந்நூல் உலகப் பொது மறையாகப் போற்றப்படுகிறது. திருக்குறளையோ அதன் கருத்துகளையோ எடுத்தாளாத அறிஞர் பெருமக்கள் இலர் என்று கூறுமளவிற்குப் பெருமை பெற்றுள்ளது.

அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்

என்று அவ்வையார் இதன் திட்பமும் நுட்பமும் கருதிப் புகழ்ந்துரைத்தார். திருக்குறளையும் திருவள்ளுவரையும் பழந்தமிழ்ப் புலவர்கள் பாராட்டிப் பாடிய நூல் திருவள்ளுவ மாலை என்று அழைக்கப்படுகிறது.

இத்தகைய பெருநூலை நமக்கு இயற்றித் தந்தவர் தெய்வப்புலவர் திருவள்ளுவர் ஆவர். இவர் கடைச்சங்க காலமாகிய கி.பி இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்பர். திருவள்ளுவரைப்

பற்றிய உண்மை வரலாறு புலப்படவில்லை. செவிவழிச் செய்திகளே உள்ளன. திருவள்ளுவர் வாழ்ந்த காலம் பற்றிக் கருத்து வேறுபாடுகள் உண்டு. இவர் கி.மு. 31–இல் தோன்றியவரென்று அறிஞர் சிலர் கூறுவர். இதைக் கணக்கில்கொண்டு திருள்ளுவராண்டுமுறை வழங்கி வருகிறது.

திருவள்ளுவரை ஒவ்வொரு சமயத்தவரும் தத்தம் சமயத்தைச் சார்ந்தவரென்று கூறுவர். இதன்மூலம் வள்ளுவரின் உயர்வும் பொதுமைக் கொள்கையும் வீறு பெற்றுத்துலங்குவதை உணரலாம். திருக்குறளுக்கு முப்பால், வாயுறை வாழ்த்து, உத்தரவேதம், பொய்யாமொழி என்று வேறு பெயர்கள் வழங்குவது போலவே திருவள்ளுவருக்கும் முதற்பாவலர், பொய்யில் புலவர், பெருநாவலர், செந்நாப்போதார், நாயனார், தேவர், மாதானுபங்கி என்ற வேறு பெயர்களும் வழங்குகின்றன.

## (அ) அடக்கமுடைமை

அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும். 1

காக்க பொருளா அடக்கத்தை; ஆக்கம்
அதனினூஉங் கில்லை உயிர்க்கு 2

செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்
தாற்றி னடங்கப் பெறின் 3

நிலையிற் றிரியா தடங்கியான் றோற்றம்
மலையினும் மாணப் பெரிது 4

எல்லார்க்கும் நன்றாம் பணிதல்; அவருள்ளும்
செல்வர்க்கே செல்வந் தகைத்து. 5

ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்க லாற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து 6

யாகாவா ராயினு நாகாக்க; காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு 7

ஒன்றானுந் தீச்சொற் பொருட்பய னுண்டாயின்
நன்றாகா தாகி விடும் 8

தீயினாற் சுட்டபுண் உள்ளாறும்; ஆறாதே
நாவினாற் சுட்ட வடு. 9

கதங்காத்துக் கற்றடங்க லாற்றுவான் செவ்வி
அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து. 10

### அருஞ்சொற்பொருள்

குறள்: 1, 2, 3, 4, 5 இவை ஐந்து பாட்டாலும் பொதுவகையால் அடக்கத்தினது சிறப்புக் கூறப்பட்டது.
குறள்: 6 – மெய் அடக்கம் கூறப்பட்டது.
குறள்: 7,8,9 மொழி அடக்கம் கூறப்பட்டது.
குறள்: 10 மன அடக்கம் கூறப்பட்டது.



1. அடக்கம் = மனம் மொழி மெய்கள் தீயவழிகளிற் செல்லாது அடங்குதல்; அமரருள் = தேவர் உலகம் (சுவர்க்கம்); உய்க்கும் = செலுத்தும்; ஆரிருள் = நரகம்; 'உய்த்துவிடும்' என்பதை ஒரு சொல்லாகக் கொள்க.
2. பொருளா = உயர்ந்த பொருளாகக் கருதி; காக்க = கடைப்பிடித்து ஒழுகுக; அதனின் ஊங்கு = அவ் அடக்கத்தைவிடவும்.
3. செறிவு = அடக்கம்; சீர்மை = விழுப்பம், சிறப்பு; அறிவறிந்து = அடங்கியிருத்தலே அறிவாவது என்றறிந்து; ஆற்றின் = நேரியவழியில்.
4. நிலையின் – (இல்லறநெறியாகிய) நிலையின் நின்று; திரியாது – நிலைபிறழாது; தோற்றம் = உயர்வு; மாண = மிகவும்.
5. நன்று ஆம் = நன்மைதருவதே ஆம்; பணிதல் = அடங்குதல்; செல்வந்தகைத்து = செல்வம் எனத்தகும் சிறப்பினையுடைத்து.
6. ஐந்து = ஐம்பொறிகள்; ஒருமை = ஒருபிறப்பு; எழுமை = ஏழு பிறப்பு; ஏமாப்பு = பாதுகாப்பு.
7. யா = எவற்றை (எல்லாவற்றையும்); சோகாப்பர் = துன்புறுவர். சொல்இழுக்கு = சொற்குற்றம்; சோகாப்பர் என்பது ஒரு சொல்.
8. ஒன்றானும் = (எண் அளவில்) ஒன்றாக இருப்பினும்; பொருட்பயன்–பொருளால் விளைவது (பொருளால் வரும் துன்பம்); உண்டாயின் = உண்டாவது ஆயின்; நன்றாகாது ஆகிவிடும் = தீதாகிவிடும்.
9. உள்ஆறும் (உடம்பில் புண்ணாக நிற்பினும்) உள்ளத்தே ஆறிவிடும்; நாவினால் = கடுஞ்சொற்களால்; வடு = தழும்பு; வேற்றுமையணி. ஆறிவிடும் தன்மையது ஆதலால் தீயினாற் சுட்டதனைப் புண் என்றும் ஆறாது நெஞ்சினுள்ளே கிடத்தலின் நாவினாற் சுட்டதனை வடு என்றும் கூறினார்.
10. கதம் – சினம்; காத்து = அடக்கி; செவ்வி = தகுந்த காலம்; அறம் = அறக்கடவுள்; ஆற்றின் = அடையும் வழியில்.

### இலக்கணம்

1. அடங்காமை – எதிர்மறைத் தொழிற்பெயர். ஆரிருள் – வினைத்தொகை.
2. காக்க – வியங்கோள் வினைமுற்று; பொருளா – (பொருளாக என்பதன்) தொகுத்தல்விகாரம்; அதனினூஉங்கு – இன்னிசையளபெடை.
3. பெறின் – செயின் என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.
4. அடங்கியான் – வினையாலணையும் பெயர்; மலையினும்–உயர்வு சிறப்பும்மை.
5. எல்லார்க்கும் – முற்றும்மை; பணிதல் – தொழிற்பெயர்; தகைத்து – குறிப்பு வினைமுற்று; நன்றாம் – (நன்றாகும்) தொகுத்தல் விகாரம்; செல்வர்க்கே – தேற்றேகாரம்.
6. உடைத்து – குறிப்பு வினைமுற்று; உவமையணி.
7. எழுமை, ஐந்து – ஆகுபெயர்கள்; காவாக்கால் – எதிர்மறை வினையெச்சம்.

8. பொருட்பயன் – மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை; ஆனும் – ஆயினும் என்பதன் விகாரம்; நன்று – (நன்மை) பண்புப்பெயர்;

9. தீயினாற் .... வடு. வேற்றுமையணி (தீப்புண், கடுஞ்சொல்லால் உண்டாகிய புண் இரண்டும் சுடுகையால் ஒன்றே என்று முதலிற் கூறி ஒற்றுமைப்படுத்திப், பின் தீப்புண் ஆறிவிடும். நாவினாற் சுட்டது ஆறாது என்று வேறுபடுத்த–ன் வேற்றுமையணியாயிற்று சுட்ட புண், சுட்ட வடு. – பெயரெச்சங்கள்.

10. அடங்கல் – தொழிற்பெயர், ஆற்றுவான் – வினையாலணையும் பெயர்.

## (ஆ) ஒப்புரவறிதல்

கைம்மாறு வேண்டாக் கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ உலகு. 1

தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு 2

புத்தே ளுலகத்து மீண்டும் பெறலரிதே
ஒப்புரவி னல்ல பிற. 3

ஒத்த தறிவானுயிர் வாழ்வான்; மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும். 4

ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு. 5

பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றாற் செல்வம்
நயனுடை யான்கட் படின் 6

மருந்தாகித் தப்பா மரத்தற்றாற் செல்வம்
பெருந்தகை யான்கட் படின் 7

இடனில் பருவத்தும் ஒப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர் 8

நயனுடையான் நல்கூர்ந்தா னாதல் செயும்நீர
செய்யா தமைகலா வாறு 9

ஒப்புரவி னால்வருங் கேடெனி னஃதொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து. 10

### அருஞ்சொற்பொருள்

| | | |
|---|---|---|
| குறள் 1, 2, 3 | – | ஒப்புரவின் சிறப்புக் கூறப்பட்டது. |
| குறள் 4 | – | ஒப்புரவறியார் இழிவு |
| குறள் 5,6, 7 | – | ஒப்புரவாளனது செல்வம் பயன்படுந்தன்மை. |
| குறள் 8, 9 | – | வறுமையால் ஒப்புரவு ஒழிதற்பாற்றன்று என்பது |
| குறள் 10 | – | ஒப்புரவினாற் கெடுவது கேடன்று என்பது |



1. கைம்மாறு = எதிர்பார்த்துச் செய்யும் உதவி; கடப்பாடு = கடமையாய்க் கொண்டு செயல்படல்; மாரி = மழையைத் தரும் மேகம்; (பயன் கருதாது பெய்யும் மழைக்கு உலகம் என்ன கைம்மாறு செய்கின்றது? ஆகவே தொண்டுள்ளங் கொண்டவர் செய்யும் உதவிகளும் பயனை எதிர்பார்ப்பதில்லை. எனவே வேற்றுப்பொருள்வைப்பணி மறைந்து வந்தது. கைம்மாறு வேண்டாக் கடப்பாடு என்னும் பொதுப் பொருளை மாரிமாட்டு என்னாற்றுங் கொல்லோ உலகு என்ற சிறப்புப்பொருள் எடுத்துக்காட்டுவதால் வேற்றுப்பொருள் வைப்பணி எனலாம்.

2. தாளாற்றி – மிக்க முயற்சி செய்து; தந்த = ஈட்டிய; தக்கார்க்கு = தகுந்தவர்க்கு; வேளாண்மை = உதவி.

3. புத்தேள் உலகம் = (இன்பச் செழிப்புடையதாகக் கருதப்படும்) தேவர் உலகத்தும்; ஈண்டும் = இவ்வுலகத்தும், ஒப்புரவின் = ஒப்புரவைக் காட்டிலும்; நல்லபிற = நல்லனவாய பிறசெயல்கள்.

4. ஒத்தது = உலகநடையறிந்து அதற்கிசையச் செய்வது; செத்தாருள் வைக்கப்படும் = இறந்தாருள் ஒருவனாகக் கருதப்படுவான்.

5. ஊருணி = ஊர் மக்கள் உண்ணுநீர்க்குளம்; உலகுஅவாம் = உலக நடையை விரும்பிச் செய்யும்; திரு = செல்வம்; அற்று = போலும்; பயன்மரம் = பயன்படும்மரம்; உள்ளூர் = ஊர்நடுவே

6. நயனுடையான் – நல்ல உள்ளமுடையவன் (ஒப்புரவாளன்)

7. மருந்தாகி = மருந்தாய்; தப்பா = தப்பாத; மரத்தற்;று = மரத்தை ஒப்பது.

8. இடம் = செல்வம்; இடனில்பருவம் = வறுமையுற்றகாலம்; ஒல்கார் = தளரார்; கடன் = முறைமை; காட்சியவர் = அறிவுடையார்.

9. நயனுடையான் = ஒப்புரவாளன்; நல்கூர்ந்தானாதல் = வறுமை வாய்ப்படுதல். செய்யும் நீர = செய்யும் தன்மையடைய ஒப்புரவுகளை, செய்யாது = செய்யப்பெறாது. செய்யவேண்டியவற்றைச் செய்யாது இருத்தலே ஒப்புரவாளனுக்கு நல்கூர்தலாகும்; அவன் துய்க்க வேண்டியவற்றைத் துய்க்காம–ருப்பது நல் கூர்தல் அன்று என்பதாம்.

10. கேடு = பொருள்கேடு; கோள்தக்கது = கொள்ளத்தக்கது.

### இலக்கணம்

1. **வேண்டாக்**கடப்பாடு – ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம். உலகு – இடவாகுபெயர்.

2. **தந்த**பொருள் – பெயரெச்சம்; பொருட்டு – குறிப்பு வினைமுற்று; நல்ல – பலவின்பால் வினையாலணையும் பெயர்.

3. பெறல் – தொழிற்பெயர்; ஈண்டும் – உம்மை எண்ணுப் பொருள்.

4. அறிவான், வாழ்வான் – வினையாலணையும் பெயர்கள்; மற்றையான் – குறிப்பு வினையாலணையும் பெயர்.

5. பேரறிவு – பண்புத்தொகை; (உவமையணி) அவாம் – அவாவும்; செய்யும் என்னும் எச்சம்; ஊருணி – காரணப்பெயர்.

6. பயன்மரம் – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை (பயனைத் தரும்மரம்) (உவமையணி) உள்ளூர் = ஊருள் என்பது முன்பின்னதாகத் தொக்க ஆறாம் வேற்றுமைத்தொகை.

7. **தப்பா**மரம் – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; பெருந்தகை = பண்புத்தொகை.

8. கடனறிகாட்சி – வினைத்தொகை; ஒல்கார் – வினையாலணையும் பெயர்; இல்பருவம் – பண்புத்தொகை.

9. ஆதல் – தொழிற்பெயர்; நீர – பலவின்பாற்பெயர் (நீர்மை பகுதி) செயும் – செய்யும் என்பதன் தொகுத்தல் விகாரம்.

10. கேடு, கோள் – முதனிலை திரிந்த தொழிற்பெயர்கள்.

## (இ) காலமறிதல்

பகல்வெல்லுங் கூகையைக் காக்கை; இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது. 1

பருவத்தோ டொட்ட ஒழுகல் திருவினைத்
தீராமை ஆர்க்குங் கயிறு. 2

அருவினை யென்ப வுளவோ கருவியான்
கால மறிந்து செயின். 3

ஞாலங் கருதினுங் கைகூடும் காலங்
கருதி யிடத்தாற் செயின். 4

காலங் கருதி யிருப்பர்; கலங்காது
ஞாலங் கருது பவர். 5

ஊக்க முடையா னொடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து. 6

பொள்ளென ஆங்கே புறம்வேரார்; காலம் பார்த்
துள்வேர்ப்ப ரொள்ளி யவர். 7

செறுநரைக் காணின் சுமக்க; இறுவரை
காணின் கிழக்காம் தலை. 8

எய்தற் கரிய தியைந்தக்கா லந்நிலையே
செய்தற் கரிய செயல். 9

கொக்கொக்க கூம்பும் பருவத்து; மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து. 10



### அருஞ்சொற்பொருள்

| | |
|---|---|
| குறள் 1 | காலத்தது சிறப்புக் கூறப்பட்டது |
| குறள் 2, 3, 4 | காலமறிதலின் பயன் |
| குறள் 5 | காலம் வாராவழிச் செய்யத்தக்கது |
| குறள் 6 | காலம் வாராவழிக் காத்திருப்பதன் சிறப்பு |
| குறள் 7, 8 | காத்திருக்குங்கால் தன் உள்ளப்பகைமை தோன்றாது அடக்குக என்றல் |
| குறள் 9 | தகுந்த காலம் வந்துழி விரைந்து செயற்படுக என்றல். |
| குறள் 10 | காத்திருப்புக்கும், செயற்படுதலுக்கும் இலக்கணம் |

1. கூகை = இரவில் இயங்கும் பறவைகளுள் ஒன்று (கோட்டான்); இகல் = பகை; பொழுது = தகுந்தகாலமும் சூழலும்.

2. பருவத்தோடு = காலத்தோடு; ஒட்ட = இசைய; தீராமை = நீங்காமல்; ஆர்க்கும் = பிணிக்கும்.

3. அருவினை = அரிய செயல்; உளவோ = உண்டோ (இல்லை); கருவியான் காலமறிந்து = காலமறிந்து தக்க கருவியால் செய்தல்.

4. கருதினும் = நினைப்பினும்; கைகூடும் = கையகத்ததாகும்.

5. கலங்காது = தவறாது.

6. ஊக்கம் உடையான் = மனவெழுச்சி உடையவன்; ஒடுக்கம் = அடங்கியிருத்தல்; தகர் = ஆட்டுக்கிடாய்; தாக்கற்கு = தாக்குவதற்காக; பேரும் = பின்னே கால் வாங்கும்; தகைத்து = தன்மைத்து.

7. பொள்ளென = உடனடியாக; புறம்வேரார் = வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளமாட்டார்; உள்வேர்ப்பர் = பகைமையை உள்ளே வைத்திருப்பர்; ஒள்ளியவர் = அறிவுடையவர் (அறிவுடைய அரசர்).

8. செறுநர் – பகைவர், சுமக்க = பணிக. இறுவரை = (அழிவிற்கான) இறுதி நாள் வந்தபோது; கிழக்காம் = விழுவதாம்; தோல்வியுறுவர் என்பது பொருள் (தலைகீழாக வீழ்ந்து பகைவர் அழிவர்).

9. இயைந்தக்கால் – கூடிவரும்பொழுது; செயல் = செய்க; அந்நிலையே = அந்தக் காலம் கழிவதற்குள்ளே.

10. கூம்பும் பருவத்து = வினைமேற் செல்லாதிருக்கும் காலத்து;
கொக்கு ஒக்க = கொக்குப் போல் இருக்கவும்;
சீர்த்த விடத்து = வினைமேற் சென்ற இடத்து; காலம் வாய்த்தபோது; குத்தொக்க = அலகு கொண்டு குத்துவது போலத் தாக்குக.

### இலக்கணம்

1. எடுத்துக்காட்டுவமையணி. உவமை ஒரு தொடராகவும் பொருள் ஒரு தொடராகவும் நிற்க உவமவுருபு மறைந்து நிற்பது எடுத்துக்காட்டுவமையணியாம். கூகையைக் காக்கை பகல்வெல்லும் (அதுபோல) பகை வெல்லக் கருதுவார்க்குத் தகுந்த காலமறியுந் திறன் வேண்டும் என்றவாறு. பகல்வெல்லும் – ஏழாம் வேற்றுமைத் தொகை, இகல்வெல்லும் – இரண்டாம் வேற்றுமைத் தொகை.

2. ஒழுகல் – தொழிற் பெயர்; **தீராமை** ஆர்க்கும் – எதிர்மறை வினையெச்சம்

3. அருவினை – பண்புத்தொகை; உளவோ – ஓகாரம் எதிர்மறை.

4. செயின் – வினையெச்சம்.

5. கருதுபவர் – வினையாலணையும் பெயர்.

6. ஒடுக்கம் – தொழிற்பெயர்; பொருதகர் – வினைத்தொகை; பேரும் – பெயரும் என்பதன் மரூஉ.

7. பொள்ளென – குறிப்புமொழி (விரைவுக் குறிப்பு) – இது இடைச்சொல்; ஒள்ளியவர் – வினையாலணையும் பெயர்.

8. சுமக்க – வியங்கோள் வினைமுற்று; எய்தக்கால் – காலீற்று வினையெச்சம்.

9. செயல் – அல்லீற்று உடன்பாட்டு வியங்கோள் வினைமுற்று; **எய்தற்கு** அரிய – எய்தற்கு – எதிர்கால வினையெச்சம்.

10. தொழிலுவமையணி, கூம்புதலும் குத்துதலும் ஆகிய தொழில்களை உவமித்ததால் தொழிலுவமம்; ஒக்க – வியங்கோள் வினைமுற்று.

## (ஈ) வலியறிதல்

(பகை வெல்லுதலில் கொடுத்தல், இன்சொற்கூறுதல், வேறுபடுத்தல், ஒறுத்தல் என்னும் நால்வகை உபாயங்களுள் ஒறுத்தல் குறித்தோர் நால்வகை வ–மையையும் அறிந்து செயல்படுதல்)

வினைவலியுந் தன்வலியு மாற்றான் வலியுந்
துணைவலியுந் தூக்கிச் செயல். 1

ஒல்வ தறிவ தறிந்ததன் கண்தங்கிச்
செல்வார்க்குச் செல்லாத தில். 2

உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி
இடைக்கண் முரிந்தார் பலர். 3

அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும். 4

பீலிபெய் சாகாடு மச்சிறு மப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின். 5

நுனிக்கொம்ப ரேறினா ரஃதிறந் தூக்கி
னுயிர்க்கிறுதி யாகி விடும். 6

ஆற்றி னளவறிந் தீக அதுபொருள்
போற்றி வழங்கும் நெறி. 7



ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை
போகா றகலாக் கடை. 8

அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும். 9

உளவரை தூக்காத ஒப்புர வாண்மை
வளவரை வல்லைக் கெடும். 10

### அருஞ்சொற்பொருள்

1. வினைவலி = தான் செய்யக்கருதிய செயலின் வலிமை. மாற்றான் = பகைவர்; துணை = தனக்கும் பகைவர்க்கும் துணையாயினார்; தூக்கி = சீர் தூக்கி; செயல் = செயற்படுக.

2. ஒல்வது = தம்மாலியன்றது; அறிவது = அறிய வேண்டிய வலிமை; அதன்கண் தங்கி = அச்செயலின் கண் மனம் மொழிகளை முற்றுமாக ஈடுபடுத்தி; செல்வார்க்கு = பகைமேற்செல்வார்க்கு.

3. உடைத்தம் = தம்முடைய; இடைக்கண் – நடுவிலேயே. ஊக்கம் = மன எழுச்சி; ஊக்கி = செயலைத் தொடங்கி, முரிந்தார் – அழிந்தவர் (தோற்றவர்)

4. ஆங்கு அமைந்து ஒழுகான் = அயல் வேந்தரோடு பொருந்தி ஒழுகாது; அளவறியான் – தன்வலிமையின் அளவை அறியாது; தன்னைவியந்தான் = தானே தன்னை உயர்வாகக் கருதிச் செருக்குறுபவன்.

5. பீலி = மயில்தோகை; சாகாடு – வண்டி; இறும் = முரியும், பெயின் = ஏற்றினால். பிறிது மொழிதலணி. நுவலாநுவற்சி, ஒட்டணி எனினும் அது. ஒருவன் தன் பகைவரை வலிமையற்றவரென்று இகழ்தல் ஆகாது. வலிமையற்றவரேயாயினும் மிகப்பலராக ஒன்று கூடிக் கொள்வாராயின் வலிமையுள்ள அரசனும் அவர்களை ஒரு பொருட்டாக மதியாது இகழ்ந்த காரணத்தால் தோல்வியுற நேரும் என்பது பெறப்பட்டது. இவ்வாறு கவிஞன்தான் கருதிய பொருளுக்கு ஒத்ததாக வேறொன்றைக் கூறி அப்பொருளைப் புலப்படுத்துவது பிறிது மொழிதலாகும்.

6. கொம்பர் = இறுதிப்போலி; நுனிக்கொம்பர் = கிளையின் நுனி; அஃதிறந்து = அவ்வளவினைக் கடந்து. இதுவும் பிறிது மொழிதல். பகைவரை வெல்லக் கருதுபவன் தான் செல்லத்தக்க எல்லை வரை மட்டுமே செல்லல் வேண்டும். மாறாக மேலும் மேலும் செல்வானாயின் தன் உயிருக்கும் இறுதி தேடிக் கொள்பவன் ஆவான் என்பது பெறப்பட்டது.

7. ஆறு = நெறி; ஆற்றின் = கொடுக்கும் நெறியில்; அளவு அறிந்து = தமக்குள்ள பொருளின் எல்லையை அறிந்து.

8. ஆகு ஆறு – பொருள் வரும் வழி; இட்டிது = சிறியது; போகு ஆறு = செலவழியும் வழி; அகலாக்கடை = பெருகாதாயின்

9. உளபோல = உள்ளன போல.

10. உளவரை = தனக்குள்ள பொருளின் அளவு; தூக்காத = ஆராய்ந்து பார்க்காத; வல்லை = விரைவில்; வளவரை = செல்வத்தின் எல்லை.

### இலக்கணம்

1. வினைவலி, துணைவலி – ஆறாம் வேற்றுமைத்தொகைகள்; செயல் – வியங்கோள்வினைமுற்று.

2. செல்வார் – வினையாலணையும் பெயர்.

4, அறியார் – எதிர்மறைவினையாலணையும் பெயர்; ஒழுகான், அறியான் – (முற்றுகள் எச்சப் பொருளில் வந்தன) முற்றெச்சம்.

5. பெய்சாகாடு – வினைத்தொகை; சாலமிகுத்து – உரிச்சொற்றொடர்; மிகுத்து – மிகுந்து என்பதன் பிறவினை.

6. கொம்பர் – ஈற்றுப்போலி; நுனிக்கொம்பர் – முன்பின்னாகத் தொக்க ஆறாம்வேற்றுமைத் தொகை.

7. ஈக – வியங்கோள் வினைமுற்று; **வழங்கும்** நெறி – பெயரெச்சத்தொடர்.

8. ஆகாறு, போகாறு – வினைத் தொகைகள்; **அகலாக்** கடை – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; கேடு – முதனிலை திரிந்த தொழிற்பெயர்.

9. **தோன்றா**க்கெடும் – செய்யா எனும் வாய்பாட்டு வினையெச்சம்; வாழ்க்கை – தொழிற் பெயர்.

### பயிற்சி

**I. சிறுவினா:**

1. திருக்குறளின் பகுப்புகள் யாவை?
2. திருக்குறளுக்கு வழங்கும் வேறுபெயர்கள் யாவை?
3. திருவள்ளுவருக்கு வழங்கும் வேறுபெயர்கள் யாவை?
4. அமரருள் உய்ப்பது எது?
5. ஆரிருள் உய்ப்பது எது?
6. மலையினும் மாணப் பெரியது எது?
7. ஒருமையுள் ஆமைபோல் – விளக்குக.
8. பேரறிவாளன் திரு எத்தகையது?
9. நயனுடையான் கண்படும் செல்வத்திற்குக் கூறப்படும் உவமையைச் சுட்டுக.
10. பெருந்தகையான் கண்படும் செல்வம் எதற்கு ஒப்பானதாகும்?
11. விற்றுக்கோள்தக்கதுடைத்து எது?
12. ஒருவன் ஆராய வேண்டிய நால்வகை வ–மைகள் யாவை?
13. இடைக்கண் முரிந்தார் பலர் – யார்?
14. பொருளைப் போற்றி வழங்கும் நெறியாக வள்ளுவர் உரைப்பன யாவை?
15. பீலிபெய்சாகாடு உணர்த்தும் உண்மையாது?
16. கூகையைக் காக்கை பகல்வெல்லும் – விளக்குக.
17. ஊக்கமுடையவன் ஒடுக்கத்திற்குக் காட்டப்படும் உவமையைச் சுட்டுக.
18. கொக்கு காலமறிதலுக்கு ஏற்ற உவமையாதல் யாங்ஙனம்?

**II. பெருவினா:**

1. அடக்கமுடைமையின் சிறப்பினை வள்ளுவர் எங்ஙனம் விரித்துரைக்கிறார்?
2. ஒருவன் நாவடக்கம் பேணவேண்டும் என்பதனைக் குறள் வழியே எடுத்துக் காட்டுக.
3. ஒப்புரவாளனது செல்வம் பயன்படு மாற்றினை விளக்குக.



4. வரவும் செலவும் ஒப்ப வழங்குமாறு வள்ளுவர் உரைப்பன யாவை?
5. ஒப்புரவேயாயினும் அளவறிந்து செய்க என்று வள்ளுவர் உரைக்குமாறு யாங்ஙனம்?
6. நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந்து ஊக்கின் உயிர்க்கிறுதியாகி விடும் – இதன் கண்ணமைந்த அணியினை விளக்குக.
7. பிறிது மொழிதலணியை விளக்கிக் குறளோடு பொருத்திக் காட்டுக.
8. பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும் வேந்தர்க்கு வேண்டும் பொழுது – இதன்கண் அமைந்த அணியினை விளக்குக.
9. வேற்றுமையணி என்றால் என்ன? பாடப்பகுதியில் வந்துள்ள குறட்பாக்களிலிருந்து எடுத்துக் காட்டுத் தருக.
10 கொக்கு ஒக்க கூம்பும் பருவத்து மற்றதன் குத்தொக்க சீர்த்த இடத்து – இதன்கண் அமைந்த அணியினை விளக்குக.

**III. நெடுவினா:**

1. அடக்கமுடைமை பற்றி வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்தெழுதுக.
2. ஒப்புரவறிதல் என்ற தலைப்பின் கீழ்வரும் கருத்துகளை ஒரு கட்டுரை வடிவில் வரைக.
3. காலமறிதல் – வள்ளுவர் உரைப்பனவற்றை இருபது வரிகளில் விளங்க வரைக.
4. வலியறிதல் என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்தெழுதுக.

**IV. விடை தேர்க:**

1. தமிழ் மாதின் இனிய உயிர்நிலை என்று பாராட்டப் பெறுவது?
   அ) ஆசியசோதி  ஆ) சிலப்பதிகாரம்  இ) திருக்குறள்

2. திருக்குறள் என்பது,
   அ) அடையடுத்த கருவியாகு பெயர்  ஆ) பண்புப்பெயர் இ) அன்மொழித் தொகை.

3. அறத்துப்பா–ல் உள்ள அதிகாரங்களின் எண்ணிக்கை
   அ) 133  ஆ) 38  இ)35

4. அறத்துப்பாலின்கண்ணமைந்த இயல்கள்
   அ) அரசியல் அங்கவியல் ஒழிபியல்  ஆ) களவியல் கற்பியல்
   இ) பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல், ஊழியல்.

5. திருக்குறளின் பெருமையை உணர்த்தும் நூல்.
   அ) பழமொழி நானூறு  ஆ) திருவள்ளுவமாலை இ) நால்வர் நான்மணிமாலை.

**V. பொருத்துக.**

| **அணி** | **குறள்** |
|---|---|
| உவமையணி | தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே<br>நாவினாற் சுட்ட வடு |
| வேற்றுமையணி | கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்<br>குத்தொக்க சீர்த்த இடத்து. |
| பிறிது மொழிதலணி | ஊருணி நீர் நிறைந்தற்றே உலகவாம்<br>பேரறிவாளன் திரு. |
| தொழிலுவமையணி | பீ–பெய் சாகாடு மச்சிறு மப்பண்டஞ்<br>சால மிகுத்துப் பெயின்<br>தீயவை தீய பயத்தலான் தீயவை<br>தீயினு மஞ்சப் படும் |

**VI. கோடிட்ட இடங்களில் ஏற்ற சொற்களை அமைத்து எழுதுக.**

1. ஒருமையுள் ________________ ஐந்தடக்க லாற்றின் ________________ புடைத்து.
2. யாகாவா ராயினும் ________________ காவாக்கால் சோகாப்பர் ________________ பட்டு.
3. உடைத்தம்________________ ஊக்கத்தின் ஊக்கி ________________ பலர்.
3. வினைவலியுந் ________________ மாற்றான் வலியும் ________________ தூக்கிச் செயல்.
4. பகல் வெல்லும் ________________ இகல்வெல்லும் வேந்தர்க்கு ________________பொழுது.
5. ஊருணி ________________ தற்றே உலகவாம் ________________ திரு.
6. பீலிபெய் ________________ மச்சிறு மப்பண்டம் ________________மிகுத்துப் பெயின்.

**VII. இலக்கணக்குறிப்பு எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| அதனினூஉங்கு | பெறல் | தீராமை | ஆரிருள் |
| அறிவான் | அகலாக்கடை | பணிதல் | கேடு |
| பொருளா | உலகு | உளவோ | கொம்பர் |
| அடங்காமை | பெய்சாகாடு | சால | வழங்குநெறி |
| அளவறிந்து | தோன்றாக் கெடும் | நுனிக்கொம்பர் | |
| கோள் | வினைவலி | | |

**VIII. பிரித்துப் புணர்ச்சிவிதி தருக.**

| | | | |
|---|---|---|---|
| ஆரிருள் | தாளாற்றி | செறிவறிந்து | பொருளெல்லாம் |
| பேரறிவாளன் | அச்சிறும் | ஐந்தடக்கல் | நுனிக்கொம்பர் |
| பொருட்பயன் | கொக்கொக்க | ஆகாறு | தீச்சொல் |

**IX.பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

| | | | |
|---|---|---|---|
| காக்க | இருப்பர் | நுழைந்து | முரிந்தார் |
| அடங்கியான் | வாழ்வான் | வேரார் | ஆற்றுவான் |
| வாழாதான் | வியந்தான் | அழிந்து | சோகாப்பர் |
| பணிதல் | செல்வார் | ஈக | மிகுந்து |
| ஏறினார் | சுட்ட | தூக்காத | |

**X.மொழித்திறன் வளர்பயிற்சி:**

சொல்லழகும் பொருளழகும் இயைந்து வியப்புறுத்தும் பாடல்கள் தமிழில் மிகுதியாக உள்ளன, சொல்லிச் சொல்லிச் சுவை காண்க. சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்



வைத்ததொரு கல்வி மனப்பழக்கம் என்பர். தமிழுக்கேயுரிய சிறப்பெழுத்துகளை ஒலித்துப் பழகுக.

எழிலுடைய அம்மனைமீர் என்னரங்கத் தின்னமுதர்
குழலழகர் வாயழகர் கண்ணழகர் கொப்பூழில்
எழுகமலப் பூவழகர் எம்மானார் என்னுடைய
கழல் வளையைத் தாமே கழல்வளைய யாக்கினரே

புழுகுநெய்ச் சொக்கர்அபிடேகச் சொக்கர் கர்ப்பூரச் சொக்கர்
அழகிய சொக்கர் கடம்பவனச் சொக்கர் அங்கயற்கண்
தழுவிய சங்கத் தமிழ்ச் சொக்க ரென்றென்று சந்ததம் நீ
பழகிய சொற்குப் பயன்தேர்ந்து வாஇங்கென் பைங்கிளியே

வஞ்சியே னென்றவன்றன் ஊருரைத்தான் யானுமவன்
வஞ்சியா னென்பதனால் வாய் நேர்ந்தேன் – வஞ்சியான்
வஞ்சியேன் வஞ்சியே யென்றுரைத்தும் வஞ்சித்தான்
வஞ்சியாய் வஞ்சியார் கோ.

கூடற் பெருமானைக் கூடலார் கோமானைக்
கூடப் பெறுவேனேற் கூடென்று – கூடல்
இழைப்பாள் போற்காட்டி இழையா திருக்கும்
பிழைப்பிற் பிழைபாக் கறிந்து.

இல்லத்தேயிருக்கும் முதியோர் வழியே இவைபோற் பல பாடல்கள் கேட்கலாம். அன்போடும் அக்கறையோடும் அணுகினால் ஏடெடுத்துப் படிக்காமலே எண்ணற்ற தமிழ்க் கவிதைகளைச் சுவைக்கலாம்.

“காம்பில் மணக்கும் மல்லிகை; காதில் மணக்கும் செந்தமிழ்” என்ற உண்மையறிந்து உவகை யெய்தலாம்.

# 4. தொடர்நிலைச் செய்யுள்

## (அ) சீவகசிந்தாமணி

தமிழ் மொழியின்கண் விளங்கும் ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று சீவக சிந்தாமணியாகும்.

சிந்தாமணி என்பதற்கு ஒளிகுன்றாத மணி என்பது பொருள். குன்றுத– ல்லாத அழகு தமிழ்நடை பெற்றிருப்பதாலும் தமிழ் மாந்தர் தம் நெஞ்சில் வைத்துப் போற்றுவதாலும் இந்நூல் சிந்தாமணி என்னல் தகுதியுடையதாயிற்று.

இக்காப்பியத்தை இயற்றித் தமிழன்னைக்கு அணி செய்தவர் திருத்தக்கதேவர் என்னும் புலவர் பெருமானாவர். இவர் சோழ நாட்டைச் சேர்ந்தவர். சமண சமயஞ்சார்ந்த துறவி. இவர் நரி விருத்தம் என்றநூலையும் எழுதியுள்ளார்.

சீவகசிந்தாமணிக்கு மண நூல் என்றபெயரும் உண்டு. இஃது நாமகள் இலம்பகம் முதலாக முத்தியிலம்பகம் ஈறாகப் பதின்மூன்று இலம்பகங்களைக் கொண்டிலங்குகின்றது. விருத்தம் என்னும் பாவினத்தால் அமைந்த முதல் தமிழ்க் காப்பியம் சிந்தாமணியே. இந்நூலுக்கு உரை கண்டவர் உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் ஆவார்.

சீவகன் பிறந்த பொழுது அவன்தாய் விசயை 'சிந்தாமணியே' என்று அவனை அழைத்தாா். அக்குழந்தை தும்மிய பொழுது 'சீவ' என்ற வாழ்த்தொ– கேட்டது. அதனால் அவன் சீவகன் என்று அழைக்கப்பட்டான். சீவகன் வரலாற்றைக் கூறும் காப்பியமாத– ன் அந்நூல் சீவகசிந்தாமணி என வழங்கலாயிற்று.

### காந்தருவதத்தையார் இலம்பகம்

வெள்ளி மலையிலுள்ள வித்தியாதரர் வேந்தன் கலுழவேகன் என்பான். அவன் மகள் காந்தருவதத்தைக்கு இராசமாபுரத்தில்தான் திருமணம் நிகழும் என்பதை நிமித்திகர் மூலம் அறிந்தான். எனவே, சீதத்தன் என்னும் வணிகன்பால் தன் மகளை ஒப்புவித்து இவளை யாழ்ப்போரிலே வெல்வானுக்கு மணஞ்செய்து கொடுக்க என வேண்டினான். சீதத்தன் அழைத்துவரத் தத்தை தன்தோழி வீணாபதி என்பவளோடு இராசமாபுரம் வந்தாள். சீதத்தன், "இவளை யாழ்ப் போரிலே வெல்வான் எவனோ அவனுக்கு மணஞ்செய்து கொடுப்பேன்" என்று முரசறைவித்தான். அதனால் அவளை அடையப் பல நாட்டு மன்னரும் குழுமினர். யாழ் மண்டபத்திலே தத்தை யாழ் வாசித்தாள். அந்த இனிய இசையில் கின்னர மிதுனங்களும் மெய்மறந்து நின்றன. வீணாபதி அரசர்களை யாழ்ப்போருக்கு அழைத்தாள். அரசர்கள் யாரும் தத்தைக்கு நிகராக யாழ் இசைக்க இயலாது மயங்கினர். இவ்வாறு ஆறு நாள்கள் கழிந்தன.

இஃதறிந்த சீவகன் தத்தையை யாழ்ப் போரில் வெல்லக் கருதித் தன் நண்பர்களோடு யாழ் மண்டபம் அடைந்தான். அரங்கிலே வீணாபதி குற்றமுடைய யாழ் பலவும் கொணர்ந்து வைக்கச் சீவகன் அவற்றைவிலக்கினான். பிறகு ஒரு யாழைத் தெரிவு செய்து அதிலும் நரம்பிலே தலைமயிர் இருந்ததை உணர்த்தித் தன் தோழன் நபுலன் கையி– ருந்து நரம்பு வாங்கிக் கட்டினான். பின்னர் யாழிசை மீட்டிப் பாடினான். பருந்தும் நிழலும் போல் பாட்டும் யாழிசையின் கூட்டும் ஒத்திருந்தன. தத்தை எதிர்ப்பாட்டுப் பாட முயன்று குரல் நடுங்கித் தோற்றாள். பின் சீவகனுக்கு மாலை சூட்டினாள்.



**தத்தை யாழ் மண்டபத்திலே யாழிசை மீட்டலும் அவ்விசையின் தன்மையும்**

சிலைத்தொழிற் சிறுநுதற் தெய்வப் பாவைபோற்
கலைத்தொழிற் படவெழீஇப் பாடி னாள்கனிந்
திலைப்பொழிற் குரங்கின; ஈன்றதூண்டளிர்
நிலத்திடைப் பறவைமெய்ம் மறந்து வீழ்ந்தவே. 1

**தத்தை இசை மரபுக்கேற்பப்பாடுதல்**

கருங்கொடிப் புருவம் ஏறா
கயனெடுங் கண்ணும் ஆடா
அருங்கடி மிடறும் விம்மா
தணிமணி யெயிறுந் தோன்றா
இருங்கடற் பவளச் செவ்வாய்
திறந்திவள் பாடி னாளோ
நரம்பொடு வீணை நாவின்
நடந்ததோ வென்று நைந்தார். 2

**அரசர்கள் யாவரும் தத்தையிடம் தோற்றல்**

திருமலர்க் கமலத் தங்கட்
டேனினம் முரல்வ தொப்ப
விரிமலர்க் கோதை பாட
ஏழால் வகை வீரர் தோற்றார்;
எரிமலர்ப பவளச் செவ்வாய்
இன்னரம் புளர மைந்தர்
புரிநரம் பிசைகொள் பாடல்
உடைந்தனர் பொன்ன னாட்கே. 3

**சீவகன் யாழ்ப்போர் கருதி யாழ் மண்டபம் அடைதல்**

விடுகணை விசையின் வெய்ய
விளங்கொளி யிவுளித் திண்டேர்
கடுநடைக் கவரி நெற்றிக்
கா– யற் புரவி காய்ந்து
வடி நுனை யொளிறு மாலை
வாட்படை மறவர் சூழ
அடுதிரைச் சங்க மார்ப்ப
அணிநகர் முன்னினானே. 4

**தத்தை சீவகனிடம் யாழைத்தரப் பணித்தல்**

கழித்தவேலேறு பெற்ற
கடத்திடைப் பிணையின் மாழ்கி
விழித்துவெய் துயிர்த்து மெல்ல
நடுங்கித்தன் தோழி கூந்தல்
இழுக்கிவண் டிரியச் சேர்ந்தோர்
கொடிப்புல்லும் கொடியிற் புல்—
எழிற்றகை மார்பற் கின்யாழ்
இதுவுய்த்துக் கொடுமோ என்றாள். 5

**சீவகன் யாழினை ஆராய்தல்**

தடங்கணாள் பணியினால்
தானவ் வீணை யொன்றினை
நெடுங்கணாள் எழினியை
நீக்கி யுய்த்து நீட்டினாள்
மடங்கலன்ன மொய்ம்பினான்
வருக வென்று கொண்டுதன்
கிடந்தஞானத் தெல்லையைக்
கிளக்க லுற்று நோக்கினான். 6

**சீவகன் யாழின் குற்றம் அறிதல்**

சுரந்து வானம் சூல்முதிர்ந்து
மெய்ந்நொந் தீன்றதுளியே போற்
பரந்த கேள்வித் துறைபோய
பைந்தார் மார்பன் பசும்பொன்யாழ்
நரம்பு தேனார்த் தெனத்தீண்டி
நல்லாள் வீணை பொல்லாமை
இருந்த எழிலாள் நின்றாளை
நோக்கி யிசையின் இது சொன்னான். 7

நீர்நின் றிளகிற் றிதுவேண்டா;
நீரின் வந்த திதுபோக;
வார்நின் றிளகும் எழில் நலத்தாய்
வாட்புண் ணுற்றதிதுநடக்க;
ஒரும் உருமே றிது வுண்ட
தொழிக ஒண்பொன் னுகுகொடியே
சீர்சால் கணிகை சிறுவன்போற்
சிறப்பின் றம்ம இதுவென்றான். 8

**பலவகையானும் ஆராய்ந்து இவ்யாழ் நன்றென்றல்**

கல்சேர் பூண்கொள் அழகியாய்
காமத் தீயால் வெந்தவர்போற்
கொல்லை யுழவர் சுடப்பட்டுக்
குரங்கி வெந்த திது;களிறு
புல்ல முரிந்த தெனப்போக்கித்
தூம மார்ந்த துகிலுறையும்
நல்யாழ் நீட்ட அதுகொண்டு
நங்கை நலத்த திதுவென்றான். 9

இருநில மடந்தை யீன்ற
திருவிசும் பென்னும் கைத்தாய்
திருநல மின்னுப் பொன்ஞாண்
முகிலருள் மாரித் தீம்பால்
ஒருநலங் கவினி யூட்ட
உண்டுநோய் நான்கும் நீங்கி
அருநலங் கவினி வாள்வாய்
அரிந்திது வந்த தென்றான். 10

**அந்தயாழிலும் குற்றம் உண்மை**

தீந்தொடை நரம்பின் தீமை
சிறிதலாப் பொழுதும் ஓதிப்
பூந்தொடை யரிவை காணப்
புரிஞெகிழ்த் துரோமங் காட்டத்
தேங்கமழ் ஓதி தோற்றாள்
செல்வனுக் கென்ன மைந்தன்
வாங்குபு நபுலன் கையுள்
வார்புரி நரம்பு கொண்டான் 11

**சீவகன் யாழ் மீட்டிப் பாடுதல்**

பணிவரும் பைம்பொற் பத்தர்
பல்வினைப் பவள ஆணி
மணிகடை மருப்பின் வாளார்
மாடக வயிரத் தீந்தேன்
அணிபெறஒழுகி யன்ன
அமிழ்துறழ் நரம்பின் நல்யாழ்
கணிபுகழ் காளை கொண்டு
கடலகம் வளைக்க லுற்றான். 12

### சீவகன் இசைக்கத் தத்தை எதிர் இசை தொடங்கல்

பருந்தும் நிழலும்போற் பாட்டும் எழாலும்
திருந்துதார்ச் சீவகற்கே சேர்ந்தனவென் றெண்ணி
விருந்தாக யாழ்பண்ணி வீணைதான் தோற்பான்
இருந்தாள் இளமயில்போல் ஏந்திழைவேற் கண்ணாள் 13

### தத்தை குரல் நடுங்கித் தோல்வியுறுதல்

பண்ணொன்று பாட லதுவொன்று பல்வளைக்கை
மண்ணொன்று மெல்விரலும் வாள்நரம்பின் மேல்நடவா
விண்ணின் றியங்கி மிடறும் நடுநடுங்கி
எண்ணின்றி மாதர் இசைதோற் றிருந்தனளே. 14

**- திருத்தக்கதேவர்.**

### அருஞ்சொற்பொருள்

1. சிலை = வில்; சிலைத் தொழில் – (தொழில் சிலை)போரில் நாண் ஏற்றிய வில்; சிறுநுதல் = சிறிய நெற்றியுடைய காந்தருவ தத்தை; தெய்வப் பாவை = தெய்வத்தாற் செய்த கொல்– ப் பாவை; கலை = இசைக்கலை; எழீஇ = யாழை வாசித்து; பொழில் = சோலை; குரங்கின = வளைந்தன; பறவை = கின்னரமிதுனம் என்னும் பறவைகள்; இவை இசையோடு ஒ– ப்பதில் சிறந்தவை. ஒன்றையொன்று இணைபிரியா; ஆணும் பெண்ணுமாய் விளங்குவன. கலைத்தொழில் பொருந்தப் பாடுதல் – பண்ணல், பரிவட்டணை, ஆராய்தல், தைவரல், செலவு, விளையாட்டு, கையூழ், குறும்போக்கு என்றஎண் வகையான முறைமையறிந்து பாடுதல். யாழ் வாசித்தலால் சோலைகள் வளைந்தன; தூண்கள் தளிரை ஈன்றன; இப்பாடல் க– விருத்தமாகும்.

2. கருங்கொடி = கரிய ஒழுங்கு, (கரிய மயிர் ஒழுங்குடைய புருவம்); மிடறு = கழுத்து; கொடி = ஒழுங்கு; கடி= விளக்கம்; எயிறு = பல்; விம்மாது = புடைக்காது; வீணை நாவு = சரீரத்தை வீணையாகக்கூறுவது இசை நூல் மரபு ( உடம்போடு வைத்து யாழ் மீட்டினாள்) இவ்வண்ணம் பாடுவது இசைமரபு என்பர்.

   கண்ணிமையா கண்டந் துடியா கொடிறசையா
   பண்ணளவும் வாய்தோன்றா பல்தெரியா எண்ணி– வை
   கள்ளார் நறுந்தெரியற் கைதவனே கந்தருவர்
   உள்ளாளப் பாடல் உணர். – என்பது இசை மரபு.
   பாவகை : அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம். 2 – 12 ஆசிரியவிருத்தங்கள்.

3, கோதை = காந்தருவதத்தை; முரல்வது = ஆரவாரித்தல்; தேனினம்= வண்டுகளின் கூட்டம்; எழால் வகை = யாழின் கூறுபாடு; வீரர் = (தோல்வியடைந்தவரை வீரர் என்றது) இகழ்ச்சிக் குறிப்பு; வீரர் = போட்டிக்கு வந்த அந்தணர்; எரிமலர் = முருக்கமலர்; இன்னரம்பு= யாழின் இனிய நரம்பு; செவ்வாய் = காந்தருவதத்தை; உளர = தடவ; உடைந்தனர் = தோற்றனர்; பாடல் = மிடற்றுப்பாடல்; பொன் அன்னாள் = திருமகள் போல்வாள் (தத்தை).



4. விடுகணை = வில்– னின்று விட்ட அம்பு (எய்யப்பட்ட அம்பு); விசையின் = வேகம் போல; வெய்ய = விரும்பத்தக்க; இவுளி = குதிரை; கால் = காற்று; கா– யற்புரவி = கடுங்காற்றுப்போல விரைந்த நடையினையுடைய குதிரைகள்; காய்ந்து வடிநுனை = கொல்லர் உலைக் களத்தழ– ல் முருகக்காய்ந்து வடிக்கப்பட்ட கூரிய நுனி; அணிநகர் = அழகிய மண்டபம்; நுனை = கூர்மை.

5. கழித்த வேல் = உறையினின்று எடுத்த வேல்; கடம் – காடு; வேல் ஏறு பெற்ற= வேல் ஏறுதலைப் பெற்ற; பிணை = பெண்மான்; மாழ்கி = மயங்கி; வெய்துயிர்த்து = பெருமூச்செறிந்து. இழுக்கி = தப்பி; கொடிப்புல்லும் கொடியிற்புல்– = ஒரு கொடியைத் தழுவும் மற்றொரு கொடியைப் போல வீணாபதியைத் தழுவி; தோழி = வீணாபதி; இரிய = விலகி ஓட; கொடுமோ = கொடுப்பாய்; உய்த்துக் கொடுத்தலாவது = வேறு பல யாழ்களையும் கொடுத்து யாழறியும் அவனறிவை உய்த்தறிந்து பிறகு நல்ல யாழைக் கொடுத்தல்.

6. தடங்கண்ணாள் = அகன்றகண்களையுடைய காந்தருவதத்தை; எழினி = உறை; மொய்ம்பு = வ– மை; மடங்கல் = சிங்கம்; நெடுங்கண்ணாள் – வீணாபதி; கிளக்கலுற்று = அறிவிக்க எண்ணி.

7. மெய்நொந்து ஈன்றதுளி = மேகம் உடல்வருந்திப் பொழிந்த மழைத்துளி; சுரந்து = நிறைந்து; துளி = (இங்கு) பெருமழை; தேனார்த்தென = வண்டுமுரன்றது போல; தீண்டி = நரம்பைத் தெறித்து; பொல்லாமை = குற்றமுடைமை; நரம்பிற் பிறந்த பொல்லாமையாவன, செம்பகை, ஆர்ப்பு, கூடம், அதிர்வு என்பன. செம்பகை என்பது = இன்பமில் ஓசை; ஆர்ப்பு என்பது அளவிறந்திசைப்பது; கூடம் என்பது மழுங்கியிசைப்பது. அதிர்வு என்பது சிதறியுரைக்குநர் உச்சரிப்பிசை; இவ்வாறு இசையொழுங்கு மாறுபடுதல் மரக்குற்றத்தால் என்பர். மரக்குற்றமாவன, நீரிலேநிற்றல், அழுகுதல், நெருப்பிலே வேகுதல், பாரிலே நிற்றல், இடிவிழுதல் முத– யன. இவையே பண்கள் மயங்குவதற்குக் காரணம் என்ப.

8. கொடி = வீணாபதியைக் குறிக்கும்; இளகிற்று = மெ– ந்தது; நீரின் வந்தது = நீரில் கிடந்து அழுகியது; கணிகை = பொதுமகள், வேசை; வாட் புண் உற்றது = வாளால் வெட்டுப் பட்டது; உருமேறு உண்டது = இடியினால் தாக்கப்பட்டது. ஒண்பொன்னுகு கொடியே = ஒள்ளிய பொன் போன்றமகரந்தங்களை உகுக்கும் கொடி போன்றவளே.

9. கொல்லை = முல்லைநிலம்; குரங்கி = வளைந்து; புல்ல = தழுவ; தூமம் = அகிற்புகை; நங்கை நலத்தது – தத்தை போலவே குல முத– யவற்றாற் சிறப்புடையது.

10. நிலமடந்தை = பெற்றதாய்; (பரந்த ஆகாயம்) இருவிசும்பு = செவி– த்தாய்; கைத்தாய் = செவி– த்தாய்; மின்னுப் பொன்நாண் = மின்னல் ஆகிய பொன்னரை ஞாண்; முகில் மாரி = மேகந்தரும் மழை (மழையாகிய தீம்பால்) கவினி = அழகு பொருந்தி; நோய்நான்கு = மிக்கவெயில், அதிகநீர், கடுங்காற்று, தண்ணென்றநிழல்; இவை நான்கினாலும் தாக்கப்பட்டுத் தன் செவ்வியிழத்தல்; வாள்வாய் அரிந்து = வாளினால் வெட்டப்பட்டு.

11. சிறிதலாப்பொழுது = நெடுநேரம்; ஓதி = சொல்– ; புரி = முறுக்கு; பூந்தொடை = பூக்களாலாகிய மாலை; நெகிழ்த்தி=தளர்த்தி, உடைத்து; வார்புரி நரம்பு = நீண்ட முறுக்கமைந்த நரம்பு; அரிவை = நங்கை; யாழ் நன்றாக இருத்த– ன் தனக்குச் சேமமாக நரம்பை மட்டும் கொண்டான்; மைந்தன் = சீவகன்; நபுலன் = சீவகன் தம்பி; ஓதி = கூந்தல் (கூந்தலையுடையவள்)

12. பத்தர் = யாழின் ஓர் உறுப்பு; வாள்ஆர் = ஒளிபொருந்திய; கணிபுகழ் காளை = நிமித்திகர்களால் புகழப்பட்ட சீவகன்; பல்வினை = பலவாகிய வேலைப்பாடு உள்ள; கடலகம் = கடலால் சூழப்பட்ட உலகம்; மாடகம் = யாழ் நரம்பை இழுத்துக் கட்டுங் கருவி; பணிவரும் = வாசித்தல் தொழி– லே வரும்.

13. பாட்டு = வாயால் பாடும் பாட்டு; எழால் = யாழால் உண்டாகும் இசை; பருந்தும் நிழலும் போற்பாட்டும் எழாலும் – பருந்தும் அதன் நிழலும் போலப் பாட்டும் யாழிசையும் இணைபிரியாது ஒத்திருத்தல். பருந்து பறக்குமிடத்தே முறையே உயர்ந்து அந்நிலத்தின்கண்நின்று ஆய்ந்து பின்னும் அம்முறையே மேன்மேல் உயர்கின்றாற் போலப் பாட வேண்டுத– ன் இவ்வாறு உவமிக்கப்பட்டது; விருந்தாக= (இதுவரை யில்லாத) புதுமையாக.

14. மாதர் = காந்தருவதத்தை; பண்ணொன்று பாடலதுவொன்று = பாட்டும் யாழிசையும் வேறு வேறாயிருத்தல்; மிடறு நடுங்குதல் = குரல் நடுங்குதல்; எண்ணின்றி = எண்ணம் இன்றி நினைவிழந்து; மண்ணுதல் = பண்ணுதல். (வாசித்தல்)13, 14 ஆம் பாடல்கள் க– விருத்தமாம்.

### இலக்கணம்

1. எழீஇ – சொல்– சையளபெடை; சிறுநுதல் = அன்மொழித்தொகை; பாவை – உவமையாகு பெயர்; இலைபொழில் – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை; சிலைத் தொழில் – ஆறாம் வேற்றுமைத் தொகை;

2. கருங்கொடி – பண்புத்தொகை; இருங்கடல் – பண்புத்தொகை; கடிமிடறு – உரிச்சொற்றொடர்; கயனெடுங்கண், பவளச்செவ்வாய் – உவமத்தொகைகள்.

3. விரிமலர் – வினைத்தொகை; கோதை – உவமையாகுபெயர்; எரிமலர்– உவமைத்தொகை; செவ்வாய் – அன்மொழித்தொகை; (காந்தருவதத்தை) ஒப்ப – உவமவுருபு; இன்னரம்பு – பண்புத்தொகை; உளர .... உடைந்தனர் – செயவென் வாய்பாட்டு வினையெச்சம்; புரிநரம்பு – வினைத்தொகை; கொள்பாடல் – வினைத்தொகை.

4. விடுகணை – வினைத்தொகை; திண்டேர் – பண்புத்தொகை; வடிநுனை, விளங்கொளி – வினைத்தொகைகள்; வாட்படை – இருபெயரொட்டுப் பண்புத்தொகை; அடுதிரை – வினைத்தொகை.

5. கழித்த வேல் – பெயரெச்சம்; கொடுமோ – 'மோ' முன்னிலையசை; இன்யாழ் – பண்புத்தொகை.

6. அன்ன – உவமஉருபு; நீக்கி, உய்த்து – வினையெச்சங்கள்; நெடுங்கண் – பண்புத்தொகை; கிடந்த ஞானம் – பெயரெச்சம்; தடங்கண் – உரிச்சொல் தொடர்.

7. சுரந்து, முதிர்ந்து, நொந்து – வினையெச்சங்கள்; என – உவமஉருபு; பொல்லாமை – எதிர்மறைத் தொழிற்பெயர்; நின்றாள் – வினையாலணையும் பெயர்; எழிலாள் – குறிப்பு வினைமுற்று.

8. போக, நடக்க, ஒழிக – வியங்கோள் வினைமுற்றுகள்; அம்ம – முன்னிலையசை; ஒண்பொன் – பண்புத்தொகை; ஒரும் – அசை.

9. கணிகை சிறுவன் – நான்காம் வேற்றுமைத் தொகை முறைப் பொருளில் வந்தது; நல்யாழ்– பண்புத்தொகை; நலத்தது – குறிப்பு வினைமுற்று;

10. கைத்தாய் – ஏழன் தொகை.

11. வாங்குபு – செய்பு என்னும் வாய்பாட்டு வினையெச்சம்; கமழ் ஓதி – அன்மொழித்தொகை (வினைத்தொகைப் புறத்துப் பிறந்தது).

12. காளை – உவம ஆகுபெயர்.



13. திருந்துதார் – வினைத்தொகை; வேற் கண்ணாள் – உவமத் தொகை.

14. நடவா – செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம்; நடுநடுங்கி – இரட்டைக்கிளவி; மிடறும் – இறந்தது தழீஇய எச்சவும்மை.

## பயிற்சி

**I.** சிறுவினா:

1. சிந்தாமணி – பெயர்க் காரணம் தருக.
2. சிந்தாமணிக்கு வழங்கப்படும் வேறு பெயர் யாது?
3. சிந்தாமணியில் எத்தனை இலம்பகங்கள் உள்ளன?
4. திருத்தக்க தேவர் புனைந்த வேறொரு நூல் யாது?
5. தத்தையின் யாழிசையால் நிகழ்ந்தன யாவை?
6. தத்தை இசைமரபுக்கேற்ப இசை வழங்கியமை யாங்ஙனம்?
7. கொடிப்புல்லும் கொடி – விளக்குக.
8. பருந்தும் நிழலும் போல் – உவமையை விளக்குக.

**II.** பெருவினா:

1. சீவகசிந்தாமணி – இலக்கிய வரலாறு தருக.
2. சீவகன் யாழின்பால் கண்ட குற்றங்கள் எவை?
3. சீவகன் நன்றென்று கண்ட யாழின் சிறப்புகள் யாவை? அதில் கண்ட குற்றம் யாது?
4. தத்தை சீவகற்குத் தோல்வியுற்றதை விளக்குக.
5. இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
   1. நரம்பொடு வீணை நாவின் நடந்ததோ
   2. இதுவுய்த்துக் கொடுமோ.
   3. நங்கை நலத்தது இது.
   4. தேங்கமழ் ஓதி தோற்றாள் செல்வனுக்கு.

**III.** நெடுவினா:

1. சீவகன் காந்தருவதத்தையை யாழ்ப் போட்டியில் வென்றநிகழ்ச்சியைத் தொகுத்து வரைக.

**IV.** இலக்கணக்குறிப்பெழுதுக.

| | | | |
|---|---|---|---|
| வேற்கண், | விடுகணை | மடங்கலன்ன | தீந்தொடை |
| கொடுமோ | கழித்தவேல் | தேனார்த்தென | எழீஇ |
| கைத்தாய் | பசும்பொன் | வாங்குபு | நல்யாழ் |
| நரம்பு உளர | கொண்டான் | | |

**V.** பிரித்துப் புணர்ச்சிவிதி தருக.

| | | | |
|---|---|---|---|
| சிலைத்தொழில் | வேலேறு | வாட்புண் | தெய்வப் பாவை |
| அமிழ்துறழ் | தேனினம் | தூண்டளிர் | பண்ணொன்று |
| வாட்படை | பசும்பொன் | விளங்கொளி | எழிற்றகை |
| லுபந்தார் | உருமேறு | பூந்தொடை | |

**VI.** பகுபத உறுப்பிலக்கணம் தருக.

| | | | |
|---|---|---|---|
| நைந்தார் | ஒழிக | வாங்குபு | கொண்டான் |
| பாடினாள் | முரிந்தது | தோற்பான் | இருந்தாள் |
| உடைந்தனர் | உற்றான் | நீட்டினாள் | சொன்னான் |
| முன்னினான் | சேர்ந்தன | நோக்கினான் | |

**VII.**பின்வரும் அடிகளைப் பொருள் விளங்குமாறு பிரித்தெழுதுக.

1. திருமலர்க் கமலத் தங்கட் டேனின முரல்வதொப்ப
2. நீர்நின் றிளகிற் றிது வேண்டா; நீரின் வந்த திதுபோக
3. ஒரும் உருமே றிதுவுண்ட தொழிக வொண் பொன்னுகுகொடியே
4. இருந்தாளிள மயில்போ லேந்திழை வேற் கண்ணாள்.
5. பண்ணொன்று பாடலது வொன்று;

**VIII.**கோடிட்ட இடங்களை ஏற்றசொற்களால் நிரப்புக.

1. சீவகசிந்தாமணியை இயற்றியவர் ________________
2. சிந்தாமணியே என்று அழைக்கப்பட்டவர் ________________
3. சீவகசிந்தாமணிக்கு உரைகண்டவர் ________________
4. சீவகசிந்தாமணியில் பயின்று வரும் பாவினம் ________________

**XI.**மொழித்திறன் வளர்பயிற்சி: அறிக.

1. திருமணம் என்பது வீரத்தின் அடிப்படையிற்றான் அமைந்திருந்தது. வீரர்களின் ஏறுதழுவுதல், சுறவெறிதல், பு– கொல்லல் முத– ய வீரச் செயல்களால் கவரப்பட்டு மகளிர் அவ்வீரர்களை மாலையிட்டதாக இலக்கியங்கள் கூறுகின்றன.

    கொல்லேற்றுக் கோடஞ்சு வானை மறுமையும்
    புல்லாளே ஆயமகள்
    – க– த்தொகை

2. எழுத்துகளை ஓசை குன்றாதும் மிகாதும் ஒ– த்துப் பழகுதல் வேண்டும். நம் அருமைத் தமிழ்மொழிக்கண் அமைந்த செய்யுள்களைச் சொல்– ப் பார்த்து ஓசை நயம் பழகுக.

குறில் :

உயர்வற உயர்நலம் உடையவன் யவனவன்
மயர்வற மதிநல மருளினன் யவனவன்
அயர்வறு மமரர்க ளதிபதி யவனவன்
துயரறு சுடரடி தொழுதெ ழென் மனனே

– நம்மாழ்வார்

நெடில்

யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு

– திருவள்ளுவர்



கேளாய்நங் கிளை கிளைக்குங் கேடுபடரத் திறமருளிக்
கோளாய நீக்குபவன் கோளி– யெம் பெருமானே.

– திருஞானசம்பந்தர்

முடுகு

ஸ்ரீமதி யிவளார் உலகில் மானிடமதில் ஏதிது போலொரு
சே– ணையினை நேரிரு விழி;
கோகனக வினோத அதரம்!
மலர்வாய் திறந்தொரு வார்த்தை சொல்லாளோ.

– பாரதிதாசன்.

## (ஆ) சீறாப்புராணம்

இறைவனின் திருத்தூதர் நபிகள் நாயகம் அவர்களின் சீரிய வரலாற்றினை எடுத்தியம்பும் இனிய தமிழ் நூல் சீறாப்புராணம்.

சீறத் என்னும் அரபுச் சொல் தமிழ் மரபிற்கேற்பச் சீறா என்று வழங்கப்பட்டது.

சீறா என்பதற்கு வாழ்க்கை என்பது பொருள். புராணம் என்பது வரலாறு. எனவே சீறாப்புராணம் என்பதற்கு நபிகள் நாயகத்தின் வாழ்க்கை வரலாறு எனலாம். இந்நூல் விலாதத்துக் காண்டம், நுபுவ் வத்துக் காண்டம், ஹிஜ்ரத்துக் காண்டம் என்றமூன்று பெரும் பிரிவுகளையும் 5027 விருத்தப்பாக்களையும் கொண்டு இலங்குவது: இவை முறையே பிறப்பியற்காண்டம், செம் பொருட்காண்டம், செலவியற்காண்டம் எனவும் படும். பெருமானார் பிறந்ததும் இளமை நிகழ்வுகளும் திருமணமும் விலாதத்துக் காண்டத்தில் உரைக்கப்படுகின்றன. வானவர் ஜிப்ராயில் மூலம் திருமறைநபிகள் பெருமானார்க்கு அருளப்பட்டதும் அதன்பின் மக்கத்தில் நடந்தவையும் நுபுவ்வத்துக் காண்டத்தில் பேசப்படுகின்றன. மக்கத்தை விட்டுப் பெருமானார் மதீனம் சென்றதும் தீன் நிலை நிறுத்தற்காக நிகழ்ந்த போர்களும் பிறவும் ஹிஜ்றத்துக் காண்டத்தில் வரையப்பட்டுள்ளன. சீறாப்புராணத்தில் நபிகள் நாயகத்தின் வாழ்வு முற்றிலுமாகப் பாடி நிறைவு செய்யப்படவில்லை.

பனூ அகுமது மரைக்காயர் என்பவர்தாம் பெருமானாரின் தூய திருவாழ்வு முழுமையும் பாடிமுடித்தார். அஃது சின்னச் சீறா என்று வழங்கப்படுகிறது.

சீறாப்புராணத்தை இயற்றியவர் உமறுப்புலவர். இவர் எட்டயபுரம் கடிகை முத்துப் புலவரின் மாணவர். செய்கு அப்துல் காதிர் மரைக்காயர் என்றவள்ளல் சீதக்காதியின் வேண்டுகோளின் வண்ணமே உமறுப் புலவர் சீறாப்புராணத்தை எழுதத் தொடங்கினார். நூல் முற்றுறும் முன்னமே சீதக்காதி மறைந்தார். பின் அபுல் காசிம் என்றவள்ள– ன் உதவியால் சீறாப்புராணம் நிறைவு பெற்றது. உமறுப்புலவர் அபுல் காசீம் அவர்களை நூ– ன் பல இடங்களில் நினைவு கூர்ந்து போற்றுவது குறிப்பிடத்தக்கது.

உமறுப்புலவர் முதுமொழிமாலை என்றஎண்பது பாக்களால் ஆகிய நூலையும் படைத்தளித்துள்ளார். காலம் பதினேழாம் நூற்றாண்டு.

## விடமீட்ட படலம்

பகைவர்களுக்குப் புலப்படாவாறு நபிகள் பெருமானார் அபூபக்கர் என்ற தம் துணைவரோடு தௌர் மலைக்குகையில் தங்கியிருந்தார்கள். ஒரு சமயம் அபூபக்கர் மடியில் தலைசாய்த்துப் பெருமானார் துயில் கொண்டார்கள். அந்த மலைக்குகையில் நிறைய வளைகள் இருந்தன. அவற்றுள் ஒரு வளையின் வழியாகப் பாம்பொன்று தலை நீட்டிற்று. அபூபக்கர் பெருமானாரின் உறக்கத்துக்கு இடையூறு வாராவண்ணம் தமது மேலாடையைக் கிழித்து அந்தப் பொந்தினை அடைத்தார். பாம்பு வேறொரு பொந்தின் வழியே தலையை நீட்ட அதனையும் துணிகிழித்து அபூபக்கர் அடைத்தார். இப்படி வளைகளெல்லாவற்றையும் அடைத்தும் மீண்டும் ஒரு பொந்தின் வழியே பாம்பு வெளிவந்தது. மேலாடைத்துணி முற்றிலும் தீர்ந்து போனதால் அபூபக்கர் தமது உள்ளங்காலை வைத்து அந்தப் புழையை அடைத்தார். சினமுற்றபாம்பு அபூபக்கர் காலைப் பலமுறைதீண்டிற்று. பெருமானாரின் துயில் கலைந்து விடக் கூடாதே என்றகனிவோடு அபூபக்கர் தமது காலை அகற்றாமலும் அசையாமலும் இருந்தார். நஞ்சு தலைக்கேறி மயக்குறும் பொழுது நாயகத் திருமேனி கண் விழித்தார்கள். நஞ்சேறி அலமரும் தம் துணைவரைப் பார்த்து உற்றது வினவினார்கள். அபூபக்கரும் நிகழ்ந்தது உரைத்தார். பெருமானார் பாம்பினைப் பார்த்துத்தாம் ஏதும் தீங்கு செய்யாதிருந்த போதும் சினந்து தீண்டியதென்னென வினாவினார்கள். பாம்பு



பெருமானாரின் திருமுகம் காணும் நோக்கோடு காத்துக் கிடந்ததையும் திருமுகத்தைக் காணவியலாதவாறு அபூபக்கர் தடுத்ததால் தீண்டியதையும் எடுத்துரைத்தது. பெருமானார் பாம்பிற்கு அருள் புரிந்துவிடுத்தார்கள். பின் நஞ்சேறி மயங்கியிருந்த தம் துணைவரின் பாதத்திலே தமது திருவாயில் ஊறிய எச்சில் அமுதத்தால் நஞ்சு தீரும்படி அருளினார்கள். பெருமானாரின் எச்சில் அமுதம் தடவப் பெற்றதும் மேனியில் ஏறிய நஞ்சு தீர்ந்து அபூபக்கர் நிறைநலம் மீளப் பெற்று நாயகத் திருமேனியைப் பணிந்து தொழுதார்.

## விடமீட்ட படலம்

### நாயகத்திருமேனி அவர்கள் அபூபக்கர் மடியில் படுத்துத் துயிலுதல்

நகரைவிட் டகன்று கான்சூழ் நகத்திடத் துறைந்து தேடும்
இகலவர் கண்ணிற் காணா திருந்தவ ணிருக்குங் காலை
புகலபூ பக்கர் செவ்வி மடிமிசைப் பொருந்த வாசந்
திகழ்சிரஞ் சேர்த்தி வள்ளல் செழுந்துயில் புரிவ தானார். 1

### பாம்பு தலைநீட்டுதல்

மறைநபி துயிலா நின்றமலைமுழை யதனின் கண்ணே
குறுவளை யனேக மாங்கோர் வளையினிற் கொடுங்கண் வெவ்வாய்த்
தெறுதுளைப் புரைப்பற் புண்ணாச் சிறுபொறிப் படத்த செஞ்சூட்
டெறுழ்வ– க் கரிய பாந்தள் இருந்தலை நீட்டிற் றன்றே. 2

### அபூபக்கர் வளையை யடைத்தல்

படியடி பரப்பச் செய்யா முகம்மதும் பரிவு கூர
மடிமிசைத் துயின்றா ரிந்த வளையிடத் தரவுங் கண்டோம்
விடிவதெவ் வாறோ வென்ன வெருவி நெஞ்சுளைந்து போர்த்த
பிடவையிற் கிழித்துச் சுற்றிப் பேதுறா தடைத்து நின்றார். 3

### வளைகளில் ஒன்று மட்டும் அடைபடாதிருத்தல்

ஒருவளை யன்றி யாவு மடைத்தனம் உரகம் ஈங்கு
வருமெனின் மறைப்ப யாது மிலைத் திரு வள்ளலார்நித்
திரைமறுத் திடுதல் நன்றன் றெனவுடல் திடுக்கிட் டேங்கிப்
பருவரல் சுமந்து நின்றார் பணிவர வறிகி லாரே 4

### வளையி- ருந்து பாம்பு தலைநீட்ட அபூபக்கர் காலை நீட்டி அடைத்தல்

மடிமிசை யிருந்த காந்தி மதிமுகம் அசைந்தி டாமல்
கடிநறைப் பொதுளுஞ் செவ்விக் கமலமென் மலர்த்தாள் நீட்டி
விடவர வுறையும் பர– ல் வெளியணு வெனினுந் தோன்றா
திடனறவுள்ளங் கால்கொண் டிடனறவடைத்தா ரன்றே. 5

### பாம்பு அபூபக்கரைத் தீண்டுதல்

புறப்படற் கரிதாய் வேகம் பொங்கிக்கண் செவந்து சீறி
மறைப்படும் வளைக்கு ளார்ந்த வல்லுடல் நெளித்து நீட்டிக்
குறிப்பொடு கெந்த நான்குங் குழைவறநிமிர்த்து வாய்விண்
டுறப்பட வுள்ளந் தாளிற் கவ்விய துரக மன்றே. 6

### அபூபக்கர் காலை எடுக்காதிருக்கப் பாம்பு மீண்டும் மீண்டும் தீண்டுதல்

மிதிப்படும் வளையிற் காலை விடுத்திலர் கடித்தும் என்னக்
கொதிப்பொடு கெந்தம் நான்கும் குறைப்படச் சீறிச் சீறிப்
பதிப்பொடும் உடலை வீங்கிப் படுவிட மனைத்துஞ் சிந்தி
யதிர்ப்பொடும் வேக மீக் கொண் டடிக்கடிக் கடித்த தன்றே, 7

### நஞ்சின் வேகம் ஏறி அபூபக்கர் மயங்குதலும் பெருமானார் விழித்தலும்

பன்னருங் கொடிய வேகம் பரந்துடல் அனைத்துந் தாக்கிச்
சென்னியிற் பரப்பச் சற்றேசிந்தையின் மயக்கந் தோன்றத்
தன்னிலை தளரா துள்ளந் தாளையும் பெயர்த்தி டாமல்
அந்நிலை யிருந்தார் செவ்வி யகுமதும் விழித்தா ரன்றே. 8

### மயக்கமுற் றிருந்த அபூபக்கரிடம் நபிகள் வினாவுதல்

மதியிடத் திரண்டு செவ்வி மரைமலர் பூத்த தென்ன
விதியவன் தூதர் கண்கள் விழித்தபூ பக்கர் தம்மை
யெதிரினில் நோக்கச் சற்றேமயக்கமுற் றிருந்தார்க் கண்டு
புதிய காரணங்களேதும் உளவெனிற் புகலு மென்றார். 9

### அபூபக்கர் பாம்பு தீண்டியதைக் கூறுதல்

முடங்கிநீண் டிருளுள் ளார்ந்த முழை யொன்றிற் றலையை நீட்டத்
தடங்கொள்கோ டிகமில் லாதாற் றாளினை நிமிர்த்துக் காலுந்
தொடங்கிலா வண்ணம் நீங்கா தடைத்தனன் துளைப்பற் பாந்தள்
விடங்கள் கான்றரிதிற் சீறி வெகுளியிற் கடித்த தன்றே. 10

### நபிகள் பாம்பிடம் வினாவல்

அருமறைப் பொருளாய் நின்றோன் அமைத்த பன்னகமே யாங்கள்
வரையினோ ரிடுக்க ணுற்று வந்திருந் தனமல் லாமல்
பரிவுடன் உனக்கியாது குற்றமும் பயின்றதுண்டோ
தரையினெம் முன்னோர் முன்னா ளியற்றிய தவறு முண்டோ? 11



ஏதொரு குறையுஞ் செய்த தின்றிவை யிகழ்ந் தெண்ணாமல்
நீதமில் லவரைப் போல நெடும்புடை யதனின் வந்து
தீதுறக் கொடிய வேகந் தலைக் கொளச் சினந்து சீறி
வேதனைப் படவாய் வைத்த தென்னென விரைவிற் கேட்டார். 12

### பாம்பு மறுமொழி கூறுதல்

நெடிய காலமுற்றொரு பயன் நினைத்தவர்க் கடுத்து
முடியும் போழ்தினில் தடுப்பவ ரெவரையும் முரணித்
தடிதல் நன்றெனும் அறிவினால் தடிந்ததே யன்றிப்
படியி னோர்தவ றிலனென வுரைத்தது பாந்தள். 13

### நபிகள் பாம்பினுக் கருள் புரிய அபூபக்கர் நஞ்சு நீங்கப் பெறுதல்

அரவ கன்றபின் எழிலபூ பக்கர்செம் மலர்த்தாள்
விரிதருங் கொடு வாயினிற் கொடுவிட மகல
மரையி தழ்த் துளி நீரினை விர– னால் வாங்கிப்
புரைய றத்தட வினர்செழும் புகழ்முகம் மதுவே. 14

இருள கற்றிய கதிரவன் கதிரென விதழிற்
பரிவு பெற்றிடும் அமிர்தநீர் உடலெலாம் பரந்த
கரிய வெவ்விடம் அனைத்தையும் அணுவறக் கடிந்து
சொரியும் காந்திகொண் டரியமெய் மாசறத் துடைத்த. 15*

பன்ன கக்கொடு விடப்பெரும் பருவரல் தீர்ந்து
மின்னு செங்கதிர் வேலபூ பக்கரும் விறலார்
மன்னர் மன்னவர் முகம்மது நபியுடன் வரையின்
இன்னி சைப்புக ழொடும்புதி யனைத்தொழு திருந்தார். 16

- உமறுப்புலவர்.

### அருஞ்சொற்பொருள்

1. கான் = காடு; நகம் = மலை,ஈண்டுத் தௌர் மலைக்கண்ணுள்ள ஒரு குகையைக் குறித்தது; சிரம் = தலை.
2. முழை = குகை; வளை = புற்று; பாம்பு தங்கியுள்ள இடம். புரைப்பல் = துளையையுடைய பல்; புண்நா = புண்போல் பிளந்த நாக்கு; செஞ்சூட்டு = பாம்பின் படம்; பாந்தள் = பாம்பு.
3. பிடவை – ( மார்பைப் போர்த்தியிருந்த) துணி; வெருவி = அஞ்சி; உளைந்து = மனம் வருந்தி; பேதுறா = மனம் கலங்கி (பேதுறல் = மயங்குதல்); பொறி = புள்ளிகள்.
4. உரகம், பணி = பாம்பு; பருவரல் = துன்பம்; நித்திரை = தூக்கம்; கடி = மணம்.
5. காந்தி = பேரொளி; நறை= தேன்; பொதுளும் = நிரம்பும்; பரல் = கல்; இடனற= இடம் இல்லாதவாறு.

6. கெந்தம் = பற்கள்; வேகம் = சினம்; உள்ளந்தாள் = உள்ளங்கால்; வாய்விண்டுள = வாயைப்பிளந்து; கவ்வியது = பற்றியது;

7. அதிர்ப்பொடு = சினத்தோடு; மீக்கொண்டு = மிகக்கொண்டு; மிதிபடும் என்பது செய்யுளோசை கருதி மிதிப்படும் என வந்துள்ளது.

8. பன்னரும் = சொல்லவியலாத; வேகம் = நஞ்சின் வேகம்; சென்னி = தலை.

9. மரைமலர் = தாமரைமலர்; விதியவன் = இறைவன்; புகலும் = சொல்லும்;

10. கோடிகம் = ஆடை; கால் = காற்று; கான்று = உமிழ்ந்து.

11. பன்னகம் = பாம்பு; வரை = மலை; தரை = பூமியில்.

12. புடை = வளை,பொந்து; நீதமில்லாதவன் = நீதி இல்லாதவன்.

13. தடிதல் = கொல்லுதல் ; முரணி = மாறுபட்டு, பகைமைகொண்டு

14. புரையற= குற்றமற; மரை = தாமரை (ஈண்டு முகம்); இதழ் = உதடு; இதழ்த்துளி = எச்சில்.

15. அணுவற= அணுவளவும் இல்லாமல்; கடிந்து = நீக்கி; வெவ்விடம் = கொடிய நஞ்சு;

16. புதியன் = இறைவன்.

## இலக்கணம்

1. செழுந்துயில் – பண்புத்தொகை; இகலவர் – குறிப்பு வினையாலணையும் பெயர் ; திகழ்சிரம் = வினைத்தொகை.

2. துயிலாநின்ற= துயில் + ஆநின்று + அ நிகழ்காலப் பெயரெச்சம்; மலைமுழை – ஏழாம் வேற்றுமைத் தொகை; குறுவளை, கொடுங்கண், வெவ்வாய், சிறுபொறி = பண்புத்தொகைகள்

3. வெருவி, உளைந்து, கிழித்து, சுற்றி, அடைத்து –வினையெச்சங்கள். போர்த்த பிடவை – பெயரெச்சம்; பேதுறா – செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம்; இலை – இல்லை என்பதன் இடைக்குறைவிகாரம்;

4. அடைத்தனம் – உளப்பாட்டுத் தன்மைப் பன்மை வினைமுற்று; அறிகிலார் – எதிர்மறை வினையாலணையும் பெயர்; அறி+கில்+ ஆ+ ஆர் – அறி–பகுதி, கில்– ஆற்றல் உணர்த்தும் இடைநிலை, ஆ–எதிர்மறைஇடைநிலை (புணர்ந்து கெட்டது) ஆர் = பலர்பால் வினைமுற்று விகுதி.

5 .மதிமுகம் – உவமத்தொகை; கடிநறை– உரிச்சொற்றொடர்; மலர்த்தாள் = உவமைத் தொகை; அன்றே– அசைநிலை; மென்மலர் – பண்புத்தொகை.

6. வல்லுடல் – பண்புத்தொகை.

7. சீறிச்சீறி – அடுக்குத்தொடர், படுவிடம் – வினைத்தொகை;

8. பரந்து, தாக்கி – வினையெச்சங்கள்; தளராது, பரந்திடாமல் – எதிர்மறைவினையெச்சங்கள்.

9. மரைமலர் – முதற்குறை; என்ன – உவமவுருபு; மதி – முகத்துக்குஆகி வந்தது உவம ஆகுபெயர்.



10. துளைப்பல் – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை.

11. அருமறை– பண்புத் தொகை; நின்றோன் – வினையாலணையும் பெயர்; உனக்கியாது – உனக்கு + யாது – குற்றிய– கரம். (கி = க் + இ)

12. நெடும்புடை – பண்புத் தொகை;

13. நினைத்தவர், தடுப்பவர் – வினையாலணையும் பெயர்கள்.

14. செம்மலர் – பண்புத் தொகை; செழும்புகழ் – பண்புத்தொகை; மலர்த்தாள் – உவமைத் தொகை; மரை – தாமரை, முதற்குறை

15. வெவ்விடம் – பண்புத் தொகை.

16. செங்கதிர் – பண்புத்தொகை; மின்னு செங்கதிர் – வினைத்தொகை

பயிற்சி

I. சிறுவினா:

1. சீறாப்புராணம் என்றதொடரின் பொருள் யாது?
2. சீறாப்புராணம் எத்தனை காண்டங்களையுடையது? அவை யாவை?
3. சீறாப்புராணம் தொடங்கவும் முற்றுப் பெறவும் துணை நின்றவள்ளற் பெருமக்கள் யாவர்?
4. உமறுப்புலவர் – ஆசிரியர் குறிப்பு வரைக.

II. பெருவினா:

1. அண்ணல் பெருமான் மலைக்குகையில் துயில் கொண்டது யாங்ஙனம்?
2. பாம்பின் செயலும் அபூபக்கர் செய்கையும் யாவை?
3. அடைபடாதிருந்த வளையின் வாயை அபூபக்கர் எவ்வாறு அடைத்தார்?
4. பாம்பு அபூபக்கரைத் தீண்டியது ஏன்?
5. துயிலுணர்ந்த நபிகள் வினாவும் தோழர்விடையும் யாவை?
6. நபிகள் பெருமான் பாம்பினிடம் வினவியதும் பாம்பின் மறுமொழியும் யாவை?
7. அபூபக்கருக்குப் பெருமான் நஞ்சு தீர்த்தருளியது யாங்ஙனம்?

III. நெடுவினா:

1. அபூபக்கருடைய அன்பின் ஆற்றலையும் நபிகள் பெருமான் அவரை நஞ்சு தீர்த்தருளியதையும் விளக்கி வரைக.

IV. பின்வரும் அடிகளைப் பொருள் விளங்குமாறு பிரித் தெழுதுக.

1. நகரைவிட் டகன்று கான் சூழ் நகத்திடத் துறைந்து
2. விடிவதெவ் வாறோ வென்ன வெருவிநெஞ்சு ளைந்து
3. விடவரவுறையும் பா– ல் வெளியணு வெனினுந் தோன்றா
4. முடங்கி நீண்டிருருளுள்ளார்ந்த முழை யொன்றிற் றலையை நீட்ட
5. ஏதொரு குறையுஞ் செய்த தின்றிவை யிகழ்ந் தெண்ணாமல்
6. நெடிய காலமுற்றொரு பலனினைந்தவர்க் கடுத்து.

V. கோடிட்ட இடங்களை ஏற்றசொற்களால் நிரப்புக.

1. உமறுப்புலவரின் ஆசிரியர் _________________ ஆவார்.
2. செலவியற்காண்டம் எனப்படுவது _________________ ஆகும்.

3. சின்னச்சீறா என்றழைக்கப்டும் நூலை இயற்றியவர் ________________ ஆவார்.

4. உமறுப்புலவர் இயற்றிய மற்றொரு நூல் ________________

5. நபிகள் பெருமான் அபூபக்கருடன் தங்கியிருந்த குகையுள்ள மலையின் பெயர் ________________

6. பாந்தள், உரகம், பன்னகம், பணி, அரவு என்னும் சொற்களின் பொருள் ________________ என்பதாகும்.

7. விடமீட்ட படலம் ________________ காண்டத்தில் உள்ளது.

VI. இலக்கணக்குறிப்பு வரைக.

| | | | |
|---|---|---|---|
| மதிமுகம் | சீறிச்சீறி | படுவிடம் | கடிநறை |
| துளைப்பல் | இன்னிசை | எறுழ்வ– | மலைமுழை |
| அறிகிலார் | மரைமலர் | குறுவளை | நெடும்புடை |
| அருமறை | இகலவர் | தளராது | |

VII.பிரித்துப் புணர்ச்சிவிதி தருக:

| | | | |
|---|---|---|---|
| கொடுங்கண் | மரையிதழ் | செம்மலர் | வலத்தாள் |
| வெவ்விடம் | செழும்புகழ் | இடனற | மாசற |
| சிறுபொறி | வல்லுடல் | அருமறை | புரையற |
| துளைப்பல் | மலர்த்தாள் | | |

VIII.உறுப்பிலக்கணம் தருக:

| | | | |
|---|---|---|---|
| உறைந்து | சுற்றி | துடைத்த | வெருவி |
| காணாது | அடைத்தனர் | இருந்தார் | எண்ணாமல் |
| சேர்த்தி | தடவினர் | தீர்ந்து | முடங்கி |
| கண்டேம் | அறிகிலார் | உளைந்து | |

IX. மொழித்திறன் வளர்பயிற்சி:

விடமீட்ட படலத்தில் உள்ளதுபோல் நீவிர் அறிந்த தொன்மச் செய்தி வேறு இருப்பின் ஒப்பிடுக.
எ.கா.
ஒப்பீடு :

1. பரசுராமன் தன் மாணாக்கன் கன்னன் மடியில் தலைவைத்து உறங்க, வண்டொன்று தொடையைக் குடைந்து குருதி பெருகச் செய்தது. கன்னன் தன் ஆசிரியர் உறக்கம் கலைதலாகாதே என்று கருதி அந்தக் கொடிய துன்பத்தைத் தாங்கிக் கொண்டு அமர்ந்திருந்தது மாபாரதச்செய்தி.

2. அப்பூதியடிகளின் மைந்தன் மூத்த திருநாவுக்கரசு பாம்பு தீண்டப் பெற்றது கண்டு அப்பரடிகள் 'ஒன்று கொலாம்' என்றதேவாரப்பதிகம் இசைத்து திங்களூரிலே உய்யக் கொண்டது பெரிய புராண வரலாறு.

உள்ளீடு

வேறுபடு சமயமெலாம் புகுந்து பார்க்கின்
விளங்குபரம் பொருளே நின் விளையாட்டல்லால்
மாறுபடுங் கருத்தில்லை முடிவில் மோன
வாரிதியில் நதித்திரள்போல் வயங்கிற்றம்மா

– தாயுமானார்.



நாபிறழ் பயிற்சி

இடைவிடாது சொல்– ப் பழகுக.

1. சிகர வட வரை குனிய நிமிர்தரு
செருவிலொரு பொரு வில்லெனக் கோட்டினர்

2. தத்துங் கரட விகட தடத்
தந்திப் பிறைக்கூன் மருப்பில் விளை
தரளந் தனக்கு விலையுண்டு.

3. மீனேறுங் கொடிமுல்லை விடுகொல்லைக் கடிமுல்லை
வெள்ளைப் பள்ளை ஆனேறு.

4. முதுதமிழ் உத்தியில் வருமொரு திருமகள்.

## (இ) மனோன்மணீயம்

நாடகத்தமிழ் நூல்களுள் தலையாய சிறப்பினையுடையதாக விளங்குவது மனோன்மணீயம். நாடகக் காப்பியங்களால் சிறப்புப் பெற்று விளங்கும் வடமொழிக்கு ஈடாக நடிப்புச் செவ்வியும் இலக்கியச் செவ்வியும் ஒருங்கே அமையப் பெற்றது. இந்நாடகம் –ட்டன் பிரபு என்பார் ஆங்கிலத்தில் எழுதிய "இரகசிய" வழி என்றநூலைத் தழுவி அமைந்தது. எனினும் இது வழிநூல் என்னாது முதல் நூல் எனவே கொள்ளப்பெறும் சீர்மையுடையது. பெருங்காப்பிய நூல்களுக்குரிய இயற்கை வண்ணனை, கற்பனையெழில், தத்துவச் செறிவு, உலகியல் உண்மை முத– ய கருத்துகள் அமைய எழுதப் பெற்றிருப்பினும் செய்யுள் நடையில் மிடுக்குடனும் நாடகத்தன்மைக்கேற்றஉரையாடற் சிறப்புகளுடனும் இந்நூல் தன்னிகரற்று விளங்குகிறது.

அங்கங்களையும் காட்சிகளையும் அமைத்து எழுதுவது நாடக நன்னூல் மரபு. இந்நாடகம் ஐந்து அங்கங்களையும் இருபது காட்சிகளையும் கொண்டு விளங்குகிறது. இடையே சிவகாமி சரிதம் என்னும் துணைக் கதை ஒன்றும் இடம் பெற்றுள்ளது.

இந்நாடகத்தைத் தமிழன்னைக்கு இயற்றியளித்தவர், பேராசிரியர் பெ. சுந்தரம்பிள்ளை ஆவார். இவர் கேரள மாநிலத்தைச் சேர்ந்த ஆலப்புழை என்னும் ஊரிற் பிறந்தார். தந்தை – பெருமாள் பிள்ளை, தாய்– மாடத்தி அம்மையார். இவர் திருவனந்தபுரம் அரசர் கல்லூரியில் தத்துவப் பேராசிரியராகப் பணிபுரிந்தார். கோடக நல்லூர் சுந்தர சுவாமிகள் என்பவரைத் தமது ஞானாசிரியராகக் கொண்டு ஒழுகி வந்தார். இவர் காலம் 1897 (19 ஆம் நூற்றாண்டு)

இவரியற்றிய பிறநூல்கள் : நூல் தொகை விளக்கம், திருஞானசம்பந்தர் கால ஆராய்ச்சி., திருவிதாங்கூர்ப் பண்டை மன்னர் கால ஆராய்ச்சி என்பன. அந்நாளைய சென்னை மாகாண அரசு இவருக்கு ராவ்பகதூர் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது. தமிழ்நாடு அரசு மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம் என்னும் பெயரில் பல்கலைக்கழகம் ஒன்றைநிறுவிப் பெருமைப்படுத்தியுள்ளது. இவரது நீராருங்கடலுடுத்த என்றதமிழ் வாழ்த்துப்பாடலே தமிழக அரசின் தமிழ்த்தாய் வாழ்த்தாக ஏற்கப்பட்டுள்ளது.

### பாடப்பகுதி

மதுரையை ஆண்ட பாண்டிய மன்னன் ஜீவகன். பளிங்குபோல் கள்ளமற்றஉளத்தினன். ஆயினும் வஞ்சக அமைச்சன் குடிலனின் சூழ்ச்சிகளுக்கு ஆட்படுகிறான். அவனுடைய பழம்பதியாகிய மதுரையைவிட்டுத் திருநெல்வே– யிலே கோட்டையமைத்துத் தங்குகிறான். புதிய கோட்டை வ– மையற்றதாக இருப்பதனையும் பகைவர் வந்து தாக்குவாராயின் விரைவில் வீழ்ந்து விடும் என்பதனையும் உணர்ந்த சுந்தர முனிவர் தமக்கு ஓர் அறையை வேண்டிப் பெற்று அதன் வழியே சுரங்கப்பாதை ஒன்று அமைக்கிறார். ஜீவகனின் ஒரே மகள் மனோன்மணி, சேர நாட்டரசன் புருடோத்தமனைக் கனவில் கண்டு காதல் வயப்படுகிறாள். அவளுடைய ந– வினைக் கண்ட சுந்தரமுனிவர் மனோன்மணிக்கு விரைவில் திருமணம் நிகழ்த்துதல் வேண்டும் என்றும் சேரமன்னனே அவளுக்கு ஏற்றவன் என்றும் அவனுக்குத் தூதுபோக்குக என்றும் ஜீவகனைப் பணிக்கிறார். குடிலனுடைய தலையீட்டினால் அவன்மகன் பலதேவனே சேரனிடம் தூது செல்லுகிறான். பலதேவனுடைய முறையற்றபேச்சால் சினம் கொண்ட சேரன் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து வருகிறான். போரெதிர் கொள்ள ஜீவகன் தன் படைவீரர்களுக்கு உரைக்கும் வீரவுரையே நமது பாடப்பகுதி.



### ஜீவகன் வீரவுரை

அங்கம் : 4
களம் : 1
காலம் : காலை – படைபயில்களம். மாந்தர் – ஜீவகவழுதி – வீரர்கள்

ஜீவகன்:
அந்தணர் வளர்க்குஞ் செந்தழல் தன்னிலும்
நாட்டபி மானமுள் மூட்டிய சினத்தீ
அன்றோ வானோர்க் கென்றுமே உவப்பு!
வந்தவிக் கயவர்நுஞ் சிந்தையிற் கொளுத்திய
வெந்தழற் கவரே இந்தனம் ஆகுக!

வீரர்கள்:
ஆகுக ! ஆகுக !!

ஜீவகன்:
இன்றுநீர் சிந்தும் இரத்தமோர் துளியும்
நின்றுகம் பலவும் நிகழ்த்துமே இந்தப்
பாண்டியர் உரிமை பாராட்டும் பண்பினர்
தீண்டன்மின் திருந்தலீர் அவர்தம் செருக்கு
சுதந்தரம் அவர்க்குயிர்; சுவாசமற் றன்று
நினையுமின் நன்றாய்க் கனவினு மிதனை
எனமுர சறையுமே எத்திசை யார்க்கும்!
இத்தனிப் போரில்நீர் ஏற்றிடுங் காயம்
சித்தங் களித்துச் செயமா துமக்கு
முத்தமிட் டளித்த முத்திரை யாகி
எத்தனை தலைமுறைக் கிலக்காய் நிற்கும்!

வீரர்கள் :
ஜே ! ஜே!!

ஜீவகன் :
போர்க்குறிக் காயமே புகழின் காயம்
யார்க்கது வாய்க்கும் ஆ!ஆ! நோக்குமின்
அனந்தந் தலைமுறைவருந்தனி மாக்கள்
தினந்தினந் தாமனு பவிக்குஞ் சுதந்தரம்
தந்ததம் முன்னோர் நொந்த புண்ணெண்ணிச்
சிந்தையன் புருகிச் சிந்துவர் கண்ணீர்
என்றா லப்புண் இரந்துகோட் டக்கது
அன்றோ அறைவீர் அய்யோ அதுவும்
புண்ணோ புகழின் கண்ணே எவரே
புண்படா துலகிற் புகழுடம் படைந்தார்.
புகழுடம் பன்றியிவ் விகழுடம் போமெய்
கணங்கணந் தோன்றிக் கணங்கணம் மறையும்
பிணம்பல இவரெலாம் பிறந்தா ரென்பவோ!

- பேராசிரியர் பெ. சுந்தரம்பிள்ளை.

## அருஞ்சொற்பொருள்

செந்தழல் = வேள்வியில் மூட்டுகிறநெருப்பு; வானோர் = தேவர்கள் நாட்டபிமனம் = நாட்டுப்பற்று; இந்தனம் =விறகு; உகம் =யுகம்; (ஊழி) திருந்தலீர் = பகைவர்களே; சுவாசம் = மூச்சுக்காற்று; இங்கே உயிர்பிழைத்திருப்பது. செயமாது = (விசயலட்சுமி) வெற்றித்திருமகள்; இலக்காய் = குறியாய்; அடையாளமாய், போர்க்குறிக்காயம் –போரில் ஈடுபட்டதன் அடையாளமாகிய புண்; புகழின் காயம் – புகழுடம்பு; அனந்தம் = முடிவற்றது; இரந்து கோட்டக்கது = விரும்பிக் கையேந்திநின்று பெறத்தக்கது; அறைவீர் =உரைப்பீர்; புகழின்கண் = புகழின் அடையாளம்; இகழுடம்பு =(நோய், வறுமை முத– யவற்றாற் பிணிக்கப்பட்டுத் துன்பத்திற்காளாகி மறையும்) இகழத்தக்க உடம்பு.

## இலக்கணம்

செந்தழல், வெந்தழல் – பண்புத்தொகைகள்; ஆகுக – வியங்கோள் வினைமுற்று; ஆகுக ஆகுக – அடுக்குத் தொடர்; தீண்டன்மின் – முன்னிலைப் பன்மை ஏவல் வினைமுற்று; போர்க்குறி – ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை; கணங்கணம் – அடுக்குத்தொடர்; என்பவோ – ஒகாரம் வினா.

## பயிற்சி.

I. சிறுவினா:

1. வானோர்க்கு என்றும் உவப்பாக இருப்பது யாது?
2. முரசறையும் போது கூறவேண்டியன யாவை?
3. புகழின் காயம் – எது?
4. இரந்துகோட்டக்கது யாது?

II. பெருவினா:

1. பேராசிரியர் சுந்தரம்பிள்ளை – குறிப்பெழுதுக.
2. மனோன்மணீயம் – நூற்குறிப்பு வரைக.
3. ஜே. ஜே என்று படைஞர் ஆர்க்கும் படியாக ஜீவகன் உரைத்தன யாவை?
4. புகழுடம்பு வாய்க்கப்பெற்றோரின் பெருமையை ஆசிரியர் எங்ஙனம் கூறியுள்ளார்?
5. பிறந்தார் எனப்படாதார் யார்?

III. நெடு வினா:

1. படைவீரரை நோக்கி ஜீவகன் உரைத்த வீரவுரையினைத் தொகுத்தெழுதுக.

IV. இலக்கணக்குறிப்பு வரைக.

| | | | |
|---|---|---|---|
| வெந்தழல் | புகழுடம்பு | ஆகுக ஆகுக | என்பவோ |
| தீண்டன்மின் | போர்க்குறி | தினந்தினம் | நினையுமின் |

V. பிரித்துப்புணர்ச்சிவிதி தருக.

| | | | |
|---|---|---|---|
| வெந்தழல் | போர்க்குறி | புண்ணெண்ணி | நாட்டபிமானம் |
| புகழுடம்பு | யார்க்கது | சினத்தீ | இவரெலாம் |
| அவர்க்குயிர் | முரசறையுமே. | | |



VI.உறுப்பிலக்கணம் வரைக.

| | | | |
|---|---|---|---|
| தீண்டன்மின் | அடைந்தார் | ஆகுக | தோன்றி |
| வாய்க்கும் | திருந்தலீர் | கொளுத்திய. | |

VII.விடைதேர்க:

1. மனோன்மணீயத்தை இயற்றியவர்.
   அ) சுந்தரம்பிள்ளை ஆ) சுந்தரமுனிவர் இ) சுந்தரர்

2 .மனோன்மணீயம் நூ– ன்கண்வரும் துணைக்கதை.
   அ) சிவகாமியின் சபதம் ஆ) சிவகாமிசரிதம் இ) சிவகாமியின் செல்வன்

3. சுந்தரம்பிள்ளையைப் போற்று முகமாகத்தமிழக அரசு நிறுவியது.
   அ) பல்கலைக்கழகம் ஆ) அரசவைக்கவிஞர்பணி இ) அறக்கட்டளை.

4. மனோன்மணீயம் நாடக நூ– ன் ஆக்கத்திற்குத் துணை நின்றஆங்கில நூல்.
   அ) இரகசிய வழி ஆ) ஒத்தெல்லோ இ) மோட்சப்பயணம்.

5. ஜீவகன் புதுவதாய்க் கோட்டை நிறுவிய இடம்.
   அ) புதுக்கோட்டை ஆ) மதுரை இ) திருநெல்வே–

VIII.மொழித்திறன் வளர்பயிற்சி.

ஜீவகன் உரைத்த வீரவுரை போல நாட்டுப்பற்றினை வளர்க்கும் வீர மொழிகளை நூல்களில் தேடிப் பயிலுக.

பாரத நாடு பழம்பெரும் நாடு
நீரதன் புதல்வர் இந் நினைவகற் றாதீர்
பாரத நாடு பார்க்கெலாம் திலகம்
நீரதன் புதல்வர் இந் நினைவகற் றாதீர்!
தாய்த்திரு நாட்டைத் தகர்த்திடு மிலேச்சரை
மாய்த்திட விரும்பான் வாழ்வுமோர் வாழ்வுகொல்

**- பாரதியார்**

சிற்றூரும் வரப்பெடுத்த வயலும் ஆறு
தேக்கியநல் வாய்க்காலும் வகைப்ப டுத்தி
நெற்சேர உழுதுழுது பயன் விளைக்கும்
நிறையுழைப்புத் தோள்களெலாம் எவரின் தோள்கள்?
கற்பிளந்து மலைபிளந்து கனிகள் வெட்டிக்
கருவியெலாம் செய்துதந்த கைதான் யார்கை?
பொற்றுகளைக் கடல்முத்தை மணிக்கு லத்தைப்
போயெடுக்க அடக்கிய மூச் செவரின் மூச்சு?

**-பாரதிதாசன்**

சந்தம் அறிக.

நந்தாய்தமர் நங்காதலர்....
நஞ்சேய்பிறர் நந்தாவுரை
நந்தேயமேல் வந்தேநனி
நொந்தாழ்துயர் தந்தேயிவண்
சிந்தா நெறி நின்றாரிவர்
தந்தாவளி சிந்தாவிழ
அடிப்போம் அடல்கெடுப்போம் முகத்
திடிப்போம் குடலெடுப்போம் இடுப்
பொடிப்போம் வசைதுடைப் போமுயிர்
குடிப்போம் வழிதடுப்போமினி
நடப்போம் நொடி
என வாங்குப்
பெருமுரசதிரப் பெயருமின்.

-சுந்தரம் பிள்ளை.

ஆரிய பூமியில் நாரியரும் பர
சூரியரும் சொலும் வீரிய வாசகம் – வந்தேமாதரம்!
வெந்தே போயினும்
நொந்தே மாயினும்
நந்தேசத்த!
ருவந்தே சொல்வது
வந்தேமாதரம்!!

- பாரதியார்.



## (ஈ) குயில்பாட்டு

பாட்டினைப்போல் ஆச்சரியம் பாரின் மிசை இல்லையடா! என்று வியந்தவர் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் ஆவார். தூத்துக்குடி மாவட்டத்து எட்டயபுரத்தில் சின்னசாமி ஐயருக்கும் இலக்குமி அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தவர். அடிமைப்பட்டுக் கிடந்த இந்தியாவில் வீறு கொண்டெழுந்த விடுதலை வேட்கைக்குத் தம் கவிதைகளால் உரம் ஊட்டியவர். தேசியகவி என்றும் மகாகவி என்றும் போற்றப்பட்டவர். இந்தியா, விஜயா என்றஇதழ்களை வெளியிட்டுக் கட்டுரைகளாலும் கருத்துப் படங்களாலும் ஆங்கிலேய ஆட்சியாளர்களைத் திணறச் செய்தவர். சுதேசமித்திரன் இதழாசிரியராகச் சில நாள் விளங்கியவர்.

பாரதியார் கவிதைகள், பாஞ்சா– சபதம், கண்ணன் பாட்டு, குயில்பாட்டு முத– ய கவிதைகள் மட்டுமின்றி ஞானரதம், சந்திரிகையின் கதை, தராசு முத– ய உரைநடை நூல்களையும் எழுதியவர். இவருடைய வசன கவிதைகள் வால்ட்விட்மன் கலீல் கிப்ரான் முத– ய கவிஞர்களின் கவிதைகளோடு ஒப்பிடத் தக்கவை.

தமிழிலக்கிய வரலாற்றில் ஒரு புதிய பகுதி பாரதியோடு தொடங்குகிறது எனலாம். முன்னைப் பழம் பொருளாய்ப் பின்னைப் புதுமை வாய்ந்ததாய தமிழ் மொழியைத் திறன்மிக்கதாய் ஆக்கும் அறிஞர் பெருமக்களுள் பாரதிக்கு ஓர் தனி இடம் உண்டு.

பாரதியாரின் பாஞ்சா– சபதம், கண்ணன் பாட்டு, குயில் பாட்டு என்னும் முப்பெரும் பாடல்களுள் ஒன்றான குயில்பாட்டின் ஒரு சிறு பகுதி நமது பாடப்பகுதியாக இடம்பெறுகிறது.

கானப் பறவை கலகலெனு மோசையிலும்
காற்று மரங்களிடைக் காட்டு மிசையினிலும்
ஆற்றுநீ ரோசை அருவி யொ– யினிலும்
நீலப் பெருங்கடலெந் நேரமுமே தானிசைக்கும்
ஓலத் திடையே யுதிக்கும் இசையினிலும்
மானுடப் பெண்கள் வளருமொரு காத– னால்
ஊனுருகப் பாடுவதில் ஊறிடுந்தேன் வாரியிலும்
ஏற்றநீர்ப் பாட்டி னிசையினிலும் நெல்– டிக்கும்
கோற்றொடியார் குக்குவெனக் கொஞ்சும் இசையினிலும்
சுண்ண மிடிப்பார்தம் சுவைமிகுந்த பண்களிலும்
பண்ணை மடவார் பழகுபல பாட்டினிலும்
வட்டமிட்டுப் பெண்கள் வளைக்கரங்கள் தாமொ– க்கக்
கொட்டி யிசைத்திடுமோர் கூட்டமுதப் பாட்டினிலும்
வேயின் குழலோடு வீணை முதலாமனிதர்
வாயினிலும் கையினிலும் வாசிக்கும் பல்கருவி
நாட்டினிலும் காட்டினிலும் நாளெல்லாம் நன்றொ– க்கும்
பாட்டினிலும் நெஞ்சைப் பறிகொடுத்தேன் பாவியேன்......

-பாரதியார்.

உலகம் இசையால் நிரம்பியிருக்கிறது. இசையென்பது அரங்குகளில் இசைக்கப்படும் செவ்வியல் இசைமட்டுமன்று. ஏட்டில் எழுதப்படாமலும் கருவிகளால் இசைக்கப்படாமலும் காற்று முழுதும் கலந்திருப்பதும் இசைதான். வாய்மொழி இலக்கியமாய் மக்கள் இலக்கியமாய்ப் பரவிக் கிடக்கும் இசைத்தமிழ் தொட்ட இடமெல்லாம் தட்டுப்படுவது உண்டு. அந்த இசையின் உருவகமாக நாம் கொள்ளுவது குயில். குயில்பாட்டு என்றபாரதியின் படைப்பில் இசையின் பெருமை பேசப்படுகிறது. பாரதியின் குயி– இசைமயக்கிலே கட்டுண்டு கிடந்த பகுதி நமது பாடப் பகுதியாகத் தரப்பட்டுள்ளது.

## அருஞ்சொற்பொருள்

வாரி = கடல்; கோற்றொடியார் = பெண்கள் (உலக்கையைத் தொடியணிந்த கையில் கொண்ட பெண்கள்) குக்குவென =(நெல்– டிக்கும் பெண்கள் செய்யும்) ஒ– க்குறிப்பு; பண்ணை = வயல்வெளி; வேயின்குழல் = புல்லாங்குழல்; பண்கள் = இசைப்பாட்டுகள்.

## இலக்கணம்

கானப்பறவை – ஏழாம் உருபும் பயனும் உடன் தொக்க தொகை; வளைக்கரங்கள் – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை; கலகலென, குக்குவென – இரட்டைக்கிளவி; நீரோசை – ஆறன் தொகை ; பெருங்கடல் – பண்புத் தொகை; பாவியேன் – தன்மை ஒருமை வினைமுற்று; பழகு பாட்டு – வினைத் தொகை; வாசிக்கும் கருவி – செய்யுமென் வாய்பாட்டுப் பெயரெச்சம்.

## பயிற்சி

**I.** சிறுவினா:

1. பாரதியாரின் முப்பெரும் நூல்களாகச் சுட்டப் பெறுவன யாவை?
2. பாரதியார் நடத்திய இதழ்கள் யாவை?
3. பாரதியாரின் வசன கவிதைகள் யார்யாருடைய கவிதைகளோடு ஒப்பிடப்படுகின்றன?

**II.** நெடு வினா:

1, நாட்டினிலும் காட்டினிலும் நாளெல்லாம் நன்றொ– க்கும் பாட்டுகளாகப் பாரதியார் எவற்றைக் குறிப்பிடுகிறார்?

**III.** இலக்கணக்குறிப்பு வரைக.

| | | |
|---|---|---|
| பெருங்கடல், | கலகலென | பண்ணைமடவார், |
| வளைக்கரங்கள், | பாவியேன், | வாசிக்கும் பல்கருவி. |

**IV.** உறுப்பிலக்கணம் தருக.

| | | | |
|---|---|---|---|
| கொடுத்தேன் | இடிக்கும் | ஊறிடும் | வாசிக்கும் |
| ஒ– க்கும் | | | |

**V.** பிரித்துப் புணர்ச்சிவிதி தருக.

| | | | |
|---|---|---|---|
| கானப்பறவை, | கூட்டமுதம், | அருவியொ– | மானுடப்பெண்கள் |
| பெருங்கடல், | நீரோசை | வளைக்கரங்கள், | பல்கருவி, |
| நன்றொ– க்கும். | | | |



**VI.**மொழித்திறன் வளர்பயிற்சி:

ஏற்றநீர்ப்பாட்டை அறிந்து கொள்க,

மூங்கி– லை மேலே
    தூங்கும் பனிநீரே
தூங்கும் பனிநீரை
    வாங்கு கதிரோனே
ஈச்சமண லோடை
    இருபுறம் சம்போடை
தாழை மண லோடை
    தனிப்புறம் சம்போடை
சம்போடைக் காட்டில்
    சமத்தி கொலுவிருக்க
ஈப்புகுந்தால் இறகொடியும்
    இண்டம் புதர்க்காடு
கொசுப் புகுந்தால் இறகொடியும்
    கொங்கின் இளங்காடு
கரடி அலையும் வனம்
    காட்டானை தூங்கும் வனம்
சிறுத்தை அலையும் வனம்
    சிறுநரி தூங்கும் வனம்
ஓடிநிலம் பாய
    ஒருபதியா லொண்ணு

(பத்துச்சால் தண்ணீர் இறைக்கப்பட்டு விட்டது)

# *5 சிற்றிலக்கியங்கள்*

## (அ) அழகர் கிள்ளைவிடு தூது

அரசன் ஒருவன் மற்றோர் அரசனுக்குத் தூதுவரை அனுப்புவது பழங்காலம் முதல் இருந்துவரும் வழக்கமாகும். அதியமானின் தூதராக ஔவை சென்றதைப் புறநானூறு கூறுகிறது. மனிதர்களை மட்டுமன்றி உயிருள்ள, உயிரற்றபிறபொருள்களையும் தூதனுப்புவதாகக் கற்பனை செய்து பாடும் வழக்கமும் அன்று இருந்தது. இதுவே பிற்காலத்தில் ஒரு சிற்றிலக்கிய வகையாக உருவாயிற்று.

தூது தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று. தலைவன் ஒருவனைக் கண்டு காதல் கொண்ட தலைவி ஒருத்தி தன் காதலையும் பிரிவாற்றாமையையும் வெளிப்படுத்த விரும்பித் தலைவன்பால் தூது அனுப்புவதாகப் பாடுவது தூது இலக்கியமாகும்.

> "பயிறருங் க– வெண் பாவி னாலே
> உயர்திணைப் பொருளையும் அஃறிணைப் பொருளையும்
> சந்தியின் விடுத்தல் முந்துறு தூதெனப்
> பாட்டியற் புலவர் நாட்டினர் தெளிந்தே"

என்று இலக்கண விளக்க நூற்பா, தூதின் இலக்கணம் கூறுகிறது. வெண்டளை விரவிய க– வெண்பாவால் தூது இலக்கியம் பாடப் பெறவேண்டும். அன்னம், மயில், கிளி, குயில், வண்டு, நெஞ்சம், முகில், தென்றல், மான், தமிழ் முத– யவற்றுள் யாதானும் ஒன்றைத் தூதாக அனுப்புவர்.

திருமா– ருஞ்சோலை மலையில் கோயில் கொண்டிருக்கும் அழகரிடத்து பலபட்டடைச் சொக்கநாத பிள்ளை என்றபுலவர் கிளியைத் தூதுவிடுவதாக அமைத்துப் பாடியிருப்பது அழகர் கிள்ளைவிடு தூது ஆகும்.

இஃது ஏறக்குறைய 250 ஆண்டுகளுக்கு முந்திய நூலாகும். காப்பு வெண்பா ஒன்றையும் 239 கண்ணிகளையும் உடையது. பாட்டின் இரண்டடிகளைக் கண்ணி என்பர்.

சொக்கநாத பிள்ளை மரபினர் பலபட்டடைக்கணக்கு என்னும் ஒருவகைப் பணியைச் செய்து வந்தனர். இவர் தந்தையார் பெயர் சொக்க– ங்கம் பிள்ளை. மதுரை மும்மணிக்கோவை, தென்றல் விடு தூது என்பன இவர் இயற்றிய வேறு சில நூல்கள் ஆகும்.

### அழகர் சிறப்பு

அரிவடிவு மாய்ப்பின் னரன்வடிவு மாகிப்
பெரியதொரு தூணிற் பிறந்து – கரிய 1

வரைத் தடந் தோளவுணன் வன்காயங் கூட்டி
அரைத் திடுஞ் சேனை யருந்தி – உருத்திரனாய்ப் 2

பண்ணுந் தொழிலைப் பகைத்துநிலக் காப்புமணிந்
துண்ணும் படியெல்லா முண்டருளி – வெண்ணெயுடன் 3

பூதனை தந்தபால் போதாம லேபசித்து
வேதனையும் பெற்று வெளிநின்று – பாதவத்தைத் 4



தள்ளுநடை யிட்டுத் தவழ்ந்து விளையாடும்
பிள்ளைமை நீங்காத பெற்றியான் – ஒள்ளிழையார் 5

கொல்லைப் பெண்ணைக் குதிரையாக்குந் திருப்புயத்தான்
கல்லைப்பெண் ணாக்கு மலர்க்கா– னான் – சொல்கவிக்கு 6

பார முதுகடைந்த பாயலான் – விண்ணவர்க்கா
ஆர முதுகடைந்த வங்கையான் – நாரியுடன் 7

வன்கா னகங்கடந்த வாட்டத்தான் வேட்டுவற்கு
மென்கா னகங்கடந்த வீட்டினான் – என் காதல் 8

வெள்ளத் தமிழ்ந்தினோன் வேலைக்கு மேன்மிதந்தோன்
உள்ளத்துள் ளானுலகுக் கப்பாலான் – தெள்ளிதின் 9

வெட்ட வெறுவெளியி லேநின்றுந் தோற்றாதான்
கிட்ட விருந்துங் கிடையாதான் – தட்டாதென் 10

எண்ணிலே மாய னெனும்பேரி னாலொளிப்போன்
கண்ணனெனும் பெயராற் காண்பிப்போன் 11

**- பலபட்டடைச் சொக்கநாதபிள்ளை**

### அருஞ்சொற்பொருள்

1, கண்ணி –1 அரி = சிங்கம்; அரன் = சிவன்; நரன் வடிவுமாகியெனப் பிரித்து, நரனென்னும் அவதாரம் செய்தென்று கொள்ளுதலும் ஆகும். இக்கண்ணி நரசிங்க அவதாரத்தைச் சுட்டியது. சிங்கவடிவும் மனிதவடிவுமான ஓர் அவதாரம்; தூணிற் பிறந்தது.

2. அவுணன் = இரணியன்; காயம் = உடம்பு, உணவுப்பொருளோடு சேர்க்கும் பலவகைப் பொடி; சேனை =சைனியம், சேனை (பிறந்த குழந்தைக்கு முதன்முத– ல் நாவி– டும் இனிப்பு); அருந்தி = உண்டு; உருத்திரனாய் = நிலைபெற்றவடிவை உடையவனாகி; உருத்திரன் என்றகடவுளாகி.

3. பண்ணும் தொழில் = காத்தல் தொழில், நிலக்காப்பு – மண்ணைக் குழைத்திட்ட பொட்டு; நிலத்தைக் காத்தல். நிலத்தைக் காத்தல் குழந்தைகளுக்கு மண்பொட்டிடுதல் மரபு; படியெல்லாம் உண்டருளி = ஊழிக்காலத்து உலகத்தைத் தன் வாயினுள் போட்டு அகத்து அடக்கிய செயல்; படி = உலகம் ; படியால் = படியால் அளக்கப்படும் அரிசியால் ஆகிய பிரசாதம்; பூதனை = கண்ணனுக்குப் பால் கொடுப்பது போல் நஞ்சு கொடுத்துக் கண்ணனைக் கொல்லக் கம்சனால் அனுப்பப்பட்டவள்.

4. வேதனை = துன்பத்தை, பிரமதேவனை; பாதவத்தை –மருத மரங்களை; பாதவத்தை = ஆரக்கால்களையுடைய சக்கரம் பூட்டிய வண்டியை, சகடம்.

5. ஒள்ளிழையார் =ஒள்ளிய ஆபரணத்தை அணிந்த மகளிர்.

**1–5** இவ்வடிகளிற் குழந்தை பிறத்தலும் சேனையருந்தலும் நிலக்காப்பணிதலும் பால் வேண்டி அழுதலும் தவழ்தலும் நடையிடுதலும் ஆகிய பிள்ளைப் பருவ நிகழ்ச்சிகள் இரட்டுற மொழிதலாகச் சொல்லப்பட்டுள்ளன.

6. பெண்ணை – பனைமரம் (கொல்லையிலுள்ள பனையைக் குதிரையாக்குதற்குக் காரணமான;) மகளிர் மடலேறுதல்; திவ்ய பிரபந்தத்தில் உள்ள பெரிய திருமடல் முத– யவற்றால் அறியப்படும். புயவழகைக் கண்டு மகளிர் மடலேறுவர் என்பது கருத்து. பெண் = அக– கை; கவிக்கு = திருமழிசையாழ்வார் மாணாக்கரான கணிகண்ணர் பொருட்டு.

7. பாரம் = பளு, சுமை; முதுகு அடைந்த பாயலான் = பாம்புப் படுக்கையைத் தோளில் தூக்கிக் கணிகண்ணர்க்குப் பின்னே சென்றவன்; ஆர் அமுது கடைந்த = அரிய அமுதத்தைக் கடைந்த; தேவர்க்குத் திருப்பாற்கட– ல் அமுது கடைந்த புராணச் செய்தி; நாரியோடு =சீதாபிராட்டியோடு.

8. வன்கானகம் கடந்த = வ– ய தண்டகாரணியத்தைக் கடந்து சென்ற; வேட்டுவற்கு = சரனென்னும் வேடனுக்கு; மென்கால் நகங்கள் தந்த = மெல்– ய கால் நகங்களைத் தந்த (கண்ணபிரானுடைய காலை மானாக நினைத்து சரத்தை எய்து பின் கண்ணபிரானுடைய பாதமென்று அறிந்து வருந்திய அவனுக்கு வீட்டையும் அளித்தார் என்பது வரலாறு); மடக்கணி.

9. முதலடியில் முரண் அமைந்துள்ளது; (அமிழ்ந்தினோன், மிதந்தோன்) வேலை = கடல் (பாற்கடல்); உள்ளத்துள்ளான் = மிக அண்மையி– ருப்பவன்; உலகுக்கு அப்பாலான் = மிகச் சேய்மையி– ருப்பவன் (சேயன், அணியன் என் சிந்தையுள் நின்றமாயன் – திருமங்கையாழ்வார் பாசுரம்)

10. மாயன் =கரிய நிறமுடையவன், மாயையை உடையவன்; கண்ணன் = எல்லார் கண்ணிலும் உள்ளவன் (எல்லார்க்கும் கண் போன்றவன்)

## இலக்கணம்

வன்காயம் – பண்புத்தொகை; அரைத்திடும் சேனை – எதிர்காலப் பெயரெச்சம்; தந்தபால், கடைந்த பாயலான் – இறந்தகாலப் பெயரெச்சங்கள்; மலர்க்கால் – உவமைத்தொகை; வன்கானகம் – பண்புத்தொகை.

## பயிற்சி

**I.** சிறு வினா:

1. தூதாக அனுப்பத்தக்க பொருள்கள் யாவை?
2. பலபட்டடைச் சொக்கநாதப் பிள்ளை இயற்றிய பிறநூல்கள் யாவை?

**II.** பெருவினா:

1. தூது இலக்கியத்தின் இலக்கணம் எழுதுக.
2. இரட்டுறமொழிதல் என்னும் உத்தி கிள்ளைவிடு தூதில் பயின்று வரும் பாங்கினை விவரி.
3. வன்கானகங் கடந்த வாட்டத்தான் வேட்டுவற்கு மென்கானகங் கடந்த வீட்டினான் – இவ்வடியின்கண் அமைந்த அணியினைச் சுட்டுக.

**III.** நெடுவினா:

1. அழகர்தம் சிறப்புகளாக அழகர் கிள்ளைவிடு தூது கூறுவன யாவை?

**IV.** இலக்கணக்குறிப்பு எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| தூணிற் | பிறந்து | நீங்காத | ஆரமுது |
| வன்காயம் | மலர்க்கால் | பாயலான் | அரிவடிவு |



**V.** பிரித்துப் புணர்ச்சிவிதி தருக.

| | | | |
|---|---|---|---|
| வரைத் தடம், | சேனையருந்தி, | நிலக்காப்பு | மென் கானகம், |
| உள்ளத்துள்ளான், | உண்டருளி | | |

**VI.** பகுபத உறுப்பிலக்கணம் தருக,

| | | | |
|---|---|---|---|
| தவழ்ந்து, | நீங்காத, | காண்பிப்போன், | தோற்றாதான். |

## (ஆ) க- ங்கத்துப் பரணி

பரணி என்பது தமிழில் வழங்கும் தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று. போர் முனையில் ஆயிரம் யானைகளைக் கொன்று வெற்றி கொண்ட வீரரைப் பாடுவதைப் பரணி எனறனர்.

ஆனை ஆயிரம் அமரிடை வென்ற
மான வனுக்கு வகுப்பது பரணி

என்று இலக்கண விளக்கப் பாட்டியல்நூல் பரணியின் இலக்கணம் கூறும்.

பரணி என்றநாள்மீன் காளியையும் யமனையும் தன் தெய்வமாகப் பெற்றது என்றும் அந் நாள்மீனால் வந்த பெயரே நூலுக்கும் பெயராக வந்தது என்றும் தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாத ஐயர் கூறுவர். தோற்றவர் பெயரில் பரணி நூல் வழங்கப்பெறும்.

தமிழில் முதன் முத– ல் எழுந்த பரணி க– ங்கத்துப் பரணி. 509 தாழிசைகளைக் கொண்டது, இந்நூல். ஒட்டக் கூத்தர் க– ங்கத்துப்பரணியைத் 'தென்தமிழ் தெய்வப்பரணி' என்று சிறப்பித்துள்ளார்.

க– ங்கத்துப் பரணியைப் பாடியவர் செயங்கொண்டார். இவர் முதற் குலோத்துங்க சோழனுடைய அவைக்களப் புலவராகத் திகழ்ந்தவர். இவரது காலம் 11ஆம் நூற்றாண்டின் இறுதியாகவோ 12–ம் நூற்றாண்டின் முற்பகுதியாகவோ இருத்தல் வேண்டும். பிற்காலப் புலவரான பலபட்டடைச் சொக்கநாதர் இவரைப் பரணிக்கோர் சயங்கொண்டான் எனப் புகழ்ந்து பாடியுள்ளார்.

நம் பாடப்பகுதி காளிக்குக் கூளி கூறியது என்றபகுதியில் இடம் பெற்றதாகும். ஐந்து க– த் தாழிசைகள் இடம் பெற்றுள்ளன.

க– ங்க நாட்டி– ருந்து வந்த பேய் காளிதேவிக்குக் கூறிய போரின் வெம்மையான தன்மைகள் பலவும் இப்பகுதியில் கூறப்படுகின்றன.

இன்றைய ஒரிசா மாநிலம் பண்டு க– ங்கம் என்று வழங்கப்பட்டது. அந்நாட்டின் மீது போர் தொடுக்க முதற் குலோத்துங்க சோழன் தன் படைத்தளபதி கருணாகரத் தொண்டைமான் என்பாரை அனுப்பினான். அவர்தம் வெற்றி குறித்துப் பாடுவதே க– ங்கத்துப் பரணி ஆகும்.

வரைக்க– ங்கர் தமைச்சேர மாசை யெற்றி
வன்தூறு பறித்தமயிர்க் குறையும் வாங்கி
அரைக்க– ங்கம் உரிப்புண்ட க– ங்க ரெல்லாம்
அமணரெனப் பிழைத்தாரும் அநேக ராங்கே! 1*

வேடத்தால் குறையாது முந்நூல் ஆக
வெஞ்சிலை நாண் மடித்திட்டு விதியாற் கங்கை
ஆடப்போந் தகப்பட்டேம் கரந்தேம் என்றே
அரிதனைவிட் டுயிர்பிழைத்தார் அநேக ராங்கே! 2*

சேனைமடி களங்கண்டோம் திகைத்து நின்றோம்
தெலுங்கரேம் என்று சில க– ங்கர் தங்கள்
ஆனைமணி யினைத்தாளம் பிடித்துக் கும்பிட்
டடிப்பாணர் எனப் பிழைத்தார் அநேக ராங்கே! 3*



இவர்கள்மேல் இனியொருவர் பிழைத்தா ரில்லை
எழுக– ங்கத் தோவியர்கள் எழுதி வைத்த
சுவர்கள்மேல் உடலன்றி யுடல்கள் எங்கும்
தொடர்ந்துபிடித் தறுத்தார்முன் அடைய வாங்கே! 4

கடற்க– ங்கம் எறிந்துசயத் தம்பம் நாட்டி
கடக்கரியும் வயமாவுந் தனமுங் கொண்டு
சுடர்ப்படைவாள் அபயனடி அருளி னோடும்
சூடினான் வண்டையர் கோன் தொண்டை மானே! 5

- செயங்கொண்டார்.

### அருஞ்சொற்பொருள்

1, வரை =மலை ; சேர = முற்றும்; மாசை = பழிப்பை; எற்றி = உண்டாக்கி; வன்தூறு =வ– ய புதர்கள்; குறை= எஞ்சியுள்ள அனைத்து மயிரையும்; அரை – இடுப்பு; க– ங்கம் – ஆடை; க– ங்கர் = க– ங்க வீரர்கள் (க– ங்கம் இன்றைய ஒரிசா மாநிலமாம்); உரிப்புண்ட = களையப்பட்ட; அமணர் = சமணர்,

2. முந்நூல் – முப்புரி நூலான பூணூல்; சிலை = வில்; நாண் = (வில் முனையில் கட்டப்படும்) கயிறு; இட்டு = தரித்து, கரந்தேம் = மறைந்தோம்; அரிதனை = பகையை; அநேகர் = பலர்

3. மடி – இறந்த; களம் = போர்க்களம் = க– ங்கர் = க– ங்க வீரர்கள்; கும்பிட்டு அடி = அடிகளில் வீழ்ந்து வணங்கி; பாணர் = ஆடிப்பாடி வாழும் இசை வாணர்கள்.

4. இவர்கள் மேல் = இவர்களைத் தவிர; எழு க– ங்கம் = ஏழு பிரிவுகளைக் கொண்ட க– ங்க நாடு; அன்றி = அல்லாமல்; அடைய = முழுமையும்.

5. எறிந்து = அழித்து; சயத்தம்பம் = வெற்றித்தூண்; நாட்டி = நிறுத்தி; கடகரி = மதயானை; வயமா = குதிரை; அபயன் = முதற்குலோத்துங்க சோழன். அருளினோடும் = அருளாலும். வண்டையர் கோன் = கருணாகரத் தொண்டைமான்; க– ங்கப்போரின் வெற்றிக்குக் காரணமான தளபதி.

### இலக்கணம்

மாசை எற்றி – இரண்டாம் வேற்றுமை விரி; வன்தூறு = பண்புத்தொகை; வெஞ்சிலை – பண்புத்தொகை; போந்து – வினையெச்சம்; களம் கண்டோம் – இரண்டாம் வேற்றுமைத் தொகை; கும்பிட்டு, எறிந்து, நாட்டி, கொண்டு – வினையெச்சங்கள். கடற்க– ங்கம் – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கதொகை; அருளினோடும் – உருபு மயக்கம்; தமை– இடைக்குறை; பறித்தமயிர் = பெயரெச்சம்.

## பயிற்சி

I. சிறுவினா:

1. பாட்டியல் நூல் கூறும் பரணிக்குரிய இலக்கணம் யாது?
2. பரணி குறித்து உ.வே.சா கூறுவன யாவை?
3. செயங்கொண்டார் குறித்துக் குறிப்பு வரைக.

**II.** பெருவினா:

1. அமணர் என்று கூறிப் பிழைத்தாரின் செயல் யாது?
2. பாணர் என்று கூறிப் பிழைத்தாரின் செயல் யாது?
3. க– ங்க நாட்டில் தப்பிப் பிழைத்தன யாவை?

**III.** நெடுவினா:

1. க– ங்க வீரர்கள் எவ்வாறெல்லாம் தப்பிப் பிழைத்தனர் என்பது குறித்தும் தொண்டைமானின் வெற்றி குறித்தும் விவரி.

**IV.** இலக்கணக்குறிப்பு எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| வரைக்க– ங்கம் | தமை | மாசையெற்றி | பறித்த மயிர் |
| எழுக– ங்கம் | வெஞ்சிலை | போந்து | எறிந்து |
| களங்கண்டோம் | | | |

**V.** பிரித்துப் புணர்ச்சிவிதி தருக.

| | | | |
|---|---|---|---|
| முந்நூல் | ஆடப்போந்து | பிழைத்தாரில்லை | கடற்க– ங்கம் |
| வெஞ்சிலை | | | |

**VI.** பகுபத உறுப்பிலக்கணம் தருக.

| | | | |
|---|---|---|---|
| அகப்பட்டேம் | கரந்தேம் | திகைத்து | பிழைத்தார் |
| போந்து | அறுத்தார். | | |



## (இ) முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ்

கடவுளரையோ அரசரையோ பிறரையோ குழந்தையாகப் பாவித்து அவர்தம் குழந்தைப் பருவத்தைப் பத்துப் பருவங்களாகப் பகுத்துக் கொண்டு பருவத்துக்குப் பத்து ஆசிரிய விருத்தங்கள் அமையப் பாடுவது பிள்ளைத்தமிழ் இலக்கியமாகும். பிள்ளைத்தமிழ் 96 வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று. அது ஆண்பால் பிள்ளைத்தமிழ், பெண்பால் பிள்ளைத்தமிழ் என இருவகைப்படும். காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்பு– , சிற்றில், சிறுபறை, சிறுதேர் ஆகிய பத்துப் பருவங்களை அமைத்துப் பாடுவது ஆண்பால் பிள்ளைத் தமிழ் என்றும் இறுதியில் உள்ள மூன்று பருவங்களுக்குப் பதிலாக அம்மானை, நீராடல், ஊசல் ஆகிய பருவங்கள் அமைத்துப்பாடுவது பெண்பாற் பிள்ளைத்தமிழ் என்றும் கூறுவர்.

முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழைப் பாடியவர் குமரகுருபரர் ஆவார். தாமிரபரணி நதிக்கரையிலுள்ள திருவைகுண்டத்தில் சண்முகசிகாமணிக் கவிராயருக்கும் சிவகாம சுந்தரிக்கும் மகனாகப் பிறந்தார். பிறந்தது முதல் ஐந்தாண்டு வரையில் பேச்சின்றி இருந்தார். பின்னர்த் திருச்செந்தூர் முருகப் பெருமான் திருவருளால் பேசுந்திறம்பெற்றார். அவர் கந்தர்க– வெண்பா, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், மதுரைக் கலம்பகம், நீதிநெறி விளக்கம், காசிக் கலம்பகம் முதலான பல இலக்கியங்களைப் படைத்துள்ளார்.

நமக்குப் பாடமாக வந்திருப்பது செங்கீரைப் பருவத்தில் உள்ள பாடலாகும். செங்கீரைப் பருவம் பிள்ளைத்தமிழில் இரண்டாம் பருவமாகும். பொருள் தெரியாத ஒ– யைக் குழந்தை எழுப்பும் பருவத்தைக் குறிப்பது இது. இளங்குழந்தை ங்க ங்க என்று கூறக்கேட்டுத்தாய் உகக்கும் பருவம் இது, இவ்வொ– மழலையைக் காட்டிலும் இளம் பருவத்தை உடையது. (கீர் – சொல்) தொட்டில் பிள்ளை தலையையுயர்த்திக் கையால் ஊன்றி உடம்பை அசைத்தலைச் செங்கீரையாடுதல் என்பர்.

விரல் சுவை யுண்டு கனிந்தமு தூறிய மெல்– தழ் புலராமே
விம்மிப்பொருமி விழுந்தழு தலறியுன் மென்குரல் கம்மாமே
கரைவுறு மஞ்சன நுண்டுளி சிந்திக் கண்மலர் சிவவாமே
கலுழ்கலு ழிப்புன லருவி படிந்துடல் கருவடி வுண்ணாமே
உருவ மணிச்சிறு தொட்டி லுதைந்துநி னொண்பத நோவாமே
ஒருதா ளுந்தி யெழுந்திரு கையும் ஒருங்கு பதித்து நிமிர்ந்
தருள் பொழி திருமுக மசைய வசைந்தினி தாடுக செங்கீரை
ஆதி வயித்திய நாத புரிக்குகன் ஆடுக செங்கீரை.

- குமரகுருபரர்

### அருஞ்சொற்பொருள்

புலராமே = வறண்டு விடாமல், காயாமல்; கம்முதல் = குரல் தேய்ந்து மங்குதல்; விரல் = பெருவிரல்; கம்மாமே = கம்மிக் கொள்ளாமல்; சிவவாமே = சிவக்காமல்; அஞ்சனம்=கண்மை; கலுழ்தல் =அழுதல்; கலுழிப்புனல்= மையைக் கரைத்து வரும் கலங்கற் கண்ணீர்; தாள் = கால்; செங்கீரை = குழந்தை பேசத் தொடங்குமுன் செய்கிறஒ– க்குறிப்புகள்; வயித்தியநாதபுரி = புள்ளிருக்குவேளூர் (வைத்தீசுரன்கோவில்)

### இலக்கணக்குறிப்பு

மெல்– தழ், மென்குரல் – பண்புத்தொகை; நுண்டுளி – பண்புத்தொகை; கண்மலர் – உருவகம்; புனலருவி, அருள்மொழி – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகைகள்; பொழி திருமுகம் – வினைத்தொகை; ஆடுக – வியங்கோள் வினைமுற்று.

## பயிற்சி

I. சிறு வினா:

1. பிள்ளைத்தமிழ் இலக்கணம் எழுதுக.
2. குமரகுருபரர் பற்றிச் சிறுகுறிப்பு வரைக.

II. பெருவினா:

1. ஆடுக செங்கீரை என்று குமரகுருபரர் வேண்டுமாறு யாங்ஙனம் ?

III. இலக்கணக்குறிப்பெழுதுக.

| | | |
|---|---|---|
| விரல்சுவை | மென்குரல் | ஊறிய |
| விழுந்து | ஒண்பதம் | ஆடுக |

IV. பிரித்துப் புணர்ச்சிவிதி தருக.

சுவையுண்டு, அமுதூறிய, மெல்–தழ் நுண்டுளி, செங்கீரை

V. பகுபத உறுப்பிலக்கணம் தருக.

விம்மி, விழுந்த, பதித்து, ஆடுக.



## (ஈ) பெத்தலகேம் குறவஞ்சி

சிற்றிலக்கியங்களைத் தொண்ணூற்றாறு வகையினவாக உரைப்பர். கோவை, உலா, அந்தாதி, பள்ளு, குறவஞ்சி, தூது, பிள்ளைத்தமிழ் முத–யன அவற்றுள்ளடங்கும். இச்சிற்றிலக்கிய வகை தொல்காப்பியனார் வனப்பு என்று உரைக்கும் நூல் வகையுள் வைக்கப்படும்.

உலாப் போந்த மன்னனையோ தெய்வத்தையோ கண்டு தலைவி மையல்கொள்வதும், அதனால் மனம் ந–வதும், வீதியிலே குறத்தி வருகையும், தலைவி அவளை அழைத்துக் குறிகேட்க முற்படுவதும், குறத்தி தனது சதுரப்பாடுகளையெல்லாம் விரித்தும் தனது மலைவளம் நாட்டுவளம் பற்றிப் புனைந்தும் தலைவியின் கையைப் புகழ்ந்தும் கைக்குறி, முகக்குறி, பல்–சொல் முத–யவற்றான் மனக்கருத்தைக் கண்டுணர்ந்து உரைத்தலும், தலைவி மகிழ்ந்து வரிசையளித்தலும், குறவனாகிய சிங்கன் வருகையும் குறவன் குறத்தி ஆகிய இருவர் உரையாடலும், கடவுளை வாழ்த்தி விடை பெறுதலும் ஆகிய காட்சிகள் நாடக வடிவிலே வடிவமைக்கப்பட்டிருப்பது குறவஞ்சி நாடகம் ஆகும்.

இஃது பெத்தலகேம் குறவஞ்சி. உலாவரும் மன்னர் இயேசுவாகவும் தேவமோகினியாகிய தலைவி சீயோன் மகளாகவும், குறவஞ்சி விசுவாசமாகவும் குறி கூறுதல் தீர்க்க தரிசனமாகவும், சிங்கன் குருவாகவும், நூவன் உபதேசியாகவும், அவர்கள் பிடிக்கும் பறவைகளாக மக்களும் அதற்குப் பயன்படுத்தப்படும் வலையாக இறைவாக்கு என்றநற்செய்தியும் உருவகிக்கப்பட்டுள்ளன. இந்நூல் முற்றுருவகமாகத் திகழ்வது தனிச்சிறப்பாகும்.

இதன் ஆசிரியர் தஞ்சை வேதநாயக சாத்திரியார் ஆவார். திருநெல்வே–யில் தேவசகாயம் ஞானப்பூ அம்மையார் ஆகியோர்க்கு மகனாகப்பிறந்தார். தஞ்சையில் அப்போது மதபோதகராக விளங்கிய சுவார்ட்ஸ் பாதிரியார் இவரைத்தமது மாணாக்கரில் ஒருவராக ஏற்றார். இவர் இறையியல், வானியல், உட–யல், சமூகவியல் என்றபல்வேறு அறிவுத்துறைகளில் கற்றுத்துறைபோகிய அறிஞராகத் திகழ்ந்தார். தஞ்சையை ஆண்ட சரபோசி மன்னருக்கு உற்றநண்பராக விளங்கினார். தமது மிக்க இளம்பருவத்திலேயே 25 ஆம் ஆண்டில் குற்றாலக் குறவஞ்சிக்கு நிகராகப் பெத்தலகேம் குறவஞ்சியை இயற்றி அழியாப் புகழ் பெற்றார். மேலும் அழியாத பல நூல்களையும் இசைநெறி போற்றும் கீர்த்தனங்களையும் இயற்றியுள்ளார். காலம் கி.பி.18–ஆம் நூற்றாண்டு.

இவர் எழுதிய பிறநூல்கள் ஞானத்தச்சன், ஞானவுலா, ஆரணாதிந்தம், பல்வேறு கீர்த்தனங்கள் ஆகியவையாகும்.

### விசுவாசக் குறவஞ்சி தேவமோகினிக்கு மலைவளம் கூறுதல்

வானவர்கள் கூடிவந்து தோத்திரங்கள் படிப்பார்
வண்மையுள்ள சித்தரெல்லாம் அருந்தவங்கள் பிடிப்பார்
ஞானமுடன் முல்லைநிலத் தலைவர்வந்து தொழுவார்
நட்சேத்திரச் சாஸ்திரிகள் காணிக்கைகள் தருவார்
தான தர்மம் ஏழைகட்கு யாவர்களுங் கொடுப்பார்
சண்டாளப் பாவமெல்லாம் அண்டாது தடுப்பார்
ஈனமுள்ள பேய்க்கணங்கள் மயங்கியங்கே துடிப்பார்
ஏகன்மனு வானவெல்லை யெங்கள் மலை யம்மே.1

ஆதிமலை யெங்களுக்கோ ஏதன்மலை யம்மே
ஆண்டவனார் எங்களைத்தாம் அமைத்தமலை யம்மே
நீதியென்றநால்வரமுங் கொடுத்தமலை யம்மே
நித்தியமும் சாகாமல் நின்றமலை யம்மே
சாதனையாய்ப் பேய்பிறகு கெடுத்த மலை யம்மே
தற்பரனர் எம்மையங்கே சபித்த மலை யம்மே
பேதகமாய் நாங்களதை விட்டதற்பின் னம்மே
பெத்தலகேம் எங்களுக்குப் பெரியமலை யம்மே. 2

**- தஞ்சை வேதநாயக சாத்திரியார்**

**அருஞ்சொற்பொருள்**

1, தோத்திரங்கள் = துதிப்பாடல்கள்; முல்லைநிலத் தலைவர் = காடும் காடு சார்ந்த இடமுமாகிய முல்லை நிலத்து வாழும் மேய்ப்பர்கள்; நட்சேத்திரச் சாஸ்திரிகள் = இயேசு பெருமான் பெத்லகேம் மாட்டுத் தொழுவத்திற் பிறந்தபோது வானில் ஓர் விடிவெள்ளி தோன்றிற்று. அந்தவிடிவெள்ளியைக் கண்ட தீர்க்கதரிசிகள் உலக மீட்பர் தோன்றினார் என்று உலகுக்கு உணர்த்தினர்; அத் தீர்க்கதரிசிகளை உரைத்தவாறு; ஏகன் – இறைவன். அண்டாது – நெருங்கவிடாது.

2, ஆதிமலை = முதன்முதலாக விளங்கிய மலை; ஏதன் மலை= ஏதேன் தோட்டத்தில் விளங்கும் ஏதேன் மலை; தற்பரன் – இறைவன்.

**இலக்கணக்குறிப்பு**

அருந்தவம் – பண்புத்தொகை; தானதர்மம் – உம்மைத் தொகை. பேய்க்கணங்கள் – ஆறாம் வேற்றுமைத்தொகை; அமைத்த, கொடுத்த, நின்ற, சபித்த – பெயரெச்சங்கள்.

பயிற்சி

I. சிறு வினா:

1. தஞ்சை வேதநாயக சாத்திரியார் எழுதிய பிறநூல்கள் யாவை?
2. எவ்வகை அணி அமைப்பில் பெத்தலகேம் குறவஞ்சி நூல் அமைந்துள்ளது?
3. சிற்றிலக்கியங்கள் எத்தனை வகைப்படும்? எவையேனும் ஐந்து எழுதுக.

II. பெரு வினா:

1. குறவஞ்சி –நூ– ன் பொது அமைப்பினை எழுதுக.
2. குறத்தி ஏதன் மலையைப் பற்றி உரைப்பன யாவை?
3. ஏதன் மலை பற்றி நீவிர் அறிவன யாவை?

III. நெடுவினா:

1, விசுவாசக் குறவஞ்சி தேவமோகினிக்குக் கூறிய மலைவளத்தை விவரி.



IV. இலக்கணக்குறிப்பு எழுதுக.

அருந்தவம் தானதர்மம் அமைத்தமலை பேய்க்கணங்கள்

V. பிரித்துப் புணர்ச்சிவிதி தருக.

சித்தரெல்லாம், நிலத்தலைவர், அருந்தவங்கள், நாங்களதை, ஈனமுள்ள, எம்மையங்கே

VI. பகுபத உறுப்பிலக்கணம் தருக.

பிடிப்பார் தொழுவார் நின்ற

VII.சரியான விடையைத் தெரிவு செய்து எழுதுக.

1. பலபட்டடைச் சொக்கநாத பிள்ளை எழுதிய மற்றொரு தூதுநூல்
அ) அன்னம் விடுதூது ஆ) தென்றல் விடுதூது இ) முகில் விடு தூது

2) தூதின் இலக்கணம் கூறும் நூல்
அ) இலக்கண விளக்கம் ஆ)காரிகை இ) புறப்பொருள் வெண்பாமாலை

3. தமிழில் முத– ல் எழுந்த பரணி
அ) தக்கயாகப் பரணி ஆ) க– ங்கத்துப்பரணி இ) வங்கத்துப்பரணி

4. தென்தமிழ் தெய்வப் பரணி என்று க– ங்கத்துப் பரணியைப் போற்றியவர்
அ)சொக்கநாதப்புலவர் ஆ) புகழேந்தி இ) ஒட்டக்கூத்தர்

5. போர்முனையில் ஆயிரம் யானைகளை வென்றவீரரைப் பாடுவது
அ) பரணி ஆ)தூது இ) உலா

6. செங்கீரைப் பருவம், பிள்ளைத் தமிழில்
அ) மூன்றாம் பருவம் ஆ)இரண்டாம் பருவம் இ) நான்காம் பருவம்

7. தஞ்சை வேதநாயக சாத்திரியார் பிறந்த நூற்றாண்டு
அ) 17ஆம் நூற்றாண்டு ஆ) 18ஆம் நூற்றாண்டு இ) 19 ஆம் நூற்றாண்டு

8. கிள்ளைவிடு தூதில் உள்ள கண்ணிகள்
அ) 269 ஆ) 239 இ) 293

9) முதற்குலோத்துங்கனின் படைத்தளபதி
அ) அருண்மொழிவர்மன் ஆ) நந்திவர்மன் இ) கருணாகரத் தொண்டைமான்

10) ஆண்பால் பிள்ளைத்தமிழுக்கும் பெண்பால் பிள்ளைத் தமிழுக்கும் பொதுவான பருவங்கள்
அ) 7 ஆ) 6 இ) 8

VIII.மொழித்திறன் வளர்பயிற்சி:

சுவைமிக்க சிற்றிலக்கியங்களைத் தேடிப் பயிலுக. தூது, குறவஞ்சி, பள்ளு, பிள்ளைத் தமிழ் முத– யவற்றின் சுவை நுகர்க.

எ.கா.

கானருகும் வயலருகும் கழியருகும் கடலருகும்
மீனிரிய வருபுன– ல் இரை தேர்வெண் மடநாராய்!
தேனமர்தார்ச் சிறுத்தொண்டன் செங்காட்டங் குடிமேய
வானமருஞ் சடையார்க்கென் வருத்தஞ்சென் றுரையாயே. **(தூது)**

**- தேவாரம்**

வானரங்கள் கனி கொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்

**- குற்றாலக் குறவஞ்சி**

ஆற்று வெள்ளம் நாளைவரத் தோற்றுதே குறி –
மலையாள மின்னல் ஈழமின்னல் சூழ மின்னுதே

– முக்கூடற்பள்ளு

# 6. மறுமலர்ச்சிப் பாடல்கள்

"பண்டைநலம் புதுப்புலமை பழம்பெருமை அத்தனையும் படைப்பாய் இந்நாள்! தொண்டு செய்வாய் தமிழுக்குத் துறைதோறுந் துறைதோறுந் துடித்தெழுந்தே" என்பார் பாவேந்தர்.

பழமையின் பெருமையை அடித்தளமாகவும் துறைதோறும் முகிழ்க்கும் புதிய களங்களைப் பாடுபொருளாகவும் கொண்டு எழுந்தவைதாம் மறுமலர்ச்சியிலக்கியங்களாகும். இவற்றைச் சுவைபுதிது பொருள்புதிது அழியாதசோதிமிக்க நவகவிதை எனலாம். இவை மானிடத்தின் விழுப்பொருள்களையும் அவலங்களையும் புதிய நோக்குடன் பார்க்கும்; புத்தம் புதிய கலைகளைத் திசைதோறும் தேர்ந்து செந்தமிழுக்குச் சேர்க்கும்.

புதிய அணுகுமுறைகள், புத்தம் புதிய கற்பனைகள், படிமநோக்கு இவற்றையுடைய இற்றைநாட்பாவலர்களால் தமிழ் இலக்கியம் புதிய செழிப்பினைப்பெறும் என்று நம்பலாம்.

இப்பாவலர்கள் நமது மரபென்னும் மண்ணுக்குள் வேரூன்றியவர்கள்; புதுமையென்னும் விண்ணுக்குக் கிளை நீட்டுபவர்கள். புதிய எழுச்சியையும் விழிப்பையும் அவாவுபவர்கள். அவர்தம் படைப்புகளிற் சில இங்கே பாடப்பகுதியாகத் தரப்பட்டுள்ளன.

புரட்சிக் கவிஞர் என்றும் பாவேந்தர் என்றும் அறிஞர் பெருமக்களாற் பாராட்டப் பெறுபவர் பாரதிதாசன். பாரதியார் மீது கொண்ட அளவற்றபற்றின் காரணமாகச் சுப்புரத்தினம் என்றபெயரைப் பாரதிதாசன் என்று மாற்றிக் கொண்டவர்.

29–04–1891–ல் புதுச்சேரியில் கனகசபை – இலக்குமியம்மாள் என்பவருக்கு மகனாகப் பிறந்தவர். இளமையிலேயே பிரெஞ்சு மொழியிலும் தமிழ் மெழியிலும் சிறந்த புலமை பெற்றவர்.

தமிழ் மொழியிடத்தும் தமிழ் மக்களிடத்தும் ஆராத அன்பு பூண்டவர். தமிழ் நாட்டின் இரசூல் கம்சதோவ் என்று பாராட்டப் பெறுபவர், (இரசூல் கம்சதோவ் உருசிய நாட்டின் மாக்கவிஞர்)

'உயிரை உணர்வை வளர்ப்பது தமிழே' என்றும் "இன்பத் தமிழ்க் கல்வி யாவரும் கற்றவர் என்றுரைக்கும் நிலை எய்தி விட்டால் துன்பங்கள் நீங்கும் சுகம் வரும் நெஞ்சினில் தூய்மை உண்டாகிடும் வீரம் வரும்" என்று தமிழர்க்காகவும் எழுதியவர்.

குடும்பவிளக்கு, பாண்டியன் பரிசு, இருண்டவீடு, தமிழச்சியின் கத்தி, சேரதாண்டவம், பிசிராந்தையார், அழகின் சிரிப்பு, குறிஞ்சித்திட்டு ஆகிய காப்பியங்களையும் இறவாப் புகழ் பெற்றஎண்ணற்றபாடல்களையும் இயற்றியவர். இவரியற்றிய பிசிராந்தையார் நாடகம் சாகித்திய அகாதெமிப் பரிசு பெற்றது.

"வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே" என்றஇவரின் தமிழ்வாழ்த்துப் பாடலைப் புதுவை அரசு தனது தமிழ்த்தாய் வாழ்த்தாக ஏற்றுக்கொண்டுள்ளது. தமிழக அரசு பாரதிதாசன் பல்கலைக் கழகம் நிறுவி இவர் புகழைப் போற்றியுள்ளது.

குயில் என்றஇலக்கிய இதழை நடத்திவந்த இந்தப் புதுவைக் குயில் 21–4–1964 அன்று இயற்கை யெய்தியது.

## (அ) எந்நாளோ?

என்னருந் தமிழ்நாட் டின்கண்
எல்லோரும் கல்வி கற்றுப்
பன்னருங் கலைஞா னத்தால்
பராக்கிர மத்தால், அன்பால்
உன்னத இமமலை போல்
ஓங்கிடும் கீர்த்தி யெய்தி
இன்புற்றார் என்று மற்றோர்
இயம்பக் கேட்டிடல் எந்நாளோ!

கைத்திறச் சித்தி ரங்கள்
கணிதங்கள் வான நூற்கள்
மெய்த்திறநூற்கள் சிற்பம்
விஞ்ஞானம் காவி யங்கள்
வைத்துள்ள தமிழர் நூற்கள்
வையத்தின் புதுமை என்னப்
புத்தகச் சாலை எங்கும்
புதுக்குநாள் எந்த நாளோ?

தாயெழிற் றமிழை, என்றன்
தமிழரின் கவிதை தன்னை
ஆயிரம் மொழியிற் காண
இப்புவி அவாவிற் றென்ற
தோயுறும் மதுவின் ஆறு
தொடர்ந்தென்றன் செவியில் வந்து
பாயுநாள் எந்த நாளோ?
ஆரிதைப் பகர்வார் இங்கே.

வெள்ளம்போல் தமிழர் கூட்டம்;
வீரங்கொள் கூட்டம்; அன்னார்
உள்ளத் தால்ஒரு வரேமற்
றுட— னால் பலராய்க் காண்பார்
கள்ளத்தால் நெருங்கொ ணாதே
எனவையம் கலங்கக் கண்டு
துள்ளும்நாள் எந்நாள்? உள்ளம்
சொக்கும்நாள் எந்த நாளோ?



கண்களும் ஒளியும் போலக்
கவின்மலர் வாசம் போலப்
பெண்களும் ஆண்கள் தாமும்
பெருந்தமிழ் நாடு தன்னில்
தண்கடல் நிகர்த்த அன்பால்
சமானத்தர் ஆனார் என்ற
பண்வந்து காதிற் பாயப்
பருகுநாள் எந்த நாளோ?

– புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்

### அருஞ்சொற்பொருள்

பராக்கிரமம் = வீரம்; உன்னதம் = உயர்வு; இமமலை = இமயமலை; கீர்த்தி = புகழ்; நிகர்த்த = போன்ற; சமானத்தர் = ஒத்தஉரிமை உடையவர்; பண் = பாடல்; புதுக்கும் நாள் = புதியதாக அமைக்கும் நாள்; சொக்கும் நாள் = மகிழ்ச்சியால் மயங்கும் நாள்; பாவகை : அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

### இலக்கணம்

இயம்பக் கேட்டிடல் – செயவென் வாய்பாட்டு வினையெச்சம்; அருந்தமிழ்– பண்புத்தொகை; புதுக்குநாள், பருகுநாள், பாயு நாள்–வினைத்தொகைகள்; பகர்வார் – வினையாலணையும் பெயர்; தண்கடல் – பண்புத்தொகை.

## பயிற்சி

**I.** சிறுவினா:

1. தமிழ்நாட்டார் எத்தகைய கீர்த்தியைப் பெறவேண்டும் எனக் கவிஞர் கனவு காண்கிறார்?
2. புத்தகச் சாலைகளில் இருக்க வேண்டிய புது நூல்களாகப் பாவேந்தர் உரைப்பன யாவை?
3. கவிஞரின் செவியில் வந்து பாய வேண்டிய செய்தி யாது?
4. வையம் கலங்குமாறு தமிழர் செய்யத்தக்கது யாது?
5. ஆடவரும் மகளிரும் சமானத்தர் ஆக வேண்டும் என்றகருத்தினைக் கவிஞர் எங்ஙனம் கூறியுள்ளார்?

**II.** பெருவினா:

1. எந்நாளோ என்னுந் தலைப்பில் கவிஞர் கூறியிருப்பவை யாவை?

**III.** இலக்கணக்குறிப்பு வரைக.

பகர்வார், இயம்பக்கேட்டிடல், பாயுநாள்

**IV.** பிரித்துப் புணர்ச்சிவிதி தருக,

எழிற்றமிழ், கீர்த்தியெய்தி, கைத்திறம், பெருந்தமிழ், மெய்த்திறம்

**V.** உறுப்பிலக்கணம் தருக.

இயம்ப, பகர்வார், காண்பார், இன்புற்றார்.

## (ஆ) பூக்கட்டும் புதுமை

பூக்கின்றமலர்களெலாம் பூக்கள் அல்ல
புதியனவாய் வருவவெல்லாம் புதுமை அல்ல
ஈர்க்கின்றமணம்பரப்பும் மலர்க ளைத்தாம்
எல்லோரும் போற்றிடுவர்; நலம்ப ரப்பிக்
காக்கின்றபுதுமையைத்தான் ஏற்பர் சான்றோர்;
காகிதப்பூப் போல்விரியும் புதுமை எல்லாம்
போக்குதலே அறிவுடைமை; மயங்கி நின்று
புதுமைஎனும் பெயராலே வீழ்தல் வேண்டா.

செங்கதிரால் தாமரைகள் சிரித்தி ருக்கும்
சேர்மதியால் அல்– மலர் வாய்சி ரிக்கும்
பொங்கிவரும் மழைவரவால் பயிர்சி ரிக்கும்
பொய்யாத மொழிக்குறளால் புலம்சி ரிக்கும்
துங்கமுறச் சிரித்திருக்கும் அறிவால் ஆய்ந்து
தூயனவன் சொல் வழியில் பொதுமை காண
இங்கினிநாம் முயலுவமேல் புதுமை பூக்கும்
புல்லடிமை தேய்ந்துசம நிலையே வாய்க்கும்

– முடியரசன்

பாரதிதாசன் பரம்பரையின் மூத்ததலைமுறைக் கவிஞர்களுள் ஒருவர் கவியரசு முடியரசன் ஆவார். மதுரை மாவட்டம் பெரியகுளத்தில் சுப்பராயலு – சீதாலட்சுமி என்பாருக்கு 7–10–1920–ல் பிறந்தவர். துரைராசு என்றதமது பெயரை முடியரசன் என்று மாற்றிக்கொண்டவர். பாரதிதாசனோடு மிக நெருங்கிப் பழகி அவருடைய முற்போக்கு எண்ணங்களை ஏற்றுப் பாடியவர். தந்தை பெரியாரிடத்திலும் பேரறிஞர் அண்ணாவிடத்திலும் நெருங்கிப் பழகியவர். சாதி மறுப்புத் திருமணஞ் செய்து கொண்டவர். சடங்குகளை மறுப்பவர். தமது மறைவின் பொழுதும் எச்சடங்குகளும் வேண்டா என்றேஉரைத்து, அவ்வாறேநிறைவேறச் செய்தவர். காரைக்குடி மீ.சு.உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராகப் பணிபுரிந்தவர்.

பூங்கொடி, காவியப்பாவை, வீரகாவியம் என்னுங் காப்பியங்களையும் முடியரசன் கவிதைகள் என்றகவிதை நூலையும் எழுதி வெளியிட்டுள்ளார். இவரது கவிதைகளைச் சாகித்திய அகாதெமி இந்தியிலும் ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளது. பூங்கொடி என்றகாவியம் 1966 இல் தமிழக அரசின் பரிசைப் பெற்றுள்ளது. பறம்பு மலையில் நடந்த விழாவில் கவியரசு என்றபட்டம் இவருக்கு வழங்கப்பட்டது.

### அருஞ்சொற்பொருள்

ஈர்க்கின்ற= கவர்கின்ற; புலம் = அறிவு; புல்லடிமை = இழிவைச் சேர்க்கும் அடிமைத்தனம்; துங்கமுற= தூய்மையுற.



### இலக்கணம்

பூக்கின்ற,ஈர்க்கின்ற, காக்கின்ற– நிகழ்காலப் பெயரெச்சங்கள்; செங்கதிர், புல்லடிமை– பண்புத்தொகைகள்; காகிதப்பூ – மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை.

### பயிற்சி

I. சிறுவினா:

1. புதுமை எவ்வாறு இருக்க வேண்டும் என்று கவிஞர் விரும்புகிறார்?
2. புதுமை எப்போது பூக்கும் என்கிறார்?

II. பெருவினா:

1. பூக்கட்டும் புதுமை என்னுந் தலைப்பில் அமைந்துள்ள கவிதை அழகினை விவரி

III. இலக்கணக்குறிப்பு வரைக,

புல்லடிமை, காகிதப்பூ

IV. பிரித்துப் புணர்ச்சிவிதி வரைக,

காகிதப்பூ, மொழிக்குறள், புல்லடிமை, செங்கதிர்

V. உறுப்பிலக்கணம் தருக

போற்றிடுவர், ஏற்பர்

## (இ) விடுதலை விளைத்த உரிமை

கட்டற்று வானிலே தவழ்கின்றகாற்றினைக்
கைது செய்தாரு மில்லை
காலமாங் கிழவனை ஞாலமோ கடவுளோ
கடுஞ்சிறைவைத்த தில்லை
மொட்டென்று வந்துவெண் மலராகு முல்லையை
மூடிவைத் தாரு மில்லை
மூவாத ஞாயிறும் வெண்ணிலா மீன்களும்
முள்சிறைப் பட்ட தில்லை !

தட்டின்றி வையகம் தந்ததோர் உரிமையைத்
தடைசெயல் முறைமை யாமோ?
தாயகம், தாயகத் துள்ளவர்க் களித்துள்ள
தா்மத்தை மறுக்க லாமோ?
வெட்டுங்கள் தளையினை என்றவோர் குர– லே
வீழ்ந்ததே அடிமை எண்ணம்
விடுதலை ! விடுதலை ! என்னுமோர் இசையிலே
விளைந்ததே உரிமை எண்ணம் !

அடிமைகள் எங்கெலாம் இருப்பினும் அன்னவர்க்
கானந்தம் தருவ தோர்நாள்
ஆதிக்க வெறியா்தம் கா– லே வதிபவர்க்
கறமெலாம் வழங்கு மோர்நாள்
மிடிமையும் அச்சமும் வீழுமோர் நாளதே
விடுதலை விளக்கு மோர்நாள்
வியத்தகும் இந்தியத் துணைக்கண்ட ம ஃதையே
வீறுடன் பெற்றதோர்நாள் !

குடிகளும் மொழிகளும் இனங்களும் பல்வகை
குவியுமிக் கண்ட முற்றும்
கூட்டுறவொன்றினால் வாழுமே யல்லாது
கொடுமையால் வாழ்வ தில்லை !
அடிமையென் றொருவரும் எண்ணாத வகையிலே
அவரவர் உரிமை காத்து
ஆக்கிடும் உறவினை அமைத்திடும் நாளினை
அன்பினாற் கொண்டு சேர்ப்போம்.

–கவியரசு கண்ணதாசன்



"மாற்றம் எனது மானிடத் தத்துவம்" என்று பாடிய கவியரசர் கண்ணதாசன் சிறுகூடற்பட்டியிலே தோன்றிய பாட்டுப் பறவை. பட்டி தொட்டிகளில் எல்லாம் தமது திரையிசைப் பாடல்களால் புகழ்பூத்த கவிஞர். பழந்தமிழ் இலக்கியத்தின் உயிர்ச்சாரத்தையெல்லாம் தமது பாடல்களிலே எடுத்தாண்டவர். தமிழக அரசின் அரசவைக் கவிஞராக விளங்கியவர்.

சாத்தப்பன்–விசாலாட்சி என்பாருக்கு மகனாக 24–6–1927–ல் பிறந்தவர். முத்தையா என்றபெயரையே கண்ணதாசன் என்று மாற்றிக்கொண்டவர். தென்றல், தென்றல்திரை, சண்டமாருதம், முல்லை, கண்ணதாசன் ஆகிய இதழ்களின் ஆசிரியராக விளங்கினார். ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட திரைப்படப் பாடல்களை எழுதிப் புகழ் பெற்றார். இவருடைய கவிதைகள் கண்ணதாசன் கவிதைகள் என்றபெயரில் பல தொகுப்புகளாக வெளி வந்துள்ளன.

அர்த்தமுள்ள இந்துமதம் என்னும் கட்டுரைத் தொடர்களும், இயேசுகாவியம் என்னும் நூலும் இவர் புகழை என்றும் நிலைநிறுத்தும்.

மத்திய மாநில அரசுகளின் விருதுகளையும், சாகித்திய அகாதெமிப் பரிசினையும் அண்ணாமலையரசர் நினைவுப் பரிசினையும் பெற்றவர்.

17–10–1981–இல் இயற்கை எய்தினார்.

### அருஞ்சொற்பொருள்

தட்டின்றி = குறையின்றி; காலமாங்கிழவன் = காலம். மூவாத = மூப்படையாத; மீன் = விண்மீன்; தளை = விலங்கு; வதிபவர்=வாழ்பவர்; மிடிமை = வறுமை.

### இலக்கணம்

வெண்முல்லை – பண்புத்தொகை; மூவாத ஞாயிறு –எதிர்மறைப் பெயரெச்சம், விடுதலை விடுதலை – அடுக்குத் தொடர்; வதிபவர் – வினையாலணையும் பெயர். குடிகளும் மொழிகளும் இனங்களும் – எண்ணும்மை.

### பயிற்சி

I. நெடுவினா:

1. 'விடுதலை விளைத்த உரிமை' யென்றதலைப்பின் கீழ்க் கவியரசர் கண்ணதாசன் உரைப்பனவற்றைத் தொகுத்தெழுதுக.

## (ஈ) தளை

முன்னால் தெரிவது
முத்துக் கொண்டைச்
சோளக் கொல்லை;
பக்கத்தில் இருப்பது
பழுத்த நெல்வயல்
தொலைவில் அந்தத்
தோட்டத்து வே– க்குள்
குளுகுளு வென்ற
கொழுக்கட்டைப் புல்!
அடுத்த பண்ணையில்
அகலத் தொட்டியில்
குடித்துச் சுவைக்கப்
பிண்ணாக்குத் தண்ணீர்
பார்க்கும் திசையெல்லாம்
பச்சையின் அழைப்பு
விழிகளில் வெறிப்பு
நாவிலே நீருற்று
ஆனால்
நானோ
தளையில் சிக்கிய கோழை
முளையில் கட்டிய காளை!

**- சிற்பி பாலசுப்பிரமணியம்**

கோவைமாவட்டம் ஆத்துப் பொள்ளாச்சி என்றஊரைச் சார்ந்தவர் சிற்பி பாலசுப்பிரமணியம். பெற்றோர் – பொன்னுசாமி, கண்டியம்மாள். கருத்தோவியங்களை வடிவமைக்கும் சொல்லேருழவர். சொல்லைத் தேர்ந்து செதுக்கித் தமிழ்ப்பாடல் ஆக்கும் சிற்பி. பாரதியார் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றியவர்.

சிரித்த முத்துக்கள், நிலவுப்பூ, ஒளிப்பறவை, சர்ப்பயாகம், சூரிய நிழல், ஆதிரை முத– ய பல கவிதை நூல்களை ஆக்கியவர். இலக்கியச் சிந்தனை, மலையாளக் கவிதை, அலையும் சுவடும், ஒரு கிராமத்து நதிக்கரையில் என்னும் உரைநடை நூல்களை எழுதியவர்.

'ஒரு கிராமத்து நதி' என்றநூலுக்குச் சாகித்திய அகாதமியின் பரிசு வழங்கப்பட்டுள்ளது. தமிழக அரசின் பாவேந்தர் பரிசு, தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் ஆங்கில இலக்கிய நூற்பரிசு போன்றபரிசுகளையும் பெற்றுள்ளார்.

### தளை

உலகம் முழுதும் இன்பமயம் – வளமும் நலமும் வாவென்று கைநீட்டி அழைக்கின்றன. அவற்றைச் சென்றெய்த ஆவல் துடிக்கிறது நமக்கு.



தேவையும் நம்மைப் பிடர்பிடித்து உந்துகிறது. ம– ந்து கிடக்கும் வையத்து இன்பங்களை நுகர்ந்து மகிழவும், அடையமுடியாதவற்றைத் தத்தம் வ– ய முயற்சியால் பெற்றுக்கொள்ளவும் நம்மிடம் பேராற்றல் உண்டு. ஆனால் எதுதான் தளைப்படுத்துகிறது நம்மை? சாதியா? மதமா? மொழியா? நாடா? எத்தனை தடைகள் ? எத்தனை தளைகள்?

கட்டற்றுச் செல்லவும் களிவெறியிலே துள்ளவும் இன்பம் நுகரவும் தடைப்படுத்தும் தளைகள் யாவை? ஏன் மீறமுடியவில்லை நம்மால்? மீறக் கூடாதா நாம்? கட்டுப்பட்டுப் பழகியிருக்கும் பழக்கத்தால் வெறுநாவைச்சுழற்றி நிறைவு பெறுகிறோமா? எத்தனை வினாக்களை எழுப்புகிறது? இந்தக் கவிதை! கவிஞனின் பேராற்றல் இது. இப்பாடல் ஒளிப்பறவை என்றநூ– ருந்து எடுக்கப்பட்டுள்ளது.

### இலக்கணம்

குளுகுளுவென்று – இரட்டைக் கிளவி

### பயிற்சி

I. பெருவினா:

1, தளை என்னும் பாடல் மூலம் கவிஞர் உணர்த்த விரும்பும் செய்தியை விளக்குக.

II. பிரித்துப் புணர்ச்சிவிதி வரைக:

சோளக் கொல்லை, நீருற்று, அகலத்தொட்டி

## (உ). கண்

கண்கள்
இந்தப் பிரபஞ்ச
வனத்தின் பகல் பூக்கள்
இமைப் புதையல்
கொட்டாவி நாட்டியத்தின் நட்டுவனார்!

புருவக் கொடியருகே
பொன்னிமையின் உள்ளே
உருவாகிச் சுழலும்
உள்ளத்தின் முத்திரைகள்!

ஆத்மாவின் பூவில்
அள்ளி வைத்த தேனை
உப்பென்று துப்பும்
ஊமை வண்டுகள்!

மண்மேல் முதன் முத– ல்
மனிதன் நடைபோடப்
பாதை சொல்– த்தந்த
பால தீபங்கள்
தாய்க் கருவின் பூங்காவில்
ராஜ வசந்தத்தில்
முகையாகிப் பூத்தவைகள்!
மௌனத்தின் பகல் வேளைச் சொப்பனங்கள்!

பகல் இருட்டைப் பார்ப்பதற்கு
படைத்தவனே ஏற்றி வைத்த
பாவை விளக்குகள்
குருட்டுக்குப் பொட்டு வைத்த
கோல ஒப்பனைகள்
கலைப் பார்வைச் சிகரங்கள்
கண்ணீரின் பிரும்மாக்கள்!

இமைத்தாளம் கொட்டியொரு
இசைலயத்தில் சதிராடும்
மௌன நடனங்கள்
மனநாட்டின் தூதுவர்கள்



இரைதேடி மனப்பறவை
என்றோ திறந்து வைத்த
இரு வாய்கள்
முக விளக்கின் இரு சுடர்கள்!

காற்றால் அணைகின்ற
கைவிளக்குப் பலவுண்டு – இவையோ,
மூச்சுக்
காற்றின்றி அணைகின்ற
கண் விளக்கு.

– நா. காமராசன்

நா, காமராசன் 1942–ல் மதுரை மாவட்டம் போடி–மீனாட்சிபுரம் கிராமத்தில் பிறந்தார். தந்தை நாச்சிமுத்து; தாயார் இலட்சுமி அம்மாள்.

மறுமலர்ச்சி யுகத்தின் கவிஞனாகத் திகழும் காமராசன் அவர்கள் மரபுக் கவிதைகளையும் புதுக் கவிதைகளையும் எழுதித் தமிழ் மொழிக்கு வளஞ் சேர்த்துள்ளார். கிராமியச் சந்தங்களுடன் புதுப்பார்வை திகழப் படிமக் கவிதைகள் பலவற்றைஎழுதியுள்ளார். 1971–ல் வெளிவந்த கறுப்பு மலர்கள் தொகுப்பு நூல், கவிதை உலகில் ஒரு திருப்பத்தை உருவாக்கியதென அறிஞர்கள் புகழ்வர்.

சூரியகாந்தி, சகாராவைத் தாண்டாத ஒட்டகங்கள், தாஜ்மகாலும் ரொட்டித்துண்டும் முத– யன இவர்தம் படைப்புகளாகும். இவர் தம் சிந்தனை புதிது; தனித்துவம் வாய்ந்தது.

### கண்கள்

படிமங்களாகவே வடிவங் கொண்டிருக்கும் கவிதைகளின் அழகைக் காண்க. உருவகம் என்றவழக்கு புதுக் கவிதைகளிலே படிமம் என்று வழங்கப்படும். அத்தகு படிமங்கள் புதிய புதிய அகக்காட்சிகளைத் தோற்றுவிக்கும். சொல்லுக்குள் ஆழ்ந்தாழ்ந்து கிடக்கும் இருண்மையும் துலக்கமும் இந்தப் படிமங்கள் வாயிலாய்த் தோன்றித் தோன்றி மறையும். புதுக் கவிதைகளுக்கு உயிர்ப்பும் வாழ்வும் வழங்குவன படிமங்களே எனலாம். கவித்துவக் காட்சிகளை விவரிக்கும் சொல்லாட்சிகளே படிமங்களாகும்.

### அருஞ்சொற்பொருள்

பிரபஞ்சவனம் = உலகமாகியகாடு; இமைப்புதையல் = இமைகளுக்குள்ளே புதைந்து கிடக்கும் பெருஞ்செல்வம்; ஊமை வண்டுகள்=குரலால் கருத்தறிவிக்காமல் மௌனத்தால் பொருளுணர்த்தும் கரிய நிறத்து வண்டுகள் போலும் கண்கள். ஆன்மாவின் மொழியைப் பேசும் கண்ணீர்த் துளிகள்; தீபங்கள்=வழிகாட்டிகள்

தாய்க்கருவின் ....... பூத்தவைகள் = தாயின் கருப்பையாகிய சோலையில் ஐந்தாம் மாதமாகிய வசந்த காலத்தில் மொட்டாகி மலர்பவை. குருட்டுக்குப் பொட்டுவைத்த கோல ஒப்பனைகள் = பார்வையற்றவரின் விழிகள்; கண்ணீரின் பிரும்மா = கண்ணீரைத் தோற்றுவிப்பவை; மனநாட்டின் தூதுவர்கள் = மனத்தின் கருத்தை அறிவிக்க வந்தவை கண்கள்; காற்றால் அணையும் கைவிளக்கு. இது மூச்சுக்காற்றின்றி அணையும் விளக்கு – முரண்தொடை.

### இலக்கணக்குறிப்பு

பகல்பூக்கள் – ஏழாம் வேற்றுமைத்தொகை; புருவக்கொடி, மனப்பறவை – உருவகங்கள்

### பயிற்சி

I. பெருவினா:

1. கண்களை எவ்வாறெல்லாம் காமராசன் கற்பனை செய்துள்ளார் என்பதனை விளக்கிக் காட்டுக.



## (ஊ) தண்ணீர் வங்கிகள்

இறைக்கின்றபொறிக ளாலே
இருக்கின்றநீரை எல்லாம்
இறைத்துமேல் கொண்டு வந்தோம்
இணையிலாப் பசுமை என்னும்
புரட்சியும் செய்து வென்றோம்
பூமிக்குள் இருந்த தண்ணீர்
வறண்டதால் குடிநீர் கூட
வாங்கித்தான் பருகுகின்றோம்!

வங்கியில் பணத்தைப் போட்டு
வளர்ப்பதைப் போன்று தண்ணீர்
வங்கிகள் நமக்கு வேண்டும்
வான்மழை வீணா காமல்
தங்கிடும் வண்ணம் வீட்டுத்
தரையினை அமைத்தல் வேண்டும்
பொங்கிடும் குளங்கள் ஏரி
பூமிக்குள் அமைத்துக் காப்போம்

– ந. கருணாநிதி

கவிஞர் ந. கருணாநிதி 28–03–1939–ல் கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் பிறந்தவர். பெற்றோர் இர.நடேசன், சிவகாமியம்மாள் ஆவார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் புலவர் பட்டத் தேர்வில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர். பூவிருந்தவல்– அரசு மேனிலைப்பள்ளியில் முதுகலைத் தமிழாசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார்.

தொல்காப்பியம் முழுமைக்கும் உரையெழுதியுள்ளார். சென்னை வானொ– நிலையத்தாரால் ஒ– பரப்பப்படும் மெல்–சைப்பாடல்கள் பலவற்றைஇவர் எழுதியுள்ளார். நமக்குள்ளே மலரட்டும் நல் ணக்கம் என்னும் இவரது கவிதை நூ––ருந்து இப்பாடல் எடுக்கப்பெற்றுள்ளது. தண்ணீர் வங்கிகள் என்னும் சொல்லாட்சி பாராட்டத்தக்கது.

### இலக்கணக் குறிப்பு

இணையிலாப் பசுமை – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; இலா – (இல்லாத) – இடைக்குறை, விகாரம்; வான்மழை – ஐந்தன் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை.

### பயிற்சி

I. பெருவினா:

தண்ணீர் வங்கிகள் என்றதலைப்பின் கீழ் ந.கருணாநிதி உரைப்பன யாவை?

**II.** இலக்கணக்குறிப்பு வரைக.

இணையிலாப்பசுமை, வான்மழை

**III.** உறுப்பிலக்கணம் தருக.

பருகுகின்றோம், அமைத்தல், காப்போம், வென்றோம்.

**VI.**மொழித்திறன் வளர்பயிற்சி:

உள்ளதை உள்ளபடி வெள்ளையாய்ப் பாடலாம் – இப்படி
அண்ணன் என்பவன் தம்பிக்கு மூத்தவன்
திண்ணை என்பது தெருவினு யர்ந்தது
தண்ணீர் என்பது தாகந் தணிப்பது
அண்ணி யென்பவள் அண்ணன் மனைவியே
பாக்காவது கமுகம் பழம்; பருப்பாவது துவரை
மேற்காவது கிழக்கில் நின்று பார்த்தாலது தெரியும்.

# 7. வழிபாட்டுப் பாடல்கள்

தமிழ் இலக்கியத்தைப் பல்வேறு சமயம் சார்ந்த புலவர்கள் வளப்படுத்தியுள்ளனர். பலசமயப் பண்பாடு கொண்டு இந்தியப் பெருநாடு மேலோங்கி விளங்குகிறது. இந்தப் பின்னணியில் தமிழ்ப்புலவர்கள் தத்தம் சமயக் கடவுளை வாழ்த்தியும் வணங்கியும் பாடியுள்ளனர். சைவம், வைணவம், கிறித்தவம், பௌத்தம் ஆகிய சமயங்கள் சார்ந்த பாடல்கள் இப்பகுதியில் இடம் பெற்றுள்ளன.

## (அ) சிவபெருமான்

நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தி – டர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே யெந்நாளும் துன்ப மில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே.

– திருநாவுக்கரசர்

## (ஆ) திருமால்

ஆழிமழைக் கண்ணா ! ஒன்று நீ கைகரவேல்
ஆழியுள் புக்கு முகந்து கொடார்த்து ஏறி
ஊழி முதல்வன் உருவம் போல் மெய்கறுத்துப்
பாழியந் தோளுடைப் பற்பநாபன் கையில்
ஆழிபோல் மின்னி, வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழை போல்
வாழ உலகினில் பெய்திடாய், நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோர் எம்பாவாய் !

– ஆண்டாள்

## (இ) இயேசு பிரான்

மூவாத முதலவனை முதுசுருதி மொழிப்பொருளை
ஓவாத பெருங்குணத்த வுத்தமனை யுலகனைத்தும்
சாவாத படிகாக்கத் தநுவெடுத்துத் துசங்கட்டுந்
தேவாதி தேவனையான் சிலுவைமிசைக் கண்டேனே.

– எச்.ஏ. கிருஷ்ணபிள்ளை

## (ஈ) புத்தர்

அருள்வீற் றிருந்த திருநிழல் போதி
முழுதுணர் முனிவநிற் பரவுதும் தொழுதக
ஒருமனம் எய்தி இருவினைப் பிணிகெட
முப்பகை கடந்து நால்வகைப் பொருளுணர்ந்(து)
ஓங்குநீர் உலகிடை யாவரும்
நீங்கா இன்பமொடு நீடுவாழ் கெனவே.

**- வீரசோழிய மேற்கோள்**

### அ. சிவபெருமான்

இச்செய்யுள் திருநாவுக்கரசர் இயற்றிய தேவாரத்தில் இடம் பெற்றதாகும். சைவத் திருமுறைகளில் முதல் ஏழு திருமுறைகள் தேவாரம் ஆகும். அவற்றுள் முதல் மூன்று திருமுறைகள் திருஞானசம்பந்தராலும், நான்கு, ஐந்து, ஆறு திருமுறைகள் திருநாவுக்கரசராலும் ஏழாந்திருமுறைசுந்தரமூர்த்தி நாயனாராலும் பாடப்பட்டவை ஆகும்.

திருநாவுக்கரசர் தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள, திருவாமூர் என்னும் ஊரில் பிறந்தார். இவர் தந்தை புகழனார்; அன்னையார் மாதினியார், தமக்கையார் திலகவதியார். திருநாவுக்கரசருக்குப் பெற்றோர் இட்ட பெயர் மருள் நீக்கியார் என்பதாகும். வாகீசர், அப்பரடிகள் எனவும் வழங்கப்படுகிறார். சைவநெறியில் தோய்ந்த இவர் சாதி வேற்றுமைகளைக் களைய முற்பட்ட சமுதாயப் பற்றாளராகவும் காணப்படுகிறார். இவர் 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்னும் திருவாக்கைத் தந்தவரும் அதன்படியே வாழ்ந்தவருமாவார். இவருடைய காலம் கி.பி. 7– ம் நூற்றாண்டு.

#### அருஞ்சொற்பொருள்

நமன் = எமன்; நடலை = இறப்பு; பிணி = நோய்; ஏமாப்போம் = பாதுகாப்புடன் உள்ளோம்.

#### இலக்கணம்

நமனை யஞ்சோம் – உருபு மயக்கம்; நரகத்தில் இடர்ப்படோம் – ஏழாம் வேற்றுமை விரி; வெண்குழை, சேவடி – பண்புத் தொகைகள்; கொய்ம்மலர் – வினைத்தொகை.

### ஆ திருமால்

திருமாலைப் போற்றும் இப்பாடல் திருப்பாவையில் இடம்பெற்றநான்காம் பாடலாகும். திருப்பாவை என்பது பக்திக் காலத்தில் எழுதப்பெற்றஉயரிய பக்தி இலக்கியமாகும். திருப்பாவையை வேதம் அனைத்திற்கும் வித்து என்று புகழ்வர். நாலாயிர திவ்வியப் பிரபந்தத் தொகுப்பில் மூன்றாவது பிரபந்தமாக வைக்கப்பட்டிருப்பது திருப்பாவை. பாவை என்பது சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று. பாவை என்றசொல் பொம்மை போன்றபடிமத்தைக் குறித்தது. பின் பாவையைக் குறித்துச் செய்யப்படும் நோன்புக்கு ஆகி, பின்னர் அந்நோன்பைத் தெரிவிக்கும் சிற்றிலக்கியத்துக்காகியது. அதனால் பாவை, இருமடியாகுபெயர். திருப்பாவைப் பாக்கள் முப்பதும் வெண்டளையால் வந்த எட்டடி நாற்சீர் கொச்சகக் க– ப்பா வகையைச் சார்ந்தவை.



திருப்பாவை அருளிய ஆண்டாள் எட்டாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் வாழ்ந்தவர். பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவராம் பெரியாழ்வாரின் வளர்ப்பு மகள். நாச்சியார் திருமொழி, திருப்பாவை என்றஇவ்விரு தெய்வப்பனுவல்களும் ஆண்டாள் அருளிச் செய்தவையாகும்.

#### அருஞ்சொற்பொருள்

ஆழிமழைக் கண்ணா – மழைத்தெய்வமே! மழைக்கு அதிபதி (பர்ஜன்யன் என்றும் கூறுவர்.) ஆழி = கடல்; ஊழி முதல்வன் = கண்ணபிரான்; ஆழி = சக்கரம்; சார்ங்கம் = வில்; பாழியந்தோள் – வ– மையுடைய தோள் (பாழி = வ– மை)

#### இலக்கணம்

கரவேல் – எதிர்மறைஏவல் வினைமுற்று; உதைத்த – பெயரெச்சம்; வாழ – செயவென் வாய்பாட்டு வினையெச்சம்; பெய்திடாய் – ஏவல் வினைமுற்று.

### இ. இயேசுபிரான்

இயேசுபிரானை வாழ்த்தும் இப்பாடலைப் பாடியவர் எச்.ஏ. கிருஷ்ணபிள்ளை ஆவார். திருநெல்வே– மாவட்டம் கரையிருப்பு எனும் ஊரில் 1827 ஆம் ஆண்டு பிறந்தார். இவர்தம் பெற்றோர் சங்கர நாராயண பிள்ளையும் தெய்வ நாயகியம்மையும் ஆவர். ஹென்றி ஆல்பிரடு என்ற பெயர்களின் சுருக்கமே எச்.ஏ. ஆகும். தமிழ் ஆசிரியராகப் பணியாற்றிய இவரது படைப்புகள் போற்றித் திருவகவல், இரட்சணிய யாத்திரிகம், இரட்சணிய மனோகரம் ஆகியவை. இவர் எழுதியனவாகச் சொல்லப்பெறும் இரட்சணியக் குறள், இரட்சணிய பால போதனை என்பன இப்பொழுது கிடைத்தில. நமக்குப் பாடமாக வந்துள்ள இரட்சண்ய மனோகரப்பாடல் க– விருத்த அமைப்பிலுள்ளது. இரட்சணிய மனோகரம் கல் மனத்தையும் கரையச் செய்யும் பக்திப் பாடல்களின் தொகுப்பாகும். இரட்சணிய யாத்திரிகமும் இரட்சணிய மனோகரமும் முற்றிலும் வேறு வேறான நூல்கள் அல்ல. இரட்சணிய மனோகரத்தின் பெரும்பகுதி இரட்சணிய யாத்திரிகத்தி– ருந்து எடுத்துத்தொகுக்கப் பெற்றது ஆகும். இவரைக் கிறித்துவக் கம்பர் எனப் புகழ்வர்.

#### அருஞ்சொற்பொருள்

தநுவெடுத்துத் துசங்கட்டும் = கைப்பிடியாக நின்று முன்முயற்சியெடுக்கின்ற(துசங்கட்டுதல் – விடாப்பிடியாக ஒரு செயலை முன்னின்று நடத்திக்காட்டுதலுக்கு வழங்கப்படும் வட்டார வழக்கு)

#### இலக்கணம்

பெருங்குணம் – பண்புத்தொகை; கட்டும் – செய்யும் என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சம்.

### ஈ புத்தர்

நமக்குப் பாடமாகிய இப்பாடல் வீரசோழியம் என்னும் இலக்கண நூ– ன் உரைப் பகுதியில் உள்ள மேற்கோள் பாடலாகும். வீரசோழியம் ஐந்திலக்கணம் கூறும் இலக்கண நூல் ஆகும். வீரராசேந்திர சோழன் விருப்பத்திற்கு ஏற்பப் புத்தமித்திரரால் எழுதப்பெற்ற இந்நூலுக்குப் பெருந் தேவனார் உரை எழுதியுள்ளார்.

#### அருஞ்சொற்பொருள்

வீற்றிருத்தல் = தனித்திருத்தல், மகிழ்ந்து பெருமிதத்துடன் இருத்தல்; இருவினை = நல்வினை, தீவினை; பரவுதும் = யாம் தொழுதும்; ஒருமனம் = மாறுபாடு இல்லாது ஒரு நிலைப்பட்ட மனம்;

ஓங்குநீர் = கடல்; கடந்து = வென்று; தொழுதக = வணங்குதற்குரிய; நால்வகைப் பொருள் = அறம், பொருள், இன்பம் வீடு. போதி = அரசமரம்; முப்பகை = காமம், வெகுளி, மயக்கம் ஆகிய மூன்று பகைகள்; முனிவர் = துறவி;இங்கு புத்தபெருமானைக் குறிக்கிறது.

**இலக்கணம்**

பரவுதும் – தன்மைப் பன்மை வினைமுற்று; நிழல் போதி – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை; ஒருமனம், இருவினை, முப்பகை, நால்வகை – அளவுப் பண்புத் தொகைகள்; நீங்கா இன்பம் – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; யாவரும் – முற்றும்மை. வீற்றிருந்த – பெயரெச்சம்; வினைப்பிணி – உருவகம்.

## பயிற்சி

**I.** சிறுவினா:

1. தேவாரம் – சிறுகுறிப்பு எழுதுக.
2. வேதமனைத்திற்கும் வித்து என்றழைக்கப்படும் நூல் யாது?
3. புத்தமித்திரர் குறித்துக் குறிப்பெழுதுக.
4. புத்தமித்திரர் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு எனும் எண் வரிசையில் எவ்வெவற்றைக் குறிக்கிறார்?
5. துசங்கட்டுதல் – விளக்கியெழுதுக.

**II.** பெருவினா:

1. அப்பர் பெருமிதமும் தன்னம்பிக்கையும் பொதியப் பாடிய பாடற்கருத்தை விளக்குக.
2. மழைபெய்ய வேண்டி மகளிர் திருமாலை வழிபட்ட பாடற்சுவையை விளக்குக.
3. சிலுவைமிசைக் கண்ட இறைவனது பண்பாக எச்.ஏ.கிருஷ்ணபிள்ளை கூறுவன யாவை?
4. வீரசோழிய மேற்கோள் புத்தபெருமானை வழிபடும் அழகை விவரி.

**III.** இலக்கணக்குறிப்பு எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| வெண்குழை | உதைத்த | உலகனைத்தும் | யாவரும் |
| கொய்ம்மலர் | பெய்திடாய் | சிலுவைமிசை | ஓங்குநீர் |
| சேவடி | மூவாத | ஒருமனம் | முப்பகை |
| ஓங்குநீர் | நீங்கா | | |

**IV.** பிரித்துப் புணர்ச்சிவிதி தருக.

| | | | |
|---|---|---|---|
| துன்பமில்லை | உலகனைத்தும் | பிணியறியோம் | வெண்குழை |
| முதுசுருதி | சேவடி | மொழிப்பொருளை | |

**V.** பகுபத உறுப்பிலக்கணம் தருக.

| | | | |
|---|---|---|---|
| அஞ்சோம் | காக்க | குறுகினோம் | எய்தி |
| புக்கு | கடந்து | உதைத்த | நீங்கா |

**VI.** பொருத்துக:

| | |
|---|---|
| 1. முதல் மூன்று தேவாரத் திருமுறைகள் | ஆண்டாள் |
| 2. 4,5,6 ஆம் திருமுறைகள் | சுந்தரர் |
| 3. ஏழாம் திருமுறை | திருஞானசம்பந்தர் |
| 4 திருப்பாவை | திருநாவுக்கரசர் |
| | மாணிக்கவாசகர் |



**VII** பொருத்துக

| | |
|---|---|
| 1. கிறித்துவக் கம்பன் | அப்பர் |
| 2. மருள் நீக்கியார் | ஆண்டாள் |
| 3. பெரியாழ்வார் வளர்ப்பு மகள் | புத்தமித்திரர் |
| 4. வீரசோழியம் பாடியவர் | கிருஷ்ண பிள்ளை |
| | திருஞானசம்பந்தர் |

**VIII.** மொழித்திறன் வளர்பயிற்சி:

சொல்விளையாட்டிற் பழகுக.

1. கொய்யாப் பழத்துக்குக் கொம்புண்டு; காலுண்டு;
   கூறும் எருதுக்கோ இரண்டு மில்லை

2. தேங்கா மரத்திலே மாங்காய் பறிக்க வொரு
   சினைமந்தி கொக்கை நோக்கும்

3. ஒருகால் எழுந்தவுடன் இருகால் முடிப்பதற்கு முக்காலைக்
   கொண்டுநான் நாற்காலுக்கு ஏகுகையில் ஐந்துதலை
   நாக மொன்று அஞ்சாமல் கடித்ததடா. (நோய்)

   அதற்குப் பத்துரதன்புத்திரனின் மித்திரனின் சத்துருவின்
   பத்தினியின் கால் வாங்கித்தேய். (மருந்து)

1. கொய்யாப் பழம் – கொ – ஒற்றைக் கொம்பு, துணையெழுத்து
   (கொம்புண்டு, காலுண்டு)
   எருது – இரண்டும் இல்லை

2. தேம் + கா+ மரம் = தேன்ததும்புகின்றசோலைக்குள் இருக்கும் மரம்;
   கொக்கு – மாமரம். சோலையுள் விளங்கும் மாமரத்தில் காய் பறிக்கச் சினை மந்தி மரத்தையே பார்த்து நின்றது.

3. ஒருகால் – சூரியன்; இருகால் – காலைக்கடன்; முக்கால் –கையிற்பிடிக்கும் கோல்; நாற்கால் – தரிசுநிலம்; ஐந்து தலைநாகம் – நெருஞ்சிமுள்; கடித்தது – குத்தியது.

   பத்துரதன் – தசரதன்; புத்திரன் – இராமன்; மித்திரன் – சுக்கிரீவன்; சத்துரு – வா– பத்தினி – தாரை; கால் வாங்குதல் – தாரை என்பதில் உள்ள துணையெழுத்தை நீக்குதல் (தரை)

முடிபு: நெருஞ்சிமுள் குத்தியதா ? தரையிலே தேய்.

—

# உரைநடைப்பகுதி

## *1. கல்வியே அழியாச் செல்வம்*

**- மறைமலையடிகள்**

வெள்ளத்தால்  அழியாது வெந்  தழலால்
வேகாது வேந்த  ராலுங்
கொள்ளத்தான் முடியாது கொடுத்தாலும்
நிறைவன்றிக் குறைவு றாது
கள்ளர்க்கோ பயமில்லை காவலுக்கோ
மிகஎளிது கல்வி யென்னும்
உள்ளத்தே பொருளிருக்கப் புறம்பாகப்
பொருள்தேடி யுழல்கின்  றாரே.

சில நாளில் தோன்றிச் சில நாளி– ருந்து சிலநாளில் மறைந்து போவதாகிய இம் மக்களுடம்பிற் பிறந்தவர்களாக நாம் எந்தவகையான செல்வத்தைப் பெறுதற்கு முயலல் வேண்டுமென்றால்,  என்றும் அழியாததாய், உடம்பு அழிந்தாலுந் தான் அழியாமல் நமது உயிரொடு சேர்ந்து நம்மை எல்லாப் பிறப்புக்களிலுந் தொடர்ந்து வருவதாய் உள்ள அழிவில்லாப் பெருஞ் செல்வத்தையே அடைதற்குக் கண்ணுங் கருத்துமாய் இருக்கவேண்டும். ஏன்? அழியாத செல்வத்தையே பெறவேண்டுமென்னும் விருப்பம் நம்மில் ஒவ்வொருவரிடத்தும் இயற்கையாகவே காணப்படுதலாலும், அவ்விருப்பம் இல்லாதவர்களை எவ்விடத்தும் எக்காலத்துங் காண்டல் கூடாமையானுமென்க. ஒரு திங்கள், இரண்டு திங்களிற்கிழிந்து போகுஞ் சீமைத்துணிகளை வாங்க விரும்புகின்றோமா? பன்னிரண்டு பதினைந்து திங்கள் கிழியாமல் அழுத்தமாயிருக்கும் நாட்டுப் புடவைகளை வாங்க விரும்புகின்றோமா? விலை சிறிது மிகுதியாய் இருந்தாலும் அழுத்தமாய் நீடித்திருக்கும் ஆடைகளையல்லவோ வாங்க ஆவல்கொள்கின்றோம்! சிறிது கைதவறினாலுங் கீழ்விழுந்து நொறுங்கிப் போகும் மட்பாண்டங்களைப் புழங்க விரும்புகின்றோமா? கீழே தவறி விழுந்தாலும் உடையாமல் வலுவாய் உள்ள செப்புக் கலங்கள் பித்தளைக் கலங்களைக் கையாள விரும்புகின்றோமா? விலை ஏறியிருந்தாலும் நீண்ட நாள் பயன்படுஞ் செப்புக்கலங்கள் பித்தளைக் கலங்களை யல்லவோ பொருள் கொடுத்து வாங்க விழைகின்றோம். இங்ஙனமே நாம் நாடோறுங் கையாண்டு வரும் பொருள்களிலுங் கூட விரைவில் அழிந்து போகாமல் நீண்டநாள் நிலைத்திருக்கும் பொருள்களையே நாம் அடைய விரும்புதலால், நம்மில் ஒவ்வொருவருக்கும் அழியாச் செல்வத்தையே பெறவேண்டுமென்னும் அவா இயற்கையாகவே வேரூன்றி நிற்கின்றது.



இங்ஙனம் அழியாச் செல்வத்தையே அடைய வேண்டுமென்னும் அவா நம்மெல்லாரிடத்தும் இயற்கையாக இருந்தாலும், முத்துச்சிப்பியில் உள்ள முத்தின் ஒளியும், பாசி மூடிய பவளத்தின் நிறமும், மாசியில் மறைந்த மதியின் துலக்கமுங், கூடை கவிழ்ந்த விளக்கின் ஒளியும்  போல் நம்மை  மூடிக்கொண்டிருக்கும் அறியாமை என்னும் இருளில் அகப்பட்டவர்களாகி நம் அறிவை இழந்து, அழிந்து போகும் பொருள்களையே நிலையாகப் பிழைபட நினைந்து, அவற்றைப் பெறுவதிலும் அவற்றைநுகர்வதிலுமே நமது காலத்தைக் கழித்து வருகின்றோம் பாருங்கள்!  நம்மவர்களிற் பெரும்பாலார் மாடமாளிகைகளையும் ஆடை அணிகலங்களையுந் தட்டுமுட்டுகளையுந் தின்பண்டங்களையும் நாடகக்காட்சிகளையும் வேடிக்கை விளையாட்டுகளையுமே மேலான செல்வங்களாகக் கருதி அவற்றைப் பெறுவதிலும் அவற்றைநுகர்வதிலும் விடாமுயற்சியுடையவர்களாய் இருக்கக் காண்கின்றோமேயல்லாமற், சிறிது நேரமாயினும் அடக்க ஒடுக்கத்தோடிருந்து நம்மைப்  படைத்த சிவபெருமானை நினைக்கவும், நம்மைப்போலவே அவ்வாண்டவனாற் படைக்கப்பட்ட உயிரிகளின் நன்மையைக் கருதவும், அவை பசியாலும் நோயாலும் வருந்துவதைக் கண்டு மனங்கசிந்து இரங்கித் தம்மால் இயன்றஅளவு அவற்றிற்கு ஒரு கைப்பிடி உணவாவது ஒருகாசு மருந்தாவது உதவி அவற்றின் துன்பத்தைப் போக்கவுந் தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார், ஔவைப் பிராட்டியார், காரைக்கால் அம்மையார், சேக்கிழார் பெருமான் முதலான உயர்ந்த அறிவுடையோரால் அருளிச்செய்யப்பட்டுள்ள அரும்பெரு நூல்களை ஓதி உணரவும் முயற்சி வாய்ந்தவர்களாய் உள்ள ஆண்பெண் பாலாரைக் காண்பது அரிதினும் அரிதாய்ப் போய்விட்டதே!

ஆ ! நாம் நிலையாக நினைந்த மாடமாளிகைகள் ஆடை அணிகலங்கள் தட்டுமுட்டுகள் முதலானவைகள் எல்லாம் நாம் நினைந்தவண்ணம் நிலையாக இருப்பவைதாமா?  இல்லை. இல்லை. சில ஆண்டுகளுக்குமுன் ஐதராப்பாக்கத்திலும் வாணியம்பாடியிலும் நேர்ந்த பெரியதொரு வெள்ளப் பெருக்கினால் எத்தனை வீடுகள் எத்தனை மாளிகைகள் நிலமட்டமாகத் துடைக்கப்பட்டு இருந்த இடமுந் தெரியாமல் அழிந்துபோயின!  அப்போது அங்கே பெருஞ்  செல்வர்களாயிருந்தவர் களெல்லாருந் தம்மால் அருவருத்து ஒதுக்கப்பட்ட ஏழைக் குடிமக்களைக் காட்டிலும் இழிந்தநிலையை அடைந்தவர்களாகி, உண்ணச் சோறும் உடுக்கத் துணியும் இன்றித் தத்தளித்த தெல்லாம் நாம் கேட்டு நெஞ்சம் நெக்குருகி வருந்தினம் அல்லமோ?  ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எட்டாம் ஆண்டில் மேற்குத் திசையில் உள்ள சிறந்த நகரமாகிய மெசினாப் பட்டினமானது நில அதிர்ச்சியினால் அழிந்து நீருக்கும் நெருப்புக்கும் இரையானதும், அப்போது அப்பட்டினத்தி– ருந்த ஐந்தடுக்கு ஆறடுக்கு மாளிகைகளும், அவற்றில் இருந்த அரியபெரிய பண்டங்களும், அவற்றில் இருந்த நூறாயிரக்கணக்கான மாந்தர்களும், அளவற்றசெல்வங்களும் நெருப்பில் வெந்து நீரில் அமிழ்ந்திப்போன வரலாறுகளை யெல்லாம் நினைக்கும்போது, நாம் நிலையாக நினைத்திருக்குஞ்  செல்வங்களுஞ் செல்வங்களென்று காணப்படுமா? அவற்றைமதிக்கும் நமது அறிவும் அறிவென்று சொல்லப்படுமா?

சில நாட்களின் முன் மேற்கேயுள்ள ஐரோப்பாக் கண்டத்தில் நடைபெற்ற வெள்ளைக்காரர் சண்டையினால் விளைந்த அழிவினை, ஐயோ!  என் ஒரு நாவினால் எங்ஙனஞ் சொல்வேன்! எங்கே பார்த்தாலுஞ் செக்கச் செவேலென்ற  செந்நீர்க் களரியும், பிணக்காடும், பீரங்கி வெடியுங் கூக்குரல் ஒ– யுமாய் இருந்தனவே! அத்தேயங்களிலுள்ள பத்துப் பதினைந்து மாடமாளிகைகளுக்குந் தேவகோட்டங்களுக்கும் நமது சென்னபட்டினம் முழுதும் ஈடாக வைத்தாலும் ஈடு அவற்றிற்கு

ஒவ்வாதே.அப்படிப்பட்ட உயர்ந்த கட்டிடங்களெல்லாம் பீரங்கி வெடிகளால் தகர்க்கப்பட்டுப் பாழாய்க் கிடக்கின்றன! எத்தனை அரசர்கள்! எத்தனை செல்வர்கள்! எத்தனை போர்வீரர்கள்! இச்சண்டையில் மாய்ந்து போனார்கள்! நேற்று ஆடை யணிகலன்கள் அணிந்து அறுசுவை யுணவு உண்டு தம்மை மறந்து அகங்களித்திருந்தவர்களெல்லாரும் இன்று அவற்றைமுற்றும் இழந்து மனை யொருபுறம் மக்கள் ஒருபுறமாய்க் கையறுந்து காலறுந்து கதறினரே! ஐயகோ! இச் சண்டையினால் நேர்ந்து வந்த அழிவுகளை அறிந்து வைத்தும், இன்னும் நாம் இவ்வெளி 'ஆரவாரங்களைச் செல்வங்களென்று எண்ணலாமா? இது பற்றியன்றோ,

> தெய்வச் சிதம்பரத் தேவாஉன் சித்தந் திரும்பி விட்டாற்
> பொய்வைத்த சொப்பனமாம் மன்னர் வாழ்வும் புவியு மெங்கே
> மெய்வைத்த செல்வமெங்கே மண்ட லீகர்தம் மேடை யெங்கே
> கைவைத்த நாடக சாலை யெங்கே யிது கண்மயக்கே

என்று பட்டினத்துப் பிள்ளையாரும் அருளிச் செய்தார்.

இங்ஙனம் வெள்ளத்தால் அழிந்துபோவதும் வெந்நெருப்பால் வெந்துபோவதும் அரசர்களாற் கைப்பற்றப்படுவதுங் கொடுக்கக் கொடுக்கக் குறைந்து போவதுங் கள்வர்க்காக நம்மை அஞ்சுவிப்பதும் பாதுகாப்பதற்கு மிகுந்த வருத்தத்தைத் தருவதுமான இச்செல்வம் நம்மால் எந்நேரமும் விரும்பத்தக்கதன்றென்பது இதனால் இனிது விளங்குகின்றதன்றோ? இவ்வாறு சொல்லுதலைக் கொண்டு நாம் செல்வத்தை வேண்டாமல் வறுமைப்பட்டு இந்த மண்ணுலகில் வருந்தியே காலங்கழிக்கவேண்டு மென்று நீங்கள் நினைத்தல் கூடாது. நமது மண்ணுலக வாழ்க்கை இனிது நடப்பதற்கும், பிறஉயிரிகளின் துன்பத்தைப் போக்கும் ஈகை அறங்களைச் செய்வதற்கும், மற்றநல்ல முயற்சிகளைச் செய்வதற்கும் இன்றியமையாது வேண்டப்படும் பொருளைச் சேர்த்து, ஆரவாரம் இல்லாமலும், எல்லாந் தனக்கே என்று எண்ணாமலுந் தனக்கும் பிறர்க்கும் பலவகையால் நல்ல பயன்கள் விளையும்படி அதனைப் பயன்படுத்தல் வேண்டுமென்பதே எனது கருத்தாகும்.

இன்னும், இவ்வழிந்துபோகும் பொருளைப் படைத்தவர்களும் படையாதவர்களுமாகிய எல்லாரும் வெள்ளத்தால் அழியாததாய் வெந்தழலால் வேகாததாய் அரசர்களாலுங் கைப்பற்றப்படாததாய்க் கொடுக்கக் கொடுக்கக் குறையாததாய்க் கள்வர்களுக்காக அஞ்ச வேண்டுவது இல்லாததாய் நமது அறிவினுள்ளே இருத்தலாற் கல்விப் பொருளைப் பெறுதற்கு மிகவும் முயற்சியுடையவர்களாய் இருக்கவேண்டும். இதுபற்றியே வெள்ளத்தால் அழியாது என்னும் அரிய பாட்டு இந்தக் கட்டுரைக்கு முதலாக எடுத்துக் கொள்ளப்பட்டது. செல்வமானது வெளியேயுள்ள பருப்பொருளாதலால் வெள்ளத்தால் அழியும்; வெந்தழலால் வேகும்; கல்வியானது நமது உயிரைப்பற்றி உள்ளேயிருக்கும் நுண்பொருளாகையால் வெள்ளத்தில் அழியாது; வெந்தழ– ல் வேகாது. செல்வமானது பொன் நிலம் வீடு முத– ய பருப்பொருளாயிருத்தலால் அரசர்களாற் கைப்பற்றவும் படும்; கல்வியானது அறிவுருவான நுண்பொரு ளாகையால் அவர்களாற் கவரப்பட மாட்டாது. செல்வமானது பிறர்க்கு எடுத்துக் கொடுக்கக் கொடுக்கக் குறைந்து போகும்; கல்வியானது பிறர்க்கு எடுத்துச் சொல்லச்சொல்ல அளவில்லாமற் பெருகும். செல்வத்தைப் பாதுகாப்பதற்கு அளவு கடந்த முயற்சி வேண்டும்; கல்வியைப் பாதுகாப்பதற்கு அத்தகைய வருத்தம் வேண்டுவதில்லை. இங்ஙனமெல்லாங் கல்வியானது செல்வத்தினுஞ் சிறப்புடைய அழியாச் செல்வமாய் இருத்த– னாலேயே தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார்.



> கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு
> மாடல்ல மற்றையவை.

என்றும், ஔவைப்பிராட்டியார்.

> மன்னனும் மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்
> மன்னனிற் கற்றோன் சிறப்புடையன் – மன்னனுக்குத்
> தன்றேச மல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச்
> சென்றவிட மெல்லாஞ் சிறப்பு

என்றும் அருளிச் செய்தனர்.

ஆனாற் சிலர் கல்வியானது ஆண்மக்களுக்குத்தான் வேண்டுமே யல்லாமற் பெண் மக்களுக்கு வேண்டுவதில்லையென்றும், பழைய நாளில் மாதர்கள் எவருங் கல்வி கற்கவில்லை யென்றும், பெண்கள் கல்விகற்க வேண்டுமென்று நூல்களிற் சொல்லப்படவில்லை யென்றுங் கூறுவார்கள். உயிர்கள் என்றபொதுவகையில் விலங்குகளும் மக்களும் ஒப்பானவர்களே யாவர். உணவு தேடுதல், தேடிய உணவை உண்டல், உறங்கல், இன்புறுதல் என்னுந் தொழில்கள் விலங்குகளுக்கும் உண்டு; ஆனால், மக்கள் விலங்குகளினும் உயர்ந்தவர்கள் என்று சொல்வது ஏன் என்றால், நல்லது இது தீயது இது என்று பகுத்துணர்தலானுந் தம்மைப்போன்றஉயிர்க்கு இரங்கித் தம்மாலான உதவி செய்யதலானுங், கடவுளைத் தொழுதலானும், இங்ஙனமெல்லாந் தமது அறிவை வளரச் செய்தற்குரிய பலநூல்களைக் கற்றலானுமே மக்கள் விலங்குகளினும் உயர்ந்தவராக எண்ணப்படுகின்றனர். இவ்வுயர்ந்த அறிவின் செயல்கள் இல்லையானால் விலங்குகளேயாவர் என்றுங் கல்வியில்லாதவர்களுக்கு நுட்பமான அறிவு சிற்சில நேரங்களிற் காணப்பட்டாலும் அதனை அறிவாகப் பெரியோர்கள் கொள்ளமாட்டார் களென்றுங் கல்வியுடையவர்களே கண்ணுடையவர்கள் ஆவார்கள் அல்லாமல் மற்றவர்கள் முகத்தில் இரண்டு புண்ணுடையவர்களே ஆவார்களென்றும் விளக்குதற்கன்றோ திருவள்ளுவநாயனார்,

> விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
> கற்றாரோ டேனை யவர்

எனவும்

> கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
> புண்ணுடையர் கல்லா தவர்

எனவுந் திருவாய் மலர்ந்தருளினார்.

இங்ஙனம் அறிவான்மிக்க ஆன்றோர், மக்களாய்ப் பிறந்த எல்லார்க்குங் கல்வி இன்றியமையாது வேண்டற்பாலதேயாமென்று கூறியிருக்க, அஃது ஆண்மக்களுக்குத்தான் வேண்டுமே யல்லாமற் பெண் மக்களுக்கு வேண்டுவதில்லை யென்று உரைப்போர் உண்மை அறிந்தாராவரோ சொல்லுமின்கள்! அருமைத் தாய்மார்களே, பெண்பாலார் மக்களினுந் தாழ்ந்த விலங்குகளா யிருந்தாலன்றோ அவர்கட்குக் கல்வி வேண்டாம் என்னலாம்? இவ்வுலக வாழ்க்கையை நன்றாக நடத்தும் முறையில் ஆண்மக்களைக் காட்டிலும் மிகுந்த பொறுமையும் ஆழ்ந்த நுண்ணறிவும் வேண்டிய அவர்கட்குக் கல்வியென்னுந் தூண்டா மணிவிளக்கைத் தராமல் அவர்களை அறியாமை என்னும் பேரிருளிற் போகச் சொல்லுபவர்கள் உண்மை அறிந்தாராவரோ சொன்மின்கள்!

இனி முற்காலத்திருந்த ஔவையார், பூதப் பாண்டியன் பெருந்தேவியார், காரைக்காலம்மையார், மங்கையர்க்கரசியார் முதலான பெண்மணிகளெல்லாருங் கல்வியில் மிகச் சிறந்தவர்களா யிருந்தமை தெரிந்தவர் பழைய நாளிற் பெண்மக்கள் எவருங் கல்வி கற்கவில்லை யென்று கூறுவரோ சொன்மின்கள்!

பெருந்த டங்கட் பிறைநுத லார்க்கெலாம்
பொருந்து செல்வமுங் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க் கீதலும் வைகலும்
விருந்து மன்றி விளைவன யாவையே

என்று கல்வியிற் சிறந்த கம்பர் கூறியிருத்தலால் முற்காலத்தில் இருந்த பெண்மக்கள் எல்லாருங் கல்வியில் வல்லவர்களாய் இருந்தார்களென்பது இனிது விளங்கவில்லையா?

இனி, இங்ஙனமெல்லாம் ஆழ நினைத்துப் பார்க்குங்கால் ஆண் மக்களுக்குக் கல்வி இன்றியமையாததாய் இருத்தல் போலவே, அவர்போல் மக்கட் பிறப்பினரான பெண் மக்கட்குங் கல்வியானது இன்றியமையாத அழிவில் செல்வமாகுமென்பது நன்கு பெறப்படுகின்றது.

இனி, அழியாச் செல்வமாகிய கல்வியைப் பெற்றுக் கொள்வதற்கு நாம் மிகவும் முயன்று வருவதோடு, உயர்ந்த நூல்களைக் கற்று வரும்போதே அந்நூல்களிற் சொல்லப்பட்ட நல்லொழுக்கங்களிலும் நாம் பழகி வருதல் வேண்டும். "கற்றறிவார் கண்டது அடக்கம் அடங்காதார் பொச்சாந்துந் தம்மைப் புகழ்ந்துரைப்பர்" என்றபடி நாம் சிறிதும் பெருமை பாராட்டாமலுஞ் செருக்கு அடையாமலும், பணிந்த சொல்லும் பணிந்த செயலும் உடையமாய், எல்லா உயிர்களிடத்தும் அன்பும் இரக்கமுங்காட்டி, நல்லொழுக்கத்தில் வழுவாது எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளான சிவபெருமானை மனமொழி மெய்களால் நினைந்தும் வாழ்த்தியும் வணங்கியும் உலகவாழ்க்கையை இனிது நடாத்தி நாமும் பயன்பெற்றுப் பிறஉயிர்களையும் பயன் பெறச் செய்து வருதலே நாம் பெற்றஅழியாச் செல்வமாகிய கல்வியைப் பயன்படுத்தும் முறையாகும்.

## பயிற்சி

I. பெருவினா:

1. அழிவில்லாத செல்வத்தைப் பெறவேண்டும் என்பதே மனித இயற்கை என்பதனை மறைமலை யடிகளார் யாங்ஙனம் விரித்துரைக்கிறார்?
2. நாம் நிலையானவையென்று மதிக்கும் செல்வங்கள் அழியத்தக்கவையே என்பதனை மறைமலையடிகளார் எங்ஙனம் காட்டியுள்ளார்?
3. கல்வியே அழியாச் செல்வம் என்பதனை மறைமலைஅடிகளார் எங்ஙனம் எடுத்துரைக்கிறார்?
4. மக்கள் விலங்குகளினும் உயர்வுடையவர்கள் என்பதனை எவ்வாறு காட்டியுள்ளார்?
5. பெண்பாலர்க்கும் கல்வி இன்றியமையாததே என்னும் கருத்தினை மறைமலை அடிகளார் விளக்குவது யாங்ஙனம்?



6. அழியாச் செல்வமாகிய கல்வியைப் பயன்படுத்தும் முறையாக மறைமலையடிகளார் உரைப்பன யாவை?
7. ஐரோப்பாக் கண்டத்தில் நடந்த சண்டையினால் விளைந்த அழிவு குறித்து மறைமலையடிகள் கூறுவன யாவை?

II. நெடுவினா:

1. வெள்ளத்தால் அழியாது என்றபாட–ன் வழியே கல்வியின் சிறப்பை மறைமலையடிகளார் யாங்ஙனம் நிறுவுகின்றார்?
2. பெண் கல்வியை வ–யுறுத்தி அடிகளார் உரைப்பனவற்றைக் கட்டுரையாகத் தொகுத்தெழுதுக.

III. மொழித்திறன் வளர்பயிற்சி:

1. பெண்கல்வியை வ–யுறுத்திய சான்றோர் பலர். தமிழ்த்தென்றல் திரு.வி.க. பாரதியார் பாரதிதாசன் போன்றோர் பாடல்களையும் கட்டுரைகளையும் மேற்கோளாகக் காட்டி இலக்கிய மன்றஅமைப்பின் கீழ்ப் பேசிப் பழகுக.
2. நமது சிற்றூர்ப் புறங்களில் கல்வியின் அருமை உணராது பலர் வாழ்வர். நீவிர் சார்ந்துள்ள நாட்டுநலப்பணித்திட்டம், இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம், சாரண சாரணியர் இயக்கம், முத–ய அமைப்புகளின் கீழ்ப் பேரணி, தொடர் முழக்கம் போன்றசெயல்பாடுகளில் முனைக. முகாம் அமைக்கப்படும் பொழுது, பள்ளிவயதுக் குழந்தைகளைப் பள்ளியிற் சேர்ப்பதும் இடைநிற்றல் இல்லாது பள்ளிக்கல்வியை நிறைவு செய்வதும் நோக்கமாகப் பரப்புரை நிகழ்த்துக.
3. உங்கள் ஊரில் இரவு நேரப்பள்ளி (அ) நிலாப்பள்ளிக் கூடம் அமைக்கப்பட்டிருப்பின் மாணாக்கர்களைச் சேர்ப்பதில் உமது பங்களிப்பினைத் தருக. பயிற்றுநராகவும், ஊக்குநராகவும் கல்விப் பணி செய்க.
4. நூலகத்திற்குச் சென்று உறுப்பினராகுக. பலதுறைகளிலும் அறிவுத்தேட–ல் ஈடுபடுக.

IV. கீழுள்ள தொடர்களிற் காணும் பிழைகளைத் திருத்தியெழுதுக.

1. பேருந்து நிருத்துமிடத்தில் பல்–க்கூடம் இறுக்கிறது
2. இன்றும் நம் நாட்டில் பெறுவாரியான மக்கல் உள்ளார்கலே
3. ஏறிகளில் மலைநீர் சேமித்தாள் கிணருகளில் நீர் வற்றாது
4. ஆளமரத்தின் விளுதினைப் பாம்பென்று குறங்கு அஞ்சியது
5. கொஞ்சம் வென்னி வைத்துத் தந்தால் எண்ணை தேய்த்துக் கொல்வேன்.

V. தேவையான இடங்களில் வல் ன மெய்களை இட்டெழுதுக.

1. நிலவை பிடித்து சில கறைகள் துடைத்து குறுமுறுவல் பதித்த முகம்
2. கொல்லை கிணற்றிலே வெண்ணிலா பந்து

**3.** எள்ளு செடியிலே வெள்ளை பூ பூத்தது.
**4.** பெட்டி கடையிலே வெற்றிலைக்கு சுண்ணாம்பு கேட்டுவா.
**5.** மரகடை பக்கம் போகாதே இழைபுளி தூசி ஒவ்வாது

(இயல்பினும் விதியினும் நின்றஉயிர்முன் கசதப மிகும்;
இரண்டாம் வேற்றுமை விரியிலும் நான்காம் வேற்றுமை விரியிலும் வ– மிகும்.)

# 2. வீரச்சுவை

**- ந.மு.வேங்கடசாமி நாட்டார்**

சுவை என்னும் தமிழ்ச் சொல்லும், ரஸம் என்னும் வட சொல்லும் ஒரே பொருள் உடையன. நாவினால் நுகரப்படும் சுவை ஆறு வகைப்படும் என்பர். செவியால் நுகரப்படுவன குண, அலங்காரங்களாகிய சொற்சுவைகளும், ஒன்பது வகையான பொருட்சுவைகளும் ஆம். நாவாற் சுவைத்து உண்டவை அப்பொழுதே அற்றுவிடும். செவியாற் சுவைத்து உண்டவை உள்ளத்தே எப்பொழுதும் நிலைபெற்று இன்பம் பயக்கும்.

இனிப் பொருட் சுவை ஒன்பதாவன: நகை, அவலம், இழிப்பு வியப்பு, அச்சம், வீரம் வெகுளி, உவகை, சமனிலை என்பன. இச்சுவை யுணர்வுகள் மேற்குறித்த செவி வாயிலாக அன்றிக் கண் வாயிலாகவும் நிகழாநிற்கும்.

பித்தன் ஒருவன் உடல் முழுதும் சாம்பல் பூசிக் கிழிந்த துணிகளையும் சுள்ளிகளையும் தொடுத்து இடையில் உடுத்தி அலரிப்பூவும், எருக்கம்பூவும் கோத்து மார்பில் அணிந்து, அழுதலும், தொழுதலும், விழுதலும் எழுதலும் முத– யன செய்து வருதலைக் காணுமிடத்தும், அவன் ஒன்றோடொன்று இயையாத சொற்கள் பலவற்றைப் பேசுதலைக் கேட்குமிடத்தும் நகை நிகழ்கின்றது. நாடகவரங்கில் ஒருவன் பித்தனாக நடிக்குங்கால் அவனது சொற்களைக் கேட்டலாலும் நகை என்னும் சுவை நிகழும். மற்றும் அவன் இயல்புகளை அமைத்து நல்– சைப் புலவர் ஒருவர் பாடிய பாட்டினைக் கேட்டலாலும் அச் சுவை நிகழும். ஏனைச் சுவைகளும் இவ்வாறேவிழியானும் செவியானும் நுகரப்படுவனவாகும், இவ்விரு பொறிகளாலும் திட்பமுறஉணரும் நுட்பவுணர்வுடையார்க்கன்றி ஏனையோர்க்கு இச்சுவைகள் உணர்தற்கரியன என்று ஆசிரியர் தொல்காப்பியனார் கூறியுள்ளார்.

மேற்குறித்த ஒன்பது சுவையுள் சமனிலையாவது சாந்தம். அதாவது ஐம்பொறியும் அடங்கப்பெற்றுப் பிறர்வையினும் வாழ்த்தினும் வாளாற்போழினும் தாளில் வணங்கினும் மனந்திரியாது அவற்றைச் சமமாகக் கொண்டு நிற்கும் நிலைமை. அது உலகிய– ன் நீங்கினார் பெற்றியாக– ன் ஏனைய எட்டுமே காப்பியங்களிற் பயின்று வருவனவாகும்.

சுவை என்பது மெய்ப்பாடு என்றும் கூறப்படும். மெய்ப்பாடாவது உலகத்தார் உள்ள நிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்தவாறேபுறத்தார்க்குப் புலப்படுவதோராற்றால் வெளிப்படுதல் என்பர் பேராசிரியர். புறத்து வெளிப்படுவது அகத்துணர்வே ஆக– ன் சுவைக்கு மெய்ப்பாடு என்னும் பெயர் பொருந்தியதே. ஏறக்குறைய நாலாயிரம் ஆண்டுகளின் முற்பட்ட தொல்காப்பியத்திலே மெய்ப்பாடு செய்யுளுறுப்புக்களுள் ஒன்றாகக் குறிக்கப்படுவதோடு, தனியாக ஓர் இய– ல் விரித்துரைக்கப் பெற்றும் உள்ளது. வடமொழிவாணர்கள் பிற்காலத்தில் இதனைப் பின்னும் விரித்து உரைக்கலாயினர்.

தொல்காப்பியர் ஒவ்வொரு சுவையும் தோன்றுவதற்கு மூலமான பொருள்கள் நந்நான்கு கூறுகின்றனர். அவர் வீரம் என்பதனைப் பெருமிதம் என்னுஞ் சொல்லாற் குறிக்கின்றனர். யாவரொடும் ஒப்ப நில்லாது மேம்பட்டு நிற்ற– ன் பெருமிதம் என்னும் சொல்லால் வீரம்

குறிக்கப்படுகின்றது. கல்வி, தறுகண், இசை, கொடை என்றநான்கும்பற்றிப் பெருமிதம் பிறக்கும் என அவர் கூறியுள்ளார். எனவே போர்ச் செய–ற் காட்டும் ஆண்மையை மட்டுமே அவர் வீரம் எனக் கொண்டிலர் என்பது பெறப்படும். இந்நான்கினுள்ளும் படை வீரமும், கொடை வீரமும் பழைய இலக்கியங்களிற் பல விடத்து ஒருங்கு கூறப்பட்டுள்ளன.

நலங்கிள்ளி என்றசோழ மன்னன் பகைவருடன் போர் தொடங்குமுன் கூறுகின்றவஞ்சினத்தில்

> மெல்ல வந்தென் நல்லடி பொருந்தி
> ஈயென இரக்குவ ராயின், சீருடை
> முரசுகெழு தாயத்து அரசோ தஞ்சம்
> இன்னுயி ராயினும் கொடுக்குவென்; இந்நிலத்து
> ஆற்றலுடையோர் ஆற்றல் போற்றாதுஎன்
> உள்ளம் எள்ளிய மடவோன் தெள்ளிதின்
> துஞ்சுபு இடறிய சிதடன் போல
> உய்ந்தனன் பெயர்தலோ அரிதே.

என்று இயம்புகின்றனன். இதில் பகைவராயினார் என் அடியின் கீழ் ஒதுங்கி நின்று ஈ என இரப்பராயின் இந்த அரசாட்சியைக் கொடுப்பது பெரிதன்று. □என் உயிரையே வேண்டினும் கொடுப்பேன் என்பது அவனது கொடை வீரத்தையும், என் ஆற்றலையும் துணிவையும் மதியாது இகழ்ந்த அறிவி– யானவன் தூங்கும் பு–யை இடறிய குருடன் போலப் பிழைத்து மீளுதல் அரிது என்பது அவனது படை வீரத்தையும் நன்கு புலப்படுத்துதல் காண்க.

ஒரு காலத்தில் தமிழ்நாட்டு மூவேந்தரும் பாரி என்னும் வள்ள–ன் பறம்பு அரணை முற்றுகையிடத் தொடங்கினர். அப்பொழுது பாரியின் ஆருயிர் நண்பராகிய கபிலர் என்னும் புலவர் பெருமான் அங்கே போந்து அவ்வரசர்களை நோக்கிப் பின்வருமாறு கூறுகின்றார்: வேந்தர்காள் ! நீவிர் மூவிரும் நும் சேனையுடன் ஒருங்கு திரண்டு போர்செய்தீராயினும் பறம்பு நும்மாற் பற்றுதற்கரியது; பறம்புநாடு முந்நூறு ஊர்களை யுடையது. அம் முந்நூறு ஊரினையும் பரிசிலர் பெற்றுவிட்டனர். நீவிர் கூத்தரும் பாணருமாகி ஆடிப்பாடி வரின் எஞ்சியுள்ள பறம்பு மலை நுமக்குப் பரிசிலாக வேண்டினும் மறாது வழங்குவன் அவ்வள்ளல் என்றனர். இதன்கண் பாரியின் படைவீரமும் கொடை வீரமும் ஒன்றின் ஒன்று சிறந்து விளங்குதல் அறியற்பாற்று.

இனி, கொடையேயன்றி இதனைக் கொள்கவென்று ஒருவன் வ–திற் கொடுக்கவும் அதனைக் கொள்ளேன் என்று மறுப்பின் அஃதும் வீரத்தின் பாற்படுவதேயாகும். பழைய சங்கப் புலவர்கள்பால் இத்தகைய பெருமித உணர்ச்சி ததும்பியிருந்தமை அன்னோர் பாட்டுக்களால் அறியக் கிடக்கின்றது.

இனி, படை வீரமாகிய தறுகண்மையைமட்டும் தனித்து நோக்குவோமாக! உலகத்து வேறு எம்மொழியினும் காணப்படாத பொருளிலக்கணம் என்பதொன்று தமிழில் இருத்தலைக் கற்றோர் அறிவர். அவ்விலக்கணம் அகப்பொருள் புறப்பொருள் என இரு பிரிவினையுடையது. பழைய தமிழ்ச் செய்யுட்களெல்லாம் அவற்றிற்கு இலக்கியமேயாகும். அவ்விருவகை இலக்கிய இலக்கணங்களாலும் உணர்த்தப்படுவன அறம் பொருள் இன்பம் வீடு என்னும் உறுதிப் பொருள்களுக்கு ஏதுவாகிய காதலொழுக்கம் வீரவொழுக்கம் ஆம்.



எனவே பெரும்பான்மைபற்றிக் காதலும் வீரமும் தமிழரின் தலை சிறந்த பண்பு என முடிவு கட்டுதல் பொருந்தும். தமிழருடைய படைமாட்சியைக் கூறவந்த திருவள்ளுவர்,

> கூற்றுடன்று மேல்வரினும் கூடி யெதிர்நிற்கும்
> ஆற்றலதுவே படை

என்கின்றார். பகைவரை வெகுண்டு நோக்கிய கண் அவர் வேல்கொண்டு எறியுமிடத்து இமைத்துவிடுமாயினும் வீரர்க்கு அதுவே தோல்வியாகுமாம்!

தன்னைத் தாக்கவருகின்றகளிற்றின்மீது தன் கை வேலை எறிந்து அதன் உயிரைப் போக்கி மேலும் தன்மீது வரும் களிற்றினை எறிதற்கு வேல் நாடித் திரியும் வீரனொருவன் தன் மார்பிலே தைத்துக் கிடந்த வே–னைக் கண்டு அதனைப் பறித்துக்கொண்டு மகிழுகின்றானாம்! என்னே தமிழருடைய ஆண்மை!

தமிழ் மறவர் போரில் புறங் காட்டுவது என்பது எக்காலத்தும் இல்லை. வெண்ணிப் பறந்தலை என்னும் போர்க்களத்தில் சோழன் கரிகாலனோடு போர் புரிந்த பெருஞ்சேரலாதன் என்னும் சேர மன்னன் தன் மார்பிலே தைத்து உருவின புண்ணும் புறப்புண்ணாகும் என நாணி வாளோடு வடக்கிருந்து உயிர் நீத்தான் என்றால், அவனுடைய வீரத்தையும் மானத்தையும் எவ்வாறு அளவிடலாகும்?

முதுகுடிப் பிறந்த மகளிரும் நிகரற்றவீர வாழ்க்கையினராவர். நரம்புகள் மேலெழுந்து தோல் திரைந்த முதியள் ஒருத்தி தன் மகன் போரிலே புறங்கொடுத்தனன் என்று சிலர் கூறக் கேட்டாள். அவளுக்கு உண்டாகிய சினத்திற்கு அளவில்லை. என் மகன் போரிற் புறங்காட்டியது உண்மையாயின் அவன் பாலுண்ட என் அங்கத்தைச் சிதைத்திடுவேன் என்று போர்க்களம் அடைந்தாள்; தான் கைக் கொண்ட வாளினால் அக் களத்தே கிடந்த பிணங்களைப் புரட்டிப் பார்த்து வந்தாள்; தன் மகன், பகைவன் வே–னால் இருகூறாகச் சிதைந்து கிடத்தலைக் கண்டாள் ஆ! அவனைப் பெற்றநாளினும் பேருவகை கொண்டாள்!

மற்றொரு வீர மகள் முதனாட் போரிலும் அதற்கு முன்னாட் போரிலும் தன் கணவனையும், தமயன்மாரையும் இழந்தவள், அன்றும் போர் முரசின் முழக்கங் கேட்டுத் தன் குடிக்கு ஒருவன் போர் செய்யவேண்டுமென விரும்பித் தன் ஒரே மகனை அழைத்துக் குடுமியில் எண்ணெய் நீவி வெள்ளாடை உடுத்தி வே–னைக் கையிற் கொடுத்துச் செருமுகம் நோக்கிச் செல்க என விடுத்தாள்!

புறநானூற்றிலுள்ள இரண்டு செய்யுட்கள் இங்ஙனம் கூறாநின்றன. தமிழ் மக்களின் இணையற்றவீரவுணர்ச்சிக்கு இதனினும் வேறென்ன சான்று வேண்டும்?

தமிழர் இத்தகைய மறத்திறன் உடையராயினும் அறத்துறைவழுவிப் போர் செய்பவரல்லர். இரு பெரு வேந்தர் போர் செய்வது கருதினால் ஒருவர் ஒருவர் நாட்டு வாழும் குருக்கண்மாராகிய அந்தணரும், பெண்டிரும் பிணியுழந்தோரும் மணம் புரிந்து மகப் பெறாதோரும் என்னும் இவர்கட்கும், ஆனினங்கட்கும் ஏதமுண்டாகாவாறு, யாம்போர் தொடங்குதும், ஆக–ன் நீவிர் நுமக்குப் பாதுகாவலாகிய இடத்தை அடைவீராக என்று தெரிவிக்கும் இயல்பினராவர். மற்றும் பொருகளத்திலும் முதற்கண் அடிபிறக்கிட்டோரும், படையிழந்தோரும் முதலாயினாரை அவர் பொருது கொல்வாரல்லர். எனவே, மன்னுயிர் காக்கும்அன்புடை வேந்தர்க்கு மறத்துறையினும் அறமே நிகழும் என்க.

பகைவர்மேற் செய்யும் வன்கண்மையைப் பேராண்மை என்று சொல்வர்; அவர்க்கு ஒரு தாழ்வு வந்ததாயின் அது தீர்த்துக் கொள்ளுதற் பொருட்டுக் கண்ணோட்டமுடன் உதவி செய்தலை அவ்வாண்மைக்குக் கூர்மை என்று சொல்வர் என்னும் பொருளமைத்து வள்ளுவர் கூறிய

பேராண்மை யென்ப தறுகண் ஒன்றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு

– என்னும் செய்யுள் ஈண்டு அறியற்பாலது.

சென்றசென்றபோர்தொறும் வென்றியே புனைந்த அரக்கர் கோமானாகிய இராவணன் இராமனுடன் புரிந்த முதற் போரிலே படைகள் யாவும் பட்டொழிய, குடையும் கொடியும் குற்றொழிய, தேர் அழிந்து முடியொழிந்து வில்லும் அம்பும் இன்றி வெறுங் கையனாய் நாணத்தால் முகம் கவிழ்த்துக் கால்களால் நிலத்தினைக் கீறி நின்றானாக அப்பொழுது அவனது நிலையைக் கண்டிரங்கிய பெருந்தகையாகிய இராமன் அவனை நோக்கி அறத்தினால் அன்றி அதற்கு மாறாகிய மறத்தினால் அமர் வெல்லுதல் அமரர்க்கும் அரிது என்பதனை மனத்தில் உறுதியாகக் கொள்வாய்; உன் ஊரிலுள்ள கிளைஞருடன் சேருமாறு பறந்து செல்வாய்; பாவி! இப்பொழுதே என் – கையால் இறந்திருப்பாய்; நின் தனிமையைக் கண்டு இரங்கி யான் அச்செயலை நினைத்திலேன் உனக்குத் துணையாக அமைந்த சேனைகளும் பிறவும் பெருங் காற்றினால் மோதுண்ட பூளைபோல் ஆயினமை கண்டாயன்றோ? இன்று போய்ப் போர் செய்தற்கு நாளை வருவாய் என அருள் புரிந்தனன் என்னுஞ் செய்தியைக் கம்ப நாடர் தெரிவிக்கும்

அறத்தி னாலன்றி அமரர்க்கும் அரும்பகை கடத்தல்
மறத்தி னாலரி தென்பது மனத்திடை வ த்தி
பறத்தி நின்னெடும் பதிபுகக் கிளையோடும் பாவி
இறத்தி யானது நினைக்கிலன் றனிமைகண் டிரங்கி

ஆளை யா உனக் கமைந்தன மாருதம் அறைந்த
பூளை யாயின கண்டனை இன்றுபோய்ப் போர்க்கு
நாளை வாவென நல்கினன் நாகிளங் கமுகின்
வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல்

– என்னும் செய்யுட்கள் அறிந்து இன்புறற்பாலன.

இனி வீரச்சுவை ததும்பும் சில செய்யுட்களையும் தொடர்களையும் கூறி இவ்வுரையை முடிப்போம். சேரன் செங்குட்டுவனானவன் கண்ணகிக்குச் சிலை கொணர்தற்பொருட்டு வஞ்சி சூடிவடதிசைக்குப் புறப்படத் துணிந்தபொழுது அவன் அமைச்சனாகிய வில்லவன் கோதை கூறுவது.

கங்கைப்பேர் யாற்றுக் கடும்புனல் நீத்தம்
எங்கோ மகளை ஆட்டிய அந்நாள்
ஆரிய மன்னர் ஈரைஞ் ஞூற்றுவர்க்கு
ஒருநீ யாகிய செருவெங் கோலம்
கண்விழித்துக் கண்டது கடுங்கட் கூற்றம்
இமிழ்கடல் வே யைத் தமிழ்நா டாக்கிய
இதுநீ கருதினை யாயின் ஏற்பவர்
முதுநீர் உலகின் முழுவது மில்லை.
என்பது.



தூணினின்றும் வெளிப்பட்ட நரசிங்கப் பெருமான் அவுணர் கூட்டத்தையெல்லாம் இமைப்பளவிற் கொன்று குவித்து நின்று ஆர்த்த நிலைகண்ட பிரகலாதன், இன்னும் உன் உள்ளத்தின் ஒன்றும் உணர்ந்திலை போலும்;ஆழி வேந்தை வணங்குதியாயின் உன் புன்றொழில் பொறுப்பன் என்று கூறா நிற்ப, இரணியன் அவனை நோக்கி,

கேளிது நீயுங் காணக் கிளர்ந்தகோ ளரியின் கேழில்
தோளொடு தாளும் நீக்கி நின்னையும் துணித்துப் பின்னென்
வாளினைத் தொழுவ தல்லால் வணங்குதல் மகளிர் ஊடல்
நாளினும் உளதோ என்னா அண்டங்கள் நடுங்க நக்கான்

கம்பர் வாயால் வெளிப்பட்ட இவ் வீரமொழிகள் தமிழருடைய ஆண்மையின் விளைவு என்பதில் ஐயமில்லை.

இத்தகைய செய்யுட்களைப் பயின்று வீரச்சுவையை நுகர்ந்து பெருமித மெய்துதல் தமிழ் மக்கள் கடனாம்.

## பயிற்சி

**I.** பெருவினா:

1. பொருட்சுவை ஒன்பது யாவை? அவற்றுள் நகை தோன்றும் சூழலை ஆசிரியர் எங்ஙனம் காட்டியுள்ளார்?
2. சுவை என்பதற்கு விளக்கம் யாது?
3. வீரம் என்னும் .சுவை குறித்து ஆசிரியரி கூறியுள்ளன யாவை?
4. நலங்கிள்ளியின் படைவீரத்தையும் கொடை வீரத்தையும் எழுதுக?
5. பாரியின் படை வீரமும் கொடை வீரமும் குறித்து விளக்குக.
6. முதுகுடிப் பிறந்த மகளிருக்கும் வீரவுணர்ச்சி மிகுந்திருந்து என்பதனைச் சான்றுகளுடன் நிறுவுக.
7. பழந்தமிழரின் படைமாட்சி குறித்து ஆசிரியர் எழுதியிருப்பன யாவை?
8. பண்டைத் தமிழரின் போர் நெறியாது? அதனைக் கம்பர் தன் காப்பியத்தில் எங்ஙனம் காட்டியுள்ளார்?

**II.** நெடுவினா:

1. சுவை என்னும் தலைப்பின் கீழ் ஒன்பான் சுவை பற்றியும் மெய்ப்பாடு பற்றியும் ஒரு கட்டுரை வரைக.
2. முதுகுடிப்பிறந்த மகளின் வீரப்பண்பையும் திருக்குறள் காட்டும் தமிழரின் படைமாட்சியையும் போர் நெறிகளையும் விளக்கி கட்டுரையாகத் தருக

**III.** மொழித்திறன் வளர்பயிற்சி:

1. வீரச்சுவைததும்பும் உரையாடல்களைப் பேசி/நடித்து மகிழ்ச்சியூட்டுக. நுமது உரைநடைப் பாடத்தின் கண் வரும் போர்க்களக்காட்சி/ வீரத்தாய் /இவற்றை நாடகமாக வடிவமைத்து நடித்துக்காட்டுக. வீரபாண்டிய கட்ட பொம்மன், தேசிங்குராசன் நாடகங்களில் நுமக்குப் பழக்கமான வீரவுரைகளைப் பேசிக் காட்டுக.

2. கீழ்க்காணும் கவிதைத் தலைப்புகளில் கவிதை எழுதி நண்பர்களோடு சொல் ப் பழகுக.

    1. காப்பகங்கள் – மழலைக்கும் முதுமைக்கும்.
    2. தொட்டில் குழந்தை – பெண் மகவு.
    3. தொழிலாளி – மேசை துடைக்கும் பிள்ளை.

3. தேவையற்றஇடங்களில் வல் ன மெய்களை நீக்கி எழுதுக.

    1. ஔவையேச் சுட்டப்பழம் வேண்டுமா? சுடாதப்பழம் வேண்டுமா? என்று கேட்டான் முருகப் பெருமான்.
    2. ஊறுக்காய் வைத்தால் பழையச்சோறு உள்ளேப் போகாதா?
    3. படிக்காதப் பெண்ணினால் தீமை ! என்னப் பயன் விளைப்பாள் அந்த ஆமை.
    4. இரவுப் பகல் பாராதுப் படித்தும் தேர்ச்சிப் பெறவில்லையே.
    5. சென்னைச் சென்றுத் திரும்ப எவ்வளவுச் செலவாகும்?

    (வினைத்தொகை, உம்மைத்தொகை பெயரெச்சம் இவற்றில் வ– மிகாது)

4. ஆங்கிலச் சொற்களை நீக்கித் தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தி எழுதுக.

    1. ஸ்கூல் விட்டதும் டீச்சர் லைனில் போகச் சொன்னார்கள்
    2. முதல் அட்டெம்ப்ட் பாஸ் என்றால் சக்ஸஸ்தான்.
    3. இந்த பொக்கே கொடுத்து ரிசீவ் பண்ணிவா.
    4. டாக்டரின் அட்வைஸ்படி காரம் சேர்க்கக் கூடாது.
    5. ரெயின் வாட்டர் ஹார்வெஸ்ட் பற்றி எல்லார்க்கும் சொல்வோம்.

5. தேவையற்றஇடங்களிலுள்ள வல் ன மெய்களை நீக்கி எழுதுக

    1. கண்ணாக் கண்ணா இங்கே வந்துப்பார் என்று அழைத்தாள் செல்வி.
    2. படிக்கும்படிச் சொன்னால் கண்டுக் கொள்ளாமல் இருப்பதா?



    3. முடிக்கெழு வேந்தர் மூவருக்கும் உரியது. நீவிரேப்பாடி யருளுக என்று வேண்டிக் கொண்டார் சாத்தனார்.
    4. அழுதக் கண்ணும் விரித்தக் குழலும் புழுதிப் படிந்த உடலுமாகக் கண்ணகி நீதிக் கேட்டாள்.
    5. இராமனதுச் சேவையில் அமர்ப்புரிந்து இறக்கவும் ஒருப்படாதத் தனதுக் குறையை நினைந்து சுக்கிரீவன் வருந்தினான்.
    6. பலப்பலவென்றுப் பொழுது விடிந்தது.

(இரண்டாம் வேற்றுமைத் தொகையில வ– மிகாது, விளி வேற்றுமை, ஆறாம் வேற்றுமைவிரி, வினையெச்சங்கள் சில, இரட்டைக்கிளவி, பெயரெச்சத் தொடர்கள் ஆகியவற்றில் வ– மிகா)

6, பிறமொழிச் சொற்களை நீக்கித் தமிழ்ச் சொற்களையிட்டு எழுதுக.

    1. நாளை ரதோத்ஸவம் ஆதலால் ஸகல காரியாலயங்களுக்கும் விடுமுறை அறிவிக்கப்படுகிறது.
    2. நாளை திருவோண நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் விவாஹ சுப முகூர்த்தம்.
    3. தாங்கள் பந்து மித்திரர்களுடன் வந்திருந்து வது–வரர்களை ஆசீர்வாதிக்க வேண்டுகிறோம்.
    4 நீதான் என் அத்யந்த ஸ்னேகிதன் என்று கூறிச் சந்தோஷித்தான்.

# 3. காளத்திவேடனும் கங்கைவேடனும்

– ரா.பி.சேதுப்பிள்ளை

தமிழ்நாட்டுக் காளத்தி மலையிலே தோன்றினான் ஒரு வேடன். வடநாட்டுக் கங்கைக் கரையிலே பிறந்தான் மற்றொரு வேடன். அவ்விருவராலும் வேடர் குலம்பெருமையுற்றது. காளத்தி வேடனைக் கண்ணப்பன் என்றும், கங்கை வேடனைக் குகன் என்றும் இலக்கிய உலகம் போற்றும். இருவரும் உயரிய அன்பு நெறியைக் கடைப்பிடித்து அழியாப் புகழ் பெற்றனர்.

காளத்திநாதன்பால் வைத்த அன்பினால் தன் கண்ணையும் பெயர்த்தெடுத்த கண்ணப்பன் பெருமை தமிழ்நாடெங்கும் பரவிநின்றது. எல்லையற்றஅன்பிற்கு அவ்வேடர் பெருமானே எடுத்துக்காட்டாயினார்.

கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்னொப்பில் என்னையும் ஆட் கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வாவென்றவான்கருணைச்
சுண்ணப் பொன்னீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ.

என்று வண்டை நோக்கிப் பாடும் பான்மையில் கண்ணப்பனது எல்லையற்றஅன்பின் திறத்தினை மாணிக்கவாசகர் நன்கு விளக்கியுள்ளார். திருவாசகத்திலும் தேவாரத் திருப்பாசுரங்களிலும் கண்ணப்பன் பெருமை பேசப்படுதலால் சைவ சமயத்தை நிலை நிறுத்திய நால்வருக்கும் அவன் முந்தியவன் என்பது நன்கு விளங்குகின்றது. காளத்தி நாதனை வணங்கிய திருஞானசம்பந்தர் கும்பிட்ட பயன் காண்பார் போல் வேடர் பெருமானாகிய கண்ணப்பனைக் கை தொழுதாரென்று சேக்கிழார் அழகாக எழுதிப் போந்தார்.

கவிக்கு நாயகராகிய கம்பர் இராம காதையை வடமொழிக் காவியத்தினின்றும் எடுத்துக்கொண்டாரேனும் அதனைத் தமிழ் நாட்டாருக்கு ஏற்றமுறையில் புதுக்கி இனியதொரு விருந்தாக அளித்துள்ளார். இராமனிடம் அன்பு பூண்ட கங்கை வேடனை உருவாக்கும் பொழுது, கம்பர் உள்ளத்தில் காளத்தி வேடன் வடிவம் கனிந்து இலங்கிற்று. காளத்தி வேடனைக் கருவாகக் கொண்டு கங்கை வேடனாய குகனை அவர் வார்த்து வடித்துள்ளாரென்று தோற்றுகின்றது. இதற்கு இரண்டொரு சான்றுகள் காட்டுவேன்.

கோசல நாட்டு இளவரசனாகிய இராமன், தாயின்சொல்லைத் தலைக்கொண்டு தனக்குரிய நாடு துறந்து கங்கைக் கரையை வந்தடைந்தான் என்று அறிந்த குகன், அக்குரிசிலைக் காணப் புறப்பட்டான். வான்மிக முனிவர் எழுதிய வடமொழிக் காவியத்தில் குகன் இராமனைக் காணப் புறப்படும் கோலம், ஓர் அரசன் மற்றோர் அரசனைக் காண எழுகின்றதன்மையில் அமைந்திருக்கின்றது. ஆனால் கம்பர், ஆண்டவனைக் காணச் செல்லும் அடியவனாகக் குகன் கோலத்தைத் திருத்தி அமைத்துள்ளார்.



"தேவா நின்கழல் சேவிக்க வந்தனென்

நாவாய் வேட்டுவன் நாயடியேன்"

என்று குகனே கூறுதலால் இவ்வுண்மை விளங்கும்.

காளத்தி வேடன் தனக்கினிய இறைச்சியே தன் தலைவனாகிய இறைவனுக்கும் இனியதாகும் என்று அதனை எடுத்து ஊட்டியவாறேகுகன் தனக்கினிய கங்கையாற்று மீனையும் கொம்புத் தேனையுமே எடுத்துக் கொண்டு சென்றான். அவ்விரண்டையும் இராமன் திருமுன்பு வைத்து, ஐயனே! தேனும் மீனும் திருத்திக் கொணர்ந்தேன். தேவரீர் திருவமுது செய்தருள வேண்டும் என்று இறைஞ்சி நின்றான். அச்செயல் நிகழும் போது இராமனுடன் விருத்த மாதவர் சிலர் உரையாடிக்கொண்டிருந்தனர். அவர்கள் குகனது மனப்பான்மையை அறியாதவராய், தகாத பொருள்களை வேடன் எடுத்து வந்து அபசாரம் செய்து விட்டான் என்றெண்ணி வெறித்து நோக்கினர். அவர்கள் மனத்தில் நிகழ்ந்த கருத்தினை அறிந்த இராமன்,

அரியதாம் உவப்ப உள்ளத்து அன்பினால் அமைந்த காதல்
தெரிதரக் கொணர்ந்த என்றால் அமுதினும் சீர்த்த வன்றே

என்று விருத்த மாதவரைத் தெருட்டி யருளினான். இதற்கு நேரான செயல் கண்ணப்பன் சரித்திரத்தில் உண்டு. கண்ணப்பனுக்கு இனிய காளத்திநாதனைச் சிவகோசரியார் என்னும் வேதியர் முறைப்படி பூசனை செய்து வந்தார்; கண்ணப்பன் இறைச்சியைக் கொண்டு திருக்கோயி– ல் இட்டதைக் கண்டு செய்வதொன்றறியாது கவலைகொண்டிருந்தார். அதை உணர்ந்த இறைவன் அவர் கனவிலே தோன்றி,

அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பென்றும்
அவனுடைய அறிவெல்லாம் நமையறியும் அறிவென்றும்
அவனுடைய செயலெல்லாம் நமக்கினிய வாமென்றும்
அவனுடைய நிலையிவ்வாறறி நீயென் றருள்செய்வார்

இதுசேக்கிழார் பெருமான் திருவாக்கு.

காளத்திநாதன்பால் அன்பு பூண்ட கண்ணப்பனைப் போலவே குகனும் இராமனைப் பிரிந்திருக்கலாற்றாத மனப்பான்மை பெற்றான். அந்தி மாலை வந்தடைந்தபொழுது இராமன் குகனை நோக்கி, "அப்பா! இன்றிரவு உன் ஊருக்குச் சென்று நாளைக் காலையில் கங்கை யாற்றைக் கடப்பதற்குப் படகுகள் கொண்டு வருக" என்று சொல்– ய பொழுது குகனுடைய மனம் அன– டைப்பட்ட மெழுகு போல் உருகுவதாயிற்று. என் ஐயன், என் ஆண்டவன், என்னைப் போ என்றானே! அவனை விட்டு நான் எவ்வாறுபோவேன்? அவனுடனிருத்தலே எனக்குப் பேரின்பம். அவனைப் பிரிந்திருந்தால் பெருந்துன்பம் என்று எண்ணி இராமனை நோக்கி, "ஐயனே! நான் போகலாற்றேன்; ஈண்டிருந்து என்னால் இயன்றதொண்டு செய்வேன்," என்றான்.

கார்குலாம் நிறத்தான் கூறக்
காதலன் உணர்த்து வான்இப்
பார்குலாம் செல்வ நின்னை
இங்ஙனம் பார்த்த கண்ணை

ஈர்கிலாக் கள்வ னேன்யான்
இன்ன– ன் இருக்கை நோக்கித்
தீர்கிலேன் ஆன தைய
செய்குவன் அடிமை என்றான்.

என்று குகன் பெருமையை அறிவிக்கும் கம்பர் பாட்டு மிக்க அழகு வாய்ந்ததாகும்.

"என் பெருமானே! அயோத்தி மாநகரில் அரியாசனத்தில் மன்னர் மன்னனாய் மணிமுடி தரித்துச் செங்கோலேந்தி அரசாளும் கோலத்தில் காண வேண்டிய உன்னைச் சடை முடியும் மரவுரியும் தரித்துக் கானகப் புல்– ல் அமர்ந்திருக்கக் கண்டேனே! என் கண் செய்த பாவம் கட– னும் பெரிதன்றோ? இந்தக் கோலத்தில் உன்னைக் கண்ட என் கண்களைப் பறித்தெறியாத பாவியேன் நான். ஆயினும், ஐயனே! உன்னை விட்டுப் போக என்னால் இயலாது; என்னா– யன்றசிறுதொண்டு செய்து கொண்டு ஈண்டுத்தான் இருப்பேன்" என்று மனங்கசிந்து பேசினான். கங்கை வேடன் பேசிய வாசகத்தின் சுவையை அறிந்த இராமன்,

சீதையை நோக்கித் தம்பி
திருமுகம் நோக்கித் தீராக்
காதலன் ஆகும் என்று
கருணையின் மலர்ந்த கண்ணன்
யாதினும் இனிய நண்ப
இருத்திஈண்டு எம்மோ டென்றான்

யாதினும் இனிய நண்ப என்று அழைத்தமையால் குகன் இராமனுக்குப் பொன்னினும் இனியன் ஆனான்; புகழினும் இனியன் ஆனான்; மற்றெதனினும் இனியன் ஆனான் என்பது வெளிப்படையாக விளங்குகின்றது. இங்ஙனம் ஆட்கொள்ளப்பட்ட குகன் அகமும் முகமும் மலர்ந்தான். அன்றிரவு நாணற் பாய– ல் இராமனும் சீதையும் படுத்துறங்க, இலக்குவன் வில்லை யூன்றிய கையோடு அவ்விருவரையும் காத்து நிற்க, அன்பு வடிவாய குகன் முறையாக மூவரையும் காத்து நின்றான். இரவு முழுவதும் கண்ணிமையாது காவல் செய்த குகன், இன்பப்பணியிலே ஈடுபட்டான். காளத்தி நாதனை இராப்பொழுதில் கண்ணிமையாது காத்து நின்றகண்ணப்பனைப் போலவே இராமனைக் காத்துநின்றான் குகனும்.

இன்னும் காளத்தி வேடனது அன்பிற்கும் கங்கை வேடனது அன்பிற்கும் ஒரு சிறந்த ஒற்றுமையுண்டு. இருவரும் இறைவனிடம் பயன் கருதாப் பக்தி பூண்டவர்கள்; கூடும் அன்பினில் கும்பிடுதல் தம் கடன் என்று கொண்டவர்கள். இத்தகைய பக்தியே சாலச்சிறந்தது என்று சான்றோர் கூறுவர். இராமன், நாடு துறந்து காடு புகுந்தபின்னர் அவன்பால் அன்பு கொண்டவர் மூவர். கங்கைக் கரையிலே குகன் இராமனைச் சேர்ந்தான்; கிஷ்கிந்தையில் சுக்ரீவன் வந்து சேர்ந்தான்; இலங்கையில் விபீஷணன் வந்து அடைந்தான். தன்னை வந்தடைந்த மூவரையும் தன்னுடைய குடும்பத்திலே சேர்த்துக் கொண்டான் இராமன். எனினும் சுக்ரீவன் இராமனிடம் அன்பு பூண்டதற்குக் கைம்மாறாகக் கிஷ்கிந்தை அரசைப் பெற்றான். விபீஷணன் இராமனைச் சரணடைந்து இலங்கையரசைப் பெற்றான். குகன் ஒருவனே பக்திக்காகப் பக்தி செய்து கைம்மாறு கருதாத அன்பின் நீர்மையை நன்கு விளக்கிக்காட்டினான்.



இவ்வாறு கனிந்த அன்பு வாய்ந்த காளத்தி வேடனையும், கங்கை வேடனையும் குறிக்கோளாகக் கொண்டு இறைவனை நினைந்துருகிய அன்பர், நிலை பேறடையக் கருதிய ஆன்றோர் இவ்விரு அடியாரது அன்பின் பெருமையை நினைத்து எற்றேஇவர்க்கு நாம்! என்று உள்ளம் உருகினர்.

முற்றத் துறந்த பட்டினத்தடிகள் என்று தமிழகம் போற்றிப் புகழும் பெரியார், கண்ணப்பனது அருஞ்செயலை நினைந்து கரைந்து உருகுவாராயினர். காளத்தி மலையிலமர்ந்த ஈசனுக்கு ஆளாகக் கருதிய அடிகள்,

"வாளால் மகவரிந்து ஊட்டவல் லேனல்லேன் மாது சொன்ன
சூளால் இளமை துறக்கவல் லேன் அல்லேன் தொண்டு செய்து
நாளாறில் கண்ணிடந்து அப்பவல் லேனல்லேன் நான் இனிச்சென்று
ஆளாவ தெப்படி யோதிருக் காளத்தி அப்பருக்கே"

என்று அகம் குழைந்தார். ஐயோ! பெற்றபிள்ளையை வாளாலரிந்து இறைவனுக்கு இன்னமுதூட்ட வல்லேனா? திருநீலகண்டன் போல் மனையாள், வைத்த ஆணை கடவாது இளமையிலேயே ஐம்பொறிகளையும் வென்று, இன்பம் துறக்க வல்லேனா? ஆறு நாள் பழகிய பான்மையில் ஆராத அன்பு வாய்ந்து கண்ணைப் பறித்து, இறைவன் கண்களில் அப்ப வல்லேனா? இத்தகைய பொக்கனாகிய யானும், மெய்யடியார்போல் நடித்து, வீடகத்தே புகுந்திட விழைகின்றேன் என்று உள்ளத் துறவமைந்த உயரிய அடிகள் உருகுவாராயினர். கடந்தோர்க்கும் கடத்தலரிதாய மக்கட் பாசம் நீத்தஒரு தொண்டர், பெரிய சிறுத் தொண்டராய்ப் பேறு பெற்றார். மனையாள் மீது வைத்த பாசம் துறந்த மற்றொரு தொண்டர் இறைவனது அன்பிற்குரியராயினார். கண்ணிற் சிறந்த உறுப்பில்லை என்றறிந்தும், ஈசன்பால் வைத்த அன்பினால், இரு கண்களையும் ஈத்தளிக்க இசைந்த ஒரு தொண்டர் மாறிலா இன்பத்தில் மகிழ்ந்தார். இவ்வாறு அகம் புறமென்னும் இருவகைப் பற்றையும் அறவே களைந்து, இறைவன்பால் அன்பை வளர்த்த அடியாரது நிலையை நினைந்து பட்டினத்தடிகள் உருகும் பான்மை அறிந்து போற்றத் தக்கதாகும்.

காளத்தி வேடனைக் குறிக்கோளாகக் கொண்டு அடிகள் கரைந்துருகியவாறே, கங்கை வேடனை இலக்காகக் கொண்டு, வானர வேந்தனான சுக்ரீவன் வாடி வருந்தினான். இருமையும் தரும் பெருமானாகிய இராமனிடம் எப் பயனையும் கருதாது விழுமிய அன்பு பூண்ட வேடனது பெருமையையும் தனது சிறுமையையும் நினைத்துச் சுக்ரீவன் சிந்தை தளர்ந்தான். வானரசேனை இலங்கை மாநகர்ப்புறம் எய்தியபோது, அப் படையின் திறன் அறியுமாறு தன் நகரில் நின்று நோக்கிய இலங்கை வேந்தனைக் கண்டான் வானர மன்னன். அவன் உள்ளத்தில் சீற்றம் பொங்கி எழுந்தது பஞ்சின் மெல்லடிப் பாவையாகிய சீதையை வஞ்சனையாற் கவர்ந்து, சிறைவைத்த அரக்கர்கோனைக் கொன்று பழி தீர்க்கக் கருதி அவன் மீது பாய்ந்தான். வீரராகிய இருவரும் நெடும் பொழுது கடும் போர் விளைத்தார்கள். இலங்கை நாதனது அளவிறந்த வ– மையை அறிந்த வானரத் தலைவன் அவனை வெல்ல இயலாது அவன் தலை மீதிருந்த மணி முடியைக் கவர்ந்து மீண்டும் இராமனது பாசறையில் வந்தடைந்தான். காலனுக்கும் காலனா யமைந்த அரக்கன் கையினின்றும் தப்பி வந்தவானர வீரனைக் கண்டு இராமன் களி கூர்ந்தான். அந் நிலையில் அன்பினால் அகங் குழைந்த வானர மன்னன், ஐயனை நோக்கி

'காட்டிலே கழுகின் வேந்தன்
செய்தது காட்ட மாட்டேன்
நாட்டிலே குகனார் செய்த
நன்மையை நயக்க மாட்டேன்
கேட்டிலேன் அல்லேன் இன்று
கண்டும் அக் கிளியன் னாளை
மீட்டிலேன் தலைகள் பத்தும்
கொணர்ந்திலேன் வெறுங்கை வந்தேன்'

என்று மனம் வருந்தி மொழிந்தான். அந்தோ! காட்டில் வாழும் கழுகின் வேந்தனும், நாட்டில் வாழும் நல் வேடனும், காட்டிய அன்பை நான் காட்ட இயலாதவ னாயினேன். இலங்கை மாநகரில் சிறையிருந்த சோகத்தாளாய நங்கையை இங்கே கொண்டு வர வ– யற்று வெறுமையாகக் கண்டு வந்தேனே! நல்லார்க்கு இடர் விளைக்கும் அரக்கனை எதிர்த்தும், அவன் சிரங்களைக் கொய்து கொணராது வெறுங் கையனாய் வந்தேனே என்று வானர மன்னன் வருந்தினான்.

காட்டிலே கழுகின் வேந்தன் ஆற்றிய கடமையையும் நாட்டிலே கங்கை வேடன் ஆற்றிய நன்மையையும் அறிவோமாயின், வானர வீரனது சொல்– ன் பொருள் இனிது விளங்கும். கானகத்தில் தனியளாய் இருந்த தையலை இலங்கை வேந்தன் வஞ்சனை யாற் கவர்ந்து மனோ வேகமாகச் செல்லும் பொழுது, ஆதரவற்று அரற்றிய மங்கையின் அழுகுரல் கேட்டுக் கழுகின் காவலன் காற்றினுங் கடுகி வந்தான்; அறநெறி தவறிய அரக்கனுடன் நெடும்பொழுது கடும்போர் புரிந்து ஆவி துறந்தான். இவ்வாறு ஆதரவற்றசீதைக்காக அறப்போர் புரிந்து ஆவி நீத்த கழுகின் வேந்தன், தெய்வ மரணம் எய்தினான் என்று இராமன் போற்றிப் புகழ்ந்தான். "தன்னுயிர் புகழ்க்கு விற்றசடாயு" என்று சொல்– ன் செல்வனாய அனுமன் புகழ்ந்துரைத்தான். அரன் அளித்த வாளுடையானை வெறும் அலகுடையான் வெல்லுதல் இயலாதென்றறிந்தும், அறநெறி திறம்பிய அரக்கனோடு பொருது ஆவி துறத்தலே தன் கடமை என்று அறிந்து கழுகின் வேந்தன் உயிர் கொடுத்துப் புகழ் கொண்டான். இவ்வாறு இராமனது சேவையில் அமர் புரிந்து இறக்கவும் ஒருப்படாத தனது குறையை நினைந்து வானர வீரன் வருந்தினான்.

இனிக் கங்கைக் கரையின் காவலனாகிய குகன் பரதனது பரந்த சேனையைக் கண்டபோது, அவன் இராமனை வெல்லக் கருதி வந்தான் என்று எண்ணித் தன்னுயிரையும் ஒரு பொருளாகக் கருதாது போர்க் கோலம் புனைந்து

ஆழநெ டுந்திரை யாறுக டந்திவர் போவாரோ
வேழ நெடும்படை கண்டுவி லங்கிடும் வில்லாளோ
தோழமை என்றவர் சொல்– ய சொல்லொரு சொல்லன்றோ
ஏழமை வேடன்இ றந்திலன் என்றெனை ஏசாரோ

என்று வீரமொழி பகர்ந்து தன் தோழனுக்காக உயிரையும் கொடுக்க இசைந்து நின்றான். "என் காவ– ல் அமைந்த கங்கை யாற்றைக் கடந்து இவர் போவாரோ? தோழன் என்று நாயகன் உரைத்த சொல் ஒரு சொல்லன்றோ? நன்றி மறவாத நாய் போல் தலைவனது ஆணைக்கடங்கிக் காவல் புரியும் ஏழையேன், அமர்க்களத்தில் இறந்த பின்னன்றோ பரதன் இராமனைப் பார்க்க வேண்டும்" என்று குகன் கூறிய மொழிகளில் தலையாய



அன்பு தழைத்திலங்கக் காணலாம். இவ்வாறு குகனைப் போல் உயிர் கொடுக்கத் துணியவும் இயலாத தனது சிறுமையை நினைத்துச் சுக்ரீவன் வருந்தினான்.

ஆகவே காளத்தி வேடனும் கங்கை வேடனும் அன்பு நெறியில் ஒப்பா ரின்றி உயர்வுற்று ஏனை அன்பர்க்கு ஒரு கலங்கரை விளக்கமாக அமைந்திலங்கும் தன்மை இனிது விளங்கும்.

### பயிற்சி.

**I.** பெருவினா:

1. காளத்தி வேடனாகிய கண்ணப்பன் பெருமையை மணிவாசகர் எவ்வாறு பாடுகிறார்?
2. கங்கை வேடனும் காளத்தி வேடனும் இறைவனுக்கு அளித்த காணிக்கைகளை விளக்குக.
3. கண்ணப்பனைப் போலவே குகனும் இராமனைப் பிரிதலாற்றாதவன் என்பதை விளக்குக.
4. பட்டினத்தடிகள் போற்றிய மூவர் யாவர்? அவர்தம் அருஞ் செயல்கள் யாவை?
5. வானர வேந்தனாகிய சுக்கிரீவன் அகங்குழைந்து பாராட்டும் இருவர் யாவர்? அவர்தம் செயல்கள் யாவை?
6. இராமனை வெல்லக் கருதிப் படை கொண்டு வந்ததாகக் கருதிய கங்கை வேடனின் வீரமொழிகள் யாவை?
7. கைம்மாறு கருதாத அன்பில் கங்கை வேடனும் காளத்தி வேடனும் தலை நின்றமை யாங்ஙனம்?

**II.** நெடுவினா:

1. உயரிய அன்பு நெறியைக் கடைப்பிடித்து அழியாப் புகழ் பெற்றனர் காளத்தி வேடனும் கங்கை வேடனும் என்பதனை விளக்கிக் கட்டுரை ஒன்று எழுதுக.

**III.** மொழித்திறன் வளர்பயிற்சி:

1. கண்ணப்பனும் குகனும்போல இறையன்பிலே தலைநின்றபெருமக்கள் வரலாறுகளைத் திரட்டுக. பிறசமயச் சான்றோர்பலரும் இவ்வண்ணமே அன்பு நெறி நின்றவர்கள் என்பதனை நூல்கள் வாயிலாக அறிந்து மகிழ்க. அங்ஙனந் திரட்டிய சமய நல்– ணக்கச் செய்திகளை நண்பர்களோடு பகிர்ந்து கொள்ளுக.
2. மரபுப் பிழைகளை அறிந்து நீக்குக.
    1. தென்னை இலையால் கீற்றுப் பின்னுவார்கள்.
    2. அம்பு வீசி மான்குட்டியைக் காயப்படுத்தினான்.
    3. தோட்டத்தில் உள்ள வாழைச் செடி பார்க்க அழகாக உள்ளது.
    4. பனந்தோட்டத்தில் ஆந்தை அகவுவது கேள்.
    5. கஞ்சி சாப்பிட்டால் காய்ச்சலுக்கு நல்லது.

**3.** ல – ள – ழ ஒ– வேறுபாடறிந்து ஒ– க்க; பொருள் வேறுபாடு உணர்ந்து பயன் படுத்துக.

| | | |
|---|---|---|
| அலகு | – | பறவையின் மூக்கு |
| அளகு | – | பெண் மயில் |
| அழகு | – | கவின், வனப்பு, எழில் |
| அலை | – | கடல் அலை |
| அளை | – | புற்று |
| அழை | – | கூப்பிடு |
| இலை | – | மரம், செடி, கொடிகளின் இலை |
| இளை | – | (உடல்) இளைத்தல் |
| இழை | – | நூல் |
| கலை | – | கவின் கலைகள் |
| களை | – | நீக்கு, பயிர்க்களை |
| கழை | – | மூங்கில் |
| தலை | – | ஓர் உறுப்பு |
| தளை | – | விலங்கு |
| தழை | – | தழைத்தல் |
| வ– | – | வ– மை, வ– த்தல் |
| வளி | – | காற்று |
| வழி | – | பாதை |

# 4. குடிமக்கள் காப்பியம்

**– தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்**

நாற்பது ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த என் இளமை வாழ்க்கை, நினைக்க நினைக்க இனிக்கின்றது. இளமையில் கேட்ட கதைகளை நினைத்தாலும் இன்பம் அன்றோ பொங்குகிறது? மின்சார விளக்குகள் வருவதற்கு முன் மினுக்குமினுக்கு என மின்னும் பூச்சிகளோடு தெரு விளக்குகள் போட்டியிடும் காலம் அஃது. அதிலும் ஓர் அழகு; ஓர் இன்பம். பொழுது சாய்ந்ததும் ஊர் அடங்கி விடும். ஒருமௌனம் – எங்கும் நிறைந்த பெருமௌனம் ஒன்றே, அமைதி பொங்கும் இரவில் இன்பக் கூத்தாடும். மாலை ஆறுமணிக்கெல்லாம் சோறு முடிந்துவிடும். நடுவில் அடுத்துள்ள சாரக்காற்றில் குழந்தைகள் எல்லாம் கூடிவிடுவோம். எங்கள் வீட்டில் பழைய வேலையாளைச் சுற்றி, "நாயனா! நாயனா! ஒரு கதை! ஒரு கதை!" என்று அன்பு கனியக் கூறிச் சூழ்ந்து கொள்வோம். கதை உலகிற் புகுந்து நகையாடுவோம். இருட்டினை மறப்போம்; வீட்டினை மறப்போம்; இந்த உலகினையே மறப்போம். அரசனும் அரசியும், வீரரும் சூரரும், பொன்னும் மணியும், அழகும் கடவுளும், பேசும் விலங்குகளும் பாடும் மரங்களும் எங்களைச் சுற்றிச் சுற்றி வர, அந்தச் சித்தருலகில் யாங்களும் ஒருவராய் வாழ்வோம். எப்போதும், ஓர் ஊரில் ஓர் அரசர் இருந்தார் என்றேஅந்த வேலையாள் கதை கூறத் தொடங்குவது வழக்கம். ஆம், அரசர் தவிர வேறெவரும் மனத்து எதிர் வரக்காணோம். என்ன என்ன கதைகள் என இப்போது எண்ணிப் பார்க்கிறேன்: விக்கிரமாதித்தன் கதை; மதனகாமராசன் கதை; திருவிளையாடல்கள்; நளன் கதை; அரிச்சந்திரன் கதை; துரியோதனன் கதை;இராமர் கதை;எல்லாம் முடிமக்கள் கதைகளே. குடிமக்கள் கதை ஒன்றும் கேட்டதாக நினைவுக்கு வரவில்லை. குடிமக்களைப் பற்றி எண்ணுவதற்கே இடம் இல்லாமல் போய்விட்டது. இன்று நினைத்தால் பெரிய வியப்பாகத் தோன்றுகிறது.

பின்னர்ப் பள்ளியிலும் கல்லூரியிலும் கற்றும் கேட்டும் வந்த கதைகளும் முடிமக்கள் கதைகள் அல்லவா? இராமாயணம், பாரதம், அரிச்சந்திர புராணம், நளவெண்பா, நைடதம் என்பவையே எப்போதும் பாடமாக வரும். ஆங்கிலத்தில் ஷேக்ஸ்பியர் நாடகங்கள் என்றால் அரசர்களைப் பற்றிய நாடகங்களே பாடமாக வரும். வரலாறு என்றாலும் அரசர்கள் வரலாறன்றி வேறொன்றும் வரலாறாக அன்று தோன்றுவதே இல்லை. எங்களைக் கதை எழுதச் சொன்னபோதும், ஓர் ஊரில் ஓர் அரசன் இருந்தான் என்று எழுதத் தொடங்கியதாகவே நினைவிற்கு வருகிறது. முப்பதாண்டுகளுக்கு முன்னர் இருந்த நிலை இஃது. இதன் பின்னரே பாட்டாளியுலகம் பிறந்து வளர்ந்துள்ளது. பாட்டாளி என்றசொல்லே வழங்காதகாலம் அது.

தமிழில்மட்டுமா இந்தநிலை இருந்துவந்தது? உலகம் தோன்றிய தி– ருந்து உலகம் முழுவதும் கதை என்றால் முடிமக்கள் கதைதான். வடமொழியில் ஆதிகாவியம் என்று புகழப்பெறுவது வான்மீகியின் இராமாயணமே. கிரேக்கர்கள் பழங்காப்பியம் எனப் பாராட்டுவது ஹோமர் பாடிய இ– யட் என்பதேயாம். மெனலஸ் என்றஅரசர் பெருமானின் அழகிய மனைவியாம்ஹெலன் பெருமாட்டியைப் பாரிஸ் என்றஇ– ய நாட்டு இளவரசன்



சிறைஎடுத்ததால் மூண்ட போரினையே பாடுகிறது அந்தப் பழங்காப்பியம். வர்ஜில் என்றபாவாணர் பாடிய ஈனிட் என்பதே இலத்தீன் மொழியின் பழங்காப்பியமாகும். உரோமப் பேரரசினைத் தோற்றுவித்த ஈனியஸ் என்றஅரசர் பெருமானது வரலாற்றினைக் கூறவே அக்காப்பியம் எழுந்தது. இவ்வாறு எந்த நாட்டுப் பழங்காப்பியத்தினை ஆராய்ந்தாலும் அரசர் அல்லது வீரரது வரலாற்றினையே பாடிப் புகழக் காண்கிறோம்.

முடியரசர்கள்காலம் ஏறக்குறைய முடிந்துவிட்டது என்று சொல்– விடலாம். இது குடியரசுக் காலம். அது மட்டுமா? முதலாளி என்று புகழ்ந்ததெல்லாம் மலையேறிப் போய்விட்டதன்றோ?பாட்டாளி என்றசொல்லே பாட்டைப்போல இனிக்கின்றகாலம் இஃது. இத்தகைய நாளில், முடிமக்களைப் பற்றிப் பாடிய நூல்களின் வாழ்வுக்கும் முற்றுப்புள்ளி வைக்க முயல்வது வியப்பு அன்று. அண்மையில் தமிழிலக்கியத்தினை ஆராய எண்ணிய இளைய அறிஞர் "முதலாளி இலக்கியமும் முடிமக்கள் இலக்கியமும் அன்றிக் குடிமக்கள் இலக்கியம் என ஏதேனும் உண்டா?" எ ன்று நெஞ்சம் குமுறுகின்றார். குறம் பாடினாலும், அது மீனாட்சி குறமாக முடிகிறது. குறவஞ்சி பாடினாலும் அது சரபேந்திரர் குறவஞ்சியாக நீண்டு ஓடுகிறது.

ஆனால் பெரியோரை வியத்தலும் இலமே;சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே என்று பழந்தமிழன் பாடியுள்ளது நினைவிற்கு வருகிறது. இப்பழந்தமிழன் வாய்ப்பந்தல் போடுகிறானா? உண்மையைத்தான் கூறுகிறானா? எண்ணித்தான் பார்ப்போமே! தமிழில் ஆதி காவியம் எது? பாரதமா? அது பின்னாளில் எழுந்தது. இராமாயணமா? அது கம்பனால் ஒளிபெற்றது. தமிழிலக்கிய வரலாற்றில் முதல் முதலாக காப்பியம் எனச் சிறப்புறத் தோன்றியது சிலப்பதிகாரமே ஆம். அது யாருடைய கதை? அங்கே சோழன் கரிகாலன் வருகிறான்: ஆனால் அவனுடைய கதை அன்று.

பாண்டியன் நெடுஞ்செழியன் அரச கட்டி– ல் வீற்றிருக்கின்றான்; கண்ணகி எதிரே உயிர் விடுகின்றான்: ஆனால், அவன் கதையும் அன்று. சேரன் செங்குட்டுவன் வடநாட்டில் போர் புரிகின்றான்: கண்ணகிக்குக் கோயில் கட்ட இமயத்தி– ருந்து கல் எடுத்து வருகின்றான்: ஆனால், அவன் கதையும் அன்று. முரசு முழங்குதானை மூவரும் கதையில் வந்தும் அந்த முடிமக்கள் கதையாகச் சிலப்பதிகாரம் விளங்கவில்லை. குடிமக்களில் ஒருவர் கதை: அதிலும் ஒரு பெண்ணின் கதை: கண்ணகியின் கதையன்றோ சிலப்பதிகாரம்! கோவலன் குடிமக்களுள் ஒருவன்: மாதவி பரத்தையரில் ஒருத்தி. இவர்களுடைய சிக்கல் வாழ்க்கையே சிலப்பதிகாரச் சித்திரம்.

இது, நாம் வேறு எங்கும் காணாத ஒரு வியப்பு! முடிமக்கள் வரலாறேஆதி காப்பியமாகப் பிறநாடுகளிலெல்லாம் அமைந்து விளங்க, குடிமக்கள் வரலாறேஆதிகாப்பியமாகத் தமிழ் நாட்டில் அமைந்து விளங்குகிறது. குடியரசு உலகிலும் இந்தக் காப்பியத்தைப் பாராட்ட இடம் உண்டு. பாட்டாளியுலகமும் இதனைப் பரிவுடன் வரவேற்கும். ஆய்ச்சியர் குரவை, குன்றக்குரவை, வேட்டுவ வரி என்று பாட்டாளிகளைப் பாடுவதில் சிலப்பதிகாரம் பாடிய இளங்கோவடிகளுக்கு எவ்வளவு மகிழ்ச்சி! எவ்வளவு களிப்பு! முரசு முழங்குதானை முடிமக்கள் மூவரும் தமிழ்நாட்டின் ஒருமைப்பாட்டினைச் சிதைத்துவந்தனர். குடிமக்கள் வழியாகவே தமிழ்நாட்டின் ஒருமை ஓங்கி வளரக் காண்கிறார் இளங்கோவடிகள். சோழ நாட்டில் பிறக்கிறாள் கண்ணகி, பாண்டி நாட்டில் கணவனையிழக்கிறாள்; சேரநாட்டில் தெய்வமாகிறாள். மூவரசர் பேராசையால், முப்பெருந் துண்டாய் வெட்டுண்டு கிடக்கும் தமிழன்னை, கண்ணகியின் வாழ்க்கை வழியே ஓர் உருவாய் உயிர்பெற்று விளங்குகிறாள்.

என் வாழ்நாளுக்குள்ளேயே ஒரு புரட்சியைக் காண்கிறேன். முடிமக்களைப் பற்றியே கதையைக் கேட்டும் எழுதியும் வந்த நானே, இப்போது குடிமக்கள் கதையைக் கேட்டும் எழுதியும் வருகிறேன். என் இளமை நாட்களில் இதனை நான் நம்பியிருக்க முடியாது. ஆனால், ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, இதனை நம்பினார் இளங்கோவடிகள்; அரசர் குடியிற் பிறந்து அரச செல்வத்தில் வாழ்ந்தவர் நம்பினார்; நம்பியது மட்டுமா? நம்பியபடி குடிமக்கள் கதையினைக் காப்பியமாக எழுதினார்! எழுதியது மட்டுமா? தாம் எழுதியபடி தமிழ்நாடும் அந்தக் காப்பியத்தை அன்று முதல் இன்று வரை பாராட்டும்படியும் செய்து விட்டார்!

இளங்கோவடிகள் செய்த புரட்சி பெரிதன்றோ? சங்க காலமே ஒரு புரட்சிக் காலம். அந்த நாளைய புலவர்கள் பழமைக்கு அடிமையாகாது வெற்றி பெறமுயன்றார்கள். அவர்கள் கூறியிருக்கும் உவமைகளைக் கண்டால் இந்த உண்மை விளங்கும். தாங்கள் நேரில் கண்ட போர்களையும் ஊர்களையுமே உவமை கூறுகின்றபுதுமையை அங்குக் காணலாம்.

“வஞ்சிமா நகர் போல அழகிய தலைவி,” “வெண்ணிப்போர் ஆரவாரம் போலப் பழிச்சொல் அம்பலத்தில் ஆரவாரமாகிறது,” என்றெல்லாம் பாடுகிறஒரு புதுமரபினைச் சங்கப் புலவர்கள் நிலைநாட்டிவிட்டதனை என் என்பது? இந்தப் புரட்சியின் பயனாக விளையும் புரட்சிகள் பல. முடிமக்கள் வாழ்வில் காணும் சிறப்புக்கள் எல்லாம், குடிமக்கள் வாழ்விலும் கண்டால் அன்றோ காப்பியம் இனிக்கும்! காதலும், அழுகையும், வீரமும் காப்பியப் பெருஞ்சுவைகள். மாதவியும் கோவலனும் ஒருயிரும் ஈருடலுமாக வாழ்கின்றகாதல் வாழ்வே சிலப்பதிகாரப் புகார்க் காண்டம். கணவனை இழந்த கண்ணகியே அவலச் சுவையின் ஆழத்தைக் காட்டுகிறாள். அந்தக் கதைதான் மதுரைக் காண்டம். கண்ணகிக்காக எடுத்த கல்—னை வடவரசர் தலைமீது ஏற்றிவந்த செங்குட்டுவனது வீரத்தைப் பாடுவதே வஞ்சிக் காண்டம். அரசனிடம் வீரம் கண்டால் குடிமக்கள் காப்பியம் எழுவதற்கு இடம் இல்லை. கோவலனிடமும் வீரம் காண்கிறார் இளங்கோவடிகள். இன்று உலகம் போற்றும் வீரம்; காந்தியடிகள் காட்டிய வீரம் — இதனை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் காண்கிறார் இளங்கோவடிகள். யானையைக் கொல்லாமலே யானைக் கா— —ருந்து முதியவனைக் காப்பாற்றுகின்றான் கோவலன்; கருணை மறவனாகக் காட்சியளிக்கின்றான். கண்ணகி — வீட்டைவிட்டு வெளிவராத பெண் வெளிநாட்டில் பாண்டியனை வெல்கிறாள் — கடவுளாக மாறுகிறாள். ஈதொரு புதுமை! பரத்தையரைப் பழிப்பதே அன்றும் இன்றும் வழக்கம். பரத்தையர் குடிப்பெண்ணான மாதவி, கற்பரசியாக ஓங்குகிறாள்;துறவறத்தின் முடிமணியாகச் சிறக்கின்றாள். அவள் மகள் உலகக் குருவாக விளங்குவதனை மணிமேகலை பாடுகின்றது. குடிமக்கள் சிறப்பினை இதற்கு மேலும் எவ்வாறு கூறுவது? திருவள்ளுவர், தமது பொருட்பா—ல் குடிகளது சிறப்பினைக் கடைசிப் பதின்மூன்று அதிகாரத்தில் கூறுவதன் நுட்பம் இப்போது விளங்குகிறது அன்றோ? குடிமக்கள் சிறப்பினை இடைக்காலத்தில் தமிழ்நாடு மறந்ததும் உண்டு, அப்போது திருவள்ளுவர் கூறிய குடியிய—ன் நுட்பத்தினை உணரமாட்டாது, அந்த அதிகாரங்களை ஒழிபியல் என்று ஒதுக்கி வைத்தது புதுமையோ? ஒழிபியல் என்பது அனாமத்துக் கணக்கா? நாட்டின் உயிர் நிலையாய்ப் பொருட்பா—ன் முடிமணியாக விளங்குவது, ஒழிபியலாக ஒதுக்கப்படுவது காலத்தின் கோளாறன்றோ? இன்று குடிமக்கட் காப்பியத்தின் பெருமையை உணர்ந்து வருகிறோம். குடியரசில் அன்றோ வாழ்கிறோம்? பழைய நூல்களைப் புதிய கண்கொண்டு உண்மை உணர இனி வழியேற்படும்.



## பயிற்சி

I. பெருவினா:

1. தெ.பொ.மீ அவர்கள் இளமைக்காலத்தில் கேட்ட கதைகள் எத்தகையன?
2. பள்ளியிலும் கல்லூரியிலும் கற்றும் கேட்டும் வந்த கதைகள் முடிமக்கள் கதைகளே என்று தெ.பொ.மீ கூறுவதேன்?
3. உலகம் முழுதும் கதை என்றால் முடிமக்கள் கதையாகத்தான் இருந்திருக்கிறது என்பதனைத் தெ.பொ.மீ எவ்வாறு காட்டியுள்ளார்?
4. முடிமக்கள் கதையாகச் சிலப்பதிகாரம் இல்லாமல் குடிமக்கள் கதையாகத்தான் உள்ளது என்பதை ஆசிரியர் எங்ஙனம் விளக்கிக் காட்டியுள்ளார்?
5. பழந்தமிழன் வாய்ப்பந்தல் போடவில்லை என்பதனை ஆசிரியர் எவ்வாறு மெய்ப்பிக்கிறார்?
6. திருவள்ளுவரின் ஒழிபியல் பற்றி ஆசிரியரின் கருத்தை விளக்குக.

II. நெடுவினா:

1. இளங்கோவடிகள் செய்த புரட்சி குறித்துத் தெ.பொ.மீ அவர்கள் கூறியுள்ளவற்றை விவரிக்க.

III. மொழித்திறன் வளர்பயிற்சி:

1. சிலப்பதிகாரம் முத்தமிழ்க் காப்பியம் என்று அறிந்திருக்கின்றீர்கள். காப்பியத்தின் கதை நிகழ்ச்சிகளையும் அறிந்திருப்பீர்கள். சில பகுதிகளை நாடகமாக ஆக்கி நடித்தும் இசைப் பகுதிகளைப் பாடிப்பார்த்தும் சுவையுணர்க.

எ.கா

நாடகம் : கண்ணகி வழக்குரைத்தல்

இசை: திங்கள் மாலை வெண்குடையான்
சென்னி செங்கோலது வோச்சிக்
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி காவேரி
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவா தொழிதல் கயற்கண்ணாய்
மங்கை மாதர் பெருங்கற்பென்
றறிந்தேன் வாழி காவேரி

— கானல்வரி

2. மயங்கொ— அறிந்து தொடரமைக்கப்பழகுக.

| | |
|---|---|
| வெல்லம் | வெள்ளம் |
| பாலை | பாளை |
| காலை | காளை |
| இலை | இழை |
| இரை | இறை |
| தளை | தழை |

**3.** உரிய இடங்களில் வல்– னமெய்களையிட்டும் நீக்கியும் எழுதுக.

1. போட்டி தேர்வுகளுக்கு நன்குப் படித்து சிறப்பாக எழுதினால் உடனேப் பதவி உயர்வுக் கிடைக்கும்.

2. கண்ணகி தெய்வத்திற்கு கயவாகு மன்னன் பத்தினி கோட்டம் எடுத்து சிறப்பித்தான்.

**4.** ர – ற– ஒ– வேறுபாடறிந்து ஒ– க்க; பொருள் வேறுபாடு உணர்ந்து பயன் படுத்துக.

அரி – திருமால், சிங்கம், காய்களை அரி
அறி – அறிந்து கொள்
அலரி – அலரிப்பூ
அலறி – அழுது
இரத்தல் – பிச்சையெடுத்தல்
இறத்தல் – சாதல்
உரவு – வ– மை
உறவு – சுற்றம்
உரை – சொல்
உறை – தலையணை உறை
எரி – தீ
எறி – வீசு
கரி – யானை
கறி – காய்கறி, மிளகு
குரங்கு – வானரம்
குறங்கு – தொடை
கூரை – வீட்டுக் கூரை
கூறை – துணி
சீரிய – சிறந்த
சீறிய – சினந்த
பரவை – கடல்
பறவை – பறப்பனவாகிய உயிரினம்
மரை – மான்; தாமரை
மறை – வேதம்

# 5. ஓய்வு

**- பேரறிஞர் அண்ணா**

பாடுபடுபவனுக்கும் ஓய்வு நேரம் வேண்டும் என்றகருத்தினை இப்போது ஏற்றுக் கொண்டுள்ளனர்; முன்பு ஓய்வு நேரம் என்பது உயர் நிலையினருக்கு மட்டுமே கிடைத்திடத்தக்கது, கிடைத்திடவேண்டியது என்று கருதிக் கொண்டிருந்தனர்; அதனை ஒரு தத்துவம் என்று கூடக் கூறிவந்தனர்.

ஓய்வு நேரம் கிடைத்தால் தான் உழைத்து அலுத்தவன், தனது அலுப்பைப் போக்கிக் கொள்ள முடியும், மறுபடியும் பாடுபட, அலுப்புப் போகவேண்டும்.

வேலையே இல்லை, நாளெல்லாம் வாளாவிருக்கிறான், ஓய்வு அல்ல அது– பயன்படுத்தப்படவில்லை; கொடுமை!

வேலை இருக்கிறது – வேலை செய்யாமல் வாளாவிருக்கிறான் – ஓய்வு அல்ல – சோம்பல்!

வேலை இருக்கிறது – வேலை செய்த அலுப்பினால் வேலை நேரம் முடிந்ததும், கட்டைபோலக் கீழே விழுகிறான் – தூங்கிவிடுகிறான். – ஓய்வு அல்ல இதுவும்; சோர்வு.

ஒரு வேலையும் செய்ய வேண்டிய நிலையில் இல்லை, எப்போதும் சும்மா இருக்கிறான்; இதுவும் ஓய்வு அல்ல, இது ஒய்யாரம் !

ஓய்வு என்பது ஒரு உரிமை; செய்தவன், தன் அலுப்பைப் போக்கிக் கொண்டு, இழந்த உற்சாகத்தை மீண்டும் பெற்று, மறுபடியும் வேலையிலே ஈடுபடுவதற்கான மாமருந்து.

ஓய்வு நேரம் என்பதுவேலை செய்யாதிருக்கும் வேளை என்று மட்டும் பொருள் கொள்ளக் கூடியதல்ல. ஒருவன் தன் வாழ்க்கைக்குத் தேவையான வசதியைக் கொள்வதிலே ஈடுபடுவதே வேலை, அந்த வேலை முடிந்த பிறகு அவன் மனம் ஒரு நிம்மதி பெற்று, தெம்பு பெறவேண்டும். அந்த வாய்ப்பைப் பெற்றுத் தருவதே ஓய்வு. காலை முதல் மாலை வரை பாடுபட்ட தொழிலாளி, இரவு பிறந்ததும் அயர்ந்து தூங்குகிறான், அதனால் அவனுடைய உடல் அலுப்பு நிச்சயம் குறையும்; ஆனால், உள்ளத்திலே ஏறிவிட்டுள்ள பாரம், சோர்வு–குறையுமா? குறைந்திடவழி இல்லை; ஏனெனில் அதற்கான வழி தேடிடவில்லை அவன், செயலற்றுக் கிடக்கிறான்; தூக்கம், ஆனால், ஓய்வு என்பது தூக்கத்தால் உடல் அலுப்பைப் போக்கிக் கொள்வது மட்டுமல்ல; உள்ளத்திலே உள்ள சோர்வினைப் போக்கிக்கொள்ள அவன் உலவுவது, உரையாடுவது, பாடுவது, ஆடுவது, ஆடல் காண்பது, பாடல் கேட்பது, குழந்தைகளுடன் கொஞ்சுவது, இவ்விதமான ஏதாவதோர் செய– ல் ஈடுபாடு கொண்டாக வேண்டும்.



வேலை செய்த அலுப்புப்போக அவன் தூங்கி எழுந்திருப்பது பல மணி நேரம் ஓடிக்கொண்டிருந்த இயந்திரத்தைச் சிலமணி நேரம் நிறுத்திவைப்பது போன்றதே.

தூக்கத்தால் மட்டும் பாட்டாளியின் மனத்திலே உள்ள சோர்வு போய்விடுவதில்லை.

சிறிது நேரம் உறங்கிக் கிடப்பதால் மட்டும் இயந்திரம் வேலை செய்ததால் ஏற்பட்ட தேய்வு இருக்கிறதே, அது போய்விடாது. புது வ– வு வந்திடாது.

உழைப்பினால் ஏற்பட்டுவிடும் உள்ளத்துத் தேய்வு இருக்கிறதே, அதனைத் தூக்கத்தினால் மட்டும் போக்கிட முடியாது – மனத்துக்குத் தெம்பு தரத்தக்க விதமாக அவன் சிறிது நேரத்தைச் செலவிட வேண்டும்; ஓய்வாக!!

உழைத்த அலுப்பினால் வீடு வந்ததும் படுத்து உறங்கிவிடும் பாட்டாளி விடிந்ததும் மீண்டும் இயந்திரமாகிறான் – மனத்திலே தேய்வு வளர்ந்தபடி இருக்கிறது; குறைந்திட வழி இல்லை. அங்ஙனமின்றி உழைத்தலுத்தவன், உடனடியாக உறக்கத்தை மட்டுமே தேடிக் கொள்ளாமல், நண்பர்களுடன் பேசி மகிழ்வது, குழந்தைகளுடன் விளையாடுவது என்றஏதேனும் ஒருபொழுது போக்கிலே ஈடுபட்டால், உடல் அலுப்பு மட்டுமல்ல உள்ளத்திலே மூண்டு விட்ட அலுப்பும் குறையும். அப்போது அவன் புதிய உற்சாகம் பெறுகிறான்.

மாலை ஆறுமணி வரையில் மாடாக உழைத்தாச்சே, பேசாம போய்ப் படுத்துத் தூங்குவதை விட்டுவிட்டு, விடிய விடியக் கண்விழித்துக்கொண்டு தெருக்கூத்துப் பார்த்துவிட்டு வந்தா, உடம்பு என்னத்துக்கு ஆகும்? என்று கனிவுடன் தான் கேட்கிறாள் மனைவி. ஆனால், பகலெல்லாம் பாடுபட்டவன் , இரவு கண்விழிப்பது உடலுக்குச் சிறிதளவு கெடுதலைக் கூடத்தரக்கூடும் என்றாலும், கூத்துப் பார்த்ததில், கண்ணுக்கும் காதுக்கும் விருந்து பெற்றான், மகிழ்ச்சி பெற்றான், மற்றவர்கள் மகிழ்ந்திருக்கக் காண்கிறான்.; சிரித்தான், மற்றவர்கள் சிரித்திடக் கண்டான், இதிலே அவனுக்குக் களிப்பு இருக்கிறதே, அது அவனுடைய மனத்திலே மூண்டுகிடந்த சோர்வுச் சுமையைக் குறைத்து விட்டது; மனம் துள்ளிடுகிறது.

இதுதான் தம்பி ஓய்வு. இழுத்துப் போர்த்துக் கொண்டு படுத்துத் தூங்குவது மட்டும் அல்ல.

கூத்துப் பார்ப்பதிலேதான் இந்த விருந்து கிடைத்திடும் என்பதில்லை. இரைச்சல் மிகுந்த தொழிற்சாலையையும் அதிலே பரபரப்புடன் சுழன்று கொண்டிருக்கும் ஆட்களையும் பார்த்துப் பார்த்துச் ச– த்துப்போன கண்களுக்கு, ஒரு சிங்கார ஓடை, அதிலே பூத்துக் கிடக்கும் மலர், கரையினிலே ஓங்கி வளர்ந்த மரம், அதிலே .குலுங்கிடும் கனி, அந்தக் கனியைக் கொத்திடும் கிளி, அதனை ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருக்கும் அணில் இத்தகைய காட்சியைக் கண்டால், கண்ணும் கருத்தும் விருந்து பெறும், சோர்வு பெருமளவு நீங்கிடும்.

கவலைதோய்ந்த முகத்துடன் தொழிற் கூடத்தில் தன்னோடு இருந்திடும் பாட்டாளிகளைக் கண்டு கண்டு அவன் மனத்திலே குடிகொண்டு விடுகிறதே ஒரு கவலை, அது, வெண்ணிலவு ஒரு மேகத்தி– ருந்து மற்றொன்றுக்கு ஊர்ந்து செல்வது போன்றகாட்சியைக் கண்டால் சிறிதளவேனும் கலையத்தான் செய்யும். காது குடைந்திடும் ஒ– யைப் பொறிகளி– ருந்து கேட்டதால், உள்ளத்துக்கு ஓர் அலுப்பு; அந்த

அலுப்பு, ஒருதெம்மாங்கு கேட்டிடப் பெருமளவு குறைந்து போகும்! இந்தவிதமான வாய்ப்புகளைப் பெற்றிடுவதே ஓய்வு! வேலை செய்யாம – ருப்பது, அல்லது தூங்கிக் கொண்டிருப்பது அல்ல.

வயிற்றுக்காகப் பாடுபடுவதைவிடக் கடினமானது தான் மலை உச்சி ஏறுவது, ஆற்றிலே நீந்துவது போன்றவை; ஆனால், அவை மனத்திலே உள்ள சோர்வைப் போக்கிடும் மாமருந்து; மிக மிகத் தேவை.

வேறு வேலையே செய்யாமல், பொழுதினை ஓட்டிட வேட்டையாடுவது ஓய்வு அல்ல; வேலைசெய்த பிறகு, மனத்துக்குத் தென்பு பெறப் புறாவினைப் பறக்கவிட்டுப்பார்த்துப் பார்த்துப் பூரித்துப்போகிறானே, அது ஓய்வு!

உழைத்துத்தான் வாழ வேண்டும் – வாழ்வு, உரிமை; கடமை! ஆனால் உழைத்தும்வாழ முடியவில்லை என்றால், அது சமூகத்தில் உள்ள கொடுமையைக் காட்டுகிறது. வாழ்வதற்கு உழைக்கிறான், பிறருக்கு வாழ்வு அளிக்கவும் உழைக்கிறான். ஆனால் அந்த உழைப்பே அவனை உருக்குலையச் செய்து, வாழ்வை நுகரவே முடியாதபடி ஆக்கிவிடுமானால், அவன் உழைத்து என்ன பயன்?

தண்டவாளத்தின்மீது சென்றிடும் இரயில் போகும்போதே தண்டவாளத்தையே தேய்த்துவிடுமோனால் பிறகு பயணம் எப்படி நடந்திடும்? அதுபோலவே, உழைத்து உருக்குலைந்து போனால், வாழ்க்கையிலே இன்பம் பெறமுடியாத நிலையினால், உழைப்பு அவனைப் பொறுத்தமட்டில், உயிர் குடிக்கும் நஞ்சாகியது, உழைத்த பிறகு அவன் வாழ்வை அனுபவிக்கும் நிலையினதாகவும் இருந்திட வேண்டும்.

ஓவியத்தைத்தீட்டி முடித்ததும், அவன் கண்கள் அவிந்து போய்விடும் என்றோர் விபரீத முறைஇருப்பின் ஓவியக் கலையிலே எவர் ஈடுபடுவர்?

உழைத்தோம்; பிழைத்தோம்; உறுதிப்பாடும் இல்லையெனில் உழைத்திடும் உள்ளம் எங்ஙனம் ஏற்படமுடியும்?

உழைப்பு, தம்பி!உள்ளத்தையும் உடலையும் ஒரே அடியாக முறித்துவிடக் கூடியதாக இருந்துவிடின், உலகப் பெருங்கதை சோகச் சிறுகதையாகிப் போகும், அல்லது பயங்கரப் படுகொலைக் கதையாக முடிந்திடும்.

உழைத்ததால் ஏற்பட்ட உடற் சோர்வு போக, உண்டி, உறையுள், உறக்கம் தேவை; உழைத்ததால் ஏற்பட்ட உள்ளச்சோர்வுபோக ஓய்வு, பொழுது போக்குத் தேவை.

உழைத்ததால் செலவானது போக, ஓய்வினை அனுபவிக்கத்தக்க அளவுக்கு வ– வு மிச்சம் கைவசம் இருக்க வேண்டும். வாழ வழி தேடுவதிலேயே கால முழுவதும், வ– வு முழுவதும் செலவாகிப் போய்விடுமானால், உருக்குலைவு ஏற்பட்டு விடுமானால், தோகை விரித்ததும் செத்துவிடும் மயிலாவான்; அரும்பு மலர்ந்ததும் அறுந்துபடும் கொடியாவான்; பயன் காணான், பயனளித்திடவும் மாட்டான்.

ஆகவே பாட்டாளி ஓய்வு பெறுவது, சமூக நீதியில் ஒன்று; அடிப்படை நீதி.

ஓய்வு நேரம் – ஓய்வின் தன்மை ஆகியவற்றினைக் கொண்டு, ஒரு சமூகத்தின்



நிலையை மதிப்பிடுகிறார்கள் அறிவாளர். பெரும்பாலான மக்களுக்குக் கிடைக்கும் ஓய்வு இருக்கிறதே, அதனை நாகரிகத்தின் அளவுகோலாகக் கொள்கிறார்கள், நல்லறிவாளர்கள்.

ஓய்வு நேரம் ஒவ்வோர் நாட்டில் ஒவ்வோர் காலத்தில் ஆங்கு அமைந்திருந்த இயல்புக்கு ஏற்றவிதமான வடிவமெடுத்திருந்தது.

வெற்றிமேல் வெற்றி பெற்றிட வீரப்போர் புரிந்து வந்த ரோம் நாட்டவர் உடற்கட்டுள்ளவர்கள். ஒருவருடன் ஒருவர் மற்போர், வாட்போர் செய்து ஆற்றலைக் காட்டிடும் வீர விளையாட்டுகளைக் காண்பதிலே மட்டுமல்ல, வீரர்கள் மிருகங்களுடன் போரிட்டு அவைகளைக் கொல்வது அல்லது அவைகளால் கொல்லப்படுவது என்றஇரக்கமற்றவிளையாட்டுக்களைக் காண்பதனை உல்லாசமளித்திடும் ஓய்வாகக் கருதினர்.

அறிவுச் செல்வத்தைப் பெற்றுத் திகழ்ந்த கிரேக்கர்கள் ஓய்வு நேரத்தைக் காப்பியம் என்றதரம்பெற்றபுதிய நாடகங்களைக் காண்பதிலே கருத்துப் பெறுவதிலே ஓய்வு நேரத்தைச் செலவிட்டனர்.

முரட்டுக் காளையுடன் போரிடுவது ஸ்பெயின் நாட்டவர்க்கு வீரவிளையாட்டு; ஓய்வுநேரம் அதற்கே பெரும்பகுதி செலவிடப்பட்டது.

பழந்தமிழர் தமது ஓய்வு நேரத்தில் ஏறு தழுவுதல், மற்போர் போன்றவீரவிளையாட்டிலே செலவிட்டனர் என்று அறிகிறோம்.

கோழிச் சண்டை, கரடிச்சண்டை இவைகளை நடத்தி ஓய்வு நேரத்தில் பொழுது போக்கினர் இங்கிலாந்து நாட்டவர், மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பு வரையில்.

ஓய்வு நேரத்தைப் பயன்படுத்துவதில் ஒரு நல்ல முறைஅமைக்காவிட்டால் களியாட்டம் வெறியாட்டம் வீணாட்டமாகி, புதிய தெம்பு பிறப்பதற்குப் பதிலாக மனத்திலே போதையும், காட்டுணர்ச்சியும் கொந்தளிக்கச் செய்துவிடும்.

மேனாடுகள் பலவற்றிலே ஓய்வு நேரத்துக்காக என்று அமைக்கப் பட்டுள்ள நாட்டியக் கூடங்களும், சூதாட்டச்சாலைகளும் நல்– யல்பை வளர்ப்பனவாக உள்ளன என்றஉணர்வு இப்போது வலுப்பெற்று வந்து கொண்டிருக்கிறது.

ஆனால் இவைகளிலே ஈடுபடுவோர் பெரும்பாலும் உல்லாசம் தேடிடும் பணம் படைத்தோரே–பெரும்பாலான நடுத்தர நிலையினர், காற்பந்து, கிரிக்கட், ஆக்கி போன்றவீர விளையாட்டுகளைக் காண்பதிலேயே பெரு விருப்பம் கொண்டுள்ளனர். குத்துச்சண்டை கண்டு களிப்பதனை, எழுச்சி தரத்தக்க பொழுது போக்காகக் கொண்டுள்ள அமெரிக்காவில் இதற்கெனப் பெரும்பணம் செலவிடப்பட்டு வருகிறது.

சென்றதிங்கள் க்ளே எனும் குத்துச்சண்டை வீரன், தன்னுடன் போட்டிக்கு நின்றவிஸ்டன் என்பானை ஒரே ஒரு குத்து கொடுத்துக் கீழே வீழ்த்தினான். விழுந்தவன் குறிப்பிடப்பட்ட நேரத்திற்குள் எழுந்திருக்கவில்லை. எனவே, க்ளே வெற்றிவீரன் என்றவிருது அளிக்கப்பெற்றான், இலட்சக்கணக்கான டாலர்கள் குவிந்தன. இந்தக் குத்துச் சண்டையின்போது, ஒரே விநாடி! ஒரே குத்து! குத்துச் சண்டை முடிந்து க்ளே பெரும்பொருள் பெற்றான் பரிசுத் தொகையாக.

க்ளே – விஸ்டன் இருவருமே நீக்ரோக்கள்.

இவைபோன்றவிளையாட்டுகள், காண்போருக்குக் களிப்பூட்டும்; வீர உணர்ச்சி தரும், அய்யமில்லை, ஆனால் புதிய கருத்துத் தந்திடுமா? கருத்துக்கு விருந்தாக என்றகேள்வி பலமாக எழுந்துவிட்டிருக்கிறது.

மற்றநாடுகளிலே, ஓய்வு நேரத்தை எந்த வகையிலே செலவிட்டால், கருத்துக்கு இன்பம் கிடைக்கும் என்பது பற்றிய திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன. இங்கோ, தம்பி ! ஓய்வுநேரம் என்பது, வாழ்வின் இயல்பை, தொழி– ன் இயல்பைத்தரமுள்ளதாக்கிடும் என்றஉணர்வே பெறவில்லை. ஓய்வு என்பது வேலை செய்யாத நேரம் என்றஅளவிலேதான் அதற்கான இலக்கணம் இருந்து வருகிறது. ஓய்வென்பது கருத்துக்கு விருந்து பெறும் ஓர் வாய்ப்பு என்றநிலை அமையவில்லை, அமைத்திடுதல் வேண்டும்.

### பயிற்சி

I. பெருவினா:

1. உழைத்து அலுத்தவனுக்கு ஓய்வு என்பது அடிப்படை நீதி என்பதனை அறிஞர் அண்ணா எங்ஙனம் எடுத்துரைக்கின்றார்?
2. ஒவ்வாரு நாட்டிலும் ஓய்வு நேரம் எவ்விதமாக அமைந்துள்ளது?
3. ஓய்வு குறித்து அறிஞர் அண்ணா உரைப்பதனை எழுதுக?
4. உழைப்பால் ஏற்பட்ட உள்ளத்தேய்வை நீக்கும் முறைகுறித்து அண்ணா கூறுவன யாவை?

II. நெடுவினா:

1. ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தும் முறைபற்றி அண்ணா கூறியனவற்றைத் தொகுக்க?
2. அண்ணா ஒரு சீரிய சிந்தனையாளர் என்பதனை ஓய்வு என்னும் கட்டுரை எங்ஙனம் தெளிவு படுத்துகிறது?

மொழித்திறன் வளர்பயிற்சி:

இப்பாடத்தின்கண் எடுத்தாளப்பட்டுள்ள தமிழ் நடையை மாணவர்கள் உற்றுணர்க. மொழியின் வ– வும் வீச்சும் சொல்லப்படும் கருத்தினை மெருகேற்றுவதை இப்பாடத்தின் வழி உணரலாம் இவ்வாறு வெவ்வேறு வகையான மொழி நடை அமைந்த கட்டுரைகளைப் படித்து அறிக. அடுக்குமொழி, உணர்ச்சி மொழி, முத– யவை கருத்துச் செறிவை வ– மை செய்யவல்லவை.

இந்திரன் முத– ய இறையவர் பதங்களும் அந்தமில் இன்பத்து அழிவில் வீடும் நெறியறிந்து எய்துதற்குரிய மாந்தர்க்கு உறுதியென உயர்ந்தோர் உரைக்கப்பட்ட பொருள்கள் நான்கு. அவை சிந்தையு மொழியுஞ் செல்லா நிலைமைத்தாக– ன் துறவறமாகிய காரண வகையாற் கூறப்படுவதல்லது இலக்கண வகையாற் கூறப்படாமையின் நூல்களாற் கூறப்படுவன ஏனை மூன்றுமேயாம். அவற்றுள் அறமாவது மனு முத– ய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலுமாம்.அஃது ஒழுக்கம் வழக்கு தண்டம் என மூவகைப்படும்.

–பரிமேலழகர் உரைப்பாயிரம் –

–திருக்குறள்–



சோலையிலே புகுவேன்; மரங்கள் கூப்பிடும் ; விருந்து வைக்கும், ஆலமர நிழ– ல் அமர்வேன்; ஆல், 'என் விழுதைப் பார், அந்த அரசுக்கு இஃது உண்டா?' என்னும். அரசு கண்ணிற்படும் யான் விழுதின்றி வானுறஓங்கி நிற்கிறேன், என்னை மக்கள் சுற்றிச் செல்கிறார்கள், காண் என்னும். வேம்பு, 'என்நிழல் நலஞ்செய்யும் என் பூவின் குணங்களைச் சொல்கிறேன்; வா' என்னும்; அத்தி, நாகை, விளா, மா, வில்வம் முத– ய மரங்கள் விளியாம– ருக்குமோ? சிந்தனையில் அவைகளின் நுட்பங்கள் விளங்கும்; மலை என்னை அடிக்கடி அழைக்கும்.

திரு.வி.க.

1, கொச்சைச் சொற்களை நீக்கி எழுது

1. சாயந்தரம் நேரத்தோடு வராட்டி அம்மா திட்டும்;
2. சித்த நாழி உக்காரு, இந்தா வந்திடறேன்.
3. அம்மாசிச் சோறு ஆசைப்பட்டா கெடைக்காது.
4. வெளையாட்டிலேயே கண்ணா இருக்காதே
5. அம்மாப் பொண்ணுக்குக் கண்ணாலம்; அவரவர் வூட்டுலே சாப்பாடு

2, பொருத்தமான நிறுத்தற் குறிகளையிட்டு எழுதுக

1. மன்னவனும் நீயோ வளநாடும் உன்னதோ உன்னையறிந்தோ தமிழை ஓதினேன் என்று சினந்தான் கம்பன்
2. நாற்குணமும் நாற்படையா ஐம்புலனும் நல்லமைச்சா ஆர்க்கும் சிலம்பே அணிமுரசா – வேற்படையும்

   வாளுமே கண்ணா வதன மதிக்குடைக்கீழ் ஆளுமே பெண்மை யரசு
3. புனிதவதியார் தாம் பெற்றபேய்வடிவத்தால் பேயார் என்றும் இறைவன் அம்மையேஎன்றழைத்ததால் அம்மையார் என்றும் தாம் பிறந்த காரைக்காலுக்கும் பெருமை சேர்த்ததால் காரைக்காலம்மையார் என்றும் அழைக்கப்படுகின்றார்.

# 6. சமயங்களின் பொதுநீதி

– குன்றக்குடி அடிகளார்

நிலத்தின் கடினத்தன்மையை இளக்கி நெகிழச்செய்து பயன்படு பொருள்களின் விளைவுக்குத் தகுதியாக்குவது உழவு. சுவையுடையனவாக, ஆனால் சுவைக்க முடியாதனவாக ஒன்றோடொன்று மாறுபட்ட சுவையுடையனவாகிய பொருள்களைச் சுவைத்தற்குரிய சுவையுடையனவாக ஆக்குவது சமைத்தல். மனித உள்ளங்களை இன்ப அன்பின் விளை நிலமாகத்தகுதிப்படுத்திப் பக்குவப் படுத்தும் தத்துவத்திற்கு, வாழ்க்கை முறைக்குச் சமயம் என்பது பெயர். மனித வாழ்க்கையைச் சமைத்துப் பக்குவப்படுத்துவதே சமயத்தின் நோக்கம்.

இந்த விழுமிய நோக்கத்தோடு, பரந்த நிலவுலகத்தின் கண், தோன்றியுள்ள சமயங்கள் பலப்பல. சமயங்கள் பலப்பலவாயினும் அவை யனைத்திற்கும் நோக்கம் ஒன்றேயாம். ஓர் இசையரங்கில் பலர் பல வாத்தியங்களை இயக்கி இசையெழுப்புகின்றனர். அங்ஙனம் எழுப்பும் இசையொ– வேறு வேறு ஒ– யமைப்புடையனவேயாம். ஆயினும், சுருதி, பண், தாளம் மாறுபடாது என்பதை நினைவில் கொள்ளல் வேண்டும். அதுபோலவே, சமயங்கள் மொழியால் மாறுபடலாம், காட்டும் கடவுளின் பெயர் , வடிவம் மாறுபடலாம். ஆயினும், மனித குலம் ஒன்றேஎன்றசுருதியில் மாறுபாடுகள் இல்லை, ஒன்றேகுலம் ஒருவனே தேவன் என்பது சமய நியதி; நீதி.

உலகத்தில் வாழும் மனிதர்கள் அனைவரும், ஏன் மற்றைய உயிரினங்களும்கூட இறைவனுடைய அன்பிற்குரியவை. இந்த உயிரினங்களைப் பேணிப் பாதுகாப்பதையே இறைவன் தன்னுடைய குறிக்கோளாகக் கொண்டுள்ளான். உயிரினங்கள் துன்பத்தினின்று நீங்கி, ஆரா இன்ப அன்பினில் திளைத்து மகிழ வேண்டும் என்பதே இறைவனின் திருவுள்ளம். ஆனால், உயிர்கள் நிலைத்த இன்பத்தில் மகிழ வேண்டுமாயின் இன்பம் வழங்குதலை விட, துன்ப நீக்கம் செய்வதே முதற்கடன்.

துன்பத்தையும் கூட மேலெழுந்தவாரியாக நீக்குவது நிறைவான பயனைத்தராது. துன்பத்திற்குக் காரணமான அறியாமையை உயிர்ப் பகையை அடியோடு அகற்றவேண்டும். கிழங்குகள் வெட்டிய இடத்தில் மேலும் தளிர்ப்பதைப்போல, அறியாமையும் பகையும் மேலும் மேலும் வாய்ப்புக் கிடைத்துழியெல்லாம் தழைத்து வளரும். அதனாலன்றோ சேக்கிழார், பாசப் பழிமுதல் பறிப்பார் போல என்றார். நிலம் கடினமாக இருந்தால் முளைத்த கீரை ஒடிந்தே கைக்கு வரும். மீண்டும் கட்டை தளிர்க்கும். நிலம் தண்ணீரால் நனைந்து மண் இளகியிருக்குமானால் கீரை பிடுங்கும் பொழுது வேரோடு வரும். அதுபோல நெஞ்சம் கல்லாக இருக்குமானால், துன்பங்கள் மாற்றப்பட்டாலும் துன்பத்துக்குரிய காரணம் நீங்குவதில்லை. நெஞ்சு திருவருட்புனலால் நனைந்து, அன்பினால் நெகிழ்ந்து கொடுக்குமாயின் அப்பொழுது துன்பம் மட்டும் நீங்குவதில்லை; துன்பத்துக்குரிய காரணங்களும் நீங்குகின்றன. இன்பப் புதுமது வெள்ளமும் பாய்கின்றது. இவை அனைத்தும் உடன் நிகழும் நிகழ்ச்சிகள் ஆகும். இதுவே, வாழ்க்கையில் ஏற்பட வேண்டிய மாறுதல் என்று சமயங்கள் ஒரு குர– ல் ஓதுகின்றன.



உயிர்க்கு உறுதியினைத் தந்து, ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த இன்பத்தினைத் தந்து வாழ வைக்கும் குணங்கள் பலப்பல. அவையனைத்துள்ளும் அன்பு என்றகுணம், மிக மிகச் சிறந்தது. அன்பு, துன்ப நோய்க்கு மருந்தாகவும் இருக்கிறது, இன்ப விளைவுக்கு ஊற்றுக் கண்ணாகவும் இருக்கிறது. அன்பு தன்னைக் கொண்டவனையும் மகிழ்விக்கிறது; சார்ந்தோனையும் மகிழ்விக்கிறது. ஏன் எல்லாம் வல்ல இறைவனையும் கூட அன்பே மகிழ்விக்கிறது; இல்லை, அன்பு அவனைப் பைத்தியமாக்கி விடுகிறது. ஆண்டவனாகிய அவன் அன்பிற்கு அடிமையாகின்றான்; இரப்பாரைக் காப்பவன், இரப்பவனாக மாறுகின்றான் என்னே, அதிசயம்! இந்த அன்பினைப் பெற்று வாழ்வாங்கு வாழ வையத்திலுள்ளோரை வழி நடத்தும் புதுமையைப் பொதுமையை என்னென்போம்!

உலகினின் பாவத்தைத் தமது செந்நீரால் கழுவிய ஏசுபெருமான் அன்பின் திருவுருவம். அவரருளிய மலைச் சொற்பொழிவு அன்புப் பொழிவு. ஒருவரையொருவர் அன்பு கொண்டு ஒழுகுங்கள் ; பகைமை பாராட்டாதீர்கள்; மன்னிக்கும் குணத்தினைப் பெறுங்கள்; எல்லோருக்கும் எப்பொழுதும் அன்பு காட்டுங்கள்'. என்று வையகத்தை வழி நடத்தினார். 'கருணை உள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் மீது கருணை பொழியப்படும்'. என்றவிவி– ய அறவுரை எண்ணத்தக்கது. அர்ச் ஃபிரான்ஸிஸ் என்றபெரியார் இறைவா நான் அன்பு விதையை விதைப்பேனாக!, என்றும் 'மக்கள் என்னிடம் அன்பு செலுத்துவதற்கு முன், நான் அவர்களிடம் அன்பு காட்டுவேனாக' என்றும் கூறியுள்ள உரை உணரத்தக்கது.

முகமது சாகேபின் அருள் வாக்குகளில் அன்பின் நலம் சிறந்து விளங்குகின்றது, "பிறர் அன்பு பாராட்டாமலும் பிறர் அன்புக்குப் பாத்திரமாகாமலும் இருப்பவனிடம் நற்குணங்கள் இரா" என்பது முகமது சாகேபின் அருள் வாக்கு. கடவுள் படைப்பிலுள்ள மக்கள் அனைவரையும் தம் பிள்ளைகளைப்போற் கருதி அனைவர் இன்ப துன்பங்களையும் ஒருவன் எப்பொழுது தனதாகக் கருதுகிறானோ அப்பொழுதே அவன் ஸூபி ஆவான் என்பதும் அருள் வாக்கு. மாந்தர் குலம் ஒன்றேஎன்பதும் அவர்கள் அனைவரும் ஒரு குலமாக வாழக் கடமைப்பட்டிருக்கின்றனர் என்பதே புனித குர் – ஆனின் உபதேசம்.

"அல்லா மிகுந்த தயையுள்ளவர்; கருணைக்கடல்; கிருபா சமுத்திரம்; பரம தயாளு" என்பது புனித குர் ஆனின் வாசகம். ஆதலால் உலகத்து உயிர்களுக்கு யாரால் அதிக இன்பம் கிடைக்கிறதோ அவர்களையே அவர் அதிகமாக நேசிக்கிறார் என்பது இஸ்லாமிய மதத்தின் இணையற்றகொள்கை

ஆசியாவில் பாரதத்திற்கு இணையான ஆன்மீக வளமிக்க ஞானிகள் பிறந்த நிலம் சீன நாடு. சீன தேசத்தில் கன்பூஷீயஸ் என்றஞானி தோன்றினார். அவர் ஒரு சமயத்தைத் தோற்றுவிக்காது போனாலும் அவர் சீன நாட்டில் பல நூற்றாண்டுகள் ஒரு சமய ஞானியாகவே பாராட்டப்பெற்றவர். அவர் வாழ்க்கையின் மூல தத்துவமே அன்புதான் என்று குறிப்பிடுகிறார். அவர் எல்லா மனிதர்களையும் விரும்புவதும் ஒவ்வொரு மனிதரிடமும் நேசமாய் இருப்பதுந்தான் அன்பு என்றும், நாம் அன்பு காட்டுவதும் அன்பிற்காகவே காட்ட வேண்டுமே யொழியப் பிறிதொரு நன்மைக்காகக் காட்டக் கூடாது என்றும் கூறுகிறார் கன்பூஷியஸ். இந்த அன்பு நெறி மக்கள் மன்றத்தில் நிலவ ஒரு மூல மந்திரத்தைக் கற்றுக் கொடுக்கிறார்.

'உனக்குப் பிடிக்காத ஒன்றை, நீ பிறருக்குப் பிடிக்குமென்று நினைந்து செய்யாதே!'

இவர் வற்புறுத்திய ஐந்து நற்குணங்களுள் சுன்ஜீ என்பது இரண்டாவது, அதாவது, நாம் பிறருடன் சரியாகப் பழகவேண்டும்; எவருடனும் முறைதவறி நடக்கக் கூடாது; நம் உள்ளத்தில் கருணையும் அன்பும் இருக்க வேண்டும் என்பதாகும்.

இந்திய மண்ணில் தோன்றிய சமயங்கள் சில; அவற்றுள் புத்த மதமும் ஒன்று. சித்தார்த்தரைப் புத்தராக்கியதே அன்புதான். புத்தரின் அன்பு நெறி கிறித்துப் பிறப்புக்கும் முன்பே போரில்லாத அமைதி நெறியை வையகத்துக்குத் தந்தது. புத்தன் அன்பின் வடிவமாகவே வாழ்ந்தார். அவர் மனித குலத்துக்கு உய்யும் நெறியாகக் காட்டியது அன்பு நெறியேயாம். தாய் தன் உயிருக்கு ஆபத்து வருவதையும் கருதாது, தன் ஒரே பிள்ளையைப் பாதுகாப்பது போல மனிதன் எல்லா உயிர்களிடமும் எல்லையற்றஅன்பு கொண்டிருக்க வேண்டும் என்றும் தங்கு தடையின்றிப் பகையோ விரோதமோ இல்லாமல் மனிதர் தமக்கு மேலும் கீழும், அங்கும் இங்கும், அகில உலகினிடமும் எல்லையற்றஅன்பு கொண்டு வாழ வேண்டும் என்றும் புத்த சமய வேதமாகிய பிடகம் பெருமையுடன் கூறுகிறது.

இந்தியச் சமயங்களுள் சமண சமயமும் ஒன்று. சமண சமயத்தின் புராணங்கள் தயையே தர்மத்தின் வேர் என்று வற்புறுத்துகின்றன. ஜினேந்திர தேவன் தர்மத்தின் இறுதி எல்லையாயிருப்பது கருணை என்று கூறியிருக்கிறார். கருணையில்லாத மனிதரிடம் தர்மம் இம்மியளவும் இராது என்றும் கூறுகின்றது. மகாவீரர் பகைவனோ நண்பனோ விரோதியோ வேண்டியவனோ எல்லா உயிர்களையும் எல்லா மனிதர்களையும் ஒன்றுபோல் மதித்து எல்லோரையும் தாமாகக் கருதுதலே அகிம்சை என்று அருளிச் செய்துள்ளார்.

இந்து சமயத்தில் வேதங்கள் அன்பினையே மையமாகக் கொண்டு வாழ்க்கை நெறியை விளக்குகின்றன. இந்து வேதங்களுள் மிகவும் பழமையாகிய வேதம் ரிக் வேதம் எல்லா மாந்தரும் இணக்கமாய் வாழ்ந்து வருவார்களாக. எல்லோரும் அன்புடன் உரையாடட்டும்; அனைவர் உள்ளங்களிலும் ஒற்றுமை உணர்வு நிலவட்டும். நீங்கள் எல்லோரும் ஒருவர் மற்றவருக்கு உதவிக் கொண்டு வாழ்வீர்களாக; என்று வழிநடத்துகிறது.

தமிழகம் தந்த ஒரு நெறியாகிய சிவநெறி அன்பினையே எல்லாமாக எடுத்துக்காட்டும் நெறியாகும். தமிழ் மறைதந்த திருமூலர் பரம்பொருளாகிய சிவத்தை அன்பு என்றேகுறிப்பிடுகிறார். பரம்பொருளை அன்பே! அன்பே! யென்று அழுது அரற்றினால் அடையலாம் என்று குறிப்பிடுகிறார். அன்போடு உருகி அகம் குழைந்தால் இறைவனை எளிதிற் பெற்று அனுபவிக்கலாம் என்று குறிப்பிடுகின்றார்.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே

அன்பும் சிவமும் – பொருளும் பொருளின் பயனும் போல என்று தெளிவாகக் குறிப்பிடுகிறார். மேலும், இறையின்பத்தை ஈரமுடையவர்களே அனுபவிக்க முடியும் என்றும் குறிப்பிடுகிறார். சமய வாழ்க்கை நியதிகள், ஒழுக்கங்களெனத் திருமந்திரம் வகுத்து உரைக்கும் செய்திகளாவன.



யாவர்க்கு மாம் இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம் பிறர்க் கின்னுரை தானே

திருமூலர் எடுத்துக் காட்டும் சமய வழிப்பட்ட கடமைகள் நான்கு. அவற்றுள் ஒன்று கடவுளுக்குச் செய்யும் வழிபாடாகும். மற்றமூன்றும் உயிரினங்கள் மாட்டு அன்பு செய்வதேயாகும். பசுவிற்குப் புல் கொடுப்பதும், பசித்தவர்க்குச் சோறு வழங்குவதும் கேட்பவர் இன்ப நலம் பெறும் இனிய சொற்களை வழங்குதலும் சமய வழிப்பட்ட கடமைகளேயாம். திருமூலர் தெளிவாக – உறுதியாக எவ்வுயிர்க்கும் அன்பாக இருப்பதே ஈசனுக்கு அன்பாகும் என்று கூறியுள்ளார். சைவ உலகத்தின் செஞ்ஞாயிறு எனத் திகழும் அப்பரடிகள் எங்கும் ஈசன் இருக்கிறான் என்று கருதி, எல்லார் மாட்டும் அன்பு செய்யாதவர்கள் சமயச் சடங்குகளாகிய கங்கை, காவிரி முத– ய புண்ணிய ஆறுகளில் மூழ்கினாலும் உரிய பயனைப் பெறமுடியாதென்கிறார். நெஞ்சில் ஓடும் வஞ்சனை ஆறு, வற்றினாலேயே திருவருட்புனல் பொங்கி வழியும் என்பது அப்பரடிகள் விழுமிய கருத்து

இங்ஙனம் உலகிடை நிலவும் எல்லாச் சமயங்களும் மனித குலத்தை இன்ப அன்பு கலந்த அணைப்பில் ஒரு குலமாக்க முயலுகின்றன. மனித குலம், ஒன்று என்பதே பொது நீதி; இடையில் நிலவும் வேறுபாடுகள் வேடிக்கை மனிதரின் விளையாட்டு அமைப்புகளே ஆகும். சமயங்களின் ஒருமித்த குரல் அன்பு காட்டு; உதவி செய்; பகையை மற; பண்பு பாராட்டு; அன்புப் புனலால் தனது மாற்றார் மனம் ஆகியவைகளைக் குளிப்பாட்டு; உயிர் வர்க்கத்தின் மகிழ்ச்சிப் புனலால் எல்லாம் வல்ல இறைவனின் திருப்பாதங்களைக் குளிப்பாட்டுங்கள் என்பதேயாகும்.

## பயிற்சி

**I.** பெருவினா:

1. சமயம் என்னும் சொல்–ன் பொருள் ஆழத்தைக் குன்றக் குடி அடிகளார் எவ்வாறு விளக்குகிறார்?
2. சமயங்கள் பலவாயினும், அவற்றின் நோக்கம் ஒன்றேஎன்பதை அடிகளார் எவ்வாறு விளக்குகிறார்?
3. எதனை முதற்கடன் என்று குன்றக்குடி அடிகளார் குறிப்பிடுகின்றார்?
4. அன்பு என்னும் பண்பின் சிறப்பினை அடிகளார் எவ்வாறு விளக்குகிறார்?
5. ஏசு பெருமானை, அன்பின் திருவுருமாக அடிகளார் எவ்வாறு காட்டுகிறார்?
6. இஸ்லாமிய மதத்தின் இணையற்றகொள்கை என்று குன்றக்குடி அடிகளார் சுட்டுவது யாது?
7. அன்பு நெறி பற்றிப் புத்தபிரான் கூறுவன யாவை?
8. சமணம் எடுத்துரைக்கும் நெறியாது?

9, அப்பரடிகளின் விழுமிய கருத்தாக அடிகளார் கூறுவன யாவை?

10. சமயங்களின் ஒருமித்த குரல் என, குன்றக்குடி அடிகளார் கூறுவன யாவை?

**II.** நெடுவினா:

1. வாழ்க்கையில் ஏற்பட வேண்டிய மாறுதல் அல்லது சமயங்கள் ஒரு குர– ல் ஓதுவனவாகக் குன்றக்குடி அடிகளார் கூறுவன யாவை?
2. சீனநாட்டு ஞானி கன்பூஷியஸ் காட்டும் அன்பு நெறியைத் தொகுத்து எழுதுக.
3. திருமூலர் காட்டும் அன்பு நெறியையும் வாழ்க்கை நியதிகளையும் தொகுத்து எழுதுக.
4. மனிதகுலம் ஒன்று என்பதே சமயங்களின் பொது நீதி என்பதைக் குன்றக்குடி அடிகளார் வழிநின்று நிறுவுக.

**III.** மொழித்திறன் வளர்பயிற்சி:

இப்பாடத்தின் பிழிவாக நீ உணரும் சமயநல– ணக்கக் கருத்துகளைப் பள்ளியில் ஆங்காங்கே எழுதி வைக்க. தாயுமானார், வள்ளலார் ஆகிய சான்றோர் பாடல்களைப் படித்துச் சமயப் பொதுமை அறிந்து மகிழ்க.

2. அடைப்புக் குறிகளைப் பயன்படுத்துதல்:

விரித்துக் கூறுதல், விளக்கிக் கூறுதல், மேற்கோளுக்கான ஆதார நூல்கள் எடுத்துக் காட்டுதல் போன்றவற்றைக் குறிப்பதற்குச் சொற்றொடருக்குள் பிறைவடிவ அடைப்புக்குறியிட்டு எழுதுதல் வேண்டும்.

1. நிகழும் திருவள்ளுவராண்டு 2034 வைகாசித்திங்கள் முப்பதாம் நாள் (11–06–2003) வெள்ளிக்கிழமை காலை 8–30 முதல் 10–00 மணிக்குள் திருமணம்
2. இயந்திர நாகரிகமும் பொருட்கவலையும் எல்லாரையும் (செல்வர், வறியவர் என்ற வேறுபாடில்லாமல்) ஆட்டிப் படைக்கின்றன.

3. விண்ணையிடிக்கும் தலையிமயம் (பாரதி பாடல்கள்: செந்தமிழ்நாடு–9)

3. தமிழ்ப் பழமொழிகளுக்கு இணையான ஆங்கிலப் பழமொழிகளைக் கண்டு எழுதுக.

1. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்
2. மின்னுவதெல்லாம் பொன்னில்லை
3. சிறுதுளி பெருவெள்ளம்
4. கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை
5. தானாடாவிட்டாலும் தன் தசையாடும்
6. தாயைப் போலப் பிள்ளை நூலைப் போலச் சேலை.



4. ந ண–ன ஒ– வேறுபாடு அறிந்து ஒ– க்க; பொருள் வேறுபாடு உணர்ந்து பயன்படுத்துக.

| | | |
|---|---|---|
| அணல் | – | தாடி |
| அனல் | – | நெருப்பு |
| ஆணி | – | இரும்பால் ஆன ஆணி |
| ஆனி | – | தமிழ்மாதம் |
| ஊண் | – | உணவு |
| ஊன் | – | இறைச்சி |
| கணம் | – | கூட்டம் |
| கனம் | – | பாரம் |
| பேண் | – | காப்பாற்று |
| பேன் | – | தலையில் வாழும் பேன் |
| மணம் | – | நறுமணம் |
| மனம் | – | உள்ளம் |
| மணை | – | உட்காரும் பலகை |
| மனை | – | வீடு |
| மாண் | – | பெருமை |
| மான் | – | புள்ளிமான் |
| முந்நாள் | – | மூன்று நாள் |
| முன்னாள் | – | முந்தைய நாள் |
| தேநீர் | – | தேயிலை நீர் |
| தேனீர் | – | தேன்போலும்இனிய நீர் |
| தினை | – | (தாவரவகை) தானியவகை |
| திணை | – | ஒழுக்கம், நிலம் |
| கனை | – | குதிரை கனைக்கிறது |
| கணை | – | அம்பு |

மரம் – மறம்
மனிதர்க்கு உரியது மறம்; (வீரம்)
அன்றேல் அவர் மரம் !

ஊன் – ஊண்
ஊண் உயிரிகளின் உணவு;
ஊன் உயிரிகளின் உடல் பகுதி.

கல் –கள்
மலையில் இருப்பது கல்;
பனையில் இருப்பது கள்.

பரவை – பறவை
பரந்து இருப்பதால் கடலைப் பரவை என்றனர்;
பறந்து வருவதால் புள் இனத்தை ப் பறவை என்றனர்.

இரத்தல் – இறத்தல்
பண்டைய புலவோர்
இரத்த– லும் இறத்தல் (உயிர்விடுதல்)
நன்றெனா வாழ்ந்தனர்

பரி – பறி
அக்காலக்  கள்வர்கள் பரி (குதிரையில்) வந்து,
(வழிப்பறி) பறித்தல் செய்தனர்.

கரி – கறி
கரி  அடுப்பில்   கறி  சமைப்போரும் உண்டு.

**5.** பொருள் வேறுபாடு உணர்ந்து வாக்கியங்களில் அமைத்து எழுதுதல்.

அரி – அறி
காக்கும் கடவுள் அரி; (திருமால்)
என்பதை நன்றாய் அறி. (நினை)

பனி – பணி
பனி யில்  நனைந்து (பனிக்காலம்)
பணி செய்தால் பிணி வரும் (வேலை)

களி – க–
நளனைப் பிடித்திருந்த க–  நீங்கியது (சனி)
நளனும் களிப்படைந்தான் (மகிழ்வு)

விலை –விளை
விளைச்சல் மிகுந்ததால்
விலை  குறைந்தது

ஒ–  – ஒளி
செவியால் கேட்கும் ஒ– யும் நன்று
கண்ணால் பார்க்கும் ஒளியும் நன்று

விளி – விழி
விளிப்பு ஒ–  கேட்டேன் (அழைப்பு)
விழிகளைத் திறந்தேன் (கண்விழி)

ஒரு – ஒறு
ஒரு ரூபாய் ஒறுப்புக் கட்டணம்
(தண்டனை)

மனம் – மணம்
மலரின் மணத்தில் மனத்தைப் பறிகொடுத்தேன்.

# 7. கல்வெட்டுகள்

– தி. வை.சதாசிவப் பண்டாரத்தார்

வடவேங்கடம் தென் குமரிக்கு இடைப்பட்ட நம் தமிழகமானது பெரியனவும் சிறியனவும் ஆகிய திருக்கோயில்கள் பலவற்றைத் தன்னகத்துக் கொண்டு விளங்குவதை யாவரும் அறிவர். நம் நாட்டில் அத்துணைக் கோயில்கள் இருப்பதற்குக் காரணம், பண்டைத் தமிழ் வேந்தர்களும், குறுநில மன்னர்களும் அரசாங்கப்பணி புரிந்த அரசியல் தலைவர்களும், சமயப்பற்றுடையவர்களாய்த் திகழ்ந்த தமிழ் நாட்டுச் செல்வர்களும், பிறஅன்பர்களும் தமக்குத் தொடர்புடைய நகரங்களிலும் ஊர்களிலும் தம் வழிபடு கடவுளர்க்குத் திருக்கோயில்கள் அமைத்து விழா நிகழ்த்தத்தொடங்கியமையே யாகும். அக்கோயில்கள் எல்லாம் நம் முன்னோருடைய சமயப் பற்றையும் பெருமையையும் நம்பினோர்க்கு அறிவுறுத்தும் நினைவுச் சின்னங்களாகவும், வானளாவ உயர்ந்து காண்போர் கண்களைக் கவரும் பெருமித முடையனவாகவும் இக்காலத்தும் நின்று நிலவுதல் காணலாம்.

கோயில்களின் உள்ளே சென்று, கருப்ப இல்–ல் எழுந்தருளியுள்ள இறைவனை வணங்கி, அக்கருப்ப இல்லைச் சூழ்ந்துள்ள பிரகாரத்தைச் சுற்றிவரும்போது கருங்கற் சுவர்களின் மேல் வரிசை வரிசையாக எழுத்துகள் வரையப்பட்டிருத்தலைப் பார்க்கலாம். அவ்வெழுத்துகள் சிற்றுளி கொண்டு கல்தச்சர்களால் பொறிக்கப்பட்டனவாகும். அவைகளே கல்வெட்டுகள் எனவும் சிலாசாசனங்கள் எனவும் கூறப்படுகின்றன. அவற்றைப் பார்த்தவர்கள் எழுத்துகள் தமக்கு விளங்காமையால், அவைகளெல்லாம் தேவர்கள் தம் தெய்வ மொழியில் முற்காலத்தில் வரைந்து வைத்தவையாதல் வேண்டும் என்று சொல்–வந்தனர்.

அத்தகைய நிலையில் நாம்இருந்த காலத்தில் அக்கல்வெட்டுகள் நம் தாய்மொழியாகிய தமிழில் எழுதப் பெற்றவைகளே என்பதை நன்குணர்ந்து நமக்கு அறிவுறுத்தியவர்கள் மேல் நாட்டுப் பேரறிஞர்களேயாவர். அவர்களுள் ராபர்ட் சிவெல், டாக்டர் கீலஹார்ன். டாக்டர் பர்னல், டாக்டர் பூலர், டாக்டர் ஷீல்ட்ஷ் முதலானோர் குறிப்பிடத்தக்கவர் ஆவர். அவர்களுடைய ஊக்கமும், உழைப்பும் இல்லையேல் அவைகள் காலப்போக்கில் அழிந்து பயன்படாமல் போயிருக்கும் என்பது திண்ணம். இந்திய அரசாங்கத்தினரும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கல்வெட்டிலாகாவும் புதைபொருள் ஆராய்ச்சி இலாகாவும் நிறுவித் தக்க அறிஞர்களைக் கொண்டு கோயில்களிலுள்ள கல்வெட்டுகளைப் படி எடுப்பித்தும், புதைபொருள் ஆராய்ச்சி செய்வித்தும் அவற்றால் அறியக் கிடக்கும் பழைய வரலாறுகளை ஆராய்ந்து வெளியிடுமாறு செய்தனர். அவற்றின் பயனாகப் பல நூற்றாண்டுகளாக நாம் அறிந்து கொள்ள முடியாத நிலையில் மறைந்து கிடந்த நம் தமிழக வரலாறு சிறிது சிறிதாக வெளிவரத் தொடங்கியது. அன்னியர் ஆட்சியினால் நம் நாட்டில் பல தீமைகள் ஏற்பட்டவை உண்மையெனினும், அதனால் சில நன்மைகளும் கிடைத்துள்ளமையை நாம் எளிதில் மறந்துவிடமுடியாது. அத்தகைய நன்மைகளுள் நமது பழைய வரலாற்றைநாம் அறிந்து கொள்ளுமாறு அரசாங்கத்தினர் கல்வெட்டிலாகா மூலம் செய்து வந்த அருஞ்செயல்கள் நம்மனோரால் பெரிதும் பாராட்டற்குரியனவாகும்.

இனி, கல்வெட்டுகள் நம் நாட்டில் முத— ல் எங்ஙனம் தோன்றின என்பதை ஆராய்ந்து காண்போம். பகைவர் முன்னின்று ஆற்றலோடு போர்புரிந்து உயிர் துறந்த வீரர்களை நினைவு கூர்தற் பொருட்டு அவர்கள் இறந்த இடங்களிலாதல் அல்லது வேறு தொடர்புடைய இடங்களிலாதல் நடுகல் ஒன்றமைத்து விழா நடத்திப் பாராட்டுதல், முற்காலத்தில் தமிழ் மக்கள் கைக் கொண்டிருந்த ஒரு பழைய வழக்கமாகும். இவ்வுண்மையைப் பழைய தமிழ் நூலாகிய தொல்காப்பியத்திலுள்ள,

காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்
சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்தலென்
றிருமூன்று வரையிற் கல்லொடு புணர

வெட்சித்திணை – 5

என்னும் சூத்திரப்பகுதியினால் நன்குணரலாம். அந்நடுகல்— ன் மேல் போர்க்களத்தில் இறந்த வீரனின் பெயரும் பெருமையும் வரையப்படும் வழக்கம் பண்டைக் காலத்தில் இருந்தது என்பது கடைச்சங்கப் புலவர்களின் பாடல்களால் புலப்படுகின்றது. அதனை,

“நல்லமர்க் கடந்த நாணுடை மறவர்
பெயரும் பீடும் எழுதி யதர்தொறும்
பீ— சூட்டிய பிறங்கு நிலை நடுகல்”
என்னும் அகநானூற்றுப் பாடலும்,
“அணிமயிற் பீ— சூட்டிப் பெயர் பொறித்
தினிநட் டனரே கல்லும்;”

– என்னும் புறநானூற்றுப் பாடலும்;

“நல்வழிக் கொடுத்த நாணுடை மறவர்
செல்லா நல்— சைப் பெயரொடு நட்ட
நல்லேசு கவலை யெண்ணுமிகப் பலவே.” –வரிகள் 387–389

என்னும் மலைபடுகடாம் அடிகளும் தெள்ளிதின் உணர்த்துதல் காணலாம், அந்நூல்களை நுணுகி ஆராயுமிடத்துப் பகைவர் முன்னின்று அஞ்சாமல் போர்புரிந்து புகழுடன் இறந்த வீரர்களின் நடுகற்களின் மேல் பொறிக்கப்பட்ட அவர்களுடைய பெயரும் பீடுமே நம் நாட்டில் முத— ல் தோன்றிய தமிழ்க் கல்வெட்டுகள் என்பது ஐயமின்றித் துணியப்படும்.

கி.பி. ஏழாம் நூற்றாண்டின் இறுதியிலும் எட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் நிலவிய பேரரசரும் சைவசமயக் குரவராகிய சுந்தரமூர்த்திகளின் அரிய நண்பரும் ஆகிய சேரமான் பெருமாள் நாயனார் தாம் இயற்றியுள்ள திருவாரூர் மும்மணிக் கோவையில்,

பட்டோர் பெயரும் ஆற்றலும் எழுதி
நட்ட கல்லும் மூதூர் நத்தமும்

திருவாரூர் மும்மணி – 16

என்றுகூறியிருத்தலால் கடைச்சங்கநாளி— ருந்த அவ்வழக்கம் அச்சங்ககாலத்திற்குப் பின்னரும் தொடர்ந்து வந்துள்ளது என்பது நன்கு புலனாகிறது, அக்காலப் பகுதியில் நம்



தமிழ் நாட்டில் சமண முனிவர்கள் தங்கி ஆங்காங்குச் சங்கங்கள் அமைத்துத் தம் சமயத்தையாண்டும் பரப்பி வந்த செய்தி வரலாற்றறிஞர் பலரும் அறிந்ததொன்றாம். அம்முனிவர்கள் உண்ணா நோன்பியற்றி உயிர்நீத்த இடங்களில் அவர்கள் பால் அன்பு பூண்டொழுகிய அரசியல் தலைவர்களும் மாணவர்களும் அன்னாரின் பெயர்களையும் அருஞ்செயல்களையும் பொறித்துவைத்திருக்கின்றனர். அத்தகைய கல்வெட்டுகளை மலைப்பாறைகளிலும் குன்றுகளிலும் குகைகளிலும் பார்க்கலாம். செஞ்சிக்கடுத்த திருநாதர் குன்றிலும் திருநெல்வே— மாவட்டத்தில் உள்ள ஆனை மலையிலும் திருச்சிராப்பள்ளிக் குன்றிலும் அக்கல்வெட்டுகள் இக்காலத்தும் காணப்படுகின்றன. எனவே, நம் தமிழகத்தில் பண்டைய நாள்களில் அருஞ்செயல்புரிந்து இறந்து பட்ட போர் வீரர்களின் பெயரையும் ஆற்றலையும் உணர்த்தும் முறையில் நடுகற்களின் மேல் முத— ல் தோன்றிய தமிழ்க் கல்வெட்டுகள், பிறகு சமணமுனிவர்களின் சமாதிகளிலும் கருங்கற்படுக்கைகளிலும் பொறிக்கப்பட்டு, அதன் பின்னர் அரசர்களும் பிறரும், எடுப்பித்த கருங்கற்கோயில்கள் பலவற்றிலும் வரையப்பட்டன என்பது தெள்ளியது. இனி கோயில்களில் கல்வெட்டுகளைப் பொறிக்கத் தொடங்கியமைக்குக் காரணம் யாது என்பதை ஆராய்வோம்.

கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு முடிய நம் தமிழ் நாட்டில் ஆட்சி புரிந்த பல்லவ அரசர்கள் முத— ல் கருங்கற் கோயில்கள் அமைத்தனர். அவர்களுக்குப் பிறகு, அரசாண்ட சோழ மன்னர்கள் சைவ சமயத்தில் பெரிதும் ஈடுபாடுடையவர்களாயிருந்தமையால் தமிழகத்தில் யாண்டும் கருங்கற் கோயில்கள் எடுப்பித்துப் பெரும் புகழ் எய்தினார்கள். அங்ஙனம் பாண்டிவேந்தர்களும் தம் ஆட்சிக்குப்பட்டிருந்த நாடுகளில் கருங்கற்கோயில்கள் பலவற்றைஅமைத்தார்கள். பேரரசர்களின் செயலைப் பின்பற்றிக் குறுநில மன்னர்களும் அரசியல் தலைவர்களும் தமக்குத் தொடர்புடைய ஊர்களில் பல கோயில்கள் கட்டினார்கள். அக்கோயில்கள் எல்லாவற்றிலும் நாள் வழிபாடும் திங்கள் விழாக்களும் ஆண்டு விழாக்களும் சிறப்பாக நடைபெற்றுவரும்பொருட்டு அவற்றைஎடுப்பித்த பெரு வேந்தர்களும் சிற்றரசர்களும் பெரும் பொருளும் நிலங்களும் வழங்கினர். அவர்களைப் போல் சமயப்பற்றுடைய பிறஅன்பர்களும் கோயில்களுக்கு நிவந்தங்கள் அளித்துப் பலவகைப்பட்ட அறங்கள் புரிய முன் வந்தனர். அவர்கள் எல்லோரும் தாம்கோயில்களுக்கு நிவந்தமாக அளித்தவற்றைவிளக்கமாக அவ்வக் கோவில்களின் கருங்கற் சுவர்களில் வரைந்து வைப்பாராயினர். சில சமயங்களில் அவற்றின் படியொன்றைச் செப்பேடுகளில் பொறித்து உரிய கோயிலுக்குக் கொடுப்பதும் உண்டு. அவர்கள் அவ்வாறு செய்து வந்தமைக்குக் காரணம் அவ்வறங்கள் இடையில் நின்றுபோகாமல் எக்காலத்திலும் நன்கு நடைபெற்று வருதல் வேண்டும் என்றஆர்வமேயாம். அன்றியும் அவை கோயில்களுக்குரிய தக்க ஆதாரமாக அமைந்து என்றும் பயன்பட வேண்டும் என்பதுமாம்.

கோயில்களுக்கு விடப்பட்டுள்ள நிவந்தங்களைப் பலரும் உணர்ந்து அங்கு நடைபெற வேண்டிய நாள் வழிபாடு, திங்கள் விழா, ஆண்டு விழா முதலான எல்லாம் முறைப்படி தவறாமல் நிறைவேறி வருகின்றனவா என்று ஆராய்வதற்குப் பயன்படுமாறு பொதுமக்கள் எல்லாரும் பார்க்கக் கூடிய புறச் சுவர்களின் மேல் கல்வெட்டுகள் வரையப்பட்டுள்ளமை அறியத்தக்கதாகும். அக்காலத்தில் கோயில்களுக்குத் திருப்பணிபுரிய விரும்பும் அன்பர்கள் முத— ல் அரசாங்கத்தினரிடம் உத்தரவு பெற்று, அக்கோயில்களிலுள்ள கல்வெட்டுகள் எல்லாவற்றையும் படி எடுத்து வைத்துக்கொண்டு, திருப்பணி முடிவெய்திய பின்னர், அரசியல் அதிகாரிகள் பார்த்துக் குறிப்பிட்ட

இடங்களில் அவற்றைமீண்டும் எழுதுவித்தல் வேண்டும். இது பண்டைத் தமிழ் வேந்தர்களது ஆணையாகும். இதனால், கல்வெட்டுகள் கோயில்களுக்கு எத்துணை இன்றியமையா ஆதாரங்களாக அரசர்களால் கருதப்பட்டு அந்நாளில் பாதுகாக்கப்பட்டு வந்தன என்பது தெள்ளிதிற் புலனாதல் காண்க.

இனி, கோயில்களில் நாள்தோறும் நிகழ்தற்குரிய வழிபாடுகளும், விழாக் காலங்களில் நடைபெறவேண்டிய சிறப்பு நிகழ்ச்சிகளும், பகலும், இரவும் இடையீடின்றி எரிக்கப்படும் நந்தாவிளக்குகளும், அங்குப் பணிபுரியும் தேவகன்மிகளின் கடமைகளும், அங்குள்ள அணிகலன்கள், வெள்ளிக் கலங்கள், செப்புக்கலங்கள் முத– யவற்றின் பெயர்களும், அவற்றின் எடைகளும், கோயில், கோபுரம், மண்டபம், திருச்சுற்று மாளிகை, படிமம் முத– யவற்றின் பெயர்களும், அவற்றினை அமைத்தோர் பெயர்களும் கல்வெட்டுகளில் விளக்கமாகக் குறிக்கப்பட்டிருத்தல் காணலாம்.

இங்ஙனம் கோயில்களுக்குத் தொடர்புடைய செய்திகள் பலவற்றையுணர்த்தும் கல்வெட்டுகளேயல்லாமல் வேறு செய்திகளைக் கூறும் கல்வெட்டுகளும் கோயில்களில் பொறிக்கப்பட்டுள்ளன. அவற்றில் அரசர்கள் ஊர்ச் சபைகளுக்கும் கோயில்களுக்கும் அனுப்பிய திருமுகங்களும், அரசாங்க அறிக்கைகளும், குறுநில மன்னர்கள் தமக்குள் செய்து கொண்ட உடன்படிக்கைகளும், அரசர்கள் பொது மக்களுள் சில வகுப்பினருக்கு வழங்கிய உரிமைப் பத்திரங்களும், கிராம சபைகள் அமைத்தற்குரிய விதிகளும், அதில் உறுப்பினராதற்குரியவர்களின் தகுதியும் அன்னோரின் கடமையும், அச்சபையார் செய்த சில குறிப்பிடத்தக்க முடிபுகளும், அரசர்கள் அரசியல் அதிகாரிகள் முதலானோரின் வீரச் செயல்களையுணர்த்தும் பாடல்களும், அரசியல் தலைவர்களுக்கும் புலவர்களுக்கும் மருத்துவர்கட்கும் கல்லூரி கட்கும் நூல் நிலையங்கட்கும் அரசர்களும் பிறரும் வழங்கிய இறையி– நிலங்களும் வரையப்பட்டிருக்கின்றன. அவற்றால் பண்டைத் தமிழ் வேந்தர்களின் அரசியல் முறைகளும், கிராம ஆட்சியும் சமுதாய வாழ்க்கையும், சமய நிலையும் நாகரிகமும், கல்வி, கைத்தொழில், வாணிகம் முத– யனவும் அந்நாளில் எவ்வாறு இருந்தன என்பதை நன்கறியலாம்.

பொதுவாகக் கல்வெட்டுகளை நோக்கின் முத– ல் ஸ்வஸ்திஸ்ரீ என்றமங்கல வாசகமும், பிறகு அக்கல் வெட்டுத் தோன்றிய காலக்குறிப்பும், பின்னர் கல்வெட்டுச் செய்திகளும், அதன் பின்னர் அதற்குத் தொடர்புடையவர்களின் கையெழுத்துகளும், இறுதியில் இது பன்மாகேஸ்வர ரக்ஷை; இது ஸ்ரீ வைஷ்ணவரக்ஷை; இவ்வறங்காத்தார் திருவடி என் தல்ல மேலன; அறமறவற்க; – அறமல்லது துணையில்லை; என்றஓம்படைக்கிளவிகள் ஒன்றாயினும் சிலவாயினும் காணப்படும். சில கல்வெட்டுகளில் ஓம்படைக்கிளவியோடு அவ்வறத்தைச் சிதைத்தார் அச் செயலால்அடையும் பழி பாவங்களும் சேர்த்து வரையப்பட்டுள்ளன. அவை 'இது இறக்குவான் கங்கையிடை குமரியிடை எழுநூற்றுக்காதமும் செய்தார் செய்த பாவமும் எய்துவான் இதற்குத் தீங்கு வேண்டுவான் வழி அறுக; இது விலக்குவான் கங்கையிடை குமரியிடை ஏழு நூற்றுக்காதமும் செய்தார் செய்த பாவமும் எய்துவான் இதற்குத் தீங்கு வேண்டுவான் வழி அறுக; இது விலக்குவான், கங்கையிடை குமரியிடை குராற் பசு கொன்றான் செய்த பாவங் கொள்வான்' என்பனவும் பிறவுமாம்.

கல்வெட்டுகளில் காணப்படும் காலக்குறிப்புகள் எல்லாம் அந்நாட்டு வேந்தரது ஆட்சியாண்டேயாகும். சில கல்வெட்டுகளில் அரசனது ஆட்சியாண்டோடு சகாப்தமும் க– யப்தமும் கொல்லம் ஆண்டும் குறிக்கப்பட்டுள்ளன. அரசனது ஆட்சியாண்டிற்கு



முன் அவனுடைய வீரச்செயலும் சிறப்புப் பெயரும் இயற் பெயரும் பொறிக்கப்படுவது பழைய வழக்கம். அதோடு இல்லாமல் மெய்க்கீர்த்தி அமைத்து ஆட்சியாண்டு வரும் முறை, முதல் இராசராசசோழனால் கி.பி 893 –ம் ஆண்டில் முத– ல் தொடங்கப்பட்டது. அவனைப் பின்பற்றி மற்றஅரசர்களும் மெய்க்கீர்த்தி அமைத்துக் கல்வெட்டுகள் வரையத் தொடங்கினர். அரசனுடைய ஆட்சியாண்டு ஏறஏறமெய்க்கீர்த்தியும் புதிய புதிய செய்திகளோடு வளர்ந்து கொண்டே போகும். அதன் துணைக் கொண்டு ஒவ்வொருவேந்தருடைய ஆட்சியிலும் எவ்வெவ்வாண்டில் எந்த எந்த நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன என்பதை ஆராய்ந்து அறிந்து கொள்ளலாம். ஆகவே மெய்க்கீர்த்திகளோடு அமைந்த கல்வெட்டுகள் எல்லாம் வரலாற்று ஆராய்ச்சிக்கு சிறந்த ஆதாரங்களாக இருத்தல் உணரற்பாலதாகும்.

நம்நாட்டு வரலாற்று ஆராய்ச்சிக்கு இன்றியமையாதனவாக உள்ள கல்வெட்டுகள் எல்லாம் படியெடுத்து அச்சிடப்பெற்று வெளிவரின், உண்மையான பல பல வரலாறுகளை நாம் அறிந்து மகிழலாம் என்பது திண்ணம்.

## பயிற்சி

I. பெருவினா:

1. சிலாசாசனங்கள் எனப்படுவன யாவை?
2. கல்வெட்டுத்துறையால் தமிழர்க்குக் கிடைத்த நலங்கள் யாவை?
3. நடுகல் என்பது யாது? அதன் பயன் குறித்து எழுதுக.
4. கல்வெட்டு வளர்ச்சிக்குச் சமண முனிவர்கள் எவ்வகையில் காரணமாயினர்?
5. கல்வெட்டுகளின் பொதுவான இயல்புகளை விளக்கி எழுதுக.
6. மெய்க்கீர்த்தி – குறிப்பு வரைக.

II. நெடுவினா:

1. கல்வெட்டுஇயல் வளர்ச்சிக்குத் தமிழகத் திருக்கோயில்கள் உதவிய பாங்கினை விவரி.
2. தமிழக வரலாற்றைஅறிந்து கொள்வதற்குக் கல்வெட்டு எவ்வாறு உதவுகிறது என்பதனை விளக்கி எழுதுக.

III. மொழித்திறன் வளர்பயிற்சி:

1. பத்திரங்கள், விற்பனைமுறி, குடிக்கூ– முறி முத– யவை தனிப்பட்ட மொழிநடைக்கண் அமைந்து விளங்குகின்றன. மாணாக்கர் அவ்வகைப்பட்ட ஆவணங்களைப் படித்துப் பார்க்கவும் எழுதவும் பயிலுக.
2. பள்ளிகளில் இயங்கும் மன்றங்கள் வழியாகத் தீர்மானங்கள் இயற்றவும் தொடர்புடைய துறைகளுக்கு விடுக்கவும் பழகுக.

   எ.கா: பதினைந்து நாள்களுக்கு ஒருமுறைஇலக்கிய மன்றம் கூடுவது எனத்தீர்மானிக்கப்படுகிறது.

2. குழந்தைகள் தினவிழா – நிகழ்ச்சியை மாணவர்கள் முற்றிலும் பங்கேற்று நடத்துவது என்று தீர்மானிக்கப்படுகிறது.

ஓர் உரைநடைப் பகுதியைப் படித்துக்காட்டும் பொழுது பொருளுணர்ச்சிக் கேற்பக் குரல் ஏற்றத் தாழ்வு, விரைவு, அழுத்தம், நிறுத்தம் போன்றவற்றைக் கையாளுதல் வேண்டும். அவ்வண்ணம் படித்துப்பழகுக.

(எ.கா)

உலகினரின் பாவத்தைத் தமது செந்நீரால் கழுவிய இயேசு பெருமான் அன்பின் திருவுருவம்; அவரருளிய மலைப்பொழிவு அன்புப்பொழிவு; வையகத்தை ஒருவரையொருவர் அன்பு கொண்டு ஒழுகுங்கள்; பகைமை பாராட்டாதீர்கள்; மன்னிக்கும் குணத்தினைப் பெறுங்கள்; எல்லாருக்கும் எப்பொழுதும் அன்பு காட்டுங்கள் என்று வையகத்தை வழிநடத்தினார். கருணையுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் மீது கருணை பொழியப்படும் என்றவிவி– ய உரை எண்ணத்தக்கது. அர்ச். பிரான்ஸிஸ் என்னும் பெரியார், 'இறைவா நான் அன்பு விதையை விதைப்பேனாக என்றும் மக்கள் என்னிடம் அன்பு செலுத்துவதற்கு முன் நான் அவர்களிடம் அன்பு காட்டுவேனாக' என்றும் உரைத்த உரை உணரத்தக்கது.

2. கலப்புநடை தவிர்த்துத் தமிழ்ப் படுத்துக.

1. அமிர்தம் போல் வர்ஷித்த மழை கண்டு ஜனங்கள் சந்தோஷம் அடைந்தார்கள்.

2. மகான்களுடைய ஆசீர்வாதத்தால் க்ஷேமமாயிருப்பாய்!

3. பா– ய விவாஹம் சர்க்காரால் தடை செய்யப்பட்டுவிட்டது.

4. உனது விஞ்ஞாபனம் எனக்கு ஸம்மதமில்லை

5. கும்பாபிஷேக வைபவம் பூர்த்தியாயிற்று.

# 8. தமிழக மகளிர்

– அ.காமாட்சி குமாரசாமி

மனைக்கு விளக்காகிய வாணுதல் என்பதற்கு இணங்க வீட்டின் விளக்கைப் போல விளங்குபவர் மகளிர். வீடுதோறும் செம்மை விளங்கின் நாடு தானாகவே செம்மையுறும் என்பது உலகம் கண்ட உண்மை. எனவே வீட்டின் விளக்கைப் போல விளங்கிய மகளிரின் அருமை பெருமைகளை ஆராய்வோம்.

தமிழகம் என்பது காலங்கடந்த சொற்றொடராய்த் திகழினும், பிற்காலத் தமிழகப் பண்பாட்டிற்கும் தாயகமாய் விளங்கியது சங்ககாலப் பண்பாடு. எனவே, அக்காலத்து மகளிரின் தன்மைகளை ஆராய்வதே தகுதியுடையதாகும். பண்டைத் தமிழ் மகளிரை நினைத்த மாத்திரத்தே பெரும் படை போன்றமகளிர் தொகுதியே மனக்கண் முன் வந்து நிற்கின்றது. அக்கூட்டத்தில் சிறப்புறத்தோன்றி முன்னிற்போருள் ஔவையார் போன்றபெண்பாற் புலவர் பலர். கோப்பெருந்தேவி, பூதப்பாண்டியன் மனைவி போன்றஅரசியர் சிலர்; கண்ணகி, மணிமேகலை போன்றகாவியத் தலைவரும் உளர். இவர்தம் பண்புகளையெல்லாம் இச்சிறு கட்டுரையில் எடுத்தியம்புதல் இயலாது. எனவே, இங்கொருவரும் அங்கொருவருமாக வீட்டு வாழ்க்கையிலும் நாட்டு வாழ்க்கையிலும் விளங்கிய தமிழக மகளிரின் தன்மைகளைக் காண்போம்.

## வீட்டு வாழ்க்கை

மனையுறைமகளிர், உயிரென விளங்கிய தம் கணவரைப் பேணியும், பெண்ணின் பெருமையாய்த்தம் திண்ணிய கற்பினைக்காத்தும், மனத்தை மயக்குறும் மக்களை மாண்புறவளர்த்தும், வருந்தி வரும் விருந்தினரை ஓம்பியும், இடும்பையெனக் கருதாது குடும்பச் சுற்றத்தைத் தழுவியும், கடவுளை வணங்கியும், கவின் கலை வளர்த்துத் துன்பந் துடைத்து இன்பம் பெருக்கியும் வாழ்ந்தனர்.

## கணவனைப் பேணல்

கணவன் மனைவியென்றஇருவரின் தொடர்பைப் பல்வகை உவமைகளாற் கூறுவர் புலவர்.

உடம்பொ டுயிரிடை யன்ன மற்றன்ன
மடந்தையொ டெம்மிடை நட்பு

என்றுரைப்பர் வள்ளுவர். இதையே – கணவனின் இன்றியமை யாமையை – மற்றோர் உவமையால் நற்றிணை குறிக்கும்,

நீரின் றமையா வுலகம் போலத்
தம்மின் றமையா நந்நயந் தருளி

என்று தலைவியின் கூற்றில் திகழும் கருத்து, கணவனையிழந்த மனைவியின் வாழ்க்கை வறண்டு விடுவதையும் விளக்குகின்றது.

கணவனை யிழந்தோர்க்குக் காட்டுவ தில்லென்று
இணையடி தொழுதுவீழ்ந் தனளே மடமொழி

என்றசிலப்பதிகார அடிகளால், செல்வம் கொழிக்கும் அரசியின் வாழ்வும் கணவனிறக்க வறண்டுவிடுவதை அறியலாம். அதே போல அறிஞர் தடுத்தும் உடன் கட்டையேறத் துணிந்த பூதப் பாண்டியன் மனைவியின் செயலும் இதனை வ– யுறுத்தும்.

அலுத்து வந்த ஆருயிர்க் கணவனுக்கு அறுசுவை உணவளித்து மகிழ்வது மனைவியின் முதற்கடமையாகும். தான் சமைத்ததை இனிது! இனிது! எனக் கணவன் சுவைத்துண்பதைக் கண்டு அம்மகள் மட்டிலா மகிழ்ச்சியடைவாள் என்பதைத்

தான்றுழந் தட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவ னுண்ட– ன்
நுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதல் முகனே

என்னும் குறுந்தொகைப் பாவடிகள் (167) எடுத்துக்காட்டும், இத்தகைய உண்மையன்பினாலே, வன்மை மிக்க ஆடவரையும் மென்மை மிக்க மகளிர் பிணித்துவிட்டனர்.

மக்கட் பேணல்

நம் நாட்டில் இன்று போல என்றுமே செல்வப் பெருமையும் இல்லா வறுமையும் ஒருங்கேயிருந்தன. மாடமாளிகை கூடகோபுரங்களிடையே கூரை குறைந்த குடிசைகளும் இருந்தன என்பதைச் சங்கப் பாடல்களால் அறியலாம். விதியின் சதியால் பொருட்செல்வம் குறைந்த விடத்தே மக்கட்செல்வம் நிறைந்து தோன்றும். காதல் வாழ்க்கையைக் கவின் பெறத் தொடங்கிய கண்ணகிக்கு மகப்பேறு குறிக்கப்படவில்லை. மாதவிக்கும் ஒரு தனி மகளேயாவாள் மணிமேகலையும். ஆனால், வறுமையில் வாடிய பெருஞ்சித்திரனார் மனைவியோ, மருங்கிற் கொண்ட பல்குறுமாக்களை உடையவளாய்க் காட்டப்படுகின்றாள். அம்மடந்தை உணவின்மை காரணமாகத் தன் குழந்தைக்கு இயற்கை உணவாய பால் கொடுக்க இயலாது போகவே, செயற்கை உணவாகிய சோற்றினை நாடிச் சென்றஅக்குழந்தை, உள்ளே வெற்றுக் கலனேயிருக்கக் கண்டு பசியால் அழ, அவள் அவ்வழுகையை நிறுத்த மறப்பு– கூறிப் பயப்படுத்திப் பார்த்தாள்; மதியங்காட்டி நயப்படுத்தவும் இயலாது, நின் தந்தை வந்தால் எங்ஙனம் முகத்திற் சினங் கொள்வோம்? காட்டு! எனக் கேட்டுப் பார்த்தாள். குழந்தையின் பசித்துன்பங்கண்டு கண்கலங்கி நிற்கும் காட்சி ஒரு புறம் (புறம் 160)

இதற்கு முற்றிலும் மாறாக மற்றொரு காட்சியும் உண்டு. செல்வக் குடியானதால், பெற்றதாய் ஒரு புறம் வீற்றிருக்க, வளர்ப்புத் தாயான செவி– த்தாய், தேன் கலந்து பாற்சோற்றினைப் பொற்கிண்ணத்தில் வைத்துக் கொண்டு சிறுகோலோச்சி அச்சுறுத்தியும், செல்லக் குழந்தையாத– ன் பசியின்றி உண்ண மறுத்துக் காற்சிலம்பதிரத் தோட்டப் பந்த– ன் முன்னும் பின்னுமாக ஓடியாடும் காட்சி மற்றொரு புறம் (நற்றிணை. 110)



என்னே இவ்விரு காட்சிகளின் இரு வேறு தன்மைகள்! முன்னையது, குழந்தையின் பசியைப் போக்கும் முயற்சி; பின்னையது, குழந்தைக்குப் பசியை உண்டாக்கும் முயற்சி, ஆயினும் வாழ்விலும் தாழ்விலும் தமிழகத் தாய்மார், தம் மக்கள் சான்றோர் எனக் கேட்ட போதுதான், ஈன்றபொழுதினும் பெரிதும் மகிழ்ந்தனர்! தாய்மையின் தகைமைக்கும் முரணாகப் பிறப்பொத்த தம் மக்களுள் அறிவுடையோரையே மிகவும் போற்றினரென்பதைப்,

பிறப்போ ரன்ன வுடன் வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயுமனந் திரியும்

என்றபுறநானூற்றடிகள் (183) விளக்கும். அது மட்டுமா? இதற்கு முற்றிலும் மாறாகத் தன் மகன் சான்றோர் பழிக்கும் தீயோன் என்றால், அதைக் கேட்டு வாழ்வதைவிட அவனைப் பெற்றவயிறு பற்றியெரிய, இவ்வயிற்றுடன் வாழ்வதைக் காட்டிலும்–இவ்வயிற்றையே கிழித்துப் பழி வாங்கிப் பின்னர் இறப்பேன் என முழங்கினள் தாய் ஒருத்தி என்றால், தமிழகத் தாய்மாரின் தாய்மைக் கடமையுணர்ச்சிதான் என்னே!

விருந்தோம்பல்:

கண்ணைக் கவரும் வண்ணப் பலகையாலும், மூக்கையீர்த்து நாக்கூறச் செய்யும் நறுமணத்தாலும், காதைத் துளைக்கும் கானப் பாட்டாலும், ஊர்க்கண் நுழைவாரை வாவென்றழைக்கும் உண்டுறைஉணவு விடுதிகள் இல்லாக் காலத்தே வாணிபம் பற்றியோ வேறு வினை பற்றியோ வீடு தேடி வரும் விருந்தினர்க்கு (அக்காரணம் பற்றியே அக்காலத்தில் விருந்து என்றசொல் புதுமை எனப் பொருள் பட்டது) வயிறார உணவளித்து, உடலாறஉறைவிடங் கொடுத்து, உள்ளங்குளிரப் புன்முறுவல் பூத்த இன்முகங்காட்டி இனியவை கூறி விருந்தோம்பல் , வீடுதோறும் இல்லறத்தாரின் இன்றியமையாக் கடமையாய் இலங்கிற்று. வறுமையில் வாடியவருங்கூடக் குப்பைக்கீரை கொய்து உப்பில்லாமல் அட்டேனும் விருந்தோம்பினர் எனப் பழம்பாடல் கூறும் .

இதனால், இல்வாழ்வாளின் இனிமையான கடமைகளுள்ளே விருந்தோம்பல் எத்துணைச் சிறப்புற்றது என்பதை அறியலாம். விருந்தோம்பலால் விருந்தினர்க்கேயன்றி, வீட்டாராகிய தலைவன் தலைவியர்க்கும் தனிப்பட்டதோர் அரும் பயனுண்டு. இஃது அவர் தம்முள்ளே தோன்றும் ஊடல் நீங்கிக் கூடுவதற்குத் தக்க வாய்ப்பளிக்கின்றதன்றோ! ஆகையாலேதான் ஒல்காப்புகழ்த் தொல்காப்பியனாரும் இதனை ஊடல் தீர்க்கும் வாயில்களுள் ஒன்றாகக் குறித்தார். என்னே விருந்தோம்ப– ன் பெருந்தன்மை!

கலையறிவு

இல்லறக் கடமைகளோடு மகளிர் கலை பல கற்றுமிருந்தனர்; கலையுணர்ச்சி பொருந்தத் தம்மை ஒப்பனை செய்து கொள்வர்; தம் சிறுவர் சிறுமியர்க்கும் கற்பனை நிறைந்த ஒப்பனைசெய்து மகிழ்வர், ஓவியம் தீட்டல், காவியம் புனைதல், ஆடல் பாடல் ஆகிய கலைத் துறைகளிலும் மகளிர் சிறந்து விளங்கினர் என்பதற்குச் சங்கப் பாடல்கள் சான்று பகரும். மாதவியின் ஆடல், பாடல் திறன், கலைத் திறனுக்கோர் மலைச்சிகரம். தினைப்புனங்காத்த கன்னியொருத்தி தன் இன்னிசையால் மதகரியையும் மயங்கி உயங்கச் செய்தாள் என்று அகநானூற்றுப் பாட்டொன்று கூறும். இவ்வருங்கலைகளேயன்றி, இக்காலத்தில் குடிசைக் கைத்தொழில்கள் எனப் பெரிதும்

பேசப்படும் நூல் நூற்பு, ஓலை வேலை முத– யனவும் நடைபெற்றன என்பதைப் பருத்திப் பெண்டிர், இரும்பனங்குடை என்னும் சொற்றொடர்கள் விளக்கும். தாய்மார் வீட்டுப்பொருள்கள், தோட்டப்பொருள்களான தென்னை, பனை முத– யவற்றின் இளங்காய்கள் முத– யவற்றால் சிறு தேர் முத– யன சிறார்க்குச் செய்து கொடுத்தனர்.

இயற்கையோடியைந்த இனிய வாழ்வு

பண்டைக்காலத்துத் தமிழக மகளிர், இயற்கையோடு இயைந்த இனிய வாழ்வுநடத்தினர். சிறுமியர் சிறுவரோடு ஆற்றோரங்களிலும், குளக் கரைகளிலும் நீராடியும் நீழ– ருந்தும் ஆரவாரம் செய்து பாராட்டிப் புகழுமாறு சிறுவர் குளக்கரையிலுள்ள உயர்ந்த மரத்தின் உச்சியில் ஏறி நீரில் வீழ்ந்து குளத்தின் அடி வரையிற்பாய்ந்து, அடி மண் கொண்டு கரை சேர்ந்து, வெற்றி கொண்டாடி மகிழ்வர் எனத் தொடித்தலைவிழுத்தண்டினார், புறநானூற்றுப்பாட்டொன்றில் (243) எடுத்துக் காட்டுவர். இளம்பருவத்திலேயே ஆடவர் வெற்றிக்கான ஊக்கமூட்டியவர் மகளிர் என்பது இதனால் விளங்குகின்றதன்றோ! இவையன்றி ஆற்றங்கரைமண– ல் பாவை விளையாட்டு, கடற்கரையில் நண்டுகளைப் பிடித்தாட்டும் அலவன் ஆட்டு, மணல் வீடு கட்டல், சிப்பி முத– யவற்றோடு விளையாடல் ஆகியவற்றிலும் மகளிர் ஈடுபடுவர். பருவ மகளிரும் காற்றோட்டமுள்ள பரண்மீதிருந்து பயிர் காத்தனர் என்பதும், முழுமதி நன்னாட்களிலும், மாலை நேரத்திலும் ஆடவரும் மகளிரும் கூடி வட்டமாய் நின்றும் கை கோத்தும் குரவைக் கூத்தாடுவர் என்பதும் அறிகிறோம். செல்வப் பெண்டிரும் மாலை நேரத்திலும், நிலாக் காலத்திலும், காற்றினையும் முழுநிலவினையும் துய்க்க நிலாமுற்றங்களி– ருந்து மகிழ்வர்.

இறைவழிபாடு

இவ்வாறு இயற்கையோடியைந்து வாழ்ந்த மகளிர், இயற்கையின் உருவாகிய இறைவனையும் பல வகையால் தொழுதனர்; சிவன், திருமால், குமரவேள், புத்தர் ஆலயங்கட்குச் சென்று வழிபட்டனர்; வீட்டிலும் மாலையில் மல்– கை மலர்ந்ததும் விளக்கினையே நெல்லும் மலருந்தூவி வழிபட்டனரென நெடுநல்வாடை என்னும் நூல் கூறும்.

நாட்டு வாழ்க்கை

இவ்வாறு வீட்டு வாழ்க்கை விளக்கும் மகளிருட் சிலர் நாட்டின் நலத்திலும் நாட்டங்கொண்டு, வெளி வாழ்க்கையிலும் வெற்றி கண்டனர்.

அறிவும் ஆற்றலும்

நாடு விட்டு நாடு சென்று நயம்படத் தூதுரைத்தனர் ஔவை மூதாட்டியார். வழக்கறிஞர் துணை நாடாது, மன்னனது மாபெரும் மன்றத்திலும் வழக்கைத் தானாகவே தன் திறம்படக் கூறிய கண்ணகியின் சொல்வன்மை போற்றற்குரியது. கரிகாற் சோழனும் பெருஞ்சேரலாதனும் வெண்ணிப் போரிற் பொருதபோது வளவன் எய்த வாளி, சேரனது மார்பு வழிச் சென்று முதுகுப் புறத்திலும் புண் செய்து விட அம் முதுகுப் புண் இழுக்குக்குரிய புறப்புண் அன்றி விழுப்புண்ணே எனினும், புறப்புண்ணாகவே கொண்டு வடக்கிருந்து உயிர் விடத் துணிந்தான் சேரன். அதே சமயத்தில் பலரும் போற்றிப் புகழும் வளவன் தன் வெற்றியைக் கொண்டாடினான். வெற்றி, பகைவனின் பண்பையும் மறக்கச் செய்து வெறியாக மாறுவது



உலகத்தியற்கை. அம்மாபெரும் வெற்றி முழக்கக் கூட்டத்திலும் பகைவனைப் பாராட்டும் பண்பு பெண்பாற்புலவர் ஒருவரிடத்துக் காணப்பட்டது. வெண்ணிக் குயத்தியார் எண்ணித் துணிந்து எடுத்துரைத்தார்.

'வென்றோய் நின்னினு நல்ல னன்றே

க– கொள் யாணர் வெண்ணிப் பறந்தலை

மிகப் புகழ் உலகம் எய்திப்

புறப்புண் ணாணி வடக்கிருந் தோனே' (புறம் 66)

என்பது அவர் பாடிய பாடல். அவ்வம்மையாரின் அறிவும் ஆற்றலும் அஞ்சாமையும், நடுவு நிலைமையும் என்னே!

இத்தகைய கல்வித் திறனேயன்றிப் பொது அறிவும் இயற்கையிலே பெற்று விளங்கினர், தமிழக மகளிர். பொற்கிண்ணத்துத்தேன் கலந்த பாற்சோற்றைஉண்ண மறுத்துச் செவி– த்தாய்க்கு ஓட்டங்காட்டிய மேற்குறிக்கப் பெற்றசெல்வப் பெண்ணுங் கூடத் திருமணத்திற்குப் பிறகு எக்காரணத்தாலோ கணவனது பொருள்வளம் சுருங்கிவிடத் தந்தை கொடுத்தனுப்பிய கொழுஞ்சோற்றையும் கொள்ள விரும்பாது, தற்கொண்டான் வளத்திற்கேற்ப நாளுக்கு ஒரு வேளை உணவே உண்ணும் நிலையைக் கண்ட செவி– த்தாய் அவளது அறிவை வியந்து பாடியதாகக் காட்டும், அப்பாட்டின் பகுதி (நற்றிணை,110) நயத்திற்குரியது.

அவள் அறிவும் ஒழுக்கமும் எங்கே கற்றாள்? பள்ளியிலும், கல்லூரியிலும் அல்ல; வாழ்க்கைப்பள்ளியில்; தமிழ்ப் பண்பாட்டுப் பள்ளியில்; குடும்பக் கல்லூரியில் கற்று அறிவு பெற்றஒழுக்கம்.

துறவும் தொண்டும்

தன்னலங்கருதாது மக்கள் நலங்கருதி மக்கள் தொண்டாற்றிய மணிமேகலை, துறவுக்கும் தொண்டுக்கும் சிறந்த எடுத்துக்காட்டு. தனி வாழ்க்கை தானாகவே அமைந்துவிட்ட கன்னிப் பெண்டிரும் தயங்காது தொண்டாற்றமுன்வரலாம் என்பதைக் காட்டும் அவளது அரிய வாழ்வு. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே என்று உணவுக் கொடை புரிந்தும் சிறைக்கோட்டமெல்லாம் அறக் கோட்டமாய் அருள் கொண்டும் பெருந்தொண்டாற்றிய மங்கை மணிமேகலை.

முதுகுடி மகளின் வீரம்

ஆடவரைப்போல் முதுகுடி மகளிர்க்கும் மறமாகிய வீரவுணர்ச்சி உண்டு என்பதையே
அடல்வேல் ஆடவர்க் கன்றியும் அவ்வில்
மடவரல் மகளிர்க்கும் மறம்மிகுத் தன்று

என்றமூதின் முல்லை இலக்கணச் செய்யுள் குறிக்கும். இவ்விலக்கணத்திற்கு இலக்கியமாய் எண்ணிறந்த பாடல்கள் புறநானூற்றில் உண்டு. கணவனும் தமையனும் களத்தில் இறக்க, மைந்தனைப் போர்க்கோலம் புனைவித்துப் போருக்கு அனுப்பிய தாயின் வீரமும் (புறம் 179) நரை மூதாட்டி தன் முதுமைப்பருவத்து அருமையாய் பெற்றஒரு தனி

மகனும் போரி– றக்க வருந்தாது, ஈன்றஞான்றினும் பெரிதும் மகிழ்ந்த தாயின் வீரமும் (புறம் 277) இப்பாடல்களிற் பொ– ந்து தோன்றும்.

இவ்வாறு வீட்டிலும் நாட்டிலும் புகழுடன் பொ– யும் மகளிர் தமக்கு மனைவியராய் வாய்ப்பதையே பெரும் பேறாகக் கருதினர் ஆடவர் என்னும் கருத்து, குறுந்தொகைப் பாட்டொன்றில் (14) சிறந்து விளங்கும். தலைவன் ஒருவன் தன்னூர்ப் பெருந்தெருவில் செல்லும் போதெல்லாம் பலரும் அவனைச்சுட்டிக்காட்டி, நம்மூர் நல்லாள் இன்னாளின் கணவன் இதோ செல்கிறான், எனக் கூறுவது, சற்று நாணத்தைத் தருவதென்றாலும், அதனையே பெரும் பேறாகக் கருதினனாம். இந்த அளவுக்குத் தமிழக மகளிர் தம் கணவன்மாருக்குப் பெருமை தேடித்தந்தனர்.

வாழ்ந்தோங்குக தமிழக மகளிரின் தனிப் பெரும் பண்பாடு.

## பயிற்சி

I. பெருவினா:

1. மனைக்கு விளக்காகிய மகளிர் வீட்டு வாழ்க்கை சிறக்க ஆற்றும் பணிகள் யாவை?
2. கணவன் மனைவி ஆகிய இருவருக்கும் இடையே இருந்த உறவின் மேன்மையை ஆசிரியர் எவ்வாறு விவரிக்கிறார்?
3. பண்டைத் தமிழகத்தின் வறுமைக் காட்சியும் வளமார்குடும்பக் காட்சியும் சங்க இலக்கியத்தில் எவ்வாறு சித்திரிக்கப் பெற்றுள்ளன?
4. தமிழக மகளிர் சிறந்த கலைஞர்களாய் விளங்கினர் என்பதனைச் சான்றுகளுடன் நிறுவுக.
5. இயற்கையோடு இயைந்த இனிய வாழ்வை நடத்தினர் தமிழக மகளிர் என்ற கருத்தை விளக்குக.
6. முது குடி மகளிரின் வீரம் குறித்துக் கட்டுரையாசிரியர் கூறுவன யாவை?
7. அறிவும் ஆற்றலும் அஞ்சாமையும் பெண்பாலாரிடம் மிக்கிருந்தன என்பதற்கு எடுத்துக் காட்டான நிகழ்வை எழுதுக.

II. நெடுவினா:

1. வீட்டு வாழ்க்கையில் மகளிர் என்றபொருள் குறித்துக் கட்டுரையாசிரியர் கூறும் கருத்துகளை விளக்குக.
2. தமிழ் மகளிர் நாட்டு வாழ்க்கையிலும் வெற்றி கண்டனர் என்பதைத் தெளிவு படுத்துக.

III. மொழித்திறன் வளர்பயிற்சி:

1. தமிழ்இலக்கிய வரலாற்றில் இடம்பெற்றுள்ள பெண்பாற் புலவர்களின் பெயர்களைப் பட்டிய– டுக.



2. இப்பாடத்தில் இடம் பெற்றுள்ள முதுகுடிமகளிரின் வீரத்தை அடிப்படையாகக் கொண்டு வீரத்தாய் என்னும் ஓரங்க நாடகம் ஒன்று அமைத்து நடித்துக் காட்டுக.
3. குறிப்பாக எழுதப்படும் சொற்களுக்கு விரிவான பொருள் அறிந்து பழகுக

| | | |
|---|---|---|
| த.நா.மி.வா | – | தமிழ்நாடு மின்சார வாரியம் |
| த.நா.கு.வ.வா | – | தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் |
| அ/மி சௌந்தரவல்– த்தாயார் | – | அருள்மிகு சௌந்தரவல்– த்தாயார் |
| அ.நி.கு எண் | – | அஞ்சல்நிலையக் குறியீட்டு எண் (பின்கோடு) |
| தொ.பே. எண் | – | தொலைபேசி எண் |
| ஆ.கா.க (எல்.ஐ.சி) | – | ஆயுள் காப்பீட்டுக் கழகம் |
| இ.ஆ.ப. | – | இந்திய ஆட்சிப் பணி |
| எஸ்.எஸ்.ஏ. (சர்வசிக்ஷா அபியான்) | – | அனைவர்க்கும் கல்வி இயக்கம் |
| இ.எஸ்ஏ | – | தொழிலாளர் ஈட்டுறுதிக் கழகம் |
| டயட் DIET | – | மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனம் |
| டிபி.இ.பி DPEP | – | மாவட்டத் தொடக்கக் கல்வித்திட்டம் |
| பெ.ஆ. கழகம் | – | பெற்றோர் ஆசிரியர் கழகம் |
| DTERT டிட்டி ஈ ஆர்ட்டி | – | ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம். |

4. கீழ்க்காணும் பத்திகளில் நிறுத்தற்குறிகளிட்டுப் பழகுக.

அ) என் பெருமானே அயோத்தி மாநகரில் அரியாசனத்தில் மன்னர் மன்னனாய் மணிமுடி தரித்துச் செங்கோலேந்தி அரசாளும் கோலத்தில் காண வேண்டிய உன்னைச் சடை முடியும் மரவுரியும் தரித்துக் கானகப் புல்– ல் அமர்ந்திருக்கக் கண்டேனே என் கண்செய்த பாவம் கட– னும் பெரிதன்றோ இந்தக் கோலத்தில் உன்னை விட்டுப் போக என்னால் இயலாது என்னா– யன்றசிறுதொண்டு செய்துகொண்டு ஈண்டுத்தான் இருப்பேன் என்று மனங்கசிந்து பேசினான்

ஆ) உலகினின் பாவத்தைத் தமது செந்நீரால் கழுவிய ஏசுபெருமான் அன்பின் திருவுருவம் அவரருளிய மலைச் சொற்பொழிவு அன்புப் பொழிவு ஒருவரையொருவர் அன்பு கொண்டு ஒழுகுங்கள் பகைமை பாராட்டாதீர்கள் மன்னிக்கும் குணத்தினைப் பெறுங்கள் எல்லோருக்கும் எப்பொழுதும் அன்பு காட்டுங்கள் என்று வையகத்தை வழி நடத்தினார் கருணை உள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள்மீது கருணை பொழியப்படும் என்ற விவி– ய அறவுரை எண்ணத்தக்கது

இ) இல்லறக் கடமைகளோடு மகளிர் கலை பல கற்றுமிருந்தனர் கலையுணர்ச்சி பொருந்தத் தம்மை ஒப்பனை செய்துகொள்வர் தம் சிறுவர் சிறுமியர்க்கும் கற்பனை நிறைந்த ஒப்பனைசெய்து மகிழ்வர் ஓவியம் தீட்டல் காவியம் புனைதல் ஆடல் பாடல் ஆகிய கலைத் துறைகளிலும் மகளிர் சிறந்து விளங்கினர் என்பதற்குச் சங்கப் பாடல்கள் சான்று பகரும் மாதவியின் ஆடல் பாடல் திறன் கலைத்திறனுக்கோர் மலைச்சிகரம் தினைப்புனங்காத்த கன்னியொருத்தி தன் இன்னிசையால் மதகரியையும் மயங்கி உயங்கச் செய்தாள் என்று அகநானூற்றுப் பாட்டொன்று கூறும்

**5.** **கீழ்க்காணும் தொடர்களில் காணப்படும் கொச்சைச்சொற்களை நீக்கி எழுதுக.**

அ) தலைக்கு சீக்கா தேச்சு முழுவனா ஒடம்புக்கு குளிர்ச்சி.

ஆ) நெல்லுச்சோறு வவுத்துக்கு நோவு தராது.

இ) பொண்ணு கண்ணாலத்துக்கு சீர் செனத்தி சேத்தி வச்சிருக்கியா?

ஈ) விடிகால ஏந்திருச்சி வெள்ளாம பாக்க போனான்.

உ) மானம் பாத்த பூமியில மழ பெஞ்சு பல வருசமாச்சு

ஊ) காத்தாடி வுட்ட மாஞ்சா கவுறு கழுத்த அறுத்தப் புடிச்சு.

**6.** **கீழ்க்காணும் தொடர்களை நல்ல தமிழில் எழுதுக.**

அ) ரோடு ரூல்ஸ் ஃபாலோ பண்ணனும்.

ஆ) ப்யூர் டமில்ல பேசணும்னு நான் டிரை பண்றேன்.

இ) எங்க பேமு– சுமால் பேமு– .

ஈ) மார்னிங் பிரஷ் பண்ணிட்டு வாக்கிங் போவேன்.

உ) ஸ்விம்மிங் ஒரு ஹெல்த்தி எக்ஸர்சைஸ்.

# 1. ஒரு நாள் கழிந்தது.

—புதுமைப்பித்தன்—

“கமலம்! அந்தக் கூஜாவிலே தண்ணீர் எடுத்தா! வெற்றிலைச் செல்லம் எங்கே?” வச்சது வச்ச இடத்தில் இருந்தால்தானே? என்று முணுமுணுத்தார் முருகதாசர்.

கையில் இருக்கும் கோரைப் பாயை விரிப்பதே ஒரு ஜாலவித்தை. நெடுநாள் உண்மையாக உழைத்தும் பென்ஷன் கொடுக்கப்படாததால் அது மத்தியில் இரண்டாகக் கிழிந்து, ஒரு கோடியில் மட்டிலும் ஒட்டிக் கொண்டிருந்தது. அதை விரிப்பது என்றால் முதலில் உதறித் தரையில் போட்டுவிட்டு, கிழிந்து கிடக்கும் இரண்டு துண்டுகளையும் சேர்த்துப் பொருந்தவைக்க வேண்டும். அதுதான் பூர்வாங்க வேலை. பின்பு விடுதலை பெற முயற்சிக்கும் அதன் கோரைக் கீற்றுகள் முதுகில் குத்தாமல் இருக்க ஒரு துண்டையோ அல்லது மனைவியின் புடவையையோ அல்லது குழந்தையின் பாவாடையையோ எதையாவது எடுத்து மேலே விரிக்க வேண்டும்.

முருகதாசரைப் பொறுத்தவரை - அது அவரது புனை பெயர் - அது இரண்டு பேர் செய்யவேண்டிய காரியம்.

மறபடியும், “கமலா!” என்று கூப்பிட்டார்.

சமையல் + உக்ராண + ஸ்நான அறை, மூன்று நான்கு கட்டுகள் தாண்டி, துண்டாக, அலாதியாக இருப்பதால் இவருடைய பாய் விரிப்புக் கஷ்டங்கள் அந்த அம்மையாருக்கு எட்டவில்லை.

சென்னையில் ‘ஒட்டுக் குடித்தனம்’ என்பது ஒரு ரசமான விஷயம். வீட்டுச் சொந்தக்காரன், குடியிருக்க வருகிறவர்கள் எல்லாரும் ‘திருக்கழுக்குன்றத்துக் கழுகு’ என்று நினைத்துக்கொள்ளுவானோ என்னமோ!



‘குடித்தனக்காரர் குடியிருக்க இரண்டு ரூம் காலி’ என்று வெளியில் போட்டிருந்த போர்டை நம்பித்தான் முருகதாசர் வீடு-வேட்டையின் போது அங்கே நுழைந்தார்.

உள்ளே வீட்டின் பாக வசதிதான் விசித்திரமாக இருந்தது. முன்பக்கம், ஒற்றைச் சன்னல் படைத்த சிற்றறை. அதற்கப்புறம் எங்கோ பல கட்டுகள் தாண்டி மற்றொரு அறை. அதுதான் சமையல் வகையறாவுக்கு. முதல் அறை படிக்க, படுக்க, நாலு பேர் வந்தால் பேச - இவை எல்லாவற்றிற்கும் பொது இடம். முத-ல், முருகதாசர் பொருளாதாரச் சலுகையை உத்தேசித்தே அதில் குடியிருக்கலாம் என்று துணிந்தார். அதனால் தமக்கும் தம் சகதர்மிணிக்கும் இப்படி நிரந்தரமான ‘பிளவு’ இருக்கும் என்று சிறிதும் எட்டி யோசிக்கவில்லை; மேலும் அவர் யோசிக்கக் கூடியவரும் அல்லர்.

பக்கத்தில் இருந்த அரிக்கன் விளக்கை எடுத்துக்கொண்டு அவர் சமையல் பகுதியை நோக்கிப் பிரயாணமானார்.

இடைவழியில், குழாயடியில் உள்ள வழுக்குப் பிரதேசம், அடுத்த பகுதிக்காரர் விறகுக் கொட்டில் முதலிய விபத்துக்கள் உள்ள ‘பிராட்வே’ யை எல்லாம் பொருட்படுத்தாது, ஒருவாறு வந்து சேர்ந்தார். சமையல் அறை வாச-ல் ஒரே புகைமயம். “கமலம்!” என்று கம்மிய குர-ல் கூப்பிட்டுக்கொண்டு உள்ளே நுழைந்தார்.

உள்ளே புகைத் திரைக்கு அப்பா-ருந்து, “வீடோ லட்சணமோ! விறகைத்தான் பாத்துப் பாத்து வாங்கிக்கொண்டு வந்தியளே! ஒங்களுக்கிண்ணு தண்ணீலே முக்கிக் குடுத்தானா? எரியவே மாட்டுதில்லை? இங்கே என்ன இப்பொ? விறகு வாங்கின சீரைப் பாத்து மகிழ வந்திட்டியளாக்கும்!” என்று வரவேற்புப் பத்திரம் வாசிக்கப்பட்டது.

“தீப்பெட்டியை இப்படி எடு! அதுக்காகத்தான் வந்தேன்!” என்று நடைப் பக்கமாகப் பின்நோக்கி நடந்தார்.

“இங்கே குச்சியுமில்லை, கிச்சியுமில்லை! அலமுவெ தீப்பெட்டி வாங்க அனுப்பிச்சேன். மண்ணெண்ணெய் விளக்கே நீங்கதான் துடைச்சுக்கொள்ளனும்!” என்றாள் கமலம்.

"குழந்தையை அந்தியிலே வெளியிலே அனுப்பிச்சையே, நான் வந்த பிறகு வாங்கிக்கொள்ளப் படாதா?" என்று அதட்டினார் முருகதாசர்.

"ஆமாம் சொல்ல மறந்தே போயிட்டுதே... செட்டியார் வந்து விட்டுப்போனார்; நாளை *விடியன்னை வருவாராம்!" என்றாள் கமலா.

முருகதாசர் இந்தப் பாசுபதாஸ்திரத்தை எதிர்பார்க்கவில்லை.

"வந்தா, வெறுங்கையை வீசிக்கிட்டுப் போகவேண்டியதுதான்! வர்ரதுக்கு நேரம் காலம் இல்லை?" என்று முணுமுணுத்துக்கொண்டே வெளியேற முயற்சித்தார்.

"அங்கே, எங்கே போயிட்டிய, ஒங்களைத்தானே! கொஞ்சம் நல்லெண்ணை வாங்கிகிட்டு வாருங்களேன்!"

"எங்கிட்ட இப்பொ துட்டுமில்லெ, காசுமில்லை" என்று திரும்பி நின்று பதிலளித்தார் முருகதாசர்.

"அதுவும் அப்படியா! இன்னா இந்தா **மிளவொட்டியிலே ***மூணு துட்டு இருக்கு; அதெ எடுத்துகிட்டுப் போங்க!"

"வந்ததுக்கு ஒரு வேலையா? அங்கே ஒரு பாடு எழுதித் தொலைக்கணும்; இங்கே உனக்கு இப்பத்தான் எண்ணெ புண்ணாக்கு. பகலெல்லாம் என்ன செய்துகிட்டு இருந்தே? இருட்னம் பொறவா எண்ணை வாங்கறது! எல்லாம் நாளைக்குப் பாத்துக்கலாம்!"

"சோம்பல் வந்தா சாத்திரமும் வரும், எல்லாம் வரும். ஏன் அண்ணைக்குப் போய் வாங்கிட்டு வரலியா? - எல்லாம் ஒங்களுக்குத்தான். இப்பத்தான் அப்பளக்காரன் வந்து கொடுத்துட்டுப் போனான்; பிரியமா சாப்பிடுவேளென்னு சொன்னேன். பின்னெ அந்தச் சின்னக் கொரங்கே என்ன இன்னும்

*விடியுமுன் என்பதன் மரூஉ.

**மிளவொட்டி (மிளகுப் பெட்டி) - ஐந்தரைப் பெட்டி என்பது சகஜமான பெயர்.

*** மூணு துட்டு - ஓர் அணா; ஒரு துட்டு என்பது பாண்டி நாட்டில் நான்கு தம்பிடி.



காணலெ! போனாப் போனதுதான்; நீங்கதான் சித்த பாருங்களேன்!"

இவ்வளவிற்கும் அவர் இருந்தால்தானே! விறகுப் பிரதேசத்தைத் தாண்டி வழுக்குப் பிரதேசத்தை எட்டிவிட்டார்.

புகையையும் பேச்சையும் தப்பி வந்தால் போதும் என்றாகிவிட்டது. முருகதாசரின் ஆஸ்தான அறையின் ஒரு விசித்திரம் என்னவென்றால் சென்னையில் 'லைட்டிங் டைம்' அட்டவணையைக்கூட மதிக்காமல் அது இருண்டுவிடும்.

இம்மாதிரி மண்ணெண்ணெய் நெருக்கடி ஏற்படாத காலங்களில் அந்த அறைக்குத்தான் முதலில் இராத்திரி. ஆனால், எண்ணெய் நெருக்கடிக் காலங்களில் சிவபிரானின் ஒற்றைக் கண் போன்ற அந்த அறையின் சன்னல், எதிர்ப்பக்கம் நிற்கும் மின்சார விளக்குக் கம்பத்திலிருந்து கொஞ்சம் வெளிச்சத்தைப் பிச்சை வாங்கும் கார்ப்பொரேஷன் தயவு வரும்வரை. ஸ்ரீ முருகதாசர் வேறு வழியில்லாமல் தெரு நடையில் நின்று அலமுவின் வருகையை எதிர்நோக்கியிருக்க வேண்டியதாயிற்று.

முருகதாசர் வானத்தை அளக்கும் கதைகளைக் கட்டுவதில் மிகவும் சமர்த்தர்; 'சாகாவரம் பெற்ற' கதைகளும் எழுதுவார். அந்தத் திறமையை உத்தேசித்து, ஒரு விளம்பரக் கம்பெனி மாதம் முப்பது ரூபாய்க்கு, வானத்தையளக்கும் அவரது கற்பனைத் திறமையைக் குத்தகை எடுத்துக்கொண்டது. அதனால் அவர் வீர புருஷர்களையும், அழியாத சித்திரங்களையும் எழுத்தோவியமாகத் தீட்டுவதை விட்டு விட்டு, சோயாபீன் முதல் மெழுகுவர்த்தி வரையிலும் வெளிநாடுகளி-ருந்து வந்து குவியும் பண்டங்களின் காவியங்களை இயற்றிக் கொண்டிருக்கிறார். 'டபாஸா' வீரிய மாத்திரையின் மீது பாடிய பரணியும், தேயிலைப் பானத்தின் சுயசரிதையும், அந்தத் தமிழ் தெரியாத வெள்ளைக்காரனையும் இவர்மீது அனுதாபம் காட்டும்படி செய்துவிட்டன. அதற்காகத்தான் அந்த மூப்பது ரூபாய்!

வீட்டு எதிரில் நிற்கும் மின்சார விளக்கின் உதவியைக்கொண்டும் பிள்ளையவர்களால் அலமுவைக் கண்டு பிடிக்க இயலவில்லை. வெற்றிலை, வேலை, குழந்தை வராத காரணம் -எல்லாம் அவரது மனத்தில் கவலையைக் கொண்டு

கொட்டின. நடையி-ருந்து கீழே இறங்கிச் சந்தின் மூலை வரை சென்று பார்த்து வரலாமா என்று புறப்பட்டார்.

பக்தி மார்க்கத்தில் ஏகாக்கிரக சிந்தையைப் பற்றிப் பிரமாதமாக வர்ணிக்கிறார்கள். மனம் ஒரே விஷயத்தில் லயித்துவிட்டால் போதுமாம். பிள்ளையவர்களைப் பொறுத்தவரை அவர் இந்தப் 'பணம்' என்ற மூன்றெழுத்து மந்திரத்தில் தீவிர சிந்தை செலுத்துபவர். பணத்தை வாரிச் சேர்த்துக் குபேரனாகிவிட வேண்டும் என்ற எண்ணம் ஒன்றுமில்லை. கவலையில்லாமல் ஏதோ சாப்பிட்டோம், வேலை பார்த்தோம், வந்தோம் என்று இருக்க வேண்டும் என்பதற்காக எத்தனையோ வித்தைகளையெல்லாம் செய்துவிட்டார். அவருடைய குடும்பத்தின் வரவு செலவுத் திட்டத்தை மட்டிலும் அவரால் எப்பொழுதும் சமன் செய்ய முடியவில்லை. நிதி மந்திரியாக இருந்தால் பட்ஜட்டில் துண்டுவிழுவதற்குப் பொருளாதாரக் காரணங்கள் காட்டிவிட்டு, உபமான்யங்களைத் தைரியமாகக் கேட்கலாம். கவலையில்லாமல், கொஞ்சமும் உடம்பில் பிடிக்காமல் கடன் கேட்டுப் புறப்படுவதற்கு முடியுமா? குடும்பச்செலவு என்றால், சர்க்கார் செலவாகுமா?

கவலை இருக்கப்படாது என்ற உறுதியின் பேரில்தான் நம்பிக்கை என்ற இலட்சியத்தை மட்டும் திருப்தி செய்விக்க, 'சாகாவரம் பெற்ற' கதைகளை எழுதுவதைக் கொஞ்சம் கட்டிவைத்துவிட்டு, இந்த 'லிப்டன் தேயிலை,' காப்பி, கொக்கோ ஆகியவற்றின் மான்மியங்களை அவர் எழுத ஆரம்பித்தார். ஒரு பெரிய நாவல் மட்டிலும் எழுதிவிட்டால் அது ஒரு பொன் காய்க்கும் மரமாகிவிடும் என்று அவர் நெஞ்சமுழுத்தத்துடன் நினைத்த காலங்களும் உண்டு. இப்பொழுது அது ஒரு நெடுந்தூர இலட்சியமாகவே மாறிவிட்டது.

முன்பாவது, அதாவது நம்பிக்கை காலத்தில், ஏதோ நினைத்ததைக் கிறுக்கிவைக்கக் காகிதப் பஞ்சமாவது இல்லாமல் இருந்தது. அப்பொழுது ஒரு பத்திரிகை ஆபிஸில் வேலை. ஆனால், இப்பொழுது காசு கொடுத்து வாங்காவிட்டால் முதுகில்தான் எழுதிக்கொள்ள வேண்டும். முருகதாசர் நல்ல புத்திசாலி; அதனால்தான் முதுகில் எழுதிக்கொள்ளவில்லை. யாராவது ஒரு நண்பரைக் கண்டுவிட்டால் போதும், தமது தூர இலட்சியத்தைப் பற்றி அவரிடம் ஐந்து நிமிஷமாவது பேசாமல்



அவரை விடமாட்டார். நண்பர்கள் எஸ்.பி.ஸி.ஏ. (ஜீவஹிம்சை நிவாரணச் சங்கம்) யின் அங்கத்தினர்களோ என்னவோ, அத்தனையும் சகித்துக்கொண்டிருப்பார்கள்.....

சந்தில் திரும்பிப் பார்த்தால் அலமுவின் ராஜ்யம் நடந்து கொண்டிருந்தது.

"ஏட்டி, என்ன! நீயோ, உன் லட்சணமோ?" என்று ஆரம்பித்தார் முருகதாசர்.

ஒரு ரிக்ஷா வண்டி. ஏர்க்கால் பக்கத்தில் வண்டிக்காரன் உட்கார்ந்துகொண்டிருக்கிறான். அலமு, ஒரு சுண்டெ- மாதிரி ஜம்மென்று மெத்தையில் உட்கார்ந்திருக்கிறாள். ரிக்ஷாக்காரனுடன் ஏதோ நீண்ட சம்பாஷணை நடந்துகொண்டிருந்தது போலும்!

"ஏட்டி!" என்றார் முருகதாசர் மறுபடியும்.

"இல்லையப்பா? நீ இனிமே என்னை அலமுன்னு கூப்'டுவேன்னியே!" என்று சொல்-க்கொண்டே வண்டியி-ருந்து இறங்கப் பிரம்மப் பிரயத்தனம் செய்து கொண்டிருந்தாள்.

"தீப்பெட்டி எங்கடீ?" என்றார் முருகதாசர்.

"கடைக்காரன் குடுக்கமாட்டேங்கறான், அப்பா!"

"குடுக்காதெ போனா நேரே வீட்டுக்கு வாரது! இங்கே என்ன இருப்பு?"

"அப்படிக் கேளுங்க சாமி! நம்ம கொளந்தென்னு மெரட்டாமே சொல்-ப் பாத்தேனுங்க. வீட்டுக்க வண்டியிலே கொண்டாந்துவுடணுமுண்ணு மொண்டி பண்ணுதுங்க. எனக்குக் காலுலே சுளுக்கு. அந்தச் சின்னாம்பயலே காணும்..." என்று நீட்டிக்கொண்டே போனான் ரிக்ஷாக்காரன்.

"அப்பா, அவன் பங்கஜத்தெ மாத்ரம் கூட்டிகிட்டுப் போறானே!"என்றாள் அலமு. பங்கஜம் எதிர்வீட்டு சப்ரிஜிஸ்திரார் குழந்தை. அது ரிக்ஷாவிலும் போகும், மோட்டாரிலும் போகும்! அந்த விஷயம் ரிக்ஷாவுக்குத்தான் புரியுமா, குழந்தைக்குத்தான் புரியுமா?

“அலமு! ராத்திரிலே கொழந்தைகள் ரிக்ஷாவிலே போகப்படாதுடீ! எறங்கி வா!” என்று குழந்தையைத் தூக்கிக்கொண்டு வாடிக்கைக் கடைக்காரனிடம் சென்றார் முருகதாசர்.

பிள்ளையவர்கள் கடையை எட்டு முன்பே கடைக்காரன், “சாமி இந்த மாதிரியிருந்தா கட்டுமா? போன மாசத்திலே தீர்க்கலியே! நானும் சொல்லிச் சொல்லிப் பார்த்தாச்சு. பாக்கியை முடிச்சு, கணக்கெத் தீர்த்துடுங்க! எனக்குக் குடுத்துக் கட்டாது. நான் பொளைக்க வந்தவன்!” என்றான்.

“நானும் பிழைக்க வந்தவன்தான். எல்லாரும் சாகவா வருகிறார்கள்! மின்னெ பின்னேதான் இருக்கும். நான் என்ன கொடுக்க மாட்டேன் என்று சொல்லுகிறேனா?”

“போங்க சாமி! அது ஒண்ணுதான் பாக்கி ரூ.2 ஆச்சு: எப்ப வரும்?”

“தீப்பெட்டியெக் குடு, சொல்றேன்!”

”பெட்டிக்கென்ன பிரமாதம்! இந்தாருங்க, எப்ப வரும்?”

“எப்பவா? சம்பளம் நாளைக்கு போட்டுருவாங்கன்னு நினைக்கிறேன்; நாளை இல்லாவிட்டால் திங்கள்கிழமை.”

“திங்கட்கிழமெ நிச்சயந்தானே? நான் சீட்டுக் கட்டனும்!” என்றான்.

“சரி, பார்க்கிறேன்!” என்று திரும்பினார் தாசர்.

“பார்க்கிறேன்னு சொல்ல வேண்டாம், நிச்சயமாக வேண்டும்!”

ஒரு கவலை தீர்ந்தது... அதாவது திங்கட்கிழமை வரை.

பாதிவழியில் போகையில், “அப்பா!” என்றது குழந்தை.

அவர் எதையோ நினைத்துக் கொண்டிருந்ததால், தன்னையறியாமல் கொஞ்சம் கடினமாக, “என்னடி!” என்றார்.

“நீதான் கோவிச்சிக்கிறியே, அப்பா! நான் சொல்லமாட்டேன், போ!”



“கோவம் என்னடி, கோவம்! சும்மா சொல்லு!”

“அதோ பார், பல்லு மாமா?”

முருகதாசரின் நண்பர் சுப்பிரமணிய பிள்ளைக்குக் கொஞ்சம் உயர்ந்த பற்கள். அவை வெளியே நீண்டுகொண்டு, தமது இருப்பை அனாவசியமாக உலகத்திற்கு அறிவித்துக் கொண்டிருந்தன. அதனால் அலமு அவருக்கு இட்ட காரண இடுகுறிப் பெயர் அது.

“எங்கடி!”

“அதோ பார், வீட்டு நடேலே ! என்னை எறக்கி விடப்பா!” என்று அவரது கையிலிருந்து வழுகி விடுவித்துக்கொண்டு, வீட்டிற்கு ஓட ஆரம்பித்தது.

“மெதுவா! மெதுவா!” என்றார் பிள்ளை; குழந்தையா கேட்கும்?

“மாட்டேன்!” என்றது. அதற்கப்புறம் ஏக களேபரம். பாவாடை தடுக்கியதோ என்னமோ! அலமு வலுக்கட்டாயமாக அங்கப் பிரதக்ஷணம் செய்ய ஆரம்பித்தாள்.

பிள்ளையவர்கள் ஓடிப்போய்க் குழந்தையை வாரி எடுத்தார். ஆனால் இவர் பதட்டத்திற்கு ஏற்ப அங்கு, குழந்தைக்கு ஒன்றும் ஏற்படவில்லை.

“தோளுக்கு மேலே தொண்ணூறு, தொடச்சுப் பாத்தா ஒண்ணுமில்லே!” என்று பாடிக்கொண்டு குழந்தை எழுந்தது.

“என்ன ஸார், குழந்தையை நீங்க இப்படி விடலாமா?” என்று சொல்லிக்கொண்டே சுப்பிரமணியம் அவர் பக்கம் வந்தார்.

“என்ன ஸார் செய்யட்டும்! என்ன சொன்னாலும் கேட்கிறதில்லை என்ற உறுதி மனசிலே ஏறிப்போயிருக்கு. வெளிலே புறப்பட்டாச்சா, அப்புறம் தேடிக்கொண்டு பின்னோட பத்துப் பேர். இவளைக் கடைக்கனுப்பிச்சுட்டா தாயார். இவ்வளவு நேரம் அந்த ரிக்ஷாக்காரனோடே தர்க்கம் - என்ன செய்கிறது! வாருங்கள் ஸார், உள்ளே! ஒன் மினிட்! விளக்கை ஏத்துகிறேன்”.

குழந்தை அலமு அதற்குள் வீட்டிற்குள், “பல்லு மாமா வந்துட்டார்!” என்று பொதுவாக உச்ச ஸ்தாயியில் விளம்பரம் செய்து கொண்டு ஓடிவிட்டாள்.

"குழந்தை துருதுருவென்று வருகிறதே! பள்ளிக்கூடத்திற்காவது அனுப்பக் கூடாதா?" என்றார் நண்பர்.

"ஆமாம் ஸார், தொந்திரவு சகிக்கலே. அங்கேதான் கொண்டு தள்ளனும். வயசு கொஞ்சம் ஆகட்டும் என்று பார்க்கிறேன்" என்றார் முருகதாசர், விளக்குத் திரியை உயர்த்திக் கொண்டே.

"நேத்து பீச்சுக்குப் போயிருந்தேன்! சுந்தரத்தைப் பார்த்தேன்..." என்று ஆரம்பித்தார் சுப்பிரமணிய பிள்ளை.

"அந்த ராஸ்கல் வந்துட்டானா! என்றைக்கும் அவன் தொல்லை தான் பெரிய தொல்லையாக இருக்கிறது. இங்கே வந்தான்னா ஆபீஸுக்கு வந்து யாருக்காவது வத்தி வச்சுட்டுப் போயிடரது... மின்னே வந்தப்போ, என்ன எழவு சொன்னானோ, அந்த ஆர்ட்டிஸ்ட் 'பதி' இருந்தானே அவனுக்குச் சீட்டுக் கொடுக்க வழி பண்ணிட்டான்..." என்று படபட வென்று பேசிக்கொண்டே போனார் முருகாதாசர்.

"அப்படிப் பாத்தா உலகத்திலே யார்தான் ஸார் நல்லவன்! அவன் உங்களைப் பத்தி ரொம்பப் பிரமாதமாக அல்லவா கண்ட இடத்திலெல்லாம் புகழ்ந்துகொண்டிருக்கிறான்?"

"சவத்தெத் தள்ளுங்க, ஸார்! பேன் பார்த்தாலும் பார்க்கும், காதை அறுத்தாலும் அறுக்கும். அவன் சங்காத்தமே நமக்கு வேண்டாம்... நீங்க என்ன சொல்ல வாயெடுத்தீர்கள்?"

"அதுதான் உங்களெப் பத்திதான் ஒரு இங்கிலீஷ்காரனிடம் பிரமாதமாகப் பேசிக்கொண்டிருந்தான்..."

"இவ்வளவுதானா! கதையை எழுதரேன் அல்லது கத்தரிக்காயை அறுக்கிறேன், இவனுக்கென்ன?..."

அதே சமயத்தில் வெளியிலிருந்து, "முருகதாஸ்! முருகதாஸ்!" என்று யாரோ கூப்பிட்டார்கள்.

"அதுதான்! அவன்தான் வந்திருக்கிறான் போலிருக்கிறது! பயலுக்கு நூறு வயசு.... "

"சைத்தான் நினைக்கு முன்னால் வந்து நிற்பான்' என்பதுதான்! " என்று முணுமுணுத்தார் முருகதாசர்.

பிறகு அவர் எழுந்து நின்று வெளியில் தலையை நீட்டி, "யாரது?" என்றார்.



"என்ன! நான் தான் சுந்தரம், இன்னும் என் குரல் தெரியவில்லையா?" என்று உரத்த குரலில் கடகடவென்று சிரித்துக் கொண்டு உள்ளே நுழைந்தார் வந்தவர். அவருடைய சிரிப்புக்கு இசைந்தபடி காலில் போட்டிருக்கும் ஜோடு தாளம் போட்டது.

"என்ன! சுந்தரமா? வா! வா! இப்பொத்தான் உன்னைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். நீயும் வந்தாய்! காப்பி போடச் சொல்லட்டுமா? அலமு! அலமு!" என்று உரக்கக் கூவினார் முருகதாசர்.

எங்கிருந்தோ, "என்னப்பா!" என்று அலமுவின் குரல் வந்தது.

"அம்மாவை மூணு கப் காப்பி போடச் சொல்லு. சீக்கிரம் ஆகணும்!"

"நீ என்ன பத்திரிகையையே விட்டுவிட்டாயாமே! இப்பத்தான் கேள்விப்பட்டேன்."

"வயிற்றுப் பிழைப்பிற்கு எதில் இருந்தால் என்ன? சீலைப்பேன் குத்துகிறதும் ஒரு 'பிஸினஸ்' ஆக இருந்து, அதில் ஒரு 'சான்ஸ்' கிடைத்தால் அதையும் விட்டா வைக்கிறது? நான் பத்திரிகையை விட்டுவிட்டா கதை எழுதாமல் இருந்துவிடுவேனோ? ஒரு பெரிய நாவலுக்குப் 'பிளான்' போட்டிருக்கேன். தமிழன்களுக்கு அதிர்ஷ்டம் இருந்தால் எனக்குக் காகிதம் வாங்கவாவது காசு கிடைக்கும். அதில் சென்டரல் ஐடியா என்ன தெரியுமா?..."

"நீங்க நேற்று பொருட்காட்சிக்குப் போனீர்களாமே!" என்று பேச்சை மாற்ற முயன்றார் சுப்பிரமணிய பிள்ளை. இந்த விஷயத்தைத் தொட்டுவிட்டால், முருகதாசர் கீறல் விழுந்த கிராமபோன் பிளேட் மாதிரி விடாமல் திருப்பித் திருப்பி அதையே கதைத்துக் கொண்டிருப்பார்!

"அப்பா! காப்பியாயிட்டுது. நீதான் வந்து எடுத்துக்கிட்டுப் போகணும். சுடுது!" என்று சொல்-க்கொண்டு, நிலைப்படி இரண்டு பக்கத்தையும் தொட்டவண்ணமாய் ஒற்றைக் காலை ஆட்டிக் கொண்டு நின்றாள் அலமு.

"அம்மா எங்கே?"

"அம்மா சாதத்தெ வடிச்சுக்கிட்டிருக்கா, அப்பா!"

“சரி! இதோ வாரேன், போ!”

“வாயேன்!”

“வர்ரேன்னா, போடீ உள்ளே!”

“காப்பி ஆறிப்போயிடும், அப்பா!”

“இதோ ஒரு நிமிஷம்!” என்று சொல்-க்கொண்டு உள்ளே சென்றார்.

“மாமா! நீ என்ன கொண்டாந்தே!” என்று கேட்டுக்கொண்டு, சுப்பிரமணிய பிள்ளை மடியில் உட்கார்ந்து, கழுத்தி-ருக்கும் நெக் டையைப் பிடித்து விளையாட ஆரம்பித்தாள் அலமு.

“அதெப் பிடித்து இழுக்காதே! மாமாவுக்குக் கழுத்து வ-க்கும்!” என்றார் சுந்தரம் பிள்ளை.

“வ-க்காதே!” என்று மறுபடியும் ஆரம்பித்தாள்.

முருகதாசரும் மேல்துண்டின் உதவியால் ஒரு செம்பை ஏந்திய வண்ணம் உள்ளே நுழைந்தார்.

“என்னப்பா, மூணு டம்ளர் கொண்டாந்தே! எனக்கில்லையா?”

“உனக்கென்னடி இங்கே! அம்மா கூட போய்ச் சாப்பிடு.”

“மாட்டேன்” என்று ஒரு டம்ளரை எடுத்து வைத்துக்கொண்டது குழந்தை.

முருகதாசர் காப்பியை ஆற்றி, சுந்தரம் கையில் ஒரு டம்ளரைக் கொடுத்தார்.

சுந்தரம் வாங்கி மடக்மடக்கென்று மருந்து குடிப்பதுபோல் குடித்துவிட்டு, “காப்பி வெகு ஜோர்!” என்று சர்டிபிகேட் கொடுத்தார்.

மற்றொரு டம்ளர் சுப்பிரமணிய பிள்ளையிடம் கொடுக்கப்பட்டது. “மாமா! எனக்கில்லையா?” என்று அவரிடம் சென்று ஒண்டினாள் அலமு.

“வாடி, நாம ரெண்டு பேரும் சாப்பிடுவோம்!” என்றார் முருகதாசர்.

“மாமாகூடத்தான்!” என்றது குழந்தை. சுப்பிரமணிய பிள்ளை கையிலிருந்த டம்ளரில் அலமுவைக் குடிக்கச் செய்தார்.



பாதியானதும் “போதும் ” என்றது குழந்தை.

“இந்தாருங்க ஸார்!” என்று மற்ற டம்ளரையும் நீட்டினார் முருகதாசர்.

“வேண்டாம்! வேண்டாம்!“ இதுவே போதும்!” என்றார் சுப்பிரமணிய பிள்ளை.

“நான்சென்ஸ்!” என்று சொல்-விட்டு, குழந்தை எச்சிற்படுத்தியதைத் தாம் வாங்கிக் கொண்டார் தாசர்.

“நேரமாகிறது. மவுண்டில் ஒரு நண்பரைப் பார்க்க வேண்டும்!” என்று எழுந்தார் சுந்தரம்.

“அதற்குள்ளாகவா? வெற்றிலை போட்டுக் கொண்டு போகலாம்!” என்றார் முருகதாசர்.

“கையில் எடுத்துக்கொண்டேன். நேரமாகிறது! அப்புறம் பார்க்கிறேன்! ” என்று சொல்லிக்கொண்டு வெளியேறினார் சுந்தரம்.

கையில் இருந்த புகையிலையை வாயில் ஒதுக்கிவிட்டு, சிறிது சிரமத்துடன் தமக்கு நேரமாவதைத் தெரிவித்துக்கொண்டார் சுப்பிரமணிய பிள்ளை.

தொண்டையைச் சிறிது கனைத்துக் கொண்டு “சுப்ரமண்யம், உங்களிடம் ஏதாவது ‘சேஞ்ச்’ இருக்கிறதா? ஒரு மூன்று ரூபாய் வேண்டும் என்றார்!” முருகதாசர்

“ஏது அவசரம்!”

“சம்பளம் போடலே; இங்கு கொஞ்சம் அவசியமாக வேண்டியிருக்கிறது... திங்கட்கிழமை கொடுத்துவிடுகிறேன்!”

“அதற்கென்ன?” பர்ஸை எடுத்துப் பார்த்துவிட்டு “இப்போ என் கையில் இதுதான் இருக்கிறது!” என்று ஓர் எட்டணாவைக் கொடுத்தார் சுப்பிரமணியம்.

“இது போதாதே!” என்று சொல்லி, அதையும் வாங்கி வைத்துக்கொண்டார் முருகதாசர்.

“அப்பொ...” என்று மீண்டும் ஏதோ ஆரம்பித்தார்.

“பார்ப்போம்! எனக்குக் கொஞ்சம் வேலையிருக்கிறது” என்று சுப்பிரமணியமும் விடைபெற்றுச் சென்றார்.

முருகதாசர் தமது ஆஸ்தான அறையின் சிம்மாசனமான பழைய கோரைப் பாயில் உட்கார்ந்துகொண்டு, அந்த எட்டணாவைத் திருப்பித் திருப்பிப் பார்த்துக்கொண்டு, நீண்ட யோசனையில் ஆழ்திருந்தார்.

“அங்கெ என்ன செய்யறீங்க?” என்ற மனைவியின் குரல்!

“நீதான் இங்கே வாயேன்!”

கமலம் உள்ளே வந்து, “அப்பாடா” என்று உட்கார்ந்தாள். அவர் கையில் இருக்கும் சில்லறையைப் பார்த்துவிட்டு “இதேது?” என்றாள்.

“சுப்பிரமணியத்திடம் வாங்கினேன்!”

“உங்களுக்கும் ... வேலையில்லை?” என்று முகத்தைச் சிணுக்கினாள் கமலம். பிறகு திடீரென்று எதையோ எண்ணிக் கொண்டு, “ஆமாம், இப்பத்தான் நினைப்பு வந்தது. நாளைக்குக் காப்பிப் பொடியில்லை, அதெ வச்சு வாங்கி வாருங்களேன்!” என்றாள்.

“அந்தக் கடைக்காரனுக்காக அல்லவா வாங்கினேன்! அதைக் கொடுத்துவிட்டால்?”

“திங்கட்கிழமை கொடுப்பதாகத்தானே சொன்னீர்களாம்!”

“அதற்கென்ன இப்பொழுது!”

“போய்ச் சீக்கிரம் வாங்கி வாருங்கள்!”

“திங்கட்கிழமைக்கு?”

“திங்கட்கிழமை பார்த்துக்கொள்ளுகிறது!”

## பயிற்சி.

1. ஒருநாள் கழிந்தது என்னும் கதையைக் கருப்பொருளும் சுவையும் சிதையாமல் சுருக்கி எழுதுக.
2. ஒருநாள் கழிந்தது என்னும் கதையில் வரும் முருகதாசரைப் பற்றி விரிவாய்எழுதுக.
3. முருகதாசர் சுப்பிரமணியத்திடம் உதவி பெற்ற பிறகு வாழ்வில் உயர்ந்ததாக உம் கற்பனைத் திறத்தை இணைத்து ஒரு கதை எழுதுக.

# 2. தேங்காய்த் துண்டுகள்.

*—டாக்டர் மு. வ.—*

“மாலை நேரத்தில் குடித்துவிட்டுச் சாலை ஓரத்தில் விழுந்து கிடப்பவர்களைப் பார்த்திருக்கிறோம். ஆனால் இது என்ன கொடுமை! பகல் ஒரு மணிக்கு நல்ல வெயிலில் தார் வெந்து உருகும் வெப்பத்தில் இந்தச் சாலை ஓரத்தில் இப்படி ஒருவன் விழுந்து கிடக்கிறானே” என்று எண்ணிக்கொண்டே அந்த மாரியம்மன் கோயிலை அணுகி நடந்து போய்க்கொண்டிருந்தேன். வெளியூர்களில் கள், சாராயக் கடைகளை மூடிவிட்ட பிறகு, அங்கே உள்ள குடிகாரர் சிலர் அடிக்கடி சென்னைக்குப் புறப்பட்டு வந்து, ஏதோ வேலை இருப்பது போல் நகரத்தைச் சுற்றித் திரிந்து, ஆசை தீரக் குடித்து மயங்கியிருந்து, பிறகு ஊருக்குத் திரும்புவது எனக்கு நன்றாகத் தெரியும். எங்கள் ஊரில் இருந்தே பலர் அப்படிப் புறப்பட்டு வந்து சென்னையில் குடித்துவிட்டுப் போவது தெரியும். ஒரு முறை வீட்டுக்கு வந்து என்னைப் பார்த்துவிட்டு, நகரத்தில் பல வேலை இருப்பதாகச் சொல்லிவிட்டுப் போய்விடுவார்கள். உணவுக்கு ஒரு வேளையாவது வருமாறு அழைத்தாலும் வருவதில்லை. அவர்களுக்கு விருப்பமான விருந்து கள்ளுக்கடைகளிலும் சாராயக்கடைகளிலும் கிடைக்கும்போது, வெந்த அரிசிச் சோற்றைத் தேடியா வந்து காத்திருப்பார்கள்? நாட்டுப்புறத்தில் மூலைமுடுக்குகளில் காய்ச்சும் திருட்டுச் சாராயம் போதாது என்று இந்தக் கடைச் சரக்கை நாடி வருகிறவர்கள், அதையும் விட்டு நல்ல அரிசிச் சோற்றையும் பொருட்படுத்தாமல் இந்தப் பங்கீட்டு அரிசிச் சோற்றை, ஈரத்தோடு நெடுநாள் இருந்து கெட்டு அழுகிப் பல நிறம் பெற்று விளங்கும் அரிசியால் சமைத்த சோற்றையா நாடி வருவார்கள் என்று நானும் வற்புறுத்தாமல் விட்டு விடுவேன். ஆனால் மின்சாரவண்டி வரும் வேளையில் தண்டவாளப் பாலத்தின்மேல் நடந்து வண்டியில் அகப்பட்டுக் கொண்டு மடிந்த இரண்டு பிணங்களை ஒருநாள் காண நேர்ந்தது.

அவர்களுக்கு முன்னே நடந்துவந்த சிலர் அவர்களைக் குடிகாரர் என்று அறிந்து, அங்கே நடந்து போக வேண்டாம் என்று சொல்-த் தடுத்தும் கேட்கவில்லையாம். அந்தக் குடிவெறியில் தள்ளாடி நடந்து, மின்சார வண்டிக்குப் பலியானார்களே என்று அன்று என் நெஞ்சம் மிக வருந்தியபோது, போக்குவரவு மிகுந்த சென்னையில்தான் கள், சாராயக் கடைகளை முத-ல் மூட வேண்டும் என்று உணர்ந்தேன்.

இந்த மாரியம்மன் கோயிலருகே சாலை ஓரத்தில், பகல் ஒரு மணி வெயி-ல் படுத்துச் சுருண்டிருந்த உடம்பைக் கண்டபோதும் இந்த எண்ணமே உண்டானது. நடுப்பகலிலே இப்படிக் குடிக்கிறவன், பொழுது போனால் எவ்வளவு குடிப்பான் என்று சிறிது வெறுப்போடு எண்ணிக் கொண்டே நடந்தேன். அவனைப் பார்த்துக்கொண்டே இளைஞர் இருவர் நின்று கொண்டிருந்தார்கள். என்ன நிலைமை என்றுதான் பார்க்கலாமே என்று நானும் அவர்கள் இருந்த பக்கமாக நடந்து சென்றேன்.

“குடிகாரனா?” என்று அவர்களைப் பார்த்துக்கேட்டேன்.

“இல்லைங்க' என்றார் ஒருவர்.

“வேறு என்ன? காக்கை வலிப்பா?” என்றேன்.

“அதுவும் இல்லைங்க. காக்கை வலிப்பாக இருந்தால், இப்படி மூச்சுப் பேச்சு இல்லாமல் சும்மா விழுந்து கிடப்பானா?” என்றார் மற்றொருவர்.

அவனுக்கு வயது இருபது இருக்கலாம். நல்ல கட்டான உடல் இருந்தது. ஆனால் அழுக்கேறிய ஆடையும் வாடிய முகமும் கண்டபோது, வேறு நோயாக இருக்க முடியுமா என்று எண்ணிப் பார்த்தேன். தீய வழியில் நடந்து பெற்ற விபசார நோயாக (மேகம் முத-ய நோயாக) இருந்து, உயிருக்கே உலை வைக்கும் அளவுக்கு முற்றியிருக்கலாம் என்றும், இந்தக் காலத்து இளைஞர்கள் மிகவும் கெட்டுப் போனவர்கள் என்றும் எண்ணினேன். “சரி, கர்ம வினை, நாம் என்ன செய்ய முடியும்?” என்று ஒரு வகை வெறுப்போடு நடக்கத் தொடங்கினேன்.

அதற்குள் யாரோ தண்ணீர் கொண்டு வந்து முகத்தில் தெளிக்கவே, அவன் “வேலா, வேலா” என்று ஆழ்ந்த குரலில் இரண்டு முறை சொன்னான். இதைக் கேட்டதும் காலெடுத்துச் சில



அடி தொலைவு நடந்து சென்ற நான் அந்த இடத்திலேயே நின்றேன். அப்போது அந்த இடத்தில் என்னைப்போல் வழிப் போக்கர் ஒருவர் எட்டிப் பார்த்து, “இது என்ன அய்யா! பாசாங்கு, வெறும் பாசாங்கு; வாய் திறந்து வேலா வேலா என்று கடவுள் பெயரைச் சொல்கிறானே! நான் இந்த மாதிரிப் பாசாங்குப் பிச்சைக்காரர் எவ்வளவோ பேரைப் பார்த்திருக்கிறேன். நேற்றுக் குழந்தை பெற்றுவிட்டு, இன்றைக்குப் பத்து மாதக் கர்ப்பவதி போல் பாசாங்கு செய்து பிச்சை கேட்பதைப் பார்த்ததில்லையா?” என்றார். உடனே அங்கிருந்த மற்றொருவர், “இதுதான் அய்யா பட்டணம்! போகிறவர்கள் போகக் கூடாதா? எட்டிப் பார்த்தவுடன் பாசாங்கு தெரிந்துவிடுமா? அவரவர்கள் வயிற்றுக்கு இல்லாமல் பட்டினியால் செத்தால் தெரியும்” என்றார். ‘பட்டினி’ என்ற சொல்லைக் கேட்டவுடன் எனக்கு இரக்கம் தோன்றியது. ஏதாவது வாங்கித் தரச் சொல்லலாம் என்று சட்டைப்பையில் கை இட்டுக் காசு எடுத்தேன். அதற்குள் ஒருவர்-கல்லூரி மாணவன் என்று அப்பால் தெரிந்து கொண்டேன்-ஒரு கையில் காப்பியும் மற்றொரு கையில் இரண்டு வாழைப்பழமும் கொண்டு வருவதைக் கண்டேன். என்ன நடக்கிறது, பொறுத்துத்தான் பார்ப்போம் என்று திரும்பி வந்து எட்டிப் பார்த்தேன். அதற்குள் அவனைச் சுற்றிப் பத்துப் பேருக்கு மேல் நின்று கொண்டிருந்தார்கள்.

காப்பி குடிக்கச் சொல்வதற்கு அவனை அசைத்துப் பார்த்தார்கள்; கூப்பிட்டுப் பார்த்தார்கள். ஒவ்வொரு வேளையில் மெல்லிய குரலில் ஏதோ ஒலி வந்தது. ஆனால் கண் திறக்கவில்லை. தண்ணீரும் கையுமாக நின்ற ஓர் ஆள் மறுபடியும் அவன் முகத்தில் தண்ணீரைத் தெளித்து வாயைத் திறந்து கொஞ்சம் தண்ணீர் உள்ளே விட்டார். மெல்லக் கண் திறந்து பார்க்கும் காட்சியைக் கண்டோம். உடனே ஒரு மாணவர் எழுப்பி உட்காரவைத்தார். இன்னொருவர் கையில் இருந்த காப்பியை நீட்டினார். அந்தக் காப்பியைக் கண்டதும், மயக்கத்தில் இருந்த அவனுடைய கைகள் ஒரே ஆவலாக அந்தக் காப்பிக் குவளையை இழுத்து வாயில் வைத்துக் கொண்டன. “சூடு, சூடு, பார்த்து, பார்த்து” என்று எதிரில் இருந்தவர் சொல்வதற்குள் காப்பி முழுதும் எப்படியோ வாயினுள் சென்றுவிட்டது. அப்போது அவனுடைய கண்களில் புலப்பட்ட ஆவலையும் வேட்கையையும் நான் எப்போதுமே கண்டதில்லை. அந்தக் கண்கள் காப்பியையும் குவளையையும் சேர்த்து வாய்க்கும்

கொடுக்காமல், தாங்களே விழுங்கிவிடுவன போல் அந்தப் பார்வை இருந்தது. உடனே அவனுடைய முகத்தில் வாட்டம் இருந்தாலும் துன்பம் இல்லை; களைப்பு இருந்தாலும், பசிக் கொடுமை இல்லை. இப்போதோ பல்லை இளித்துக் கொண்டு, தலையைத்தொங்கவிட்டுக் கொண்டு, சாய்ந்து சாய்ந்து, ஏதோ சொன்னான். யார் காதிலும் அந்தச் சொற்கள் கேட்கவில்லை. தரையில் சாய்ந்துவிட விரும்பினான். வேண்டாம் என்று தடுத்து ஒருவர் மாரியம்மன் கோயில் சுவர்ப் பக்கமாக நகரச் சொல்லி அந்தச் சுவரில் சாயச் செய்தார். அதற்குள் இன்னொருவர் மற்றொரு குவளைக் காப்பியும் ரொட்டித் துண்டும் வாங்கி வந்து நீட்டினார். அவனுடைய பசிக்கொடுமையால் உடனே அவைகளும் மறைந்தன. வாழைப் பழங்களும் உடனே மறைந்தன. 'அப்பாடா' என்று அயர்ந்து சாய்ந்து, சுற்றிப் பார்த்து மருண்டு கண்ணீர் விட்டான். எல்லோருக்கும் இரக்கம் மிகுந்துவிட்டது.

"எந்த ஊர் அப்பா?" என்றார் ஒருவர்.

"மதுரை" என்றான் சிறிது தெளிவான குர-ல்.

"எங்கே வந்தாய்?"

"பிழைக்கத்தான் அய்யா!" என் கதி... !

"போகட்டும்; என்ன உடம்புக்கு?"

"ஐந்து நாளாச்சு அய்யா" என்று சொல்- வயிற்றை அடித்துக்கொண்டு கண்ணீர் கலங்கினான்.

உடனே கூட்டம் மெல்ல மெல்லக் கலையத் தொடங்கியது. நான்கு பேர்கள் நின்றார்கள்.

"எழுந்து நடக்க முடியுமா?" என்று கேட்டேன்.

"இன்னும் கொஞ்ச நேரம் பொறுங்கள், சாமி" என்று கெஞ்சும் குரலில் சொல்லி முகத்து வியர்வையைத் துடைத்து, கால்களை நீட்டிக் கொண்டும் மடக்கிக்கொண்டும் இருந்தான்.

பிறகு அங்கிருந்த சிலரும் மெல்ல நகர்ந்தார்கள். காப்பி கொடுத்த மாணவர் மட்டும் அங்கே நின்று கொண்டிருந்தார். பக்கத்தில் இருந்த கல்லூரி மணி அடித்தது. அந்த மணி ஓ-யைக் கேட்டதும், அவரும் திரும்பித் திரும்பிப் பார்த்தார். இறுதியில்



அவரும் புறப்பட்டுப் போகவே, நான் மட்டும் அங்கே நின்றேன். அந்த இளைஞனுடைய உண்மையான நிலையைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று ஏதோ ஒருவகை வேட்கை என் மனத்திலிருந்து தூண்டியது. அதனால் தான் நான் புறப்பட முடியாமல் அங்கே நின்று விட்டேன்.

"எழ முடியுமா?" என்று மறுபடியும் அவனைக் கேட்டேன்.

"உடம்பு அசதியாக இருக்கிறது, சாமி" என்றான்.

"வீடு வரைக்கும் வந்தால் வயிறாரச் சாப்பிட்டு வரலாம்" என்று அழைத்தேன்.

"வீடு எங்கே? சொல்லுங்கள். கொஞ்சம் களைப்புத் தீர்ந்ததும் நானே வருவேன்" என்றான்.

"இவ்வளவு களைப்பு ஏற்பட்ட பிறகு நீ ஏன் இந்த வழியில் நடந்து வர வேண்டும்? அதுவும் நடுப்பகல் வெயி-ல் இப்படித் தார்ச் சாலையில் நடந்து வரலாமா?" என்றேன்.

"இன்னும் கொஞ்சம் தூரம் தானே? இந்த மாரியம்மன் கோயிலுக்கு எப்படியாவது போய்ச் சேர்ந்துவிட வேண்டும் என்று தள்ளாடிக் கொண்டே வந்தேனுங்க!" என்று சொல்லி விட்டு அமைதி ஆனான். பிறகு கண்ணீர் கலங்கித் தன் அழுக்கு ஆடைகளால் கண்களைத் துடைத்துக் கொண்டான். ஏதோ உண்மைக் காரணம் இருக்க வேண்டும் என்று நானும் பொறுத்திருந்தேன்.

ஒரு பெரு மூச்சு விட்டு "நான் பிழைக்க மாட்டேனுங்க" என்று அழுதான். என்னால் ஆன வரையில் தேறுதல் கூறினேன். "சொந்த ஊரில் சாகாமல் இப்படிப் பட்டணத்தில் சாக வேண்டுமா?" என்று விம்மி விம்மிச் சொன்னான். "அதனால்தான் இந்தக் கோயிலுக்கு வந்து உயிரை விடலாம் என்று வந்தேன்" என்று கலங்கிச் சொன்னான்.

"நீதான் திக்கற்றவன் ஆச்சே. உனக்கு எங்கே இறந்தால் என்ன? இந்தக் கோயில்மேல் பக்தி என்ன?" என்று மெல்லக் கேட்டேன்.

"பக்தி இல்லை சாமி. என்னோடு வந்தவன்-எங்கள் ஊரான் இங்கே அடிக்கடி வந்து தேங்காய், பழம் வைத்துப் பூசை செய்துவிட்டுப் போவது வழக்கம். அவன் வருவான். சாகும்போது அவனாவது பக்கத்தில் இருந்து பார்த்துக்கொள்வான் என்றுதான்

இங்கு வந்தேன்" என்றான்.

இதைக் கேட்டதும், இன்னும் பெரிய கதைகள் இருக்கும் என்று நம்பிப் பேச்சை நிறுத்தி, எழுந்து வீட்டுக்கு வருமாறு சொன்னேன். மெல்ல எழுந்தான். கால்கள் பின்னிக்கொள்ளும் நிலையில் தளர்ந்து அடி எடுத்து வைத்து நடந்து வந்தான். வழியில் உள்ள ஒரு பாலத்தின் சுவரின் மேலும், ஒரு வீட்டுத் திண்ணையின் மேலும் இருமுறை உட்கார்ந்து மூச்சுவிட்டு எப்படியோ வீடு வந்து சேர்ந்தான். சாப்பிட்டு முடியும் வரையில் ஒன்றும் கேட்பதில்லை என்று இருந்தேன். உண்ட பிறகு அவன் முகத்தில் களைப்பும் தெளிவும் கலந்து விளங்கின. திண்ணையின் கீழே மெல்லச் சாய்ந்தான். "சாமி! உங்களுக்கு எவ்வளவோ புண்ணியம்! கொஞ்சநேரம் இங்கே படுத்திருந்துவிட்டுப் போய்விடுவேன்" என்றான். இதுதான் வாய்ப்பு என்று நானும் என் ஐயம் தீரக் கேட்கத் தொடங்கினேன்.

"உங்கள் ஊரான் கோயிலுக்கு வருவதாகச் சொன்னாயே. அவனுக்கு என்ன வேலை? அவன் நாள்தோறும் கோயிலுக்கு வருகிறானா!" என்று பல கேள்விகள் கேட்டேன்.

"அவன் எப்படியாவது இரவு படுப்பதற்குமுன், ஒவ்வொரு நாளும் இந்தக் கோயிலுக்கு வராமல் போவதில்லை. ஒருவேளை தவறிவிட்டாலும், அவன் இருக்கும் இடத்திற்குப் பக்கத்தில் உள்ள எந்தக் கோயிலுக்காவது போய்க் கும்பிட்டுவிட்டுப் படுத்துக் கொள்வான். அப்போதும் இந்தக் கோயில் மேல்தான் நினைவு இருக்கும்" என்று கேட்டதற்கெல்லாம் விடை கூறினான்.

இவ்வளவெல்லாம் சொல்லியும் அவனுடைய தொழிலையும் பெயரையும் சொல்லாமல் மறைத்துவந்தான். அதனால் அவற்றைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவலும் எனக்கு மிகுதியாயிற்று. வற்புறுத்திக் கேட்டதன் பிறகு, தன்னைப் போலவே கூலி வேலை செய்து பிழைப்பவன் என்றும், ஆனால் தன்னைப்போல் காசு கிடைக்காமல், கூலி வேலை கிடைக்காமல், உணவு கிடைக்காமல் திண்டாடுவதே இல்லை என்றும், அவன் பெயர் வேலன் என்றும் தெரிவித்தான். பெயர் வேலன் என்று அறிந்ததும், மயங்கி விழுந்து கிடந்தபோது "வேலா வேலா" என்று அவன் வாய் பிதற்றியது நினைவிற்கு வந்தது. அவனுடைய நண்பனிடத்தில் எவ்வளவு



நம்பிக்கை வைத்திருந்தால், உணர்விழந்த காலத்திலும் அவன் பெயரைச் சொல்லிக் குழற முடியும் என்றும், அப்படிப்பட்ட உண்மை நண்பன் நாள் தவறாமல் பூசை செய்யும் நல்ல நிலைமையில் இருக்கும்போது, இவன் மட்டும் ஏன் வாட வேண்டும் என்றும் நான் வியந்து அமைதியானேன். அதற்குள் அந்த இளைஞனை உறக்கம் ஆட் கொள்ள வந்ததை உணர்ந்தேன், சிறிது நேரத்தில் குறட்டை விட்டு உறங்கும் நிலைமை அடைந்தான்.

நான் எழுந்துபோய் என் கடமைகளை முடித்துக்கொண்டு திரும்பிவந்து, அந்தத் திண்ணைமேல் சமக்காளம் விரித்து படுத்துக்கொண்டு, அவனைப் பற்றியும் அந்த வேலனைப் பற்றியும், வேலன் தொழில் எதுவாக இருக்கும் என்பதைப் பற்றியும் எவ்வளவோ எண்ணிப் பார்த்தேன். உண்மை அறிய முடியாமல் மயங்கிக் கொண்டிருந்தேன். எப்படியாவது கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று துணிந்தேன். சிறிது நேரம் கழிந்தது.

திடீரென்று அவன் எழுந்து உட்கார்ந்து, "நீங்கள் இல்லாவிட்டால், நான் இன்றைக்குச் செத்தே போயிருப்பேன். என்னோடு வந்தவன் முனிசாமி என்று ஒருவன் அப்படித்தான் பட்டணத்து மண்ணுக்குப் ப-யானான்" என்று பக்கத்தில் இருந்த ஒரு கல்லையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். எழுந்த ஐயங்கள் தீர்வதற்கு முன்னே இன்னொரு முனிசாமி கதையும் புகுந்துவிட்டதே என்று எண்ணிக்கொண்டு, "அவனும் வேலனோடு வந்தானா? வேலனுக்குப் பணமும் சாப்பாடும் கிடைத்தபோது இந்த முனிசாமி மட்டும் ஏன் பட்டினியால் சாக வேண்டும்?" என்று கேட்டேன்.

"வேலன் தைரியம் எங்களுக்கு வராது. வேலன் பள்ளிக் கூடத்திலும் சில மாதம் படித்திருக்கிறான். நான் படிக்கவே இல்லை. முனிசாமி மூன்றாவது படித்து நின்று விட்டான். தவிர, வேலன் செய்வதெல்லாம் முனிசாமிக்குப் பிடிப்பதில்லை. அது நல்லது அல்ல, பாவம் என்று முனிசாமி அடிக்கடி சொல்லுவான். அதனால் வேலனுக்குக் கோபம். அவன் முனிசாமிக்கு உதவி செய்வதே இல்லை. எனக்குக் கொடுக்கும் பணத்தில் கொஞ்சம் எடுத்து வேலனுக்குத் தெரியாமல் முனிசாமிக்குக் கொடுப்பேன். அவன் அதையும் வாங்க மாட்டான். வேலன் கொடுத்த காசு பாவக் காசு, அது எனக்கு வேண்டாம், அதைவிட உயிரை விடலாம் என்று

பிடிவாதமாய் வாங்க மறுத்துவிடுவான். அதனால் பல நாள் பட்டினியிருக்க வேண்டி ஏற்பட்டது. ஒரு நாள் ரயி-ல் வரும்போது தலை கொடுத்துவிட்டான். அதுவும் எனக்குத் தெரியாது. வேலன் தான் அந்தப் பிணத்தைப் பார்த்ததாக இரண்டு நாள் கழித்துச் சொன்னான். எனக்காவது, அம்மாவும் இல்லை, அப்பாவும் இல்லை. நான் செத்தால் அழுவாரும் இல்லை. அந்த முனிசாமிக்கு அம்மா இல்லாவிட்டாலும், அப்பா இருக்கிறார். அவர் ஏழை. இருந்தாலும் கேள்விப்பட்டால் என்ன பாடுபடுவாரோ என்று சொல்லிப் பல பல என்று கண்ணீர் விட்டான். இதுதான் நல்ல சமயம் என்று, நான் தேறுதல் சொல்வதுபோல், "நீ அவசரப்பட்டுப் பைத்தியக்காரனைப் போல் உயிரைப் போக்கிக் கொள்ளாதே. என்னால் ஆன உதவி செய்வேன். கடும்பசியாக இருக்கும் போதெல்லாம் இங்கே வந்து போ. உண்மையை மறைக்காமல் சொல்" என்று பலமுறை கேட்டேன். யாரிடமும் வெளிப்படுத்த மாட்டேன் என்றும், தீமை ஒன்றும் நேராமல் பார்த்துக் கொள்வேன் என்றும் உறுதி கூறிய பிறகே அதைப்பற்றி வாய் திறந்தான். அப்போதும், நீண்ட முகவுரைக்குப் பிறகே சொல்லத் தொடங்கினான்.

"நீங்கள் யாருக்கும் சொல்லக் கூடாது, சாமி. சொன்னால் என் உயிருக்கும் முடிவுதான். முனிசாமி எங்காவது போலீசாரிடம் தன்னைப் பற்றிச் சொல்-விடுவானோ என்று அவன் பல நாள் பயப்பட்டான். அதனால் முனிசாமிமேல் சந்தேகமும் கொண்டான். ஆனால் முனிசாமி மிக நல்லவன்; பகையாளிக்கும் தீங்கு செய்ய மாட்டான். வேலனும் நல்லவன்தான். வேறு வழியில்லை என்றுதான் இந்தத் தொழில் செய்கிறான். எனக்கு அதை நினைத்தாலும் பயமாக இருக்கிறது. ஒருநாள் ஒரு விலையுயர்ந்த பேனாவைக் கொடுத்து வைத்திருக்கச் சொன்னான். அன்றெல்லாம் நான் வெளியே திரியாமல் ஒரு மூலையில் முடங்கியிருந்தேன். போலீஸாரைக் கண்டாலும் நடுக்கமாக இருந்தது. வேலன் தைரியம் வராது. யாருக்கும் சொல்லாதீர்கள், சாமி" என்று சொல்லி முடித்துக் கெஞ்சுவது போல் என் முகத்தைப் பார்த்தான். மறுபடியும் உறுதி கொடுத்தேன். இங்கும் அங்கும் திரும்பிப் பார்த்தபடியே பேசினான்.

"அவன் பட்டணத்துக்கு வந்த நாலாம் நாளே ஒரு கூட்டத்தில் சேர்ந்துவிட்டான். அந்தக் கூட்டத்தில் ஐந்தாறு போக்கிரிகள்



இருக்கிறார்கள். அவர்கள் எந்த நேரமும் சைனா பசாரி-ருந்து மூர் மார்க்கெட் வரையிலும் எங்காவது நின்று கொண்டும், திரிந்து கொண்டும் இருப்பார்கள். சில வேளைகளில் பஸ் நிற்கும் இடங்களில் நிற்பார்கள். ஆட்கள் கூட்டமாகச் சேரும் இடங்களிலே அவர்கள் நடுவில் திரிந்து கொண்டிருப்பார்கள். வேலன் அவர்களோடு சேர்ந்துவிட்டான். எனக்கோ முனிசாமிக்கோ அது பிடிக்கவில்லை. ஆனால், நாங்கள் கூலியும் கிடைக்காமல் பட்டினி இருந்தபோதெல்லாம் எங்களுக்குக் காப்பி, பழம் எல்லாம் வாங்கிக் கொடுத்துக் காப்பாற்றினவன் அவன்தான். ஒரு நாள் வேலனிடத்தில் பத்து ரூபாய் நோட்டு ஐந்து பார்த்தோம். யாரோ சட்டைப்பையில் பணப்பை (மணி பர்ஸ்) வைத்துக்கொண்டு போனதாகவும், அதை அந்த ஐந்தாறு பேரில் ஒருவன் கத்தரித்து இன்னொருவன் கையில் கொடுத்ததாகவும், அது அப்படியே கைமாறி மாடர்ன் கபேயி-ருந்து சென்டரல் ஸ்டேஷன் வரையில் வந்ததாகவும், அது வேலன் கைக்கு வந்தபோது, அதி-ருந்து ஐந்து நோட்டு எடுத்து வைத்துக் கொண்டதாகவும் சொன்னான். இதைக் கேட்டதும் முனிசாமி எங்கள்மேல் கோபத்தோடு புறப்பட்டான். வேலன் ஓடிப்போய் அவனுடைய இரண்டு கைகளையும் பிடித்துக் கொண்டு, போலீஸாரிடம் சொல்லாதிருக்குமாறு கெஞ்சினான். இனிமேல் அந்தத் தொழில் செய்வதில்லை என்று வாக்குறுதி கொடுக்கும்படி முனிசாமி கேட்டான். வேலன் வாக்குறுதியும் கொடுத்தான். ஆனால் சொன்னபடி நிற்கவில்லை. ஒரு நாள் உங்களைப்போல் ஒருவர் பணப்பை போய்விட்டதாகவும், இருநூறு ரூபாய் இழந்ததாகவும் அழுதுகொண்டே சைனா பசாரில் சொன்னார். அதைக் கேட்டபோது முனிசாமி என்னைத் தனியே அழைத்துக்கொண்டுபோய், "வேலன் இப்படி பலரை அழ வைத்துப் பாவம் தேடிக்கொள்கிறானே" என்றான். வேலனை நான் தனியே ஒருநாள் உருக்கத்தோடு கேட்டேன். தான் ஒன்றும் செய்வதில்லை என்றும், மற்றவர்களுக்குத் துணையாக இருந்து, திருடிய பொருள் கைமாறும்படி செய்வதாகவும் சொல்லிச் சத்தியம் செய்தான். முனிசாமி இறந்த பிறகு நான் வேலனை ஒன்றுமே கேட்பதில்லை. எப்படியாவது போகட்டும் என்று விட்டுவிட்டேன். ஆனால், நான் பட்டினி இருந்ததைப் பற்றியும் வருத்தப்படவில்லை. ஐந்து நாளாக அவனைப் பார்க்கவில்லை. இந்தக் கோயிலுக்கும் அவன் ஐந்து நாளாக வரவில்லை. வந்திருந்தால் எனக்குத் தெரியும். கிழக்கு இறவாணத்து மூலையில் கல்சந்தில் தேங்காய் கொஞ்சமாவது

வைக்காமல் போகமாட்டான். ஐந்து நாளாக அங்கே தேங்காயும் இல்லை. சைனா பசாரிலும், மூர் மார்க்கெட்டிலும் தேடினேன். எங்கும் கிடைக்கவில்லை. என்னாலும் நடக்க முடியாதபோதுதான் இந்தக் கோயி-ல் இருந்து உயிரை விட வந்தேன். இரவில் நேரம் கழித்து வந்தால் பார்க்க முடியும் என்று வந்தேன். கையில் காசு அகப்படாத காரணத்தால் தேங்காய் வாங்க முடியாமல் போனதோ அல்லது கூட்டாளிகள் துரத்திவிட்டார்களோ அல்லது போலீஸார் பிடித்துச் சிறையில் வைத்துவிட்டார்களோ, என்ன ஆனானோ, ஒன்றும் தெரியவில்லை. என் மனத்தில் ஒரே கவலையாக இருக்கிறது. தூங்கிக் கொண்டே இருந்தேன். அதை நினைத்துத்தான் திடுக்கிட்டு எழுந்தேன்".

"என்றைக்கும் ஆபத்து பிக்பாக்கெட்" என்று சொல்-முடிப்பதற்குள், அவன் எழுந்து என் இரண்டு கால்களையும் பிடித்துக் கொண்டு, "சாமி, சொல்லி விடாதீர்கள்" என்று கண்ணீர் விட்டுக் கெஞ்சினான்.

மறுபடியும் அவனுக்கு நம்பிக்கை ஊட்டுவதற்குள் போதும் போதும் என்று ஆகிவிட்டது,.

கொஞ்ச நேரம் எதையோ உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு, அவனே என்னைப்பார்த்து "ஒரு முறை போலீஸாரிடம் என்னைக் கொண்டுபோய்ச் சேர்த்து, இரண்டு நாள் சிறையில் இருக்கும்படியாகவும், மூன்றாம் நாள் வெளியே அழைத்து வந்து விடுவதாகவும் உறுதியாகச் சொன்னான். ஒரு குற்றமும் செய்யாத நான், அவனுக்காக சிறையில் அடைப்பட்டு இருந்தேன். ஆனால் சொன்ன சொல் தவறாமல் அவன் மூன்றாம் நாள் வந்து என்னை அழைத்துக் கொண்டு போனான். போலீஸார் யாரும் அவனுக்குப் பகையாளி அல்லர், நாள்தோறும் நிறையப் பணம் வைத்திருக்கிறபடியால் அவனிடம் எல்லாரும் அன்பாகப் பழகுகிறார்கள். ஆனால் முனிசாமியும் நானும் நடப்பதற்குக் கூட பயந்தோம். அப்படி இருந்தும் எங்களை எல்லாரும் மிரட்டினார்கள். வேலன் உங்களைப்போல் வெள்ளைவெளேர் என்று மடிப்பு வேட்டியும், மடிப்பு சொக்காயும் சில வேளைகளில் கோட்டும் போட்டுக்கொண்டு திரிவான். சில நாட்களில் கடைகளில் வாடகைக்கு டவுசர் வாங்கி நல்ல செருப்புப் போட்டுக் கொண்டு திரிவான். இவ்வளவு தைரியம் இருந்தும், ஐந்து நாளாக



வரவில்லையே, கண்ணில் படவில்லையே என்பதை நினைக்கும்போது, வயிறு பகீர் என்கிறது. எங்காவது ஆசுபத்திரியில் இருக்கிறானோ அல்லது சிறையில் இருக்கிறானோ தெரியவில்லை. நான் நோயாளியாக இருந்தாலும் அவன் பார்த்துக் கொள்வான்; சிறையில் இருந்தாலும் அவன் வந்து விடுதலை செய்து கொண்டு போவான். அவனிடம் பணம் இருக்கிறது. ஆனால் நான் அவனை எங்கே தேடுவது? என்ன உதவி செய்வது? எப்படி விடுதலை செய்வது? என்னிடம் பணம் ஏது?" என்று சொல்லி ஒரே கலக்கமாகப் பைத்தியம் பிடித்தவன்போல் பழைய கல்லையே உற்றுப் பார்த்துப் பெருமூச்சு விட்டான்.

அதற்குள் ஒருவர் என்னைத் தேடிக்கொண்டு வீட்டை நோக்கி வந்து உள்ளே நுழைந்து, "நல்ல காலம்; வெளியே போய்விட்டீர்களோ என்று நம்பிக்கை இல்லாமல் வந்தேன்" என்று சொல்லிக்கொண்டே அணுகினார். அவரை உள்ளே அழைத்துச் சென்று பேசிக்கொண்டு இருந்தேன். பேச்சு முடிந்ததும் வெளியே வந்து பார்த்தபோது அந்த இளைஞன் அங்கே இல்லை. எவ்வளவு உறுதி கூறியும் என்மேல் அவனுக்கு நம்பிக்கை இல்லை என்று உணர்ந்தேன். 'போனதும் நன்மையே, நமக்கு ஏன் இந்தத் தொல்லை?' என்று நானும் அமைதி அடைந்தேன்.

இது நடந்து இரண்டு வாரம் கழிந்து, ஒரு நாள் மாலையில் நல்ல நிலவொளியில் வீட்டை நோக்கி வந்துகொண்டிருந்தேன். வழியில் அந்த மாரியம்மன் கோயிலைக் கண்ட கண், என் பழைய நினைவைத் தூண்டியது. அங்கே ஒரு இளைஞன் விழுந்து வணங்கிக் கொண்டிருந்தான். எதிரே ஒரு சீப்பு வாழைப்பழமும் பெரிய தேங்காய் ஒன்றும் இருந்தன. தேங்காயை உடைத்துக் கற்பூரம் ஏற்றினான். கைகளைக் குவித்தபடியே நெடுநேரம் நின்று ஏதோ பார்த்துக் கொண்டிருந்தான். எனக்கு அந்த வேலன் நினைவு வந்தது. இருக்காது, இவர் யாரோ உண்மையான அன்பர் என்று நடக்க எண்ணினேன். எதற்கும் பார்த்துவிட்டுப் போகலாம் என்று இளைப்பாற வந்தவன்போல் நடித்துக் கோயிலை அடுத்த திண்ணையின் மேல் உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருந்தேன்.

அந்த வாழைப்பழச் சீப்பை எடுத்து தெருவில் போய்க் கொண்டிருந்த சில பிள்ளைகளை அழைத்து, ஆளுக்கு ஒன்றாகக் கொடுத்தான். ஒரு மூடி தேங்காயைத் தோண்டி ஆளுக்குக் கொஞ்சம்

கொடுத்தான். சிறுவர்கள் போய்விட்ட பிறகு மற்ற மூடியை எடுத்துக் கொண்டு கிழக்கு இறவாணத்து மூலைக்கு வந்தான். அந்த கல்சந்தில் கை வைத்து எடுத்து எடுத்து மெல்ல வீசி எறிந்தான். ஒவ்வொரு முறையும் ஒரு பெருமூச்சு விட்டது எனக்குக் கேட்டது. கடைசியில் மெல்ல நகர்ந்தான். சிறிது தொலைவு நடந்ததும், கைக்குட்டையை எடுத்துக் கண்களைத் துடைத்துக்கொண்டே செல்வதைக் கண்டேன். என் நெஞ்சத்தில் ஏதோ துயரம் குடிகொண்டது. சிறிது நேரம் கழித்து எழுந்து, அந்த கல்சந்தை அணுகிக் கை விட்டுப் பார்த்தேன். அந்த தேங்காய் மூடியை அப்படியே வைத்திருந்ததை கண்டேன். என்னை அறியாமல், என் வாய் ‘அய்யோ’ என்று ஒ-த்தது. அப்பால் வந்தேன். அவன் எதையோ எடுத்து வீசி எறிந்தானே, அது என்ன பார்க்கலாம் என்று அந்த இடத்திற்குப் போய்ப் பார்த்தேன். மேகங்கள் விலகிச் செல்ல, முன்னிலும் நன்றாய் நிலா ஒளி பரப்பியது. அந்த இடத்தில் தேங்காய்த் துண்டுகள் விழுந்து கிடந்தன; வாடிக்கிடந்தன; எறும்பு மொய்த்துக் கிடந்தன; எடுப்பாரின்றிக் கிடந்தன; கண்ணீரால் நனைந்து கிடந்தன.

## பயிற்சி.

1. தேங்காய்த் துண்டுகள் என்னும் கதையைக் கருப் பொருளும் சுவையும் குன்றாமல் சுருக்கி எழுதுக.
2. முனிசாமி, வேலன் ஆகிய பாத்திரங்களைப் பற்றி எழுதுக.
3. “என்றைக்கும் ஆபத்து பிக்பாக்கெட்” என்று கண்ணீர் விட்டுக் கெஞ்சியவன் மனந்திருந்தி, உயர்ந்ததாக உம் கற்பனைத் திறத்தினால் ஒரு கதை எழுதுக.
4. வெயிலில் படுத்துச் சுருண்டிருந்த உடம்பைக் கண்டவர்கள் பேசுவதாக உரையாடல் ஒன்று தயாரித்திடுக.

# 3. மறுமணம்.

***—விந்தன்—***

அவள் போய் விட்டாள் - எவள் போய்விட்டாள்? தன்னைப் பெற்று வளர்த்த பெற்றோரை உயிருடன் மறந்து, “இனி நீயே கதி!” என்று மணப்பந்தலில் பந்துமித்திரர்களுக்கு முன்னால் என் கரத்தை எவள், தன் மலர்க்கரத்தால் பற்றினாளோ, அவள்; வீடு, வாசல் ஒன்று ஏற்படுத்தி, ஏகாங்கியாக எங்கும் போகவிடாமல் எவள் என்னைத் தடுத்தாட்கொண்டோளோ, அவள்; எனக்கு நோய்நொடி வந்த போதெல்லாம் தனக்கே வந்துவிட்டதாக நினைத்து அல்லும் பகலும் என் அருகிலேயே இருந்து எவள் எனக்குச் சேவை செய்து வந்தாளோ, அவள்; அன்பு காட்டுவதில் தாயும், தாரமும் ஒன்றுதான் என்று எவள் என்னை நினைக்க வைத்தாளோ அவள்; என் வாழ்க்கையில் அவ்வப்பொழுது ஏற்பட்ட சுக துக்கம் இரண்டிலும், இத்தனை நாளும் எவள் பங்கெடுத்துக் கொண்டிருந்தாளோ, அவள்; வாழ்க்கை இந்திர ஜாலம் போன்றது என்று தெரிந்திருந்தும் என்னுடன் எதிர்காலத்தைப்பற்றி எவள் என்னவெல்லாமோ திட்டம் போட்டுக்கொண்டிருந்தாளோ, அவள்!

அவள் பெற்ற செல்வம் ரகு இதோ இருக்கிறான்; அவள் பெற்ற கண்மணி ராதை, இதோ இருக்கிறாள்.

நானும் இருக்கிறேன், என் அம்மாவும் இருக்கிறாள்; அவள்? - போயே போய் விட்டாள்!

அவள் போய் இன்றுடன் ஆறு மாதங்களாகி விட்டன, நான் ஏன் இருக்கிறேன்? - ‘அவள் போனால் போகிறாள்!’ என்று இன்னொரு பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ளவா? அம்மா ஏன் இருக்கிறாள்?- என் தலையில் இன்னொருத்தியைக் கட்டி வைக்கவா? ரகுவும், ராதையும் ஏன் இருக்கிறார்கள்? - ‘நீங்கள் இரண்டாம் தாரம் கல்யாணம் செய்துகொள்ள வேண்டியது

அவசியந்தான்!' என்று பிறர் என்னை வற்புறுத்தவா? - எப்படி முடியும்?

தாம்பத்திய வாழ்க்கையில் மனிதவர்க்கத்தைவிட மணிப்புறாக்கள் எவ்வளவோ மேலானவையாகத் தோன்றுகின்றன. அவை எந்தக் காரணத்தைக் கொண்டும் ஏக பத்தினி விரதத்தைக் கைவிடுவதில்லையாம். ஆண்புறா, பெண்புறாவை விட்டுப் பிரிந்தால் ஊணுறக்கமின்றி உயிரை விட்டுவிடுமாம்; பெண்புறா ஆண்புறாவை விட்டுப் பிரிந்தால் உயிர்போகும் வரை உண்ணாவிரதமிருக்குமாம் - நாமும் அவற்றைப் பின்பற்றுவது சாத்தியமா? - அது எப்படிச் சாத்தியமாகும்! ரகுவையும் ராதையையும் விட்டு விட்டு நாம் எப்படி ஊணுறக்கமின்றி உயிரை விடமுடியும்?

அப்புறம் அம்மா? - நமக்குப்பின் அவள் கதி? அந்தப் புறாக்களுக்குத்தான் பாசமென்றும் பந்தமென்றும் ஒன்றும் இல்லை. கொஞ்சம் பறக்கும் சக்தி வந்ததும் அவை தங்கள் குஞ்சுகளை விரட்டி விடுகின்றன. நம்முடைய குழந்தைகளை நாம் அப்படி விரட்டிவிட முடியுமா? - ஐயோ, எப்படி முடியும்?

முடியா விட்டால் என்ன? இரண்டாந்தாரம் கல்யாணம் செய்து கொள்ளாமலே நாம் வாழ முடியாதா?

ஏன் முடியாது?

அம்மாவுக்கோ வயதாகிவிட்டது; அவளால் எந்த காரியத்தையும் இனி கவனிக்க முடியாதுதான்-அதனால் என்ன, சமையலுக்குத்தான் சங்கரனை வைத்தாகி விட்டதே! பார்ப்போம்:

நாளடைவில் என்னையும் அறியாமல் ஏதோ ஒரு மனக்கவலை ஏக்கம்: ஏன் இப்படி?

இத்தனை நாளும் பார்ப்பதற்கு லட்சணமாயிருந்த சங்கரனை இப்போது பார்க்கவே பிடிக்கவில்லை. அவன் சமையலையும் சாதம் பரிமாறுவதையும் சகிக்கவே முடிவதில்லை.

"காப்பி கொண்டு வரட்டுமா?" - சாதம் போடட்டுமா? என்று அவன் கேட்கும்போதெல்லாம் காதை அடைத்துக்கொள்ள வேண்டும்போல் தோன்றுகிறது. வியர்க்க விறு விறுக்க அவன் எதிரில் வந்து நின்றால் என் உடம்பே பற்றி எரிவதுபோல் இருக்கிறது.



சாட்டை போல் தலைமயிரைப் பின்னிவிட்டுக் கொண்டு, தலை நிறையப் பூவை வைத்துக்கொண்டு, ஏதாவது ஒரு பாட்டை முணுமுணுத்துக் கொண்டு கை வளைகள் கலகலவென்று சப்திக்க, அப்படியும் இப்படியுமாக 'அன்ன நடை' போட்டுக் கொண்டிருந்த அந்த அழகு தெய்வம் எங்கே, இந்த அவலட்சணம் எங்கே?

"காப்பியா? இதோ, கொண்டுவந்து விட்டேன்?"

"சாதமா? இதோ, போட்டு விட்டேன்!" என்று அவள் குயிலைப்போலக் கொஞ்சுவது எங்கே? இவன் கழுதை போலக் கத்துவது எங்கே?

அவன் செய்யவேண்டியது வேலை; வாங்கவேண்டியது கூலி -இவற்றைத் தவிர அவனுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்?

இப்படிப்பட்ட வாழ்க்கையில் அன்புக்கு இடமுண்டா? அன்புக்கு இடமில்லை என்றால் இந்த வாழ்க்கை என்னத்திற்கு? இந்த உலகம்தான் என்னத்திற்கு?

இப்படியெல்லாம் என்மனம் இப்பொழுது எண்ணமிடுகிறது; எண்ணமிட்டு ஏங்குகிறது.

வீட்டில் உள்ளவையெல்லாம் போட்டது போட்ட இடத்தில் கிடக்கின்றன; ஏற்ற இடத்தில் அவை எடுத்து வைக்கப்படவில்லை; வீடே வெறிச்சென்று கிடக்கிறது. இத்தனைக்கும் அவளைத் தவிர வீட்டில் எல்லாம் இருக்கின்றன; இருந்தும் என்ன? ஒன்றுமே இல்லாதது போலல்லவா இருக்கிறது!

நல்ல வேளையாகக் குழந்தைகளைப் பராமரிப்பதற்கு மட்டும் தன் சிநேகிதி சீதாவை அவள் வைத்துவிட்டுப் போயிருந்தாள்.

எதிர் வீட்டில் குடியிருப்பவள் அவள்; வாழ்க்கை இன்னதென்று தெரியுமுன்பே விதவையாகி விட்டாள். அவளுக்குத் தகப்பனார் இல்லை. தாயார் இருந்தாள். இவர்கள் இருவருக்கும் ஜீவனோபாயம் அளித்துவந்தது ஒரே ஒரு இயந்திரம் - தையல் மெஷின் உணர்ச்சியற்றது! - ஆம். உணர்ச்சியுள்ள உறவினர்கள் பலர் அவர்களுடைய திக்கற்ற நிலையைப் பார்த்தும் பார்க்காதது போல் இருந்து விட்டார்கள்! அந்த சீதாதான் இப்போது ரகுவுக்கும் ராதைக்கும் தாயார்!

குழந்தைகள் இருவரும் தலைவாரிக் கொள்ளவேண்டுமா? -

அவளிடந்தான் செல்வார்கள். பொட்டிட்டுக் கொள்ள வேண்டுமா? - அவளிடந்தான் செல்வார்கள். சட்டை போட்டுக் கொள்ள வேண்டுமா?-அவளிடந்தான் செல்வார்கள்.

எந்தவிதமான பிரதிபலனையும் எதிர்பாராமல் அவள் இத்தனைக் காரியங்களையும் செய்து வந்தாள்.

ஒரு நாள் மாலை, வேலையி-ருந்து வீட்டுக்கு வந்தேன். உள்ளே சீதாவின் பேச்சுக் குரல் கேட்டது, செவிமடுத்தேன்.

"நிமோனியாவாம்; மிக்சர்' கொடுத்தார்!" என்றாள் அவள்.

அவ்வளவுதான்; "யாருக்கு நிமோனியா" என்று உடனே கேட்டுவிட என் மனம் துடித்தது.

அதற்குள் "காலையில் பள்ளிக்கூடத்திற்கு போகும்போது நன்றாகத் தானே போனாள்?" அதற்குள் இப்படி வந்துவிட்டதே? என்று அங்கலாயத்தாள் என் தாயார்.

"எல்லாம் சரியாய்ப் போய்விடும் மாமி!" என்று தேறுதல் சொன்னாள் சீதா.

நான் உள்ளே சென்றேன். ராதை கட்டிலில் படுத்துக் கொண்டிருந்தாள். தொட்டுப் பார்த்தேன். நல்ல காய்ச்சல்.

"மூன்று மணி நேரத்திற்கு ஒரு முறை மருந்து கொடுங்கள். ஆகாரம் "ஆரோரூட்" கஞ்சியைத் தவிர வேறொன்றும் கொடுக்க வேண்டாம், என்று எச்சரித்து விட்டு, சீதா என்னைக் கண்டதும் 'விருட்'டென்று வெளியே போய்விட்டாள்.

"பகல் பன்னிரண்டு மணிக்கு பள்ளிக்கூடத்திலிருந்து வரும்போது குழந்தைக்கு நல்ல ஜுரம். சீதாதான் டாக்டர் வீட்டிற்கு அவளைக் கூட்டிக்கொண்டு போனாள். எனக்கென்ன கண்ணா தெரிகிறது!" என்றாள் தாயார்.

அதற்குள் சங்கரன் கஞ்சியைக் காய்ச்சி எடுத்துக்கொண்டு வந்தான். அதை ஆறவைத்துக் குழந்தைக்கு குடிப்பாட்ட முயன்றேன். அவள் குடிக்கவில்லை. "அம்மா, அம்மா" என்று அலறினாள்.

"உனக்கு அம்மா இல்லேடி கண்ணு." என்று சொல்லிக் கொண்டே, கரை புரண்டு வந்த கண்ணீரைப் புடவைத் தலைப்பால்



துடைத்துக் கொண்டாள் தாயார்.

"ஏன் இல்லை? இப்பத்தான் என்னை டாக்டர் வீட்டுக்குக் கூட்டிக் கொண்டு போனாளே அம்மா!" என்றாள் குழந்தை.

"அந்த அம்மா வாடி? இதோ அழைச்சிகிட்டு வறேன்!" என்று தட்டு தடுமாறிச் சென்று, எதிர்வீட்டுச் சீதாவை அழைத்து வந்தாள் அம்மா.

அவள் வந்து குடிப்பாட்டியபோதுதான் குழந்தை கஞ்சி குடித்தது!

சிறிதுநேரம் இருந்து, ராதை கண்ணயர்ந்த பிறகு சீதா போய்விட்டாள்.

அடுத்தபடி மருந்து கொடுக்கும் வேளை வந்தது. நான் கொடுக்க முயன்றேன். குழந்தை குடிக்கவில்லை. அதற்கும் சீதாதான் வரவேண்டியிருந்தது.

"ஐயோ, அவளுக்கு வேலை தலைக்கு மேலிருக்குமே' என்று அம்மா வருந்தினாள்.

"அதெற்கென்ன மாமி, பரவாயில்லை!" என்றாள் அவள். ராதையின் ஜுரம் நீங்குவதற்கு மூன்று வாரங்களாயின. அந்த மூன்று வாரங்களும் சீதா, ராதையுடனேயே இருந்தாள்.

இந்தச் சமயத்தில்தான் என் மனத்தில் ஒரு சபலம் தட்டிற்று. ஏற்கெனவே சமூகச் சீர்திருத்தத்தில் பற்றுக் கொண்டிருந்த என் மனம் சீதாவை நாடியது - அவள் சம்மதிப்பாளா? அவள் சம்மதித்தாலும் அவளுடைய தாயார் சம்மதிப்பாளா?

யார் சம்மதிக்கவிட்டால் என்ன? என்னைப் பார்த்து அவளும், அவளைப் பார்த்து நானும் சம்மதித்தால் போதாதா? - இந்த அநித்தியமான உலகத்தில் பிறருடைய விருப்பும், வெறுப்பும் யாருக்கு என்ன வேண்டிக் கிடக்கிறது?

ஒரு நாள் துணிந்து இந்த விஷயத்தை என் தாயாரிடம் வெளியிட்டேன்.

அவள் "சிவ சிவா!" என்று காதைப் பொத்திக் கொண்டு, ரொம்ப நன்றாய்த்தான் இருக்கிறது; இந்த மாதிரி இன்னொரு தரம் சொல்லாதே! என்று சொல்லி விட்டாள்.

அன்று மாலை வீட்டிற்குள் நுழையும்போது, சீதாவுக்கும் தாயாருக்கும் இடையே பின்வரும் சம்பாஷனை நடந்து கொண்டிருந்தது.

“என்ன இருந்தாலும் பெண்பிள்ளை இல்லாத வீடு ஒரு வீடு ஆகுமா?”-இது சீதாவின் குரல்.

“நானும் அதைத்தான் சொல்லுகிறேன்; கேட்டால்தானே?” இது என் அம்மா.”

“ஏனாம்? இவரைவிட வயதானவர்கள், ஏழெட்டுப் பிள்ளை பெற்றவர்கள் எல்லாம் இரண்டாம் தாரமாகக் கல்யாணம் செய்து கொள்ளவில்லையா?”

“இவன் என்னமோ சமூகத்தைச் சீர்திருத்திவிடப் போகிறானாம்; விதவைகளின் துயரத்தைத் தீர்த்துவிடப் போகிறானாம். அதற்காக இரண்டாந்தாரமாகக் கல்யாணம் செய்து கொள்வதென்றால் இவன் எவளாவது ஒரு விதவையைத்தான் கல்யாணம் செய்து கொள்வானாம் இன்னும் என்னவெல்லாமோ சொல்கிறான்; அவற்றையெல்லாம் வெளியில் சொல்லவே எனக்கு வெட்கமாய் இருக்கிறது!”

“எந்த விதவை இவரை கல்யாணம் செய்து கொள்வதற்குக் காத்துக் கொண்டிருக்கிறாளாம்? இந்தப் புருஷர்கள்தான் ‘விதவா விவாகம், விதவா விவாகம்’ என்று எப்போது பார்த்தாலும் அடித்துக் கொள்கிறார்கள். எந்தப் பெண்ணாவது அப்படிச் சொல்கிறளா? - பைத்தியந்தான்.”

இதைக் கேட்டமாத்திரத்தில் என் மனக்கோட்டை இடிந்து விழுந்தது. எண்ணங்கள் மூலைக்கு ஒன்றாகச் சிதறின.

ஆனாலும் ஆசை அத்துடன் என்னை விட்டுவிடவில்லை. எதற்கும் ஒரு கடிதம் எழுதி கேட்டுவிடுவதென்று தீர்மானித்தேன். அந்தக் கடிதத்தின் முதலில் விதவா விவாகத்தின் அவசியத்தை வற்புறுத்தி, நடுவே என் ஆவலை வெளியிட்டு, கடைசியில் கடிதம் பிடித்தாலும், பிடிக்காவிட்டலும் தயவு செய்து பரம ரகசியமாகப் பதில் எழுதுமாறு கேட்டுக் கொண்டிருந்தேன்.

மேற்படி கடிதத்திற்கு வந்த பதில் இதுதான்:

வணக்கம்



மறுமணம் செய்து கொண்டால் விதவையின் துயரம் தீர்ந்துவிடும் என்று சிலர் சொல்வதை நீங்கள் நம்புகிறீர்களா? - என்னால் அதை நம்ப முடியவில்லை. அதற்காக வழிவழியாக வாழ்ந்து வரும் காதலைக் கொன்றுவிடவும் நான் விரும்பவில்லை.

எனவே என்னைப் பொறுத்தவரை, நான் பூசிக் கொண்ட மஞ்சளும், வைத்துக்கொண்ட குங்குமத் திலகமும், சூடிய மலரும், அணிந்த வளையலும் ‘அவ’ருக்காகத்தான்.

வேறொருவருக்காக அவற்றை மீண்டும் அணிந்து கொள்வதென்பது இந்த ஜென்மத்தில் முடியாத காரியம்.

மன்னிக்கவும்.<br>
சீதா.

மேற்படி கடிதத்தைப் படித்து முடித்ததும் பெண்கள் சபலச் சித்தம் உள்ளவர்கள் என்று சொன்ன மேதாவிகளின் மேதையை எண்ணி நான் சிரித்தேன், வைர நெஞ்சுடன் அவள் வாழும் முறைமையைப் பற்றி எண்ணியெண்ணிவியந்தேன். அப்போது காற்றிலே மிதந்து வந்த கீதமொன்று,

கற்பு நிலையென்று சொல்ல வந்தார் - இரு

கட்சிக்கும் அஃதைப் பொதுவில் வைப்போம்

என்று இசைத்து, மறுமணம் அல்ல திருமணம், ஒரு மணமே திருமணம்! என்ற முடிவுக்கு என்னை இழுத்துச் சென்றது.

## பயிற்சி.

1. “மறுமணம்” என்னும் கதையைக் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் சுருக்கி வரைக.
2. “மறுமணம்” என்னும் கதையில் சீதா என்னும் பாத்திரத்தை ஆய்க.
3. சீதாவுக்கும் அவள் சிநேகிதி மாமியாருக்கும் இடையில் நடந்த உரையாடலை எழுதுக.
4. இக்கதையின் நாயகன் விதவையைக் கல்யாணம் செய்து கொண்டு வாழ்வில் உயர்ந்ததாகக் கற்பனைத் திறத்தால் கதை எழுதுக.

# 4. செங்கமலமும் ஒரு சோப்பும்.

*—சுந்தரராமசாமி—*

உலகமெங்கும் வியாதிக் கிருமிகள் மயம். இலேசாகச் சொல்-விடலாம். நாலைந்து ஆண்டுகள் இதைப் பற்றி ஆராய்ச்சி செய்து பட்டம் பெற்ற செங்கமலத்திற்கு அல்லவா அதன் பயங்கர விளையாட்டுகள் தெரியும். வியாதிக் கிருமிகளைப் பூதக்கண்ணாடி வழி சோதனை செய்து, எண்ணிக் கணக்கிடுவது அவள் வேலை.

ரோகாணுக்களின் சம்காரத் திருவிளையாடல்களைப் பற்றி எத்தனை தடவை கௌரிக்குட்டியிடம் சொன்னாலும் அலுக்காது செங்கமலத்திற்கு. அரைமணி நேரம் மூச்சு விடாமல் சொற்பொழிவு ஆற்றிவிட்டுக் கேள்விகள் தொடுப்பாள்.

“இன்று துடைப்பக்கட்டையை லோஷன் விட்டு கழுவினாயோ?”

“ம்.”

“கொல்லையில் மாமரத்தடியில் 'பத்து அவுன்ஸ் தண்ணீர் தேங்கி நிற்கிறது. இந்த உலகம் அழிய அதுவே அதிகம்.

“கவனிக்கிறேன்.”

“இன்று காலையில் குளித்தாயோ?”

“ஆமாம்”

“மருந்து சோப்புத் தேய்த்துத்தானே?”

“ஆமாம்”

வாசலில் கார் வந்து நின்றது. செங்கமலம் கிளம்பி விட்டாள். பூதக்கண்ணாடி வழி அணுவை எண்ணிக் கணக்கிட.

கௌரிக்குட்டி வேலைக்கு வந்து ஐந்தாறு மாதங்கள் தானாகிறது. வேலைக்காரி என்று வந்தவள். இப்பொழுது தோழி என்ற பதவி உயர்வு பெற்றுவிட்டாள்.



வேலைக்கு வந்த முதல் நாள் நடந்த கூத்தையெல்லாம் தனிமையில் உட்கார்ந்திருக்கிறபொழுது எண்ணிப் பார்த்துச் சிரிப்பாள் கௌரிக் குட்டி.

முதல்நாள் வந்து நின்றதும் இன்டர்வியூ ஆரம்பமாகிவிட்டது.

செங்கமலம்: உலகமெங்கும் வியாதி அணுக்கள் நிறைந்திருக்கிறது என்பது தெரியுமா?

கௌரிக்குட்டி: தெரியாது.

செங்கமலம்: தெரிந்துகொள். உலகமெங்கும் ரோகாணுக்கள் மயம். நீ எந்த நிமிஷமும் இறந்து போகலாம். நானும் அப்படியே.

கௌரிக்குட்டி கண்ணை உருட்டி உருட்டி விழித்தாள். பேட்டி தொடர்ந்து நடைபெற்றது.

செங்கமலம்: தேவலோகத்தில் முப்பத்திமூன்று கோடி தேவர்கள் இருக்கிறார்களாம். பூலோகத்தில் அதே அளவு அணுக்கள் உனது உள்ளங்கையில் இருக்கின்றன. மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

தொடர்ந்து, கௌரிக்குட்டியின் அன்றாட' அலுவல்கள் பற்றியும் சில சொன்னாள் செங்கமலம்:

சுடு தண்ணீரில் மருந்து சோப்புத் தேய்த்துக் குளிக்க வேண்டும். சாப்பாட்டு இலைகளை மூன்றரை வினாடி கிருமிநாசினியில் ஊற வைக்க வேண்டும். ஐந்து தடவை பல் விளக்க வேண்டும். வாய்க்குள்ளிருக்கும் கிருமிகள் இரண்டு லக்ஷம் யானைகளை விழத்தட்டுவதற்குப் போதுமானதாகும்.

மறுநாள் இரவு அன்றைய அலுவல் மிகுதியால் கண்ணெரிச்சலோடு வீட்டுக்கு வந்த செங்கமலம் கௌரிக்குட்டியை அழைத்தாள். அவள் வந்தாள்.

“குனிந்து நின்றுகொள்.”

நின்றாள்.

முதுகில் கிடந்த பின்னலைக் கீழே தள்ளி தலைமயிரை அளைந்து பார்த்தாள் செங்கமலம்.

செங்கமலம்: இன்றோடு நின்றுகொள். கணக்குத் தீர்த்துச்

சம்பளம் தந்துவிடுகிறேன்.

கௌரிக்குட்டி: என்ன விஷயம்?

செங்கமலம்: தலையில் பேன் இருக்கிறது.

கௌரிக்குட்டியின் கண்களில் நீர் நிறைந்து விட்டது. இதைப் பார்த்ததும் மனமிரங்கி விட்டது செங்கமலத்திற்கு.

செங்கமலம்: சரி, இரண்டு நாள் அவகாசம் தருகிறேன். ஒழித்துக் கட்டிவிட வேண்டும்.

கௌரிக்குட்டி: ஒழித்துக்கட்டுவேன். உறுதி.

இதெல்லாம் பழைய கதை. பின்னால் கௌரிக்குட்டியும் எவ்வளவோ மாறிப்போய் விட்டாள். பூதக்கண்ணாடி இல்லாமலே எங்கும் அணுக்கள் நிறைந்திருப்பது அவள் கண்களுக்கும் தெரிந்தது.

சென்னையும் செங்கமலமும் சேர்ந்து ரொம்பவும் மாற்றிவிட்டார்கள் கௌரிக்குட்டியை. பழைய பட்டிக்காட்டுப் பெண்ணா அவள்!

மாமூல் உடையைக் கழற்றி எறிந்துவிட்டு வாயில்ஸாரி கட்டிக் கொண்டாள். வெளியே கிளம்பினால் கையில் பை சுழலும். குடையைச் சுழற்றிக்கொண்டே ஒயிலாய் நடந்தாள். இருமுகிறபொழுது விரல்களைச் சுருட்டி வாய் அருகே வைத்துக் கொள்ளும் அழகு அற்புதமாக இருக்கும். இங்கீ-ஷ் கூடத் தெரிந்து கொண்டாள். யாராவது அழைப்பிதழ்கள் கொண்டு கொடுத்தால் "எக்ஸ்க்யூஸ்மி" என்பாள். பஸ்ஸில் பிரயாணிகள் காலை மிதித்துவிட்டால் 'தாங்க்யூ' என்பாள். தோள் குலுங்க வாய்விட்டுச் சிரிப்பாள். செங்கமலத்தோடு வைத்தியர்கள் சங்க விருந்துக்குச் சென்றால் சகல பண்டங்களையும் எச்சில் ஆக்கிவிட்டு அப்படி அப்படியே வைத்துவிட்டு வரவும் தெரிந்து கொண்டாள். நவநாகரிக யுவதி ஆனாள் கௌரிக்குட்டி. செங்கமலம் அவளைத் தோழியாக ஏற்றுக்கொண்டுவிட்டாள்.

கௌரிக்குட்டியும் செங்கமலமும் ஒரே உயிர் என்றாகிவிட்டார்கள். இரவில் இருவரும் சிரித்துச் சிரித்துக் கும்மாளம் போடுவார்கள். முதல் நாள் பார்த்த சினிமாவில் வந்த ஹாஸ்ய நடிகர் போல் நடித்துக் காட்டி, தமிழ் வசனங்களை மலையாளக் கொச்சையுடன் பேசிக் காட்டுவாள் கௌரிக்குட்டி,



செங்கமலம் சிரிப்பாய்ச் சிரித்து, வயிற்றைப் பிடித்துக்கொண்டே 'போதும்டீ போதும்' என்று குழறியடித்துக்கொண்டு கௌரிக்குட்டியின் வாயைப் பொத்துவாள்.

எனினும் நீண்ட நாட்களாகவே செங்கமலத்திற்கு ஒரு சந்தேகம். கௌரிக்குட்டி தினமும் மருந்து சோப்புத் தேய்த்துக் குளிக்கிறாளோ? அல்லது கள்ளப் பாடம் போடுகிறாளோ? இந்தச் சந்தேகத்தை எப்படித் தீர்ப்பது? யோசித்துப் பார்க்க வேண்டியதுதான்.

ஆனால் ஒரு சிக்கல். காலையில் எட்டு மணிக்குத்தான் கண் விழிப்பாள் செங்கமலம். இருபத்தேழு ஆண்டுகளாக இந்தப் பழக்கம். அதிகாலையில் கௌரிக்குட்டி மருந்து சோப்புத் தேய்த்துக் குளிக்கிறாளா என்பதை எப்படித்தான் தெரிந்து கொள்வது?

செங்கமலம் நல்ல மூளைக்காரி. யோசித்தாள். வழி பிறந்தது. சொடக்கு விட்டு, தனக்கே சபாஷ் போட்டுக்கொண்டாள்.

வீட்டில் கௌரிக்குட்டிக்குத் தனி அறை. அதில் சுவர் அலமாரி. சுவர் அலமாரிக்குள் மருந்து சோப், மருந்து எண்ணெய், கிருமி நாசினி முத-யன.

அன்று இரவு நடுநிசிவரை கண் விழித்திருந்தாள் செங்கமலம். மணி ஒன்றடித்தது. அறை விளக்கை அணைத்தாள். டார்ச் விளக்கை எடுத்துக்கொண்டு கால் அரவமின்றி கௌரிக்குட்டியின் அறைக்குள் வந்தாள். நெஞ்சு படபடவென்றடித்தது. அன்னிய வீட்டில் திருடச்செல்வதுபோல் பீதி.

கௌரிக்குட்டி ஆனந்த நித்திரையில் லயித்திருந்தாள். அவள் அருகே குனிந்து டார்ச் ஒளியைத் தரையை நோக்கி அடித்தாள். கழுத்து மாலையில் சாவி தெரிந்தது. மெதுவாக சாவியைக் கழற்றினாள். பதட்டத்தில் கை ஆடி மோவாயில் இடித்தது.கௌரிக்குட்டி உடம்பை உசுப்பினாள். சமயோஜித புத்தி கைலாகு கொடுத்தது. அருகி-ருந்த விசிறியால் வீசினாள் செங்கமலம்.

கௌரிக்குட்டியின் அலமாரியைத் திறந்து ஒரே நிமிஷத்தில் சிவப்பு மருந்து சோப்பை மடியில் கட்டிக் கொண்டாள். அடுத்த

நிமிஷத்திற்குள் பழையபடி சாவி கௌரிக்குட்டியின் மாலையில் தொங்கிற்று.

இப்பொழுது தைரியம் பிறந்தது. குறும்பும் கூடவே பிறந்தது.

அறைக்கதவை திறந்து கொண்டு, வாசலைப் பார்த்தபடியே கையை நீட்டி கௌரிக்குட்டியின் பாதத்தில் ஒரு குத்து விட்டுவிட்டு ஒரே ஓட்டமாய்த் தன் அறைக்குள் வந்தாள். மருந்து சோப்பைத் தனது அலமாரியில் வைத்துப் பூட்டினாள். படுக்கையில் விழுந்து கண் அயர்ந்தாள்.

காலை எழுந்ததும் முதல்நாள் இரவு நடந்த நாடகம்தான் ஞாபகத்திற்கு வந்தது. சிரித்துக் கொண்டாள். 'கௌரிக்குட்டி பரட்டைத் தலையோடு பாத்ரூம் வாச-ல் உட்கார்ந்து கொண்டிருக்கும் பார்ப்போமே?'

பின்கட்டுக்கு வந்தபொழுது, தலையில் உளுந்து வடைக்கட்டுப் போட்டுக்கொண்டு திவ்ய அலங்காரத்தோடு அமர்ந்து சினிமாப் பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்தாள் கௌரிக்குட்டி.

கோபம் பீறிட்டுக்கொண்டு வந்தது செங்கமலத்துக்கு.

"கௌரிக்குட்டி, இன்று நீ குளித்தாயா"

"ஓ குளித்தேனே!"

"சோப்புத் தேய்த்தா?"

"ஆமாம்"

என்ன நெஞ்சழுத்தம்! அடிப்பாவி, பச்சைப் புளுகு புளுகுகிறாயே! நாக்கு அழுகிப் போகாதா?

சட்டென்று ஒரு குயுக்தி பிறந்தது செங்கமலத்திற்கு. மௌனம் சாதிப்போம். இப்படியே எத்தனை நாட்கள்தான் மருந்து சோப் தேய்த்துக் குளிப்பாளாம்?

மறுநாள் காலை எட்டு மணி.

செங்கமலம் கண் விழித்ததும் முதல் கேள்வி:

"கௌரிக்குட்டி, இன்றும் குளித்தாய் அல்லவா?"



"ஆஹா குளித்தேன்."

"சோப்புத் தேய்த்தா?"

"ஆமாம். ஆமாம்"

"பேஷ். அருமையான திமிர்! இரு உன்னை ஒரு கை பார்க்கிறேன்.

மறுநாளும் அதே கேள்வி. அதே பதில்."

செங்கமலத்தின் கண்கள் கோவைப் பழங்காளயின.

"ஏ, கழுதை! இங்கே வா. இன்று நீ சோப்புத் தேய்த்துக் குளித்தாயா?"

"குளித்தேன்."

"சரி சோப்பைக் காட்டு பார்க்கலாம்" என்று சவால் விட்டாள் செங்கமலம்.

கௌரிக்குட்டி தனது அறையை நோக்கி விரைந்தாள். அவள் முதுகிற்குப் பின்னால் அழகு காட்டிச் சென்றாள் செங்கமலம். பேஸ்து அடிக்கப்போகிறது கழுதைக்கு!

கௌரிக்குட்டி பட்டென்று அலமாரியைத் திறந்து லபக் கென்று சிவப்பு சோப்பை எடுத்துக் காட்டினாள். செங்கமலத்தின் முகம் வெளிரிற்று.

"என்னம்மா இது? என்ன விஷயம்?"

"என் அலமாரியில் நான் எடுத்து வைத்திருந்த சோப் பழையபடி உன் அலமாரிக்குள் எப்படி வந்தது?"

"நான்தான் எடுத்தேன். திடீரென்று சோப்பைக் காணவில்லை. கைதவறி வைத்துவிட்டோமோ என்று தேடிப் பார்த்தேன் காணோம்; கடைசியில் உங்கள் அலமாரியில் கண்டெடுத்தேன்."

"என் அலமாரியை நான் பூட்டியல்லவா வைத்திருந்தேன்?"

"விடியற்காலை வேளையில் எழுப்ப வேண்டாமென்று உங்களுக்குத் தெரியாமலே, மாலையி-ருந்து சாவியைக் கழற்றி எடுத்துக் கொண்டேன்."

செங்கமலம் கொல்'லென்று சிரித்தாள். கௌரிக்குட்டியும்

சேர்ந்து சிரித்துவைத்தாள்.

"உன்னை வீணாகச் சந்தேகப்பட்டு எரிந்து விழுந்துவிட்டேன் மனதில் போட்டுக் கொள்ளாதே. வா கேரம் விளையாடுவோம்"

கௌரிக்குட்டியின் இரு கரங்களையும் பற்றி இழுத்துக்கொண்டு போனாள் செங்கமலம்.

இருவரும் கேரம் ஆட உட்கார்ந்தனர். அப்பொழுது கௌரிக்குட்டி மெதுவாகக் கேட்டாள்:

"நான் ஒன்று கேட்டால் கோபித்துக்கொள்ளக் கூடாது நீங்கள் இரண்டு மூன்று நாட்களாகவே குளிப்பதில்லையோ?"

சட்டென்று பதில் சொன்னாள் செங்கமலம்.

"குளிக்கிறேனே நானா குளிக்காமலிருப்பேன்?"

"சோப்புத் தேய்த்தா?"

"அதில் என்ன சந்தேகம்?"

"சோப்பைக் காட்டுங்கள் பார்க்கலாம்"

செங்கமலம் தனது அறையை நோக்கி ஓடினாள். சிரித்துக் கொண்டே பின்னால் சென்றாள் குட்டி.

செங்கமலம் அலமாரியைத் திறந்து மேலும் கீழும் பார்த்தாள் அவளுடைய சோப்பைக் காணவில்லையே!

"சோப்பைக் காணவில்லையே!"

"என் கையில் அல்லவா இருக்கிறது. அன்று என் சோப்பைத் தேட உங்கள் அலமாரியைத் திறந்தேன் அல்லவா? அப்பொழுது உங்கள் சோப்பை எடுத்து முகர்ந்து பார்தேன். பிரமாதமாக இருந்தது. சரி, இதைத் தேய்த்துத்தான் குளித்துப் பார்ப்போமே என்று எடுத்து வைத்துக் கொண்டேன். உங்கள் சோப்புத் தேய்த்துத்தான் இரண்டு நாட்களாகக் குளித்துக் கொண்டிருக்கிறேன். ஆஹா, என்ன மணம்!"

தனது உள்ளங்கையை முகர்ந்து பார்த்துக் கொண்டாள் கௌரிக்குட்டி.



செங்கமலம் மெதுவாக அறையைவிட்டு நழுவினாள். அவள் பின்னாலேயே வந்து பிடித்துக்கொண்டாள் கௌரிக்குட்டி.

"ஆமாம் இரண்டு நாட்களாக நீங்கள் எப்படி குளித்தீர்களாம்"

முகம் சிவந்தது செங்கமலத்திற்கு. தொண்டை இடறிற்று, கூரையைப் பார்த்துக்கொண்டே சொன்னாள் அவள்:

"நீ குளிக்கிறாயோ என்று சோதித்துப் பார்த்துக் கொண்டிருந்ததில் நான் குளிக்க மறந்துபோய்விட்டேன்."

சொல்லி முடித்ததும் கண்களில் ஈரம் கசிந்துவிட்டது.

கௌரிக்குட்டி செங்கமலத்தின் வலது கையைத் தனது கரங்களால் பிடித்துக்கொண்டு சொன்னாள்:

"என்னம்மா இது! இதெல்லாம் பெரிய விஷயமா? இரண்டு நாட்கள் குளிக்காமல் இருப்பதற்குக்கூட நமக்கு சுதந்திரம் கிடையாதா? அணுக்கள் அண்டாமலே எத்தனையோ வியாதிகள் உண்டு நமக்கு. வாருங்கள், சந்தோஷமாகக் கேரம் விளையாடுவோம்."

அடுத்த சில வினாடிகளில் இரண்டு பேர்களும் காய்களைக் குழிக்குள் தள்ளிக் கொண்டிருந்தனர்.

## பயிற்சி.

1. செங்கமலமும் ஒரு சோப்பும் என்னும் கதையைக் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் சுருக்கி வரைக.
2. "கௌரிக்குட்டி" என்னும் பாத்திரத்தை ஆய்க.
3. செங்கமலமும் கௌரிக்குட்டியும் பேசுவதாக அமைந்த உரையாடலை எழுதுக.

# 5. ஒரு பிரமுகர்.

—ஜெயகாந்தன்—

அது ஒரு கிராமத்துச் சாலை! அந்தச் சாலையிலே ஒரு பாழ் மண்டபம். பாழ் மண்டபத்துக்கு எதிரே ஒரு வேல மரம். அந்த வேலமரத்தின் தயவில் அதைப் பற்றிப் படர்ந்திருக்கிறது ஏதோ ஒரு காட்டுக்கொடி. காட்டுக்கொடி தண்டு முற்றி, தலை கிழடு தட்டிவிட்டதால், ஒரு பழுப்பு இலை மட்டும் உதிராமல் பூமியை நோக்கி வரம் கேட்கிறது. தண்டின் வேர்ப் பகுதியை ஒட்டி வேல மரத்தில் ஒரு பொந்து. பொந்து வாயிலில், பழுப்பு இலைக்கு நேர்க் கீழே ஒரு சிறு மண்ணுருண்டை!...

மீசையை நீவி விட்டுக்கொண்டு கம்பீரமான ஆகிருதியுடன் வெளியே வந்தது ஒரு பெரிய கட்டெறும்பு!

“உலகத்தைப் பார்த்து ரொம்ப நாளாச்சு...” என்று முனகிக்கொண்டே ஏகாந்தமான வனத்தில் தன்னிச்சையுடன் திரியும் ஒரு சிங்கத்தைப்போல் தலையை ஒரு கோடியி-ருந்து மறு கோடிக்குத் திருப்பி உலகத்தை நோட்டம் விட்டது எறும்பு!

அவசர அவசரமாய் அதன் எதிரே வந்தது ஒரு சிற்றெறும்பு.

“என்னடா பயலே சொக்கியமா?” என்று கர்ஜனை புரியும் தோரணையில் சிற்றெறும்பைப் பார்த்துக் குசலம் பேசியது கட்டெறும்பு!

கேட்ட கேள்விக்குப் பதில்கூட சொல்ல முடியாமல் நடு நடுங்கிப் போய், வந்த வழியைப் பார்த்துக்கொண்டு ஓட்டம் பிடித்தது சிற்றெறும்பு.

“உடம்பில் பயமிருக்கிறதா? பிழைத்துக்கொள்வாய் போ!” என்று முனகிக் கொண்டே மறுபடியும் மீசையை நீவி விட்டுக்கொண்ட கட்டெறும்பு, எழுந்து நின்று, உலகத்தைப்



பார்க்கத் தலையை நிமிர்த்தும்போது...

“ இதென்ன குறுக்கே என்னவோ மறைக்கிறதே...”

“ஓ... இந்த மலைதானா?” இரண்டடி முன் நகர்ந்து வந்து மண்ணுருண்டையின்மேல் தனது முன் கைகயை வைத்துக் கொண்டு தலை நிமிர்ந்து, சந்தையிலிருந்து திரும்பி வரும் மனிதர்களைப் பார்த்தது.

கதாயுகத்தைப் பூமியில் ஊன்றிக்கொண்டு நிற்கும் பீமசேனனைப் பற்றி அதற்குத் தெரியுமோ என்னவோ? அதன் பாவனை அப்படித்தான் இருந்தது.

“யாரது, மனுசப்பசங்களா? சுத்த சோம்பேறிகள்...”

திடீரென்று அதற்கு ஒரு சந்தேகம் வந்துவிட்டது. உலகில் மனுசப்பசங்க ஜாஸ்தியா? நம்ம எறும்புக்கூட்டம் ஜாஸ்தியா?

யோசித்து யோசித்துப் பார்த்தது. அந்தக் கணக்கு அதற்குச் சரி வரவில்லை. ‘அவர்களில் யாரையாவது கூப்பிட்டுக் கேட்டால் என்ன? அதுவும் சரிதான்’.

மண்ணுருண்டைக்குப் பின்னே நின்று, தலையை நீட்டி இரண்டு கைகளையும் உயர்த்திக்கொண்டு கடுகு பிளந்தன்ன வாயைத் திறந்து “ஏ, மனுசப் பயல்களா...உங்களில் ஒருவன் இங்கே வாருங்கள் என்ற கர்ஜனை புரிந்தது.

அவ்வளவுதான்! சாலையில் போய்க் கொண்டிருந்த மனிதர்கள் எல்லாம் சிதறி ஓடினர்... பாழ் மண்டபத்தில் ஓடி ஒளிந்து கொண்டனர்.

“அடேடே, என்னைக் கண்டு உங்களுக்கு இவ்வளவு பயமா? அட கோழைப் பயல்களா?...” என்று கைகளைத் தட்டி ஆரவாரித்துக் கொண்டு மண்ணுருண்டையைச் சுற்றிச் சுற்றி ஓடி வந்தது கட்டெறும்பு.

“என்ன இது, இந்த வெய்ய காலத்திலே திடீர்னு மழை புடிச்சிக்கிடுத்தே?”

“கோடைமழை அப்படித்தான்”.

“பாழ் மண்டபத்தி-ருந்த மனிதர்கள் பேசிக் கொண்ட

வார்த்தைகள் எறும்புக்குக் கேட்டது. மழையா? என்று அதிசயித்தது எறும்பு."

"இது என்னடா, சுத்தப் பைத்தியக்காரத்தனமா இருக்கே... மழையாமில்லே, நான் கூட வெளியேதானே நிக்கறேன்; வானம் என்னமோ இருட்டி இருக்குங்கறது வாஸ்தவம்தான். அதுக்குள்ளே இவ்வளவு பயமா? சுத்தப் பயந்தாங்கொள்ளிப் பசங்க, மழையாம் மழை!" என்று அட்டகாசமாகச் சிரித்துக்கொண்டு குதித்தது எறும்பு...

"இந்த மனுசங்களே இப்படித்தான்; ஒண்ணுமில்லாததுக்கு எல்லாம் பிரமாதப்படுத்துவாங்க" என்று மனிதர்களை நினைத்து வியந்து கொண்டிருக்கையில் வானம் பளீரென ஒளிவிட்டுப் பிரகாசித்தது.

பாழ் மண்டபத்தில் ஒதுங்கிய மனிதர்கள் நடையைக் கட்டினர். எறும்பின் கேலிச் சிரிப்பு அவர்கள் காதில் விழவில்லை.

சற்று நேரத்தில், பூமியில் படிந்த நீர்த்திவலைகளிலிருந்து ஆவி கிளம்பியது, உஷ்ணம் தகித்தது.

மற்றொரு கூட்டம் சாலையில் நடந்து கொண்டிருந்தது!

"உஸ்... அப்பா என்ன புழுக்கம்!" என்று ஒருவன் விசிறிக் கொண்டான்.

வேலமரத்தில் படர்ந்திருந்த கொடியிலுள்ள பழுப்பு இலையில் படிந்திருந்த நீர்த் துளிகள் ஒன்றொன்றாய் உருண்டு நடுக்காம்பில் சேர்ந்து பெரிய முத்தாய்த் திரண்டது... திரண்ட முத்து மெள்ளமெள்ள உருண்டது...

கீழே இருந்த மண்ணுருண்டையின் மீது ஆரோகணித்திருந்த கட்டெறும்பின் தலையில் விழுந்த நீர் முத்தைத் தொடர்ந்து பழுப்பு இலையும் உதிர்ந்து மண்ணுருண்டையின் மீது விழுந்தது.

"ஐயோ... பிரளயம்.... பிரளயம்...... வானம் இடிந்து விழுந்து விட்டதே...." என்று கதறியவாறு பழுப்பு இலையை நீக்கிக்கொண்டு வெளியே வந்த கட்டெறும்பு மண்ணுருண்டை கரைந்திருப்பதைக் கண்டு, கூக்குர-ட்டது.

"அடே மனிதர்களே, பிழைத்துப் போங்கள்... சீக்கிரம்



ஓடுங்கள். பிரளயம் வந்து விட்டது.... ஓடுங்களடா ஓடுங்கள்..." என்று அலறியவாறு என்ன செய்வது என்று தெரியாமல் பரபரத்து முன்னும் பின்னும் ஓடியது!

"அப்பா என்ன உஷ்ணம்" என்று மேல் துண்டை வீசிக்கொண்டு ஒருவன் மரத்தடியில் ஒதுங்கினான்.

அட பைத்தியக்கார மனிதர்களே! ஒன்றுமில்லாதற்கெல்லாம் உலகமே புரண்டு விட்டதாக ஓடுகிறீர்களே - இப்பொழுது பேராபத்து விளைந்துவிட்ட சமயத்தில் முட்டாள் தனமாக நடந்து கொள்கிறீர்களே... சீசீ... உங்கள் முகத்தில் விழிக்கக் கூட வெட்கமாயிருக்கிறது. நான் இப்பொழுது எப்படி என்னைப் பாதுகாத்துக்கொள்ளுவேன்? பிரளயம் வந்துவிடும் போலிருக்கிறதே... என்று கூவியவாறு விழுந்தடித்து ஓடி, தனது பொந்துக்குள் போய்ப் புகுந்துகொண்டது கட்டெறும்பு!

## பயிற்சி.

1. ஒரு பிரமுகர் என்னும் கதையைக் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் சுருக்கி எழுதுக.
2. 'ஒரு பிரமுகர்' கதைப் பகுதியை நாடக வடிவில் எழுதுக.
3. உருவகமாக இக்கதை உணர்த்தும் செய்தியை விளங்க வரைக.

# 6. மண்ணின் மகன்.

*—நீல. பத்மநாபன்—*

வெறிச்சோடிய விரிந்து பரந்த இந்தவானும் கரையில் வந்து மோதி திரும்பி செல்லும் அலைகள் எழும்பும் ஓசையும் இதற்கு முன்பே பழக்கப்பட்டிருப்பதைப் போன்ற ஒரு பிரமை...

வேலை மாற்றலாகி, முதல் முறையாய் வந்திருக்கும் இந்த இடம் முன்பே பரிச்சயமானதாய்த், தோன்றும் இந்த விசித்திர மனமயக்கம்...?

பஸ்ஸி-ருந்து இந்தக் கடற்கரையில் இறங்கி ஆபீஸுும் குவார்ட்டேர்ஸுும் ஒன்றாய் இயங்கும் அதோ தெரியும் சிறு கட்டிடத்தில் போய் பெட்டி படுக்கையைப் போட்டு விட்டு இங்கே வந்து இப்படி உட்கார்ந்திருக்கையில்...

மனதில் வந்துகவியும் இன்னதென்று தெரியாத அந்நியமான உணர்வுகள்.

நாளைக் காலையில் எட்டுமணிக்கு வேலையில் டியூட்டி ரிப்போர்ட் பண்ணிவிட்டால், பிறகு மீண்டும் யந்திர வாழ்க்கை.

தொலைவில் மும்முரமாய் இயங்கிக் கொண்டிருக்கும் யந்திரங்கள். ஆழத்தில் மணலை வாரி வரிசையாய் நிற்கும் லாரிகளில் நிறைக்கும் க்ரைன்கள்.

இதோ நான் உட்கார்ந்திருக்கும் இந்த இடம் மட்டுமே இந்தக் கடற்கரையில் கடலில் மட்டத்தில் இப்போது மிஞ்சியிருக்கிறது. மீதி இடத்தி-ருந்தெல்லாம் மணல் ஏற்கெனவே அப்புறப்படுத்தப்பட்டு விட்டது.

இன்னும் சில நாட்களில் இதுவும்...!

நீர்த்திவலைகளை அள்ளிக்கொண்டு வரும் காற்றின் குளிர்



உடம்பில் உறைக்கத் தொடங்கிவிட்டது. அறைக்குப்போய் முடங்கிவிடக் கெஞ்சும் உடம்பு... எழுந்திருக்கலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கும் போது மீண்டும் வீசியடிக்கும் வாடைக் காற்று.

கம்மென்று வந்து கமழும் பாலைப் பூ மணம்.

இந்தக் கடற்கரையில் இவ்வேளையில் இந்த மணம்.

யாரோ பின் பக்கம் வந்து நிற்பதைப் போன்ற உணர்வு...

திடுக்கிட்டு திரும்பிப்பார்த்த போது, ஊமை நிலவில் ஓர் இளைஞன். முகம் சரிவரத் தெரியவில்லை.

சார் நீங்கதான் அற்புதராஜ் சாரின் ப்ளேஸில புதுசா வந்திருக்கும் சயன்டிபிக் ஆபிசரா?

ஆமா நீ யாரு?

இங்கே பக்கத்தில்தான் இருக்கிறேன்.

சற்று நீங்கி அவன் உட்கார்ந்து கொண்டான்.

ஏன் சார். இந்தக் கடற்கரை மணல் முழுவதையும் இப்படி பதினைஞ்சடி ஆழத்தில் தோண்டியெடுத்து வாரிக்கொண்டு போறீங்களே இந்த ஜனங்களின் பரிதாப நிலமையை மட்டும் நீங்க யாரும் நினைச்சுப் பார்க்காமல் இருக்கீங்களே இது நியாயம் தானா?

என்ன தம்பீ. பக்கத்தில்தான் இருக்கேண்ணு சொல்றே அப்படியிருந்துமா ஒண்ணும் தெரியாதது போல் இப்படிக் கேக்கிறே? எத்தனையோ மாசங்களா சர்வே ஆராய்ச்சி எல்லாம் நடந்து முடிஞ்சு அப்புறம் இங்கேயிருந்து மணல் வாரத் தொடங்கி இப்ப ரெண்டு வருஷத்துக்குமேல் ஆயிடுச்சு. ஊருக்கு புதுசான ஆளுபோல நீ இப்படி எங்கிட்டே கேட்டால்?

இந்தக் கடற்கரை மண-ன் மகிமை சீமையைப்போய்ச் சேர்ந்தது பற்றிக் கர்ண பரம்பரையாய்க் கேட்க நேர்ந்த செய்தி ஞாபகம் வருகிறது.

செழிப்பாய் வளரும் தென்னை மரங்களுக்குப் பெயர்போன இந்த ஊரி-ருந்து முன்பு ஏற்றுமதி செய்யும் வடத்தின் கயிற்றின் எடையைக் கூட்டிக்காட்ட உள்ளூர் வியாபாரிகள் இந்த மணலில்

புரட்டியெடுத்து அனுப்ப யதேச்சையாய் சீமையில் கப்பலிலிருந்து இறக்குகையில் நடத்திய பரிசோதனையில் கதிரியக்கலோகம் அடங்கியிருப்பதைக் கண்டுபிடிக்கப்பட்டு, பிறகு இந்த மண்ணுக்கு வந்த யோகம்...

சார், நீங்க சொல்றாப்போல் இந்த ஊருக்கு யார் யாரல்லாம்மோ புதுசு புதுசா... ஆளுங்க வந்து மணலை அள்ளிக்கிட்டுப் போனாங்க, ஆழமாத் தோண்டிப் பாத்தாங்க. அதையெல்லாம் இந்த ஊர்வாசிக, ஏழைக் குடியானவங்க. செம்படவங்க நாங்க பாத்துகிட்டுத்தான் இருந்தோம். இல்லேண்ணு சொல்லலே. ஆனா, யாருமே விஷயம் என்னாண்ணு நெஜத்தை எங்ககிட்டெ வாயைத் தொறந்து சொல்லலே. சாக்குப் போக்குச் சொல்லி சமாளிச்சாங்க கடைசியில் க்ரைன், மெஷீன், லாரி வந்து மணலை வாரத்தொடங்கின அப்புறம்தான் உள்ளதைப் புரிஞ்சுக்கிட்டோம்.

அதன்பின் நெடுநாள் இங்கே நடந்த ரகளை இலாகாவில் எல்லோருக்கும் தெரிந்ததுதானே! ஒன்று சேர்ந்து மறியல் செய்தார்கள். ஆர்ப்பாட்டம் செய்தார்கள். கடைசியில் இலாகா அதிகாரிகள், அரசியல்வாதிகள், உள்ளூர் மக்கள் பிரதிநிதிகள் இவர்களின் இடையில் பல நாட்கள் நடந்த பேச்சுவார்த்தையின்படி எல்லாம் சுபமாய் முடிவு பெற்றது. அதன்படி, இந்த மணல் வாரலால் இடம் இழந்தவர்களுக்குப் பதிலுக்கு வேறு இடம் கொடுப்பது, தொழிலும் வேறு வருமான மார்க்கங்களும் இழந்து போனவர்களுக்கு இங்கே இது சம்பந்தமான வேலைகளில் முதலிடம் கொடுப்பது போன்ற விதிகள் இரு தரப்பாலும் ஒப்புக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறதே...

இப்போது பக்கத்து மாதாகோயில் மணியோசை திடீரென்று கேட்ட ஓ-வீச்சினாலா, இல்லை வெடவெடக்கும் குளிர் காரணமாகவா இந்த இளைஞனின் நடுக்கம்....?

சற்று தொலைவில் நிழல் கோலமாய் ஒண்டியாய்த் தலை தூக்கி நிற்கும் மாதாகோயி-ன் மங்கிய தோற்றம் ஊமை நிலவில்...

நான் அறிஞ்ச வரையில் இந்த சர்ச்சைக்கூட அப்படியே விட்டு வைக்கவும் அப்படீண்ணு நீங்க போட்ட கண்டிஷனைக்கூட சம்மதிச்சிருக்கோமே அப்புறம் என்ன?



அவன் சிரிப்போசை ,,,

வீடும் குடியுமெல்லாம் குளம் தோண்டப்படும்போது இழந்து, செனங்க குடிபெயர்ந்து போனபிறகு இங்கே மிஞ்சியிருக்கும் சாமிக்கு பாதிரியார் மட்டும்தான் தொணை.

ஏன்...? ரொம்பப் பேருங்களுக்கு இங்கேயே வேலை கொடுக்கப்பட்டிருக்குதே... அவுங்களுக்குப் பிராத்தனை செய்ய வசதியா இருக்காதா?

இப்போது, பிரமாண்டமான ஓர் கறுத்த விலங்காய் நீண்டு நிமிர்ந்து கிடக்கும் சமுத்திரத்தின் மறுமுனையில் தொடுவான விளிம்பில் மின்னல் வெளிச்சம், கூட ஓடி வரும் இடியோசை...

மழை பெய்யப்போகுது போலிருக்குது, அதுதான் இத்தனை குளிர்.

நான் எழுந்தேன்.

அவனும் எழுந்தான்.

இப்போதும், முகம் இருளில் தெரியவில்லை. ஆனால் நல்ல ஆஜானுபாகு என்பது மட்டும் தெரிகிறது.

மெல்ல நடந்து கொண்டிருந்த என் பின்னால், சற்று நீங்கி கூடவே வந்து கொண்டிருக்கும் அவன் குரல்.

கடற்கரை மணலையெல்லாம் இப்படி பத்து பதினைஞ்சடிக்குத் தோண்டி லாரியில் அள்ளிக்கிட்டுப் போனா கடல் ஊருக்குள்ளையே ஏறி வருவதை உங்க இலாகா ஏன் புரிஞ்சுக்க மாட்டேங்குது? குறிப்பா, மழை காலத்தில் இந்த ஊரே கடலுக்குள்ளே போய்விடுதே...

அவன் குரல் கோஷமாய் உயர்ந்தது போல் ...

தம்பீ... இந்த மண்ணின் மகன் உன் கோபத்தையும் தாபத்தையும் புரிஞ்சுக்க என்னால் முடியுது. ஆனா... இந்த ஊரைச் சேர்ந்த உங்களுக்கு நேர்ந்த இந்த கஷ்ட - நஷ்டங்களிலும் நாட்டுக்குச் சில நன்மைகள் விளைந்திருப்பதை நீ ஏன் எண்ணிப் பார்க்கவில்லை?

மீண்டும் இருளில் அவன் சிரிப்பு.

நீங்க எதைச் சொல்லுறீங்கண்ணு எனக்குத் தெரியும். உங்களுக்கு முந்தி இங்கே இருந்த அற்புதராஜூம் அவன் கூட்டாளிகளும் அதைச் சொல்-த்தான் எங்களை வஞ்சித்தாங்க..

அவுங்க என்ன சொன்னாங்க?

அணுசக்தி நம் நாட்டில் தொழில் கூடங்களை உருவாக்கும், வெளிச்சம் தரும், நோய் சிகிச்சைக்குப் பயன்படும்.

அதெல்லாம் மொத்தத்தில் நம் நாட்டுக்கு! ஆனா, குறிப்பா இந்த ஊருக்குக் கிடைக்கும் பெரிய ஒரு நன்மை இருக்கு! இங்கே இருக்கும் இந்த மண-ல் கதிரியக்க லோகம் கலந்திருந்ததால் இந்த ஊர் குழந்தைங்க, பெரியவங்களில் பரவலாய்த் தென்பட்ட ஊனம், புற்றுநோய் போன்றவை இனி நாளாவட்டத்தில் குறைந்துவிடும். காரணம், இப்ப நாங்க இங்கிருந்து அள்ளிக் கொண்டு போகும் மண-ல் இருந்த அந்தக் கதிரியக்க லோகம் மோனஸைட்டை அப்புறப்படுத்தி விட்டு மறுபடியும் இதே மணலை இதே இடத்தில் கொண்டு போட்டு விடுவோம். அப்புறம் இந்தப் பள்ளங்கள் நிரம்பிவிடும். கதிரியக்க அபாயமும் நீங்கி விடும்.

சார். நீங்க சொல்ற இந்த நன்மையெல்லாம் எத்தனை வருசங்களுக்கு அப்புறம் நடக்கப்போகும் காரியங்க. அதுவரை ஏழை சனங்க இந்தக் கொடுமையெல்லாம் தாக்குப்பிடிச்சு உயிரோட இங்கே இருக்கணுமே... அதை என்னான்னு கேட்டா அப்படிக் கேட்டவனையும் விட்டுவைக்க மாட்டீங்க...

சர்ச்சின் முன் ஒரு கணம் நின்று உள்ளுக்குள் இறைவா என்று பிரார்த்தித்துக் கொண்டேன்.

மீண்டும் நடந்தேன். இப்போது மௌனம், அவன் குரல் கேட்கவில்லை. திரும்பிப் பார்த்தபோது புதைகுழிக் கல்லறைகள் மட்டும் மங்கிய நிலவில்...

அவனைக் காணோம்....

சற்றுக் கூட நடந்தபோது எதிரில் வாட்ச்மேன் சாமுவேல் வந்து கொண்டிருந்தான்.

அதுக்குள்ளே எங்கே சார் போயிட்டீங்க ... பக்கத்து ஊரில் போய் டிபன் வாங்கிட்டு வந்திருக்கேன். மழைவேறு பெய்யப் போகுது. சீக்கிரம் வாங்க...



அறைக்கு வந்து டிபன் சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் சாமுவேல் சொன்னான்.

சார் நீங்க டியூட்டியில் சேர வந்த உடனேயே சொல்லவேணாமுண்ணுதான் இருந்தேன். ஆனா கடற்கரையில் நீங்க ஒண்டியா ஒக்காந்திருந்த எடத்தை நான் இங்கேருந்து பார்த்தேன். அதுதான் அங்கே ஓடியாந்து கொண்டிருந்தேன்.

ஒண்டியாகவா? கூட இருந்த ஆளை நீ பார்க்கல்லையா?

அவன் முகத்தில் ஓர் மிரட்சி.

சார்... எதுக்கும் இனி இப்படி ஒண்டியா அங்கே போய் ஒக்கார வேணாம்?

என் முகத்தில் த்வனித்த கேள்விக் குறியைப் பார்த்துவிட்டு அவனே குரலைத் தாழ்த்திச் சொன்னான்.

இந்த ஊரில் மணல் வாருவதை எதிர்த்து ரகளை நடந்து கிட்டிருந்தது உங்களுக்குத் தெரிஞ்சிருக்கும். அதில், முக்கியப் பங்கு வகிச்சவன் அந்தோணி, இந்தக் கிராமத்திலேயே நாலு எழுத்து படிச்ச அவன் மீது எல்லோருக்குமே ரொம்ப மதிப்பு, மரியாதை, அன்பு... ரகளை முடிஞ்சபிறகு அவனுக்கு இங்கேயே வேலை கொடுத்தாங்க... ஆனா.. அதன் பிறகும், இங்கே அப்படி வேலை பார்க்கும் மத்தவங்களையும் சேத்துக்கிட்டு அடிக்கடி மோதல்கள். அப்போதுதான், ஒருநாள் ராத்திரி ஷிப்ட்டு மணல் ஏத்திக்கிட்டு இருந்த லாரி ஏறி, இப்ப நீங்க ஒக்காந்திருந்தீங்க இல்லையா, அந்த இடத்தில் வைச்சு அவன் மரணம். அதில் அற்புதராஜ் சாரின் கை உண்டுண்ணு சொல்-க்குறாங்க. அந்தோணியை அந்தச் சர்ச்சின் பக்கத்தில்தான் சார் ஊர் ஜனங்க எல்லோரும் கண்ணீர் விட்டபடி பொதைச்சாங்க. சரிங்க சார். ரொம்ப நேரமாச்சு. படுத்துக்குங்க.

## பயிற்சி.

1. “மண்ணின் மகன்” என்னும் தலைப்பைப் பற்றிச் சுருக்கி எழுதுக.
2. ‘அற்புதராஜ்’ - பாத்திரப் படைப்பினை விளக்குக.
3. சயின்டிபிக் ஆபீசர் இந்தக் கதையைக் கூறுவது போல எழுதுக.

# 7. அனுமதி.

—சுஜாதா—

ராமதுரை, அபிராமி அந்தாதியின் "நூல் பய" னில் தேடித் தேடிப்பார்த்தார். நல்வித்தையும் ஞானமும் பெற, பிரிந்தவர் ஒன்று சேர, அகால மரணமும் துர் மரணமும் உண்டாகாதிருக்க என்று நூறு பலன்கள் போட்டிருந்தாலும் பிள்ளைக்கு வேலை கிடைக்கத் தோதாக எந்தப் பாட்டும் இல்லை. "அபிராமி பட்டர் காலத்தில் வேலை கிடைப்பது அத்தனை கஷ்டமில்லை போலும்" என்று எண்ணினார். அதேசமயம் இவ்வாறு எண்ணுவதே பாவம், தப்பு என்று பட்டு "சந்தேகத்துக்குக் கொள்ளேன் மனத்தில் நின்கோல மல்லாது" என்று தொடர்ந்து சொல்- விட்டு, பூஜை அறையிலிருந்து வெளியே வந்தபோது மேஜை மேல் மந்தார இலையில் இட்லி சட்டினி பொட்டலம் காத்திருந்தது. மகாலட்சுமி அடுத்த வீட்டில் ஸ்டார் டி.வி பார்க்கச் சென்றிருக்க, பாலாஜி அப்போதுதான் எழுந்து பல் துலக்கிக் கொண்டிருந்தான். பொறுப்பில்லாமல் இருக்கிறானே என்று ஆத்திரம் வந்தாலும் காதல், கீதல் என்று எதுவும் ஆரம்பிக்காமல் ஒழுங்காக லைப்ரரி போய் பார்ட்டைம் செய்துவிட்டு வீட்டுக்கு வருகிறானே, அதுவே பாக்யம் என்று மனத்தில் நிம்மதி இருந்தது. இவனுக்குக் கல்யாணம் பண்ண வேண்டும். அதற்கு அபிராமி அந்தாதியில் நல்ல பாட்டு இருக்கிறது. 'திங்கட் பசுவின் மணம் நாறும் சீறடி சென்னி வைக்க' - ஆனால் மகன் பாலாஜி என்னும் விசுவநாதனுக்கு வேலை கிடைப்பது இரண்டு வருஷம் இழுத்தடித்துக் கொண்டு போய்விட்டது. போன வருஷம் பல நிறுவனங்களுக்கு மனுப் போட்டு, அனுமதிப் பரிட்சை எழுதினான். எதிலும் கிடைக்கவில்லை. சிரத்தையுடன் படிக்கவில்லை என்றுதான் தோன்றியது. அதைக் கேட்கவும் தயக்கமாக இருந்தது. கோபக்காரன், சண்டை போட்டுக்கொண்டு வீட்டைவிட்டு ஓடிப்போய் விட்டானானால்? ஒரே பையன். "இந்த



வருஷம் எப்படியாவது கொஞ்சம் கஷ்டப்பட்டு படிச்சுடேன் பாலாஜி" என்றார். அவன் 'எம்ப்ளாய்மெண்ட் ந்யுஸை' விரக்தியுடன் பார்த்துக்கொண்டு என்னப்பா இத்தனை வருஷம் படிச்சு பாஸ் பண்ணி மறுபடியும் வேலைக்குப் பரிட்சைன்னா போர் அடிச்சுப் போச்சுப்பா," என்றான். லட்சுமி ஹாங்காங் பணக்காரர்கள் இல்லங்களைத் துறந்துவிட்டு அப்போதுதான் உள்ளே வந்தாள்.

"பின்ன என்னதான் செய்யறதா உத்தேசம்?"

"நான் உங்களுக்கு பாரமா இருக்கேன்?"

"இல்லை; இருந்தாலும் படிப்பு முடிஞ்சு ரெண்டு வருஷம் ஆச்சேன்னு"

"வேலை, கல்யாணம் பிள்ளை பெத்துக்கறது, அப்பா இதானா வாழ்க்கையில் குறிக்கோள்."

"வேற எதாவது இருந்தா சொல்லு"

"சாமியாராப் போகணும்ங்றாயா" என்றாள் மகாலட்சுமி.

"சொல்றேன்" என்றான் விரோதமாக.

"நீ சும்மாரு" என்று மனைவியை அதட்டிவிட்டு "பாரத் பரீட்சை எழுதப் போற இல்லை."

"இந்த வருஷம் அவனை பாரத் கம்பெனிக்கு பரீட்சை எழுதச் சொல்வதற்கே பெரிய போராட்டமாகிவிட்டது."

"எனக்கு அந்தப் பரீட்சை எல்லாம் பாஸ் பண்ண தெம்பில்லைப்பா ரொம்ப டஃப்பா இருக்கு. போன வருஷம் எழுதினேனே ஒரே மாதிரி நாலு ஆன்ஸர் கொடுத்திருக்கான்; அதில் எல்லாமே சரி போல இருக்கு. ரொம்ப கஷ்டமான பரீட்சை. பேப்பர் செட் பண்றவன் எல்லாம் இதுக்கு முந்தி எமலோகத்தில் சித்திரவதை டிப்பார்ட்மெண்ட்டில் இருந்தவன் போல."

"இன்னும் ஒரு முறை எழுதிப் பாரேன் கொஞ்சம் சிரத்தையா படிச்சு".

"ஏதோ நீங்க சொல்றீங்கன்னு எழுதறேன்" என்றான்.

"கிடைச்சா நல்ல வேலைதானே?"

"நல்ல வேலைதான் இந்தியாவிலேயே சிறந்தது. ஆனா பத்தாயிரம் பேர்னா எழுதறாங்க"

"அதைப்பத்தி உனக்கு என்ன?"

"எனக்கு எங்க கிடைக்கப் போறது."

"கொஞ்சம் படிச்சுப் பாரேன்; கொஞ்சம் எஃபர்ட்? "

"ரமேஷ் எழுதி பாஸ் பண்ணலை?"

ரமேஷ் மகாலட்சுமியின் தம்பி பையன்.

"அம்மா! எத்தனை தடவை சொல்-யிருக்கேன் ரமேஷ் வேற நான் வேறன்னு"

"நீ உள்ளபோறயா இல்லையா?" என்று அவளை ஆள்காட்டி விரலால் திசை காட்டினார்.

"ஆமா எல்லாரும் சேர்ந்து என்னை அதட்டுங்கோ"

"ட்ரை பண்றேன்பா, எனக்காக நீங்க ரெண்டு பேரும் சண்டை போட வேண்டாம்" என்றான்.

அவனைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. எட்டு ஸெமஸ்டர், ஏறக்குறைய எண்பது பேப்பர் எழுதிக் களைத்து அலுத்து மறுபடி பரீட்சை என்றால் எத்தனை அலுப்பாக இருக்கும்! எத்தனை போட்டி! ஒரு வேலைக்கு எத்தனை விண்ணப்பங்கள்!

"இந்த உலகத்தின் மேல வெறுப்பில்லாம நான் நடமாடிண்டிருப்பதே ஆச்சரியம் என்று பனியனை மாட்டிக்கொண்டு புறப்பட்டான்!

"எங்க போறான் ! தெருக்கோடில சிகரெட் பிடிக்க!"

ஆபிசில் அவரைத் தேடிக்கொண்டு விஷ்ணுமூர்த்தி என்பவர் வந்திருந்தார். ராமதுரையின் மேசை மேல் ஆப்பிள் பழங்களையும், பென்சில் செட்டையும் வைத்தபோதே உஷாரானார். என்ன விஷயம் இதெல்லாம் எதுக்கு? விஷ்ணுமூர்த்தி என்பவர் அறிமுகமாவதற்கு முன்னாலேயே சிரித்தவர். அந்தக் கூழைச்சிரிப்பை ரத்து செய்யாமல் விவரம் சொன்னார். அவர் மேலதிகாரிக்கு கோரமங்களாவில் ஒரு "ஸைட்" அலாட்



ஆகியிருந்தது. "அது இன்னும் லெட்டரா வரல்லை; விசாரித்ததில் எதோ பேமெண்ட் டிஃபால்ட் இருந்ததால் அலாட்மெண்ட் கான்ஸல் ஆகி கமிஷனருக்கு மனுப்போட்டிருக்கு" அந்த மனு ராமதுரையின் டேபிளுக்கு வந்திருப்பதாகவும் சொன்னார்.

"ஆமா நான் என்ன செய்யணும்" என்றார்

"நீங்கள் நினைத்தால் அலாட்மெண்ட் கொடுக்க சிபாரிசு செய்யலாம்" என்றார்; "வேணுமென்றால் கவனித்துக் கொள்ளலாம்" என்றார் அறையில் சுற்றும் முற்றும் பார்த்து.

ராமதுரை அவரை நேராக நோக்கி லஞ்சமா என்றார்.

" அப்படின்னு இல்லை, ஒரு கன்ஸிடரேஷன் "

"எழுந்து போய்யா, நான் இந்த டிபார்ட்மெண்ட்டில இருபத்தைந்து வருஷம் உழைத்திருக்கிறேன்; வீட்டுக்கு ஒரு குண்டூசி கூட எடுத்துச் செல்லமாட்டேன் தெரியுமா?"

"சொன்னாங்க"

"பின்ன என்ன தைரியத்தில் எங்கிட்ட லஞ்சம் கொடுக்க வருகிறீர்? இப்ப போலீஸுக்குப் போன் பண்ணினால் உம்மை அரஸ்ட் பண்ணுவார்கள் தெரியுமா?" என்றார்.

"மெள்ள... மெள்ளப் பேசுங்க; இப்ப நான் என்ன சொல்-விட்டேன்?"

"என்னை லஞ்சம் வாங்குபவன் என்று எப்படித் தீர்மானித்தீர்?"

அந்த ஆசாமி ராமதுரையை நேராகப் பார்த்து மிஸ்டர் ராமதுரை என்னை நீங்க தப்பா நினைக்கக்கூடாது. நா லஞ்சம் கொடுக்க வரவில்லை. ஒருவிதமான பரஸ்பர உதவிக்காக வந்தேன். என் மேலதிகாரி 'பாரத்'ல பெரிய ஆபீசர்

"பாரத்" என்றார்.

"உங்க பையன் இன்ஜினியர் வேலைக்கு அனுமதி பரீட்சை எழுதுகிறானே அதே பாரத் கம்பெனியில்"

"ஸோ"

விஷ்ணுமூர்த்தி மறுபடி இடம் வலமாக ரேடார் போலத்

தலையைத் திருப்பிப் பார்த்துவிட்டு,

“நீங்க இந்த அலாட்மெண்ட் போட்டுக் கொடுத்தால், பரீட்சை பேப்பரைக் கொண்டு வந்துகொடுக்கிறேன்”

ராமதுரையின் கை நடுங்குவதை அவர் கவனித்து “பரிட்சை முடிந்து அலாட்மெண்ட் கொடுத்தால் போதும்”

ராமதுரை; “முடியாது நத்திங் டுயிங்” என்று சொன்னாலும் அதை அத்தனை கடுமையாகச் சொல்லவில்லை.

“பாருங்க ஸார் உங்களால முடிஞ்சா சரி; இல்லை இன்னம் மேல போகணும்னாலும் போகலாம்”

“அதெல்லாம் எதுவும் பிராமிஸ் பண்ண முடியாது முதல்ல கேஸ் ஷீட்டைப் பார்க்கணும்”

“நல்லா பாருங்க. ராமதுரை மை ஆஃபீசர் இஸ் ஓப்பன். ஒரே ஒரு பேப்பர்தான் வெளிய வரும், வேற யாருக்கும் கிடைக்காது எஸ்-எ-ஸ்பெஷல் கேஸ்” ராமதுரை பென்சிலால் பலவாறு மேசை மேல் சுழித்துக் கொண்டிருக்க.

“திங்கள்கிழமைக்குள்ள யோசிச்சு வையுங்கோ; ஸண்டே வீட்டிலதான் இருப்பேன்; போன் பண்ணலாம் என்று விஸிட்டிங் கார்டைக் கொடுத்தார். “பரீட்சை பத்தாம் தேதி ஒரு நாலு நாளாவது டயம் வேணுமில்லையா? என்று சொல்-க்கொண்டு செல்கையில் கூட இது லஞ்சம் இல்லை” என்று சொல்-விட்டுத்தான் போனார். ராமதுரை அவர் போனதும் இருப்புக் கொள்ளாமல் யோசித்தார். அந்த ஃபலைப் பார்த்தார். கொஞ்சம் சிக்கலான கேஸ்தான் பேமெண்ட் டிஃபால்ட் ஆகியிருக்கிறது. டிஃபால்ட் இல்லை என்று இவர் சர்ட்டிபிகேட் கொடுத்தால் காரியம் ஆகும். லெட்டர் கொடுக்க முடியும்.

முதல் தவணைகளையெல்லாம் கட்டியிருக்கிறார். நடுவில் மூன்று தடைப்பட்டு அலாட்மெண்ட் கான்ஸல் ஆகி; ஆக்ஷனுக்குப் போயிருக்கிறது. இன்னும் ‘ஆக்ஷன்’ ஆகவில்லை; வெளிநாடு போயிருந்தேன் என்று சாக்கு சொல்- பழைய கேஸ் ஒன்றில் விதிவிலக்கு, போன வருஷம் கொடுத்தது, ஞாபகம் வந்தது, இருந்தும்...

என்ன நான் பணம் வாங்குகிறேனா, லஞ்சம் வாங்கவில்லை



ஒரு “பிரிஸிடெண்ட்” படித்தான் அலாட் பண்ணப் போகிறேன் என்றெல்லாம் பலவிதத்தில் சமாதானம் செய்து கொண்டாலும், ஆதாரமாக இது தப்பு என்பது உறுத்தியது. எந்தவிதத்தில் தப்பு!

இன்றைய தேதிக்கு அந்த ஸைட்டின் மதிப்பு மிக அதிகம். ஆக்ஷனில் போனால் எட்டு லட்சம் வரும்.

இந்த இலாக்காவுக்கு இருபத்தைந்து வருஷம் உழைத்ததுக்கு ஒரு சின்ன சலுகை எடுத்துக் கொள்வது போலத்தான் இது. எத்தனை பேர் கொள்ளையடிக்கிறார்கள்; அவரவர் ஆயிரம்கோடி, இரண்டாயிரம் கோடி என்கிறார்கள். ஸ்டாக் ஊழ-ல் பாங்கு மேலதிகாரிளைப் பார்! அப்படியெல்லாமா இது? ஏதோ ஒரு சின்ன விதிவிலக்கு பண்ணி; ஒரு அலாட்மெண்ட் வட்டியோடு கட்டிவிடச் சொல்- வீட்டுமனையைக் கொடுக்கப் போகிறேன். அதற்கு பிரதியுபகாரமாக அவன் ஒரு கேள்வித்தாளை தரப்போகிறான்!

பத்தாயிரம்தான் பேமெண்ட். ஆனால் இன்றைக்கு அந்த சைட்கோரமங்களாவில் எட்டு லட்சம் போகும் என்பதைப்பற்றி அவர் நினைக்க மறுத்தார்.

வீட்டுக்கு வந்தபோது லட்சுமியிடம் சொன்னார்.

“பேசாம செஞ்சுடுங்கோ. என்ன பணமா காசா? இவனுக்கும் ஸ்திரமா வேலை கிடைச்சுடும். கிடைச்சா கல்யாணத்துக்கு பொண் கொடுக்க காத்துண்டிருக்கா, நம்ம கஷ்டம் கவலையெல்லாம் தீர்ந்து போய்டும் இவனும் என்னைத் தொந்தரவு பண்றதை நிறுத்துவான்.”

“தொந்தரவு பண்றானா?”

“எதைக் கேட்டாலும் எதுத்துப் பேசறான். உங்க பிள்ளை இன்னிக்கு என்னை அடிக்கவே வந்துட்டான்!”

“ எங்கே அவன்?”

“லைப்ரரிக்குப் போயிருக்கான் உங்க மேல இருக்கிற ஆத்திரத்தை என்கிட்டக் காட்டறான்.”

“நான் என்ன செஞ்சேனாம்.”

“சரியா வேலை வாங்கிக் கொடுக்கலைன்னு அவனுக்குக் குறையோ, என்னவோ.”

“எதும் செய்ய வேண்டாம்.இவனுக்கு அந்த பேப்பரோ என்னவோ சொன்னீங்களே, அதை வாங்கி பாஸ் பண்ண வெச்சுருங்கோ. நம்ம பொறுப்பு முடிஞ்சுது. அப்புறம் கல்யாணம் பண்ணினா பண்ணிக்கிறான்; இல்லன்னா எக்கேடோ கெட்டுப் போகட்டும். வாங்கிக் கொடுத்துருங்கோ. வீட்டில இருந்தா எனக்குப் பைத்தியமே பிடிச்சுடும், தினப்படிக்கு இருபது ரூபாயைக் கொண்டாங்கறான். எதுக்கடான்னு கேட்டா, “நீ யார் கேக்கிறது. அப்பா சம்பாதிக்கிறார்ங்கறான். முரடன். எனக்கு இந்த வீட்ல என்ன உரிமை இருக்கு?”

“புலம்பாதே முதல்ல. பையனைப் பத்தி புகாரை முடிச்சாச்சா இல்லையா”

“உங்களுக்கு விளையாட்டா இருக்கு. நான்தான் வீட்டில இருபத்து நாலு மணி நேரமும் கஷ்டப்படறவ. என்ன எதுத்துப் பேசறான் தெரியுமா?”

அவனைப்பற்றி கேட்கக் கேட்க அவன் மேல் இல்லை, இதைத் தட்டிக் கேட்க முடியாத அல்லது விரும்பாத தன் கையாலாகாத் தனத்தின்மேல் ஆத்திரம் வந்தது.

“சரி, சரி சாயங்காலம் வந்ததும் கேட்டுர்றேன்” என்றார்.

“கேக்கமாட்டிங்க. அதுக்கெல்லாம் தைரியம் எங்க இருக்கு? பேசாம அந்த பேப்பரோ என்ன எழவோ அதை வாங்கிக் கொடுத்துருங்கோ”

ராத்திரி பாலாஜி வந்தபோது அவனிடம் காட்டமாகச் சிகரெட் வாசனை அடித்தது, கேட்க விருப்பமில்லை; சிகரெட்தானே ட்ரக் பழக்கம் இல்லையே என்று எண்ணிக் கொண்டார். இருந்தும் அவன் மேல் கோபம் வந்தது. என்ன ஒரு பொறுப்பில்லாதவன். பையில் மெலிதாகத் தெரிந்த வில்ஸ் பாக்கெட் அவரைச் சீண்டியது “என்ன பாலாஜி பரீட்சைக்கு எப்படிப் படிக்கிறே.”

“இனிமேத்தா ஆரம்பிக்கணும். இந்த வருஷம் பாட்டர்னை மாத்திருக்காளாம் எனக்கு என்னவோ சான்ஸே இல்லப்பா”

“எனக்குத் தெரிஞ்சவர் ஒருத்தர் பாரத்ல வேலை பார்க்கறார். அவர் சில குறிப்புக்கள் மாதிரி கொடுக்கறேன்னிருக்கார்.”



“அப்படியா” என்றான் பரவால்லையே அவர் அட்ரஸ் கொடுங்கப்பா நான் போய் பார்த்துட்டுவரேன்”

“அவரே என்னைப் பாக்க வருவார்”

“ஏதாவது ஹிண்ட் கிடைச்சு அதிர்ஷ்டம் அடிச்சு பாஸ் பண்ணாத்தான் சரி. ரொம்ப கஷ்டமான பரீட்சை” என்றான்.

“இந்த தடவை பாஸ் பண்ணிடுவே பாலாஜி”

“ஏன் அபிராமி அந்தாதி ரெண்டு வேளை சொல்ல ஆரம்பிச்சிருக்கிங்களே அதனாலயா?”

“அம்மா கூட என்ன சண்டை? எதுத்துப் பேசினியாமே”

“அம்மா நான் சொல்றதையெல்லாம் உங்ககிட்ட சொல்றா; அவ எங்கிட்ட கேக்கற கேள்விகளை எல்லாம் சொல்றாளோ? சொல்லமாட்டாப்பா. அம்மா சிலவேளை என்னை எப்படியெல்லாம் திட்டறா தெரியுமா? தெண்ட சோறுங்கற போதெல்லாம் என்ன ஆத்திரம் வரும் தெரியுமா?

“இருந்தாலும் உன் அம்மதானேடா அவ”

“அதைச் சொல்லுங்கோ ஞாபகப்படுத்துங்கோ இவனுக்கு சின்ன வயசில மாந்தம் வந்து எத்தனை கஷ்டப்பட்டிருக்கேன்னு சொல்லுங்கோ!” என்றாள் உள்ளே நுழைந்ததுமே.

“எல்லாத்துக்கும் -மிட் இருக்கு இல்லையா. ஒவ்வொரு முறையும் பணம் கொடுக்கறப்பப் பிச்சைக்காரன் மாதிரி ஃபீல் பண்ண வெக்கிறா. எப்பப் பார்த்தாலும் ரமேஷோட கம்பாரிஸன்”

“இனிமே அவனுக்குப் பணம் கொடுக்கற காரியத்தை எங்கிட்ட ஒப்படைக்க வேண்டாம் சொல்-ட்டேன். ”

“ஷட் அப்” என்றான்.

“பாத்திங்களா கேட்டுண்டே இருக்கிங்களே ”

“என்ன பண்ணச் சொல்றே? வளந்த பையனை அடிக்க முடியுமா?”

“அது ஒண்ணுதான் பாக்கி.”

ராமதுரைக்கு வந்த கோபத்தில் இவனை ஏன் பெற்றோம்

என்று தோன்றியது. ஒரே சவட்டு சவட்டலாம் என்கிற ஆத்திரம் விஷ்ணுமூர்த்தி வந்ததால் அடங்கிவிட்டது.

பாலாஜி தன் அறைக்குப் போய்விட்டான்.

“என்ன ஸார் பாத்திங்களா? நமஸ்காரம் அம்மா” என்று கூடை ஆப்பிளை மேஜை மேல் வைத்தார்.

“கேஸ் ஷீட்டைப் பார்த்தேன்; ஒரு வருஷம் வெளிநாடு போயிருந்ததால பணம் கட்ட முடியலைன்னு மனுவை மாத்திக் கொடுத்துருங்கோ. அலாட்மெண்ட்டை ரெஸ்டோர் பண்ணிர்றேன்.”

இதைக் கேட்டதும் அவர் முகம் பல்பு போட்டாற் போல் பிராகசமாகியது.

“பிரில்-யண்ட்; வெரிகுட் அப்ப காரியம் முடிஞ்சாப்பலதான்.”

“ஆமாம் அப்பறம் அந்த..” .

பரீட்சைதானே? நான் சொன்ன வார்த்தையைக் காப்பாத்துவேன்” அவர் தன் கைப்பையைத் துழாவி காகித உறையை எடுத்தார்.

“இதைப் பையனிட்டக் கொடுத்துவிட்டு இதுமாதிரி வரும்னு சொல்-டுங்கோ”

“வேற எதுவும் சொல்ல வேண்டாம்”

“அதெல்லாம் ப்ராப்ளம் இல்லை”

“அப்போது பாலாஜி உள்ளே வந்தான். “பாலாஜி நான் சொல்லலை பாரத்ல நம் ப்ரெண்டுன்னு இவர்தான்.”

“நமஸ்காரம் ஸார். உங்க கம்பெனி பரீட்சை ரொம்ப டஃபா இருக்கு”

இவர்தான் பரீட்சை பத்தி ஹிண்ட் கொடுக்கறார்

பாலாஜி அந்தக் கவரைப் பாாத்தான்.

“இதில் இருக்கிற மாதரி வரும் கேள்விகள் எல்லாம். இது மாடல் பேப்பர் மாதிரி...”



“அப்படியா ரொம்ப தாங்ஸ் ஸார் இந்த முறையாவது ஆனஸ்டா முயற்சி பண்ணிப் பார்க்கலாம்” என்று அவன் அதை வாங்கிக் கொண்டான்.

“நான் வரட்டுமா? வியாழக்கிழமை வந்தா அலாட்மெண்ட் லெட்டர் ரெடியாய்டுமா?”

“மத்யானம் வாங்கோ. அப்பதான் சேர்மன் ஆபிஸ்ல இருப்பார்; கையெழுத்து வாங்க முடியும்.”

“காரியம் ஆய்டுமோல்லியோ?”

“ஆய்டும்”

“உங்களுக்கும் ஆய்டும் ஆனப்பறம்தானே லெட்டரே கொடுக்கப் போறேன்”

பாலாஜிக்கு அந்தப் பரீட்சை புதன்கிழமை இருந்தது. விஷ்ணுமூர்த்தி கொடுத்த கேள்விகளுடன் மற்ற பல பகுதிகளையும் படிப்பதாகச் சொன்னான். அதைப்பற்றி அவர் அதிகம் கவலைப்படவில்லை. விஷ்ணுமூர்த்தியின் கேள்விகள் பதிலுடன் இருந்ததாகச் சொன்னான்.

“அதை முழுக்க பாத்துட்டடல்ல”

“பாத்துட்டேன்ப்பா இது மாதிரி வந்தா எழுத முடியும்னு தோன்றது:பார்க்கலாம் என்றான். ராமதுரைக்கு உள்ளுக்குள் உவகையாக இருந்தது பையன் பாஸ் பண்ணிவிடுவான்... வேலை கிடைத்துவிடும்; ஹிந்துவில் மேட் ரிமோனிய-ல் போடலாம்”.

Non Baradwaja match for handsome boy Age27. Employed in Premier Public.

புதன்கிழமை ஆபீஸ் போயிருந்ததால் சாயங்காலம் வரை விசாரிக்க முடியவில்லை. திரும்பி வந்ததும் பாலாஜி வந்தானா? என்றார்.

“வந்தாச்சு; மாடில படுத்துண்டிருக்கான்”

“பரீட்சை எப்படி எழுதினானாம்”

“அவனையே கேளுங்கோ; பரீட்சை எழுதப் போய்ட்டு சீக்கிரமே வந்துட்டான். எப்டிரா எழுதினேன்னு கேட்டதுக்கு

உன்வேலையைப் பாத்துண்டு போன்னான்"

முத-லேயே விடைகள் தெரிந்ததால் சீக்கிரம் எழுதி முடித்து விட்டு வந்து விட்டான். பைத்தியமே என்று மனசில சொல்-க் கொண்டார்.

பாலாஜி ஆறு மணிக்கு மத்யானத் தூக்கத்தால் உப்பின கன்னங்களுடன் வந்தான்.

"என்ன பாலாஜி எப்படி இருந்தது பேப்பர்?"

அவர் எதிரே உட்கார்ந்தான்.

"அப்பா ரொம்ப பெரிய சர்ப்ரைஸ். அந்த பேப்பர் மாடல் பேப்பர் இல்லை. அதே பேப்பர்; அன்னிக்கு அந்த ஆளு கொண்டு கொடுத்த அதே பேப்பர், ஒரு கேள்விகூட தவறாம நூறு கேள்வியும் அதே வந்தது."

"அப்படியா தட்ஸ் லக்கி! எழுதிட்டயோல்லியோ? அதான் சீக்கிரமே எழுதிட்டு வந்துட்டியா?"

"இல்லை எழுதாம வந்துட்டேன்"

அதிர்ந்து போய் "என்னது" என்றார்

"ஆமாம் வெறும் தாளைக் கொடுத்துட்டு எழுந்து வந்துட்டேன்"

"என்னடா சொல்றே பைத்தியக்காரா! ஏண்டா"

"எனக்கென்னவோ இது நியாயமில்லைன்னு பட்டுது; பத்தாயிரம் பேர் எழுதறாங்க. ஒழுங்கா நேர்வழியில் மாஞ்சு மாஞ்சு எழுதறாங்க. நான் மட்டும் திருடப்பட்ட, லீக் ஆன பேப்பரை வெச்சு எழுதறது, இட்ஸ் நாட் ஃபேர். அப்பா நீங்க அன்னிக்குப் பேசிண்டிருந்ததை கவனிச்சப்ப அந்தாளுக்கு ஏதோ காரியம் செய்ததுக்கு லஞ்சம் மாதிரித்தான் இந்த பேப்பரோன்னு தோணித்து; எனக்குப் பிடிக்கலைப்பா!"

"என்னடா பிடிக்கலை"

"அப்பா நீங்க எவ்வளவு சுத்தமானவர்னு தெரியும். எனக்காக நீங்க உங்களைக் கறைப்படுத்திக்கறதை நான் விரும்பலை.



அப்புறம் இந்த மாதிரி பரீட்சையெல்லாம் சொந்த முயற்சியில்தான் பாஸ் பண்ண விரும்பறேன். உங்களைச் சார்ந்து இருந்தது போதும் எனக்கு!"

மகாலட்சுமி இடிந்துபோய்க் கன்னத்தில் கைவைத்துத் தரையில் உட்கார்ந்துவிட்டாள். "இந்த மாதிரி ஒரு பைத்தியத்தைப் பெத்து வெச்சிருக்கோமே; அவனை அடிங்களேன் முதுகில. ஆத்திரம் தீர ஒரு சாத்து சாத்துங்களேன்" என்றாள்.

ராமதுரை கிட்டே போய் அவனை அணைத்துக் கொண்டார்.

## பயிற்சி.

1. 'அனுமதி' கதையைக் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் சுருக்கி எழுதுக
2. பாலாஜி பாத்திரத்தை ஆய்க.
3. ராமதுரைக்கும் பாலாஜிக்கும் நடந்த உரையாடலை எழுதுக.
4 பாலாஜி உண்மையாக உழைத்து உயர்ந்ததாக ஒரு கதை எழுதுக.

# 8. விழிப்பு.

*—சிவசங்கரி—*

தெரு வெறிச்சோடிக் கிடந்தது. வழக்கமாகக் காணப்படும் சந்தடி, ஜன நடமாட்டம் இன்றி அதிசயமாய் அமைதியாய் இருந்தது.

வெயிலைப் பொருட்படுத்தாமல் வாசப்படியில் அமர்ந்து தெருவை பராக்குப் பார்த்துக் கொண்டிருந்த கைலாசத்துக்கு அலுப்புத் தட்டியது. எழுந்து உள்ளே போகலாமா என்று நினைத்த நொடியில் ஒன்றின்பின் ஒன்றாகத் தெருக்கோடியில் நுழைந்த நாய்கள் அவன் கவனத்தை ஈர்த்தன.

தெரு நாய்கள்தாம். ஒன்று கறுப்பு, அடுத்தது பழுப்பு ... முன்னால் வந்தது கொஞ்சம் சோனியாக "நே" என்று இருந்தது. பின்னால் வந்த பழுப்பு நாய், சைஸில் பெரிசு - ஆனால் கறுப்பு நாய் கம்பீரமாய், ஒருவித அதிகார முகபாவத்துடன் நடக்க, பின்னால் வந்த பெரிசு குழைந்துகொண்டு, லேசாக அசடு வழிய வருகிற மாதிரி கைலாசத்துக்குப் பட்டது.

உதடுகள் சுணுங்க, பற்கள் விகாரமாய் வெளிப்பட்ட கறுப்பு நாய் பின்னதைப் பார்த்து வள் என்று விழுந்ததையும் லட்சியம் பண்ணாமல் அவ்வப்போது நெருங்கி வந்து முதலாவதை முகரவும் ஸ்பர்சிக்கவும் இரண்டாவது முனைய...

ஓ! பெண்ணும், ஆணுமா? கே-யும் எரிச்சலும் கலந்த சிரிப்பு கைலாசத்தின் உதடுகளை உட்புறமாய்க் கீறியது.

அவன் வீட்டுக்கு எதிர் சாரியி-ருந்து குப்பைத் தொட்டியின் அருகே வந்ததும் பெண் நாய் டபக்கென்று ஏறி சற்றுமுன் யாரோ விசிறிவிட்டுப் போன எச்சில் இலையை அவசரமாய் மூக்கால் பிரித்து மிச்சத்தை உண்ட நாழிகையில், ஆண் நாய் கனகாரியமாய் காவல் காக்கிற மாதிரி அதே அசட்டுக்களை மாறாமல் வாலை



ஆட்டிக்கொண்டு க்கம் க்கம் என்று குரல் கொடுத்தபடி குப்பைத் தொட்டியை ஒட்டி நின்றது.

ஓரிரு நிமிஷங்களில் மிச்சத்தைத் தின்று முடித்ததும் கீழே குதித்துப் பெண் நாய் ஓட, ஆண் நாய் தன் முகர்தல் ஸ்பர்சித்தலுடன் மறுபடி அதைத் தொடர்ந்தது.

சைக்கிள் நிறைய அலுமினியப் பாத்திரங்களைக் கட்டியபடி. எதுவும் புரியாமல் குரல் கொடுத்துக்கொண்டே பாத்திரக்காரர் ஒருவர் சென்றார்.

எண்ணெய் காணாத செம்பட்டை முடி, கிழிந்த அழுக்கான உடைகள், அதைவிட அழுக்கான சாக்கு, கையில் ஒரு இரும்புக் கம்பி சகிதம் வந்த பெண்மணி குப்பைத் தொட்டி அருகே வந்து அத னுள் இருந்த குப்பைகளை வெளியே வாரி இறைத்தார். பின்னர், தனக்கு வேண்டிய பேப்பர்களை மட்டும் இரும்புக் கம்பியால் குத்திஎடுத்து சாக்குப் பைக்குள் போட்டார்.

அவர் தூக்கி எறிந்த எச்சில் இலைகள், கிழிந்த பிளாஸ்டிக் பைகள்,துண்டுக் காகிதங்கள் காற்றில் இங்கும் அங்கும் பறக்க முற்பட, கைலாசத்துக்குள் சட்டென்று அத்தை எட்டிப் பார்த்தார்.

அத்தை என்றால் இவனுடைய சொந்த அத்தை இல்லை; புதுசாக அறிமுகப்படுத்தப்பட்ட நண்பன் நாணாவின் அத்தை. படித்தவர். இதமாகப் பேசத் தெரிந்தவர், வித்தியாசமானவர். முக்கியமாய் இளைய தலைமுறையினரின் மனசைப் புரிந்து கொண்டு பழகுபவர். இத்தனை வருஷங்களாக நாக்பூரில் இருந்த நாணா தற்சமயம் அத்தை வீட்டில் தங்கி ஸி.ஏ. செய்ய வந்திருக்கிறான். நண்பன் சுரேஷ் மூலம் மூன்று மாசங்களுக்குமுன் நாணா பரிச்சயமாக, அவன் வீட்டுக்குப் போய்வரும் கைலாசத்துக்கும், இந்த மூன்று மாசங்களாய் அத்தை நெருக்கமானார்.

அத்தைக்கு வயது 45. திருமணம் செய்து கொள்ளாமல் தனித்து வாழ்கிறார். பகல் பூராவும் தனியார் கம்பெனியில் அக்கௌண்டன்டாக உத்தியோகம். மாலையிலும், சனி, ஞாயிறு, இதர விடுமுறை நாட்களிலும் கண் தெரியாத இரண்டு பசங்களுக்கு ஸ்க்ரைபாக உதவி, தொழு நோய் கண்டு பயப்படத் தேவையில்லை. "மல்டி ட்ரக் தெரபி" மூலம் அதைக்

குணப்படுத்துவது வெகு எளிது என்று ஊர் ஊராகச் சென்று கூட்டங்களில் பேசி, சென்னையை அழகுபடுத்தும் முயற்சியில் இறங்கி இருக்கும் இயக்கத்தோடும், காவேரியைச் சுத்தமாக்குவோம் என்கிற கூட்டத்தோடும் அயராது இணைந்து செயல்பட்டு...

இத்தனையை மனசில் வைத்துக்கொண்டு, அத்தைக்கு கதர் புடவை சுற்றி, நரைத்த தலையும், குங்குமப்பொட்டும், கையில் குடையுமாய் கற்பனை செய்ய முனைந்தால் ஏமாற்றம்தான்.

கோட்டா புடவை, ஹீல் செருப்பு, கவர்ச்சியான சிரிப்பு, தானே ஓட்டும் வண்டி என்று அறிமுகமாகும் அத்தை சின்னப் பெண்ணின் சுறுசுறுப்பு, அழகுடன் யாரையும் இரண்டாம் தரம் திரும்பப் பார்க்கச் செய்வது நிஜம்...

அத்தைக்கு அவரை "சமூக சேவகி" என்று குறிப்பிட்டால் பிடிக்காது. நம் உடம்பை, நம் வீட்டை, "நம் உடைமைகளை சுத்தமாக அழகாக வைத்துக்கொள்ளப் பாடுபடுகிறோம். ஆனால் தான் ஸ்வாசிக்கும் காற்றை, வசிக்கும் தெருவைப் பராமரிக்க ஒருவர் முன்வரும்போது மட்டும் எதனால் அவருக்கு சமூக சேவகி பட்டம்? ம்? இப்படி கூட்டம் கூட்டி ஒதுக்கிப் பேசுவதனாலேயே நமக்கெல்லாம் எது நம் கடமை, பொறுப்பு என்பது கூட மறந்துபோய் எல்லாவற்றுக்கும் அரசாங்கத்தை, அடுத்தவரை குறை சொல்லும் குணம் வந்துவிட்டது. தெருவில் சின்னதாக ஒரு குழி இருந்து, அதில் ஒரு குழந்தை தடுக்கி விழுந்ததும் நாம் என்ன செய்கிறோம்? - முதல் மந்திரியி-ருந்து கார்ப்பரேஷன் கடைநிலை ஊழியர் வரை திட்டித் தீர்க்கிறோம் - அப்புறம் அத்துடன் நம் வேலை முடிந்தது என்று சும்மா இருந்து விடுகிறோம். ரைட்? இதைத் தவிர்த்து ஒரு கூடை மண்ணை எடுத்துவந்து அந்தக் குழியில் போடுவது பிரச்சனைக்கு நம்மாலான உதவியாக இருக்கும் என்று எத்தனை பேர் செயல்படுகிறோம், இல்லை நினைத்துத்தான் பார்க்கிறோம்? ம்."

புருவங்கள் முடிச்சுப் போட, தீவிரமான அக்கரையுடன் அத்தை ஒருதரம் பேசியது நினைவுக்கு வர, எழுந்து போய் பறக்கும் காகிதங்களைப் பொறுக்கி குப்பைத் தொட்டியில் போடலாமா என்று கைலாசம் நினைத்தான். ஆனால் கூடவே "ஆமாம் - நான் சுத்தம் செய்வதால் மட்டும் இந்தத் தெரு சுத்தமாகி விடப்



போகிறதாக்கும்!" என்கிற ஆயாசம் எழ, திரும்பி சுவரில் சாய்ந்து உட்கார்ந்தான்.

படிக்கட்டுகளில் அந்தக் கோடியில் லேசாக வெடிப்பு கண்டிருந்த தரையில் சாரியாய் எறும்பு ஊர்வலம்...

கறுப்புப் பிள்ளையார் எறும்புதான்...

புருபுருவென்று சதா ஓடிக்கொண்டே இருக்கும் சுறுசுறுப்பான எறும்புகள்....

"இந்தப் பிள்ளையார் எறும்புங்களுக்கு இருக்குற சுறுசுறுப்புல, சமர்த்துல, பொறுப்புல பாதிகூட இந்தக் காலத்துப் பிள்ளைங்களுக்கு இருக்கறதில்லை" என்று இரண்டு நாட்கள் முன் அதே எறும்புக் கூட்டத்தைப் பார்த்துவிட்டுப் பேப்பரும் கையுமாய் உட்கார்ந்திருந்த அப்பா விமர்சித்தது நினைவுக்கு வர, கைலாசம் "ப்ச்" என்று கோபத்துடன் சூள் கொட்டினான்.

பிறகு, அந்தக் கோபம் மாறாமலேயே முன்னால் நகர்ந்து எறும்பு ஊர்வலத்தின் நடுவில் விரலால் ஒரு கோடு இழுத்தான். மோப்ப சக்தியின் உதவியுடன் ஒன்றின் பின் ஒன்றாகச் சென்று கொண்டிருந்த எறும்புகளின் ஊர்வலம் தடைப்பட்டுப் போக, திடுமென உண்டான குழப்பத்துடன் எறும்புகள் தாறுமாறாக இங்கும் அங்கும் ஓடியது குட்டியாக ஒருவித மகிழ்ச்சியை உண்டாக்க, கைலாசம் பொந்துக்கு அருகில் இன்னொருதரம் கோடு கிழித்து, இன்னும் கொஞ்சம் குழப்பத்தை மற்ற எறும்புகள் நடுவிலும் ஏற்படுத்தினான்.

"டே கைலாசம் ... சாப்பிட வாயேண்டா... மணி பன்னிரண்டாவுது...."

உள்ளிருந்து ஒலித்த அம்மாவின் குரல் காதில் விழாத மாதிரி கைலாசம் தொடர்ந்து எறும்புகளையே வெறித்தான்; பின்னர் பார்வையைக் குப்பை பொறுக்கும் பெண்மணியிடம் வீசினான்...

வேண்டியதைப் பொறுக்கிக் கொண்டுவிட்ட நிறைவுடன் அவள் நகர, இந்தக் குப்பைத் தொட்டிதான் எத்தனை பேருக்கு வேண்டியதாக இருக்கிறது என்கிற நினைப்பில் கோபம் குறைந்து அவனுக்குச் சிரிப்பு எழுந்தது.

எச்சில் இலைக்காக வரும் நாய்கள்..

துண்டு பேப்பர்களை நாடி வரும் பெண்மணி...

அப்புறம் அப்பா....

“நா அந்தக்கால இண்டர்... ஆனாலும் முனைஞ்சு வேலை தேடினதுல படிச்சு முடிச்ச மறு மாசமே கையில வேலை, சம்பளம்... ஆனா; நீ? வேண்டாத லொட்டு லொசுக்கு சொல்லிகிட்டு, குண்டு சட்டில குதிரை ஓட்டற! உன்னால யாருக்கு ஆதாயம்? ஏதுடா, அப்பா இத்தனை கஷ்டப்படறாரே, நாம கை கொடுப்பம்னு துளி அக்கறை கிடையாது... இருந்தா, இப்படி வர்ற வேலை எல்லாம் ‘ஆ அது என் படிப்புக்கு ஏத்தது இல்லை...’ இதவிட உசந்த வேல எனக்கு வரும்’ -னு நொட்டாங்கு அடிப்பியா? எல்லாம் நா செஞ்ச பாவம்டா... போன ஜன்மத்துப் பாவம்... பேசாம டிகிரி, மத்த ஸர்டிபிகேட்டுங்களைக் கிழிச்சு குப்பைத் தொட்டில போட்டுடு ... உன்னோட தொடர்ந்து முட்டிக்காம நா வாய் மூடிக்கிட்டாவது இருப்பேன்.”

குப்பைத் தொட்டியில் போடு - கிழித்து எறி - இதைத் தவிர வேறு பேச்சே கிடையா...

“டே... உனக்கென்ன காது செவிடா? தொண்ட கிழிய கத்தறது கேக்கல? வந்து சாப்டுட்டு போயேண்டா...”

அம்மாவின் தொனியில் இப்போது அலுப்பும், கோபமும் கலந்து ஒலிப்பதைப் புரிந்துகொள்ள முடிந்தாலும், கைலாசம் எழுந்திருக்கப் பிடிக்காமல் அப்படியே சலனமில்லாமல் அமர்ந்திருந்தான்.

அப்பா வீட்டில் இருந்தால், “ஏண்டா சாருக்கு கொட்டிக்கறதுக்குக் கூட வெத்தலை பாக்கு வச்சு அழைக்கணுமா?” என்று நக்கலாய்க் கேட்டிருப்பார் - நிச்சயம்.

எத்தனை தரம் எத்தனை தரம், என்னவெல்லாம் கேட்டாகி விட்டது!

வேகமாக வீசிய காற்றில் அழுக்கு பிளாஸ்டிக் பேப்பர் ஒன்று பறந்து வந்து கடைசிப் படிக்கட்டில் ஒட்டிக்கொண்டது.

“நம் உடம்பை, நம் வீட்டைச் சுத்தமாக வைத்துக்கொள்ளும் நாம், நம் வீட்டுக் குப்பையைத் தெருவில் கொட்டுவதை . ஏன் தடுக்க மாட்டேன் என்கிறோம்? ஏனென்றால் தெரு நம்முடையது



என்கிற அக்கறை இல்லை - அதானே? அடுத்தவர்களைப் பற்றின கரிசனம் நமக்குக் குறைந்து வருகிறது... கேரிங் அண்ட் ஷேரிங்... அக்கறையும் பகிர்ந்து கொள்ளுதலும் மறந்துவிட்ட மனசு குறுகிப்போய் சுயநலம் தலை எடுப்பதில் ஆச்சர்யம் என்ன?”

மீண்டும் அத்தையின் பேச்சுகள் நினைவுக்கு வர ஒருவிதத் தவிப்பு உண்டாயிற்று.

பிளாஸ்டிக் பேப்பரை எடுத்துக் குப்பைத் தொட்டியில் போட்டு விடலாமா?

தொடர்ந்து யோசிக்கும் முன்னர் தெருமுனையில் ஒரு சிகப்பு வண்டி எண்.இ .118 திரும்ப, யார், பாபுவா என்கிற ஆர்வத்துடன் முன்னால் சாய்ந்து பார்த்தான்.

இல்லை... இரண்டாவது வீட்டு வாசலில் நின்று யாரையோ இறக்கிவிட்டபின் வண்டி புறப்பட்டுச் சென்று மறைந்தது.

பாபுவின் அப்பா பெரிய புள்ளி. கோயமுத்தூரில் மில், எக்ஸ்போர்ட் பிஸினெஸ் என்று தடபுடல் வாழ்க்கை. எண்.இ.118 ஐ போன பிறந்த நாளுக்கு முப்பதாயிரம் ரூபாய் பிரிமியம் கொடுத்து பாபுவுக்கு, பரிசாக வாங்கித்தரும் அளவுக்குப் பணத்தில் புரள்பவர்.

அப்பாவின் அலுவலகத்தில் வேலை பார்க்கிறேன் என்று பாவ்லா காட்டிவிட்டு, துளி அவகாசம் கிடைத்ததும் வண்டி, பணத்துடன் பாபு வந்துவிடுவான். பாபு, நாணா, சுரேஷ், கைலாசம்-அத்தனை நண்பர்களும் ஒன்று சேர்ந்துவிட்டால் அப்புறம் அவர்கள் பாஷையில் சொல்வது மாதிரி சுத்தாக்ஸ்

மஹாப்ஸ், கடலில் குளியல், பியர், சிகரெட் எல்லாம் தண்ணீர் பட்டபாடு...

பத்து நாட்களுக்கு முன் சுரேஷுக்கு வேலை கிடைத்ததைக் கொண்டாட இப்படித்தான் வண்டி எடுத்துக்கொண்டு எ-யட்ஸ் பீச் போய்விட்டு, எட்டுபாட்டில் பியரையும் பாக்கெட் பாக்கெட்டாய் சிகரெட்டையும் குடித்துவிட்டு வந்தபோது, முதல் முறையாய், வகையாய் நாணா வீட்டில் அத்தையிடம் மாட்டிக்கொண்டார்கள்.

“என்ன வேலை கிடைத்ததற்கு ஸெ-ப்ரேஷனா”

“எஸ் அத்தை....”

“என்னென்ன செய்தீர்கள்?”

அத்தை புரிந்துகொள்வார்கள் என்கிற தைரியம் உண்டென்பதால் நாணா உண்மையைச் சொன்னான்.

அத்தை அரை நிமிஷம் மௌனித்தார். பின், சின்னக் குர-ல் கேட்டார்:

“உங்களை எல்லாம் பொறுத்தவரை கொண்டாட்டங்கள் என்றால் குடிப்பதும், சிகரெட் குடிப்பதும் தானா?”

அத்தை சீண்டுபவரோ, வெற்றுக்கு புத்திமதி சொல்ல முனைபவரோ அல்ல - அக்கறையுடன் பேசுபவர் என்கிற வித்தியாசம் நினைவில் இருக்க, அன்று நால்வருமே வாய் அடைத்துத்தான் நின்றார்கள்.

அத்தை எழுந்து கதவருகில் சென்றார். திரும்பி நம்பிக்கை நிறைந்த குரலில் , ஆனால் மென்மையாய் கேட்டார்:

“நீங்கள் எல்லாமே அதிபுத்திசாலிகள் - தீவிரமாய் யோசிக்கத் தெரிந்தவர்கள். ஸோ, நான் ஒரு கேள்வி கேட்கட்டுமா? உங்களைப் பெற்றவர்கள் சம்பாத்தியத்தில் இப்படி எல்லாம் செலவழிப்பது உங்களுக்கு உறுத்தவில்லை? டோண்ட் யூ ஆல் ஃபீல் கில்டி அபௌட் இட்?”

அத்தை பேசின பிறகு ரொம்ப நேரத்துக்கு நால்வரும் மௌனித்ததும், இந்த பத்து நாட்களாக சிகரெட்டைக் கையால் நிம்மதியாய் தொடமுடியாதபடி உள்ளே என்னமோ உறுத்துவதாக பாபுவே சொன்னதும் இப்போது ஞாபகத்துக்கு வர, இருப்புக்கொள்ளாமை அதிகமாக கைலாசம் எழுந்து நின்றான்.

கோடு போட்டதினால் உண்டான குழப்பம் மறைந்து மறுபடியும் தங்கள் ஊர்வலத்தை கர்ம சிரத்தையுடன் எறும்புகள் மேற்கொள்வதைப் பார்த்தவாறு கைகளை தலைக்கு மேல் உயர்த்தி சோம்பல் முறித்த நிமிஷத்தில், மீண்டும் அம்மா இன்னும் கொஞ்சம் கத்தலாக அழைப்பது காதில் விழுந்தது.

எறும்பு ஊர்வலத்தில் நாலு எறும்புகள் கஷ்டப்பட்டு ஒரு அரிசியைப் பொந்துக்கு அருகில் இழுத்துச் செல்வதைப் பார்த்த



போது காரணம் புரியாமல் ஒரு நமநமப்பு எழ, கைலாசம் சட்டென்று குனிந்தான். ஆள்காட்டி விரலால் அந்த அரிசியை லேசாகச் சுண்டிவிட்டான். அரிசி இரண்டடி சென்று மூலையில் விழ, எறும்புகள் உணவைப் பறிகொடுத்த கவலையோடு என்னவோ ஏதோ என்று பயந்து தறிகெட்டு ஓடிய காட்சி சின்னதாக ஆனால், குரூரமான மகிழ்ச்சியை உள்ளுக்குள் பரப்புவதை உணர முடிய, மெல்ல நடந்து வீட்டுக்குள் சென்றான்.

சமையல் அறையில் சாப்பிடத் தட்டை வைத்துவிட்டு காத்திருந்த நாழிகையில் மதியச் சிற்றுண்டிக்காக வெங்காயம் அரிந்து கொண்டிருந்த அம்மா, இவனைக் கண்டதும் சிடு சிடுத்தாள்.

“ஏண்டா, இப்படி எதுக்கும் உபயோகமில்லாம இருந்து இருக்கிறவங்க கழுத்த அறுக்கறே? மணி பன்னிரண்டு ஆச்சு... காலாகாலத்துல சோத்துக் கடைய முடிச்சாதான் மேக்கொண்டு வேலை ஆகும். நாலு மணிக்கெல்லாம் பரிமளாவப் பெண் பார்க்க வரப் போறாங்க... அவங்களுக்கு டிபன் பண்ணியாகணும்... பெரியப்பாவை ஆஸ்பத்திரில சேர்த்திருக்காங்களாம்.... அங்கே ஒரு நடை போயிட்டு வரணும்.... என்னால முடியாட்டியும் ஆறு சாத்துக்குடி பழங்கள வாங்கிட்டு நீ போயிட்டு வரக் கூடாது? மாசக் கடைசி இங்க முழி பிதுங்குது... இப்பப் பாத்து மேலமேல வேண்டாத செலவெல்லாம்....”

குறைப்பட்டு, குறைப்பட்டு...பட்டு சுட்ட கத்திரிக்காய் மாதிரி சுனங்கிப் போய்விட்ட அம்மாவின் முகத்தை ஏறிட்டுப் பார்க்கப் பிடிக்காமல் கைலாசம் சாப்பிட உட்கார்ந்தான்.

சோற்றைப் பிசைந்து குழம்புடன் கலந்து உருட்டி, கவளத்தை வாயருகே கொண்டு போனபோது சொடேரென்று மனசுக்குள் சவுக்கு ஒன்று சொடுக்கியது.

“கேரிங் அண்ட் ஷேரிங்... அக்கறையும் பகிர்ந்து கொள்ளுதலும் மறந்துவிட்ட நிலையில் மனசு குறுகிப்போய், சுயநலம் தலை எடுப்பதில் ஆச்சர்யம் என்ன?”

வாயில் போட்ட சாதத்தை விழுங்க முடியாமல் மீண்டும் மீண்டும் சவுக்கு வ-க்க வ-க்க உள்ளுக்குள் சொடுக்கியது...

தொண்டைக்குழிக்கு மேல் கட்டை ஒன்று வைத்து

அடைத்துவிட்ட மாதிரி சோறு இறங்க மறுத்தது.

கையை உதறிக்கொண்டு எழுந்தான். ‘டே..’. என்ற அம்மாவின் கத்தலை லட்சியம் பண்ணாமல் வாசலுக்கு வேகமாய் சென்றான். மூலையில் கிடந்த அரிசியைத் தேடி எடுத்து, பொந்தருகில் குனிந்து மெல்ல, கவனமாய் உள்ளே போட்டான். சின்னக் குரலில் ‘ஸாரி’ என்று முனகிவிட்டு நிமிர்ந்து, வாசப்படியில், தெருவில் இங்கும் அங்கும் கிடந்த பிளாஸ்டிக் பேப்பர் துண்டங்களை அவசரமாய் பொறுக்கி பந்தாகச் சுருட்டி குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டு, மீண்டும் உள்ளே வந்து என்னவாயிற்று உனக்கு? என்கிற பார்வையுடன் நின்ற அம்மாவை நிமிர்ந்து பார்த்தான்.

வழக்கமாகத் தென்படும் சுணக்கம் புலப்படாமல் அந்த களைத்துப் போன முகத்தைப் பார்க்கப் பாவமாக இருக்க, ரொம்ப நாட்களுக்குப் பிறகு நீயும் நானும் சேர்ந்து சாப்பிடலாமாம்மா? என்றான் இதமான குர-ல்.

## பயிற்சி.

1. விழிப்பு என்னும் கதையைக் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் சுருக்கி வரைக.
2. கைலாசம் - பாத்திரத்தை ஆராய்க.
3. நாணா அத்தைக்கும் கைலாசத்திற்கும் நடந்த உரையாடலை எழுதுக
4, கைலாசம் தொண்டு செய்து, உயர்ந்ததாக நும் கற்பனை கலந்து ஒரு கதை எழுதுக

# 9. அனந்தசயனம் காலனி

*—தோப்பில் முஹம்மது மீரான்—*

இரைந்து வரும் பாயும் பஸ்ஸில் ஓரமாக உட்கார்ந்திருந்த போது துரிதமாக ஓடுவது ரோட்டோரத்து மக்களா பேருந்தா என்ற சந்தேகம் மனசில் கடித்துத் தொங்கிக் கொண்டிருந்தது. என்னைத் தாண்டி ஓடிக்கொண்டிருக்கும் மனிதர்களையும் மரங்களையும் மிருகங்களையும் முழித்துப் பார்த்துக் கொண்டிருந்தேன். நெல் கதிர்மணிகளைச் சூடி நிற்கும் வயல்களும் குலை தள்ளி நிற்கும் வாழைத் தோட்டங்களும் ஒரு சக்கரத்தில் சுழன்று கொண்டிருந்தன. ரோட்டோரத்து மரங்களின் தலையிலிருந்து உதிர்ந்த காற்றில் கரத்தில் ஒரு செய்தித்தாள் துண்டு தத்தியது. அப்போதுதான் நான் தேடிச்செல்லும் பேராசிரியர் சீனிவாசன், அவருடைய முகவரி எழுதி தந்திருந்த காகிதத் துண்டு நினைவுப் பிசகின் கூளத்தில் வீழ்ந்து விட்டதை உணர்ந்து திடுக்கிட்டேன். ‘பிளஸ் டு’ தேறிய மகனை நினைத்தபோது, முனை கூர்மையான ஒரு குற்ற உணர்வு மனத்தைக் கீச்சியது.

புரொபசர் சீனிவாசனின் வீடு ஏதுன்னு கேட்டா “பச்சக் குழந்தை கூட சொல்-த் தருவாங்க சார்” - பேராசிரிய நண்பர் அன்று பேச்சுவாக்கில் சொன்ன இந்தத் திடீர் நினைவின் துளிர்ப்பு. ஓர் ஆலமர நிழல் அப்போது விரித்தது. புகழ் பெற்ற பேராசிரியர் ஆனதால் கதவு எண்ணும், தெருப் பெயரும் தேவை இல்லை என்ற ஆறுதல் மனசைக் குளிர வைத்தது. பச்சைக் குழந்தைகள் கூட தெரிந்து கொண்டிருக்கக் கூடிய ஒரு பேராசிரியரின் நண்பன் நாம் என்ற அபிமான உணர்வு என்னை மயிர்சிலிர்ப்பால் போர்த்தியது.

கம்ப்யூட்டர் சயன்ஸ் என்பது இப்போது கவர்ச்சிகரமான பாடம், ப்ளஸ் டூ தேறிய என் மகனையும் அதன் கவர்ச்சி பீடித்து விட்டது என்பதை அவனுடைய அடம்பிடிப்பிலிருந்து ஊகித்துக் கொண்டேன். கம்ப்யூட்டர் துறை உள்ள கல்லூரியையும் அதன்

துறைத் தலைவர் பேராசிரியர் சீனிவாசன் என்னுடைய ஒரு பழைய நண்பர் என்பதையும், அவன் எப்படி புலனாய்வு செய்து தெரிந்துகொண்டான் என்று எனக்கு இப்பவும் ஒரு புதிர்.

பல மைல்கற்கள் தொலைவில் என்னோடு வசிக்கின்ற என் மகன்கூட பேராசிரியர் சீனிவாசனின் வீடு "அனந்தசயனம் காலனியில்" என்பதைத் தெரிந்துகொண்ட நிலையில், கல்விமான்களும் உயர் அரசு அதிகாரிகளும் டாக்டர்களும் இன்ஜினீயர்களும் போன்ற மேல் மக்கள் தங்கிவரும் அந்தக் காலனியில் உள்ள தாய் தந்தையர்களுக்கும் அவர்களது பிள்ளைகளுக்கும் கண்டிப்பாகப் பேராசிரியரைத் தெரியாம-ருக்க முடியாது. இவர்களில் பெரும்பான்மையினர் தங்கள் பிள்ளைகளின் அட்மிஷனுக்காகப் பேராசிரியரை ஆண்டோடாண்டு அணுகியிருக்க வேண்டும்; அல்லது அணுக வேண்டிவரும் என்ற தொலைநோக்கில் முன் பரிச்சயம் ஏற்படுத்திக் கொள்வதற்காக வழியில் பார்க்கும் போதெல்லாம் அவருக்கு ஆங்கில பாணியில் வணக்கமாவது சொல்லாமலிருக்க மாட்டார்கள்.

பிரபலமான பேராசிரியர் நண்பரின் வீட்டை முகவரி இல்லாமலேயே கண்டுபிடிக்க வீண் அலைச்சல் வேண்டி வராது என்ற மனநிறைவில் பஸ்ஸின் இருக்கையில் குறுக்கைச் சாய்த்தேன். விழிப்பிற்கும் மயக்கத்திற்கும் இடையிலான ஊடு வழியில், ஒற்றைக் காலில் பிடிவாதமாக நிற்கும் மகனின் முகம் தெரிந்தது. அவனுடைய தயனீயமான முகம். ஆசை ஒளிரும் கண்கள்! வீட்டை விட்டு இறங்குகையில் அவன் உதட்டி-ருந்து விழுந்த எச்சரிக்கை - "நாளை செலக்ஷன்" அதன் ஓசை என்னை அவ்வப்போது நடுங்கி விழிக்க வைத்தது. முந்தைய இரவு விழித்திருந்த களைப்பை, இந்த நெடுந்தூரப் பயணத்தில் சற்று உறங்கித் தீர்க்கவிடாமல் இடைஞ்சல் பண்ணிக்கொண்டிருந்தது அது.

பஸ் இறங்கிய இடத்தில், உச்சி வெயிலில் தார் உருகும் ரோட்டில் இறங்கி நின்றபோது பிந்தி விட்டோமோ என்று அச்சம் மனத்தை உறுத்தியது. அவர் யார் யாருக்கெல்லாம் வாக்களித்து இடத்தை நிரப்பியிருப்பாரோ?

பல முடிச்சுகளுக்குள்ளே மனம் சிக்கிக் குழம்பிக் கொண்டிருக்கும் போது குடை பிடித்துக் கொண்டு அங்கு வந்த ஒருவரிடம் கேட்டேன்.



"ஐயா, அனந்தசயனம் காலனிக்குப் போவும் பஸ் எது?"

"ஓடிப்போவும். அந்த டிரைவர் ஏறி இருக்கிற 39பி தான், அத உட்டா இனி ரண்டு மணிக்கூர் களிஞ்சுதான் பஸ்." உருண்டு கொண்டிருந்த பஸ்ஸில் ஒரு மாணவனுடைய சுறுசுறுப்போடு தொங்கி ஏறிவிட்டேன். பள்ளங்களில் விழுந்து எழும்பிய பஸ், நகரத்தின் நெஞ்சிலிருந்து, கால் ‘முட்டிலிருந்து விரல் முனையிலிருந்து என்னைப் பெயர்த்துக் கொண்டு போனது. ஏதோ ஜின்னு-ஆவி, என் கண்களைக் கட்டி ஏழாம் கடலுக்கு அக்கரை கொண்டு செல்வது போன்ற பிரமை. மனித நடமாட்டம் இல்லாத ஒரு சாலை ஓரத்தில் என் கண்களிலிருந்து கட்டை அது அவிழ்த்து விட்டது.

டவுன் பஸ்ஸிலிருந்து இறங்கிய இடத்தில் எதிர் திசையில் அனந்தசயனம் காலனி என்ற பெயர்ப் பலகை அதை ஒட்டி ஒரு டீக்கடை. டீக்கடையைத்தாங்கியிருந்த நான்கு தூண்களில் ஒன்று பஸ் நிறுத்தப் பலகை மாட்டப் பட்டிருந்த தூண், அந்தத் தடயம் டீக்கடைக்கும் அனந்தசயனம் காலனிக்கும் இடையிலான நெருக்கத்தைச் சுட்டியது. காலனி மக்களை, குறிப்பாக, பிரபலமான பேராசிரியர் சீனிவாசனை டீக்கடை உரிமையாளர் தெரியாம-ருக்க முடியாது.

"அண்ணே, புரொபசர் சீனிவாசன் ஊடு எந்தப் பக்கம்?"

"புரொபசர் சீனிவாசன்?" கடை உரிமையாளர் சற்று ஆலோசனை செய்துவிட்டு, பேராசிரியரின் உருவ அமைப்பைச் சொற்களால் வரைந்தார். மீசை வச்ச ஆள்.

"ஆமா"

"கண்ணிலே கண்ணாடி, கொஞ்சம் கஷண்டி தலை, கறுப்பு, உயரமான ஆள்."

"ஆமாண்ணே, அவரேதான்." இறங்கிய இடத்திலேயே வீட்டைக் கண்டுபிடித்து விட்ட மகிழ்ச்சி நெஞ்சிற்குள் மத்தாப்பூக் கொளுத்தியது.

"ஆள பாத்திருக்கேன். ஊடு காலனியிலேதான். ஆனா எங்கே தங்கியிருக்காருன்னு தெரியாது."

சோர்வு மனத்தைக் கசக்கியது.

காலனிக்கு உ்ளளே நுழைந்தபோது, கண்கள் ஒத்திய ஒரு விளம்பரப் பலகை என்னை அச்சுறுத்தியது - தெருக்களை அசுத்தம் செய்யாதீர்கள். மீறினால் நடவடிக்கை எடுக்கப்படும். அந்த அச்சுறுத்தலுக்கு எனக்குள்ளே ஒரு பரிகாரமிருந்தது. இன்னும் சில வினாடிகளில் பேராசிரியர் சீனிவாசனின் வீட்டுக்குச் செல்லவிருப்பதால், வசதியாக அங்கேயே சிறுநீர் கழிக்கலாமே.

அங்கு நின்றிருந்த போது பார்வை பரவிச் சுழன்றது. பின்னல் நிறைந்த தெருக்கள், மாடி கட்டிடங்கள், தெருக்கள் துவங்குமிடத்தில் மஞ்சள்நிற சிமெண்டுப் பலகையில், கறுப்பு எழுத்துக்களுக்கு நேராக எண்கள்-ஏ 1-100, பி - 20-60, இப்படி

எந்தத் தெருவில் முத-லில் நுழைவது என்ற குழப்பம். ஐயப்பாடுகள் மனத்தைக் கிளறின. வெறிச்சோடி கிடக்கும் தெருக்கள்; மயான அமைதி. யாரிடம் போய் விசாரிப்பது?

விடுமுறை நாட்களில் என் மகனும் அவனுடைய நண்பர்களும் எங்கள் தெரு மண-ல் கிரிக்கெட் மட்டையால் அடித்துத் தூள் கிளப்பிக் கூப்பாடு போடுவதை நினைத்தேன் ஏனையோர்களையும் கண்டிப்பதுண்டு. "ஏண்டா தெருவிலே கிடந்து கத்தூதியோ" ஊட்டுக்குள்ளே போய் படிங்களே..." இதை அவர்கள் காதில் வாங்கி கொள்வதே இல்லை. எரிச்சலாகவே இருக்கும், அவர்கள் மீது.

அப்போது, அனந்தசயனம் காலனியில் ஏதேனும் தெருவில் பிள்ளைகள் கிரிக்கெட் விளையாடுகிறார்களா என்று கூர்ந்து நோக்க தோன்றியது. ஆள் அசைவுகள் அற்றுக் காணப்பட்ட தெருக்களைக் கண்டபோது, அங்குள்ள கட்டிடங்களில் மனித வாசம் இல்லையோ என்று தோன்றியது.

அகர வரிசையில் முதலில் ஏ -யை நோக்கி கால்கள் நகர்ந்தன. வீட்டு வாசல்களில் கண்ணை ஓட்டி நடந்தேன். பெயர்ப் பலகைகள் உள்ள வீடுகள், இல்லாத வீடுகள். எந்தத் தலையும் வெளியே தெரியவில்லை. நடந்துகொண்டே இருக்கும்போது அந்தத் தெரு; அதன் மத்தியில் இரண்டு கிளைகள் விட்டிருந்தன- பி. சி. சற்று தயக்கத்திற்கு பின், பி- க்குள்ளே நுழைந்தேன். நடந்து கொண்டிருக்கும்போது ஒரு கூந்தல், எப்படியோ கண்ணில் பட்டுவிட்டது. சடாரென்று அது மறையும் முன் கூப்பிட்டேன்.



"யம்மா..." ஓடி வாசல் பக்கம் சென்றேன். தலை வாசலில் உள்பக்கம் பெரியதொரு பூட்டு தொங்கி கொண்டிருந்தது.

"புரொபசர் சீனிவாசனின் வீடு...? "

"தெரியாது." அவள் வெடுக்கென்று உள்ளே ஏறிச்சென்று கதவைச் சாத்திவிட்டாள்.

"போறா அவ". பி-வழியாகவே நடந்தேன் இரண்டு கால் எட்டிப்போட்டதும், பி-யிலிருந்து மீண்டும் இரு கிளைகள் - சி.டி,

ஒரே குழப்பம். எங்கு நுழைவது? சி -க்குள்ளே நுழைந்தேன். தெருவின் இருமருங்கிலும் கண்ட பெயர்ப் பலகைகள் அனைத்தையும் வாசித்துக்கொண்டே நடந்தேன். மூடப்பட்ட வாசல்களில் நாய்களின் படங்கள்.

மேலும் பொறுத்துக் கொண்டிருக்க முடியாத நிலை. காலனிக்கு உள்ளே நுழையும்போது கண்ட எச்சரிக்கைப் பலகை கண்ணை உறுத்தியது. பேராசிரியரின் வீட்டைக் கண்டுபிடிக்கும் வரை சிரமங்களை அடக்கிக்கொள்ளாமல் வேறு மார்க்கமில்லை என்ற முடிவுக்கு வந்தேன்.

கால்கள் முன் நோக்கி நகர்ந்தன. சற்றுத் தொலைவில் ஒருவர் இரும்பு வாசலைத் திறந்து ஹீரோ ஹோண்டாவை வெளியே உருட்டி இறக்கினார். அதைக் கண்டதும். மூச்சு வந்தது. அவரை வெளியே விட்டு ஓர் அழகி வாசலை உள்ளே பூட்டால் பூட்டினாள்.

காலை பின்பக்கமாக எடுத்துப்போட்டு வண்டியில் உட்கார்ந்து அவர் வண்டியை ஸ்டார்ட் செய்யும் வினாடிகளுக்குள் ஓடி அவர் பக்கம் சென்றேன்.

"ஸார், புரொபசர் சீனிவாசன் வீடு?"

"தெரியாது." என் முகத்தைக்கூட பார்க்கவில்லை. சொன்னதைக் கேட்டாரோ? தெரியவில்லை. கரிப்புகையை என் மூக்கிற்குள் திணித்துக் கொண்டு பாய்ந்துவிட்டார்.

அந்தக் கரிப்புகையை சுவாசிக்க வேண்டியதாயிற்று. சுவாச நாளத்தில் மண்டிய அந்தப் புகையைச் சீந்தி சீந்தி வெளியேற்றிக் கொண்டு நடந்தேன். தெரு ஓரத்தில் மரம் முளைக்காத ஓர் இடத்தில் வைத்து என் தலை இரண்டாகப் பிளந்தது. டி.சி. இந்தப்

பிளவு, என் பொறுமையின் தெளிநீரில் கல்லைப் போட்டு குளம் கலக்கியது.

டியுடைய நெஞ்செலும்பில் காலோங்கி மிதித்து நடக்கும் போது ஏதோ ஒன்றின் நெஞ்சை மிதிப்பதாகத் தோன்றியது. எனக்கு முன்னால் மல்லாந்து கிடப்பது எது? புரியவில்லை. எல்லா நரம்புகளி--ருந்தும் ஊறி இறங்கிய சினம் திரண்ட காலால் ஓங்கி, ஓங்கி, மிதித்துக்கொண்டு அதன்மீது நடந்து கொண்டிருந்தேன். ஒரு பாலைவனப் பயணியின் களைப்பு கால்களில் உண்டானது. மூச்சிரைப்பும்.

இரு மாடிக் கட்டிடத்தின் நிழல் விழுந்த தெரு ஓரத்தில் அதன் சுவரில் சாய்ந்துநின்று காலாற்றினேன். கண்ணெதிரில் தெரிந்த வீட்டு எண்ணை வாசித்தேன். டி-89 காம்பவுண்டிற்குள் நின்றிருந்த வேப்ப மரம் தரையில் பரப்பிய குளிர்ச்சியில் பிரம்பு நாற்காலியில் அமர்ந்து ஒருவர் ஆங்கிலப் பத்திரிகையின் சிறப்பு மலர் வாசித்துக் கொண்டிருப்பது தெரிந்தது. அவர் மடி மீது உட்கார்ந்துகொண்டிருந்த ஒரு ஜடை நாய்க்கு தடவிக் கொடுத்துக் கொண்டிருந்தார். காம்பவுண்டுச் சுவரில் உள்ள இரும்பு வாசலில் உட்பக்கம் பெரிய பூட்டு ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது.

இவரையே கேட்டுப் பார்ப்போம். மெல்ல வாசலை அடைந்தேன். அவிழ்த்து விட்டுருந்த மூன்று நாய்கள் உள்ளே பல திசைகளிலிருந்து குதித்து வந்தன. அவர் மடியில் உட்கார்ந்து கொண்டிருந்த நாயும் கால்களை தூக்கி வாசல் கம்பியில் வைத்துக் கொண்டு செவி வெடித்துப் பிளக்கும்படி குரைத்தன. என்னை கடித்துக் குதறுவதற்கு தடையாக இருந்தது, என் அளவு உயரமான இரும்பு கிரில் கேட்.

“சார்”, என் குரலைக் கேட்டு வெடுக்கென்று முகத்தை வாசலுக்கு நேராக அவர் திருப்பினார்.

“புரொபசர் சீனிவாசன் வீடு ...?”

“தெரியாது”. முகத்தை மறுபடியும் சிறப்பு மலரின் வண்ணப்பக்கங்களுக்குள் புதைத்தார். வாசித்துவிட்ட வரி விட்டுப்போன எரிச்சலோடு என்னவோ, தலையைச் சொறிந்தார். அல்லது வேற்று முகம் கண்ணில் பட்டுவிட்ட வெறுப்போ? தெரியவில்லை. வாசலைத் திறந்து நாய்களை ஏவிவிட்டு என்னைக்



கடிக்க வைக்கவில்லை. அவர் செய்த அந்த ஒரு நன்மைக்காக அவருக்கு நன்றி சொல்லத் தவறிவிட்டேன். விட்டில் காலில் கட்டிவிடப்பட்ட நேரத்தின் பின்னால் நான் நடந்துகொண்டிருந்தது. டி-வழியாக. திக்குத் தெரியாமலும் முகங்கள் தெரியாமலும். தெரிந்த ஒரே முகம், ஆசைஒளிரும் என் மகனுடைய விடலை முகம்.

டி - யின் விலாவிலிருந்து இரு எலும்புகள் சுழன்று மீண்டும் தெருக்களாகப் பரிணமித்த திகைப்பில், அந்தச் சந்திப்பில் நின்று விட்டேன்; பி.ஏ .நாசம்! இந்த அனந்தசயனம் காலனிக்கு முடிவே இல்லையா? தெருக்கள் பின்னி கிடக்கும் இந்த காலனி, போய் போய் அலறும் கடல் திரைகள் நுரைகள் கக்கும் விளிம்பைத் தொட்டுவிடுமோ?

பச்சைக் குழந்தை கூட சொல்லித் தருவாங்கொ!! கண்ணில் எந்தக் குழந்தையும் வராத ஏக்கங்களைக் கொப்பளித்துக் கொண்டிருந்தது மனம்.

டி-யிலிருந்து பி-யை நோக்கி திரும்பும்போது தொண்டையில் தங்கியிருந்த கடைசித் துளி ஈரமும் வறண்டுவிட்டது. இப்போதைய தேவை பேராசிரியரின் வீடு அல்ல; வறண்டு சுருங்கும் தொண்டையை நனைத்து, குரலை உருவி எடுக்க ஒரு கோப்பை தண்ணீர். சட்டை வியர்வையில் பொதுமியிருந்தது. உச்சியிலிருந்த வடிந்த நீர், முகத்தில் சால்கள் கீறின. வேட்டி முந்தானையைத் தூக்கி முகத்தைத் துடைத்துக் கொண்டேன். நின்றிருந்த இடத்தில் காலில் குளிர்ச்சி அனுபவப்பட்டது. எதிர் வீட்டின் வெளி மடையிலிருந்து தண்ணீர் வடிந்து தெருவுக்கு வந்து கொண்டிருந்தது. அந்த வீட்டின் சுவரில் ஒட்டியிருந்த பெயர்ப் பலகையைக் கண்கள் தடவின. எஸ்.கே. சங்கர் ஐ.ஏ.எஸ் (ரிடையர்டு) அரசை மக்களோடும், மக்களை அரசோடும் தொடர்புபடுத்தித் தேய்ந்துபோன கண்ணி. அந்த ஈரம் அந்த நெஞ்சிலுமிருக்குமென்ற நம்பிக்கை அந்த வாசல் அருகில் என்னை இழுத்தது. முற்றத்துத் தண்ணீர்க் குழாயில் பழுதடைந்த நல்லியி-ருந்து தண்ணீர் பீச்சி அடித்துக் கொண்டிருந்தது.

“சார்...”

சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருந்த அவருடைய

தலை வழுக்கையைச் சுற்றி நாலைந்து வெள்ளைப் பூனைகளின் பாதுகாப்பு .

"யாரது, என்ன வேணும்" ஓர் உயர் அதிகாரியின் கவுரவப் பார்வை. கேள்வியில் கடுமை. அந்தக் கூரிய பார்வையின் முனையில் நான் ஒரு திருடனாக விழுந்து தொங்கி நின்றேன்.

"குடிக்கக் கொஞ்சம் தண்ணி.."

"வேற எங்கயாவது கேட்டுப்பாரும்"

"சரி சார் புரொபசர்..."

தொண்டைச் சுளுக்கிலிருந்து உருவிய என் குரல் காதில் விழாமலிருக்க, நாற்கா-யி-ருந்து எழும்பி அவர் உள்ளே போய் விட்டார். நான் திரும்பி நடந்து கொண்டிருந்தது பேய்வீடுகளை இருமருங்கிலும் தாங்கி நிற்கும் ஒரு பாழ் பூமியில் நடக்கையில் வானத்தைப் பார்த்தேன். நேரம் தெரிந்து கொள்ள, சூரியனை வானத்தில் காணவில்லை. அது என் கண்களுக்குள்ளிருந்து எரிந்தது.

அனல் துப்பிய என் கண்ணெதிரில் அப்போது அங்கு வந்து கொண்டிருந்த கிழவரின் தோளில் இருந்தது ஒரு செவ்வாழைக் குலை. கிழவரின் கால் முட்டளவு புழுதி அப்பியிருந்தது. செவ்வாழைக் குலை என் வயிற்றிற்குள் ஒரு பு-யைக் கட்ட விழ்த்து விட்டது.

"பாட்டா" என் பார்வை செவ்வாழைக் குலையைத் நக்கி எச்சில் வடித்தது.

"அம்மா" ஓர் ஆறுதலுடன் கிழவர் குலையைத் தோளிலிருந்து இறக்கி வைத்தார்.

"விய்க்கவா?"

"இல்லை." கிழவரின் முகம் வாடி சோர்ந்து காணப்பட்டது. அவர் இரங்கிக் கேட்டார். புள்ளேய், கலக்டராபீசிலே வேலை பாக்குத பார்வதிக்க ஊடு எங்கே? சொல்- தா மக்களெ, விடிஞ்சதிலிருந்து நாயா அலையுதேன்.

கம்ப்யூட்டர் சயன்ஸ் வகுப்பில் சேருவதற்காக விடியும் வரை விழித்திருந்து பாடம் படித்துத் தேறிய என் மகனுடைய முகம் என் மனசில் ஒரு உணர்ச்சிக் கொத்தளிப்பை உண்டு பண்ணியது.



மகனுக்காகப் பேராசிரியர் வீட்டை மேலும் அலைந்து கண்டுபிடிப்பதா அல்லது கிழவர் தேடி வந்த வீட்டைக் கண்டுபிடிக்க அவருக்கு ஒத்தாசை செய்வதா??

"ஏன் பேசல்லெ?"

"தெரியாது",

ஆரட்ட கேட்டாலுமு் தெரியாது தெரியாது. அவெொ என் மாவெொ புள்ளெ பேத்தி மேல் விலாசம் எழுதி தான்னு கேட்டபோ, வேண்டாம் பாட்டா, கேட்டா பச்சக்குழந்தைகூட சொல்-தருமென்னு சொன்னா.

"என் தலை எழுத்தும் இதேதான்."

"இங்க எங்கயாவது கொஞ்சம் தண்ணி குடிக்க கெடக்குமா பாட்டா?"

"இந்தப் பாலை வனத்திலே நீரூற்று ஏது பாட்டா"

"மவொ புள்ளெ பேத்தி குழந்தெ உண்டாயிருக்காணு அவளெ பாக்க இந்த குலையும் சொமந்துட்டே வந்த இந்த அவஸ்தெ".

"பாட்டா"

"ஒனக்கு பைக்குதா?"

"என் பார்வையின் வாசகத்தைப் பார்வை மங்கிய கண்கள் வாசித்தன."

"பசிக்குது"

"இன்னா இணிஞ்சு தின்னு"

"பேத்திக்கு...."

"அவெொ கிடப்பா அங்கெ என்னெ நாயா அலைய வச்சுபோட்டா இல்லையா? "

மீதி பழத்தைத் தூக்கி தோளில் வைத்துக்கொண்டு கிழவர் நடந்தார். நான் அவரைப் பின் தொடர்ந்தேன். பின் தொடர்ந்து கொண்டிருந்த என் தலை குனிந்தது. ஒரு துக்கத்தின் நிழல் என்னை பின் தொடர்வது போல ஏதோ இறந்து கிடக்கும் துக்க மவுனம். அனந்தசயனம் காலனியைச் சூழ்ந்து கொண்டிருந்தது. என்

மகனுக்கு என்ன பதில் சொல்வது!

“ஏய் பழக்காரா, பழம் என்ன விலை?”

குரல் கேட்டதும் கிழவர் நின்று விட்டார் நானும் கூட. கிழவர் அவள் நின்று கொண்டிருந்த மாடியைப் பார்த்தார்.

“பழமா? அம்பது பைசா?”

“பத்து பழம் குடும்.”

“அவள் இறங்கி வந்தாள், அவளது தோரணையை ஏற இறங்கப் பார்த்தார். கிழவர்.

“எவ்வளவு பணம் வச்சிருக்கா?”

“அஞ்சு ரூபா.”

“அஞ்சு ரூபாய்க்கு ஒரு பழம்தான் தருவேன். மனுசன் மாருக்குத்தான் அம்பது பைசாவுக்குக் குடுப்பேன். அம்பது பைசாயும் கொண்டு பழம் நொட்டவந்தியாக்கும், நாங்கொ ஏதாவது தெரியாத இடம் கேட்டா சொல்லுக்க உனக்கு நாக்கு எளவாது, அஞ்சு ரூபா பழத்தை அம்பது பைசாவுக்கு நொட்டிட்டு போவ ஒனக்கெல்லாம் நாக்க எளவும்”

“பாட்டா ஒண்ணும் பேசாதெங்கொ அரசு அதிகாரிகளும் மேல் மக்களும் வாழக்கூடிய இடம்”. நான் வேண்டினேன். “நாயை அவிழ்த்து விட்டுவிடுவார்களோ என்ற பயம் எனக்கு”.

“எவனானா எனக்கு என்னடா?” கிழவரின் முக பாவனை மாறிவிட்டது. முகத்தில் ரத்தச் சிவப்பு கண்களில் கோப முழக்கம் “நா அலஞ்ச அலச்சல் எனக்குதான் பிலே தெரியும்” கிழவர் என்னைக் கோபமாக முறைத்துக் கொண்டு விறுவிறுவென்று நடந்தார்.

“பாட்டா”

“சோ-யெ பாருடா” - அலறல் கேட்டுத் திடுக்கிட்டேன்.

நெஞ்சு நிறைய பளுவை ஏற்றிக் கொண்டு டீக்கடைக்கு வந்தேன். டவுன் பஸ் வரும் திசையை நோக்கி ரோட்டோரத்தில் குந்தி உட்கார்ந்து கொண்டிருந்த கிழவரின் கையில் பழக்குலை இல்லை.



“பாட்டா பழம்?”

“இதிலே போன குழந்தெ புள்ளியளுக்குப் பிச்சுக் கொடுத்தேன்.”

டவுன் பஸ்ஸில் அருகருகே உட்கார்ந்து கொண்டிருக்கும்போது கிழவர் குளிர்ந்த குர-ல் நிதானமாகச் சொன்னார்.

“மக்கா எங்கெ ஊருக்கு ரோடு இல்லை கேட்டியோ, ஒரு பாலம் போட்டாதான் ரோடு வரும். வள்ளத்திலெ ஏறி அக்கரை போய் ஒரு மைல் நடந்துதான் டேய் கார் ஏறணும். எங்களுக்குப் படிப்புமில்லை கேட்டியோ, இருந்தாலும் அந்தச் சுற்று வட்டாரத்திலெ ஆரு, எவரு, எங்கெ எங்கெ தங்கியிருக்காங்கென்னு நாங்கொ எதுக்கு தெரிஞ்சு வச்சிருக்கோமென்னு இப்பம் உனக்கு மனசிலாச்சா டேய்?”

டவுன் பஸ் இறங்கிய இடத்தில் இருவரும் இருதிசைகளாகப் பிரிந்தோம்.

“பாயின்ட் டூ பாயின்ட்” பஸ்ஸின் கருப்பைக்குள் நான் சுருண்டேன். பஸ் வந்த வழியே இரைந்து பாய்ந்து அவிழ்க்க, நான் கிழவரின் பின்னால் ஓடிக்கொண்டு இருந்தேன்.

இரவு வீட்டில் எல்லோரும் தூங்கும் நேரத்தில் விழித்துக் கொண்டிருந்த மகன் ஓடி வந்து ஆவலோடு கேட்டான்.

“வாப்பா புரொபசரை பாத்துச் சொன்னீளா?”

அவன் முகத்தி-ருந்து என் முகத்தை திருப்பிக் கொண்டேன். நான் என் அறையை நோக்கி நடக்கும்போது, பதிலுக்காக அவன் என்னைப் பின் தொடாந்து வந்தான்.

“சொன்னேன்” சொல்லியபோது ஒரு காரை முள் முனை என் இதயத்தில் துளைத்து ஏறியது. மகிழ்ச்சியால் ஒரு பாட்டை முனகிக் கொண்டு என் மகன் படுக்கையில் விழுந்தான்.

மேஜை வ-ப்பைத் திறந்தேன். பேராசிரியர் சீனிவாசன் அவருடைய முகவரி எழுதித் தந்த காகித துண்டைத் தேடி எடுத்தேன். “டி-90 அனந்தசயனம் காலனி.”

மூன்று நாய்களை அவிழ்த்து விட்டிருந்த அறிவுஜீவியின் வீட்டை ஒட்டிய இருமாடிக் கட்டிடம் அது.

## பயிற்சி.

1 அனந்தசயனம் காலனி என்னும் கதையைக் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் சுருக்கி எழுதுக.

2. புரொபசர் சீனிவாசனின் வீட்டைக் கண்டுபிடிக்க ஆசிரியர் பட்ட துயரங்களை எழுதுக.

3. பேராசிரியர் சீனிவாசன் அவர்களுடைய முகவரியைக் கண்டுபிடித்து, அவருடன் அளவளாவியதாக ஒரு கட்டுரை எழுதுக.

# 10. கரையும் உருவங்கள்.

*—வண்ணநிலவன்—*

தலையைக் குனிந்த படியே நடந்து வந்து கொண்டிருந்தான். அந்தத் தெருவில் நடமாட்டம் குறைந்துவிட்டது. ஒரு வீட்டுக்குள்ளிருந்து, 'ராதையின் நெஞ்சமே...' கேட்டது. வழக்கமாக எந்த இடத்தில் அந்தப் பாடலைக் கேட்டாலும் நின்று ரசித்துக் கேட்பவன், இன்று நிற்காமல் போகிறான்.

தெருவின் திருப்பத்தில் மட்டும் ஒரு டியூப்லைட் எரிந்து கொண்டிருந்தது. டீக்கடைக்காரன் சாமான்களையெல்லாம் ரொம்பச் சொந்தத்துடன், தெருவில் பரப்பிவைத்துக் கழுவிக் கொண்டிருந்தான்.

“என்ன அண்ணாச்சி... படத்துக்குப் போய்ட்டு வர்றீங்களா?”

“இல்லேப்பா...” என்று தேங்கிக்கிடந்த கரித் தண்ணீரைத் தாண்டிக் குதித்தான். செருப்பு அறுந்து விட்டது. இரண்டு நாள்களாகப் பயமுறுத்தி வந்த செருப்பு, இன்று வீட்டுக்கருகில் ஆள் நடமாட்டமற்ற ராத்திரி வேளையில் அறுந்து போனது ஓரளவு நிம்மதியாய் இருந்தது; ஆனாலும் நாளைக்குத் தைக்க வேண்டும். பதினைந்து பைசாவாவது ஆகும்....

குனிந்து அந்தச் செருப்பையும் மற்றொரு செருப்பையும் கழற்றிக் கையில் எடுத்துக்கொள்கையில் மனத்துள் பொங்கிய வேதனையை, 'சே' எனக் கூறிக் குறைக்க முயன்றான். பலசரக்குக் கடையின் முன்னால் பலகை பெஞ்ச் காலியாய்க் கிடந்தது. அதிலேகூடப் படுத்துவிடலாம். எஸ். எஸ். எல். சி.படிக்காதிருந்தால் ஒருவேளை அதில் படுக்கத் தைரியம் வந்திருக்கக் கூடும்.

தொடர்ந்து நடந்தான்.

வீட்டுக்குள் விடிவிளக்கு மட்டும் எரிந்து கொண்டிருந்தது. அடுப்படியில் விளக்கொளி தெரிகிறது. கதவைத் தட்டக் கூச்சப்பட்டு வெளியே நிற்கிறான். தெருவாசல் ஜன்னலிருட்டில் முகம் தெரிகிறது.

யாரென்று தெரிகிறதுக்குள் வாசல் கதவு திறந்து கொண்டது. அக்காதான் கதவைத் திறந்தது. அந்த அரை இருட்டில் அவள் தலையி-ருந்த பிச்சிப் பூவின் வாசனை தனியே குளிர்ச்சி தந்தது.

“ஏண்டா ஊமையா வாசல்லே நின்னுக்கிட்டிருக்கே? கதவைத் தட்டினா என்னடா? இவ்வளவு நேரமாச்சே, வெளியே வந்து பாாத்துட்டுப் படுப்போமேன்னு, வாசலுக்கு வந்தேன்... எவ்வளவு நேரமா இப்படி நிக்கிற...? ஏண்டா இப்புடி ஆயிட்டே.. கதவைத் தட்டினாத்தானே யாரும் திறப்பாங்க... நல்ல புள்ளைடா நீ? சரி... சரி... வா...”

திண்ணைக்கு அடியில் குனிந்து மெதுவாக சத்தம் கேட்காமல் செருப்பைக் கீழே வைத்தான். அக்கா கதவை தாழ்ப்பாள் போட்ட சத்தத்தில் விழித்துக் கொண்ட அப்பா தலையைத் தூக்கிப் பார்த்தார்.

“யாரு சங்கரனா? எங்கேடா இவ்வளவு நேரமா சுத்திப்பிட்டுவாரே? காலாகாலத்துல வந்து கடனப் பத்திட்டுப் படுத்தா என்ன? பொட்டப்புள்ள எம்புட்டு நேரத்துக்கிடா முழிச்சிக்கிட்டு இருப்பா...?”

சுவரோடு சுவராய் ஒதுங்கி நின்றவனைப் பார்த்து நீ வாடா எனக் கூறி உள்ளே போனாள் அக்கா. அடுப்படியைக் கழுவி விட்டிருக்க வேண்டும். இளம் பச்சை வர்ணத்தில் பளபள வென்றிருந்த சில இடங்களில் ஈரம் காய்ந்து போயிருந்தது. ஒரு சாக்குத் துண்டை விரித்து, சங்கரனை உட்காரச் சொன்னாள்.

“எனக்குச் சாப்பாடு வேணாம்” என்று நிலைப்படியருகே வந்து சொல்லி விட்டுத் திரும்பிப் போக முயன்றான் அவன். வேகமாக வந்து, அவன் கையைப் பிடித்திழுத்து நிறுத்தினாள்.

அவனது முகத்தையே கொஞ்ச நேரத்துக்குப் பார்த்தாள். அவன் தலையைத் தொங்கப்போட்டுக் கொண்டான்.

“எதுக்குடா வேண்டாம்ங்கிற.... வா வந்து சாப்டுட்டுப்படு... பெரிய இவன் மாதிரிதான்.....”

இழுக்காத குறையாக இழுத்து வந்து, தோளைப் பிடித்து அமுக்கி, சாக்கின் மீது உட்காரப்பண்ணினாள். தயாராய்ப் பிசைந்து வைத்திருந்த சாப்பாட்டுத் தட்டை அவன்முன் வைத்துவிட்டு சிறிய மரப்பலகையைப் போட்டுக் கொண்டு எதிரே உட்கார்ந்து கொண்டாள்.



அவன் சாப்பிடவில்லை. தட்டையே முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

“என்னடா பார்த்துகிட்டேயிருக்கே... சாப்பிடு... ம்.... மத்தியானம் சாப்பிட்டதுதானே..... சாயந்தரங் காப்பிகூடக் குடிச்சிருக்க மாட்டியே... சாப்பிடு.”

அவளுடைய அழுத்தமான பிரியத்தை அவனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. பொங்கி வந்த அழுகை தொண்டைக் குழியில் மரக்கட்டை மாதிரி தடுக்கிக்கொண்டு நின்றது,

பலகையை இழுத்துப் பக்கத்தில் போட்டு உட்கார்ந்து கொண்டாள். “ம்... கையைக் காட்டு...” சோற்றை உருட்டிக் கையில் போட்டாள்.

“ஒனக்கு மட்டுமாடா வேலையில்லாமே ஊர்ல இருக்கே? எவ்வளவு பிள்ளைகள் வேலையில்லாம உன்னைமாதிரி படிச்சுப் போட்டு வீட்ல இருக்கு. வீட்டுக்கு வீடு வாசப்படி. எனக்கும் தான் வயசும், பொழுதும் ஏறிகிட்டே போகுது. நான் யார்கிட்டேடா போய் அழுட்டும்?...ம் கையை நல்லா விரி, சோறு கீழே சிந்திரப் போகுது.. யார் வீட்டுக்கோ வர்ற மாதிரி தயங்கித் தயங்கி வாரே.... யார் வீட்லேயோ சாப்பிடுத மாதிரி கூச்சப்படுறே..... ம்...... வாயில் போடு.

இன்னும் கொஞ்சம் சோறு கேட்டு வாங்கிச் சாப்பிட்டான். அங்கணத்தில் கைகழுவத் தண்ணீர் ஊற்றினாள்.

“பார்த்துப் போ... இதுதான் கால்மாடும் தலைமாடுமா படுத்துக் கெடக்கும். இந்தா, இதெல்லாம் எடுத்து வச்சிட்டு வாரேன். போயிப் படுத்துக்கோ...”

வேட்டியில் கையைத் துடைத்தபடி அறைக்குள் போனவன் விளக்கைப் போட்டான். பெரிய தம்பி புரண்டு படுத்தான். ஊஞ்சல் சத்தம் எழும்பித் தேய்ந்தது. அந்தச் சத்தத்தை அவனுக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து கேட்டு வருகிறான். அது அவனுக்கு ரொம்பப் பிடித்தமான சத்தம். அந்த ஊஞ்சலில் தம்பி, அக்கா, அவன் எல்லோரும் லீவு நாள்களில் பஸ் விளையாடுவார்கள். அவன்தான் டிரைவர் கை நிறைய காலண்டர் தாளைக் கிழித்து வைத்திருக்கும் தம்பி கண்டக்டர். ஊஞ்சலை ஓடி ஓடி ஆட்டிவிட்டுவிட்டுக் கடைசியில் ஏறிக்கொள்ளும்போது, ஒரு முறை தவறி விழுந்து நெற்றியில் வெட்டிவிட்டது. நெற்றித் தழும்பிற்கு அவனது கை தானாகவே போயிற்று.

தம்பியின் சிதறிக்கிடந்த புத்தகங்கள் எல்லாம் எடுத்து அடுக்கி வைத்தான். நன்றாகப் படிக்கும் தம்பியைக் கஷ்டத்தோடு கஷ்டமாய் அப்பா படிக்க வைக்கிறார். ஆனால் அவனுக்கோ..... படிப்புமில்லை, வேலையுமில்லை.

சட்டையைக் கழற்றிக் கொடியில் போட்டான். படுக்கையில் சுவரோரமாகச் சாய்ந்து உட்கார்ந்து கொண்டான். தூங்கப் போறதில்லை. இருந்தாலும் படுத்தே ஆகவேண்டும். இது என்ன கஷ்டம்? வீட்டுக்குள்ளிருக்கவே சங்கடமாக இருந்தது.

அக்கா வந்தாள், அவனுடைய தலைமாட்டில்தான் அவளுக்குப் படுக்கை. "இன்னும் என்ன யோசனை பண்ணிக்கிட்டிருக்கே! படுக்க வேண்டாமா?"

பெருமூச்சுவிட்டான்.

இவன் தலையணையிலும் அவள் தலையணையிலுமாகச் சேர்ந்து உட்கார்ந்து கொண்டாள். மங்கிய விடி விளக்கு வெளிச்சத்தில் ரொம்ப அழகாக இருந்தாள். வீட்டில் எல்லாரையும்விட அவள் நல்ல சிகப்புதான். இருந்தும் கல்யாணம் ஆகவில்லை.

"அந்த கம்பெனில யாரோ உன் பிரண்ட் இருக்கான், வேலை விஷயமா வரச்சொன்னான்னு சொன்னியே, பார்த்தியா?"

கொஞ்சநேரம் பேசாமல் இருந்துவிட்டு மெதுவாகப் பேச ஆரம்பித்தான்.

"பார்த்தேன். நாளன்னைக்கு வரச்சொல்லி விட்டிருக்கான். வழியில் லாலா சத்திர முக்கில் ஆறுமுகத்து மாமாவப் பார்த்தேன். நாளைக்குத் தாளையூத்துக்கு வா. எங்க சூபர்வைசர்கிட்ட சொல்லலாம்னு சொன்னா..."

ரொம்பப் பயந்து தாழ்ந்த குர-ல் பேசினான்.

"அவுஹ வீட்டுல எல்லோரும் சௌக்கியந்தானா? அவுஹ பையன் வேலையிலே சேர்ந்தாச்சாமே...ம் பின்னே நம்ம அப்பாவை மாதிரியா? இவுஹளுக்கு இருக்கிற செல்வாக்குக்கு யார்கிட்டயாவது சொல்-யடிச்சு முயன்றாக் கிடைக்கும்..."

அந்த மாமாவின் பையனைக்கூட அக்காவுக்குப் பேசி விட்டு, ஒன்றும் நடக்கவில்லை.



"நாளைக்கு நீ தாளயூத்துக்கு எப்பப் போகப்போற?"

"என்னத்தைப் போகச் சொல்லுதே. அங்கேன்னாப்பலே வேலையை வெச்சுகிட்டுக் காத்திட்ருக்காஹளாக்கும்."

"போடா முட்டாள். அந்த மாமா ஒன்னைய மெனக்கெட்டுப் பாத்துக்கூப்பிட்டிருக்கா; போய்ட்டு வருவியா....ம் பஸ்ஸுக்குக் காசு வைச்சிருக்கியா? நீ காசு இல்லாட்டா சொல்லாமக் கொள்ளாம நடந்தேக் கூட போயிருவியே..."

"ம் இருக்கு....."

"பொய்... சொல்லாதே," கொடியில் கிடந்த அவன் சட்டையை உட்கார்ந்தபடியே கையை நீட்டி இழுத்தாள். ஒரு ஐந்து பைசா கீழே விழுந்தது. சட்டையில் இருந்து ஒரே வியர்வை வாடை.. பைக்குள் கையை விட்டுத் தேடினாள். இரண்டு கசங்கிப்போன பஸ் டிக்கெட்டை எடுத்து வெளியே போட்டாள்.

"எங்கடா காசு வச்சிருக்க! எனக்கு ஒன்னையத் தெரியாதாடா" என்று எழுந்துபோய் பீரோவைத் திறந்தாள். அவளுடைய துணிகள் இருந்த தட்டி-ருந்து ஒரு சாக்லெட் டப்பாவை எடுத்தாள். டப்பாவி-ருந்த சின்ன குங்குமச் சொப்பை எடுத்துக்கொண்டு வெளிச்சத்திற்கு வந்தாள். மடக்கி வைத்திருந்த ஒரு ரூபாய் நோட்டைப் பிரித்து அவனிடம் நீட்டினாள்.

"எதுக்கு அக்கா..." மெல்லச் சொன்னான் அவளை அண்ணாந்து பார்த்து.

"சரிதாண்டா... ரொம்ப பிகு பண்ணிக்கிடாதேடா..." என்று சொல்-விட்டுச் சிரித்தாள். மீண்டும் அருகில் வந்து அமர்ந்தவள், சட்டையை எடுத்துக் கைமடிப்பைப் பிரித்தாள். அவனிடமிருந்த ரூபாயை வாங்கி அந்த மடிப்புக்குள் சுற்றினாள்.

"இன்னைக்குத்தானே இந்தச் சட்டையைப் போட்டே.... அதுக்குள்ளே ஒரே வேர்வையா ஆக்கிட்டு வந்திருக்கியே, சோப்புப் போட்டுக் குளிக்கிறதை ஐயா விட்டாச்சு போ-ருக்கு,"

அவளை நேருக்கு நேர் பார்த்தான்.

"எல்லாம் நான் பார்த்துகிட்டுத்தானே இருக்கேன். இவ வீட்ல கெடக்கவதானே இவளுக்கு என்ன தெரியும்னு நெனச்சுகிட்டு

# சிறுகதை எழுதுவது எப்படி?

அன்பு மாணாக்கர்களே! இதுவரை பத்துக் கதைகளைப் படித்தீர்கள். கதை எழுத வேண்டும் என்ற ஆர்வத்தைப் பெற்றிருப்பீர்கள். அதற்கான வழிகள் பற்றி வல்லுநர்கள் கூறுவதைப் படித்துப்பாருங்கள்.

சிறுகதைகள் குறுகிய காலத்தில் படித்து முடிப்பதற்காகவே தோன்றின; எனினும், அது ஒன்று மட்டுமே அவற்றின் இலக்கணமாகிவிடவில்லை. இலக்கியம் பல பிரிவுகளை உடையது: ஒவ்வொரு பிரிவுக்கும் ஒவ்வொரு வடிவம் உண்டு; தனித்தனியே சில இலக்கணங்கள் உள்ளன. எனவே, குறுகிய காலத்தில் படித்து முடிக்கக் கூடியது, என்பது சிறுகதைகளின் வெளி வடிவ அமைப்புக்குரிய இலக்கணமேயன்றி, அதன் உள்ளமைப்புக்குரிய இலக்கணங்கள் வேறு. இந்த இருவகை அமைப்புகளுக்கும் உரிய இலக்கணங்களை ஒன்று சேர்த்து, ஸாமர்ஸெட் மாம் என்ற மேலை நாட்டுச் சிறுகதை ஆசிரியர் கூறுகிறார்:

“சிறந்த சிறுகதையில் நல்ல கதையம்சம் இருக்க வேண்டும். அது ஏதாவது ஒரு நிகழ்ச்சியை மட்டுமே விவரிப்பதாக இருக்க வேண்டும். ஒரு மூச்சில் படித்து முடிக்கக்கூடியதாக அதை அமைக்க வேண்டும். அது தனக்கென ஒரு தனிப்பண்பைக் கொண்டிருக்க வேண்டும். படிப்போர் மனத்தில் ஆழப் பதிந்து கிளுகிளுப்பை ஏற்படுத்த வேண்டும். ஆரம்பத்திலிருந்து முடிவு வரையில் தொய்வின்றி ஒரே சீராகச் செல்ல வேண்டும்.”

***– ஸாமர்ஸெட் மாம்***

“சிறுகதை என்பது இலக்கியத்தில் ஒரு பகுதி; இலக்கியத்தின் ஒரு வடிவம். இலக்கியம் என்பது ஒரு கலை. கலையைப் படைப்பது படைப்புத்திறன். படைப்புத்திறனை ஒருவன் இன்னொருவனுக்குக் கற்பிக்க முடியது; ஒருவனிடமிருந்து இன்னொருவன் கற்றுக்கொள்ளவும் முடியாது. அப்படிக் கற்பிக்க முடியாமலும் கற்றுக்கொள்ள முடியாமலும் இருப்பதுதான் படைப்புத்திறன்.

படைப்புத்திறனைக் கற்பிக்க முடியாதா? இது என்ன புதிர்? என்று சிலர் ஆச்சரியப்படலாம். ஆம்! அதைக் கற்பிக்க முடியாதுதான். விருத்தப்பாவை இயற்றுவது எப்படி என்று ஒருவன் மற்றொருவனுக்குக் கற்பிக்கலாம். கற்றுக் கொண்டவன் விருத்தப்பாவை இயற்றிவிடலாம். ஆனால் அந்த விருத்தப்பா ஒரு கலைப்படைப்பாக, ஒரு சிறந்த கவிதையாக அமைவது, இயற்றியவரின் திறமையைப் பொறுத்த விஷயம். உலகில் எல்லா நாடுகளிலும் கோடிக் கணக்கானவர்கள் இலக்கிய இலக்கணங்களைக் கற்றிருக்கிறார்கள். ஆனால் கவிஞர்கள் கோடிக்கணக்கில் இருக்கவில்லை. கம்பர், ஷேக்ஸ்பியர், காளிதாசர், தாந்தே என்று ஒரு சிலவரைத் தான் மகாகவிகள் என்று சொல்கிறோம். அந்த மகாகவிகள் மற்றவர்களிடம் இலக்கணத்தையும், இலக்கியத்தையும், அதன் நயங்களையும்தான் கற்றுக்கொண்டார்களே ஒழிய படைப்புத் திறனைக் கற்கவில்லை.

கதையின் மையமான அம்சமே, அதன் கருவே, கதையின் உருவத்தையும், நடையையும் நிர்ணயிக்கக்கூடியதாகும். எனவே கதையின் சிறப்புக்கு மூலகாரணமாக இருப்பது அதன் கருதான். கருவில் திரு இல்லையென்றால், கதையிலும் வளம் இராது. எனவே கரு பலமானதாக இருக்கிறதா என்று பார்த்துக்கொள்ளவேண்டும். அடுத்தபடி அந்தக் கருவுக்கு கொடுக்கப்பட்ட கதை - உருவம் - சரிதானா என்று பார்க்கவேண்டியது அவசியம். அந்த உருவத்தில் கதையின் கரு சிறப்பாக முழு வளர்ச்சி பெற்று, கதைக்குச் சிறப்பைக் கொடுக்கிறதா, அல்லது வேறொரு உருவில் கதையை எழுதியிருந்தால் இன்னும் நன்றாக இருக்குமா என்று கவனிக்கவேண்டும். எழுதப்பட்ட கதைக்குக் கொடுக்கப்பட்ட உருவத்தைவிட, வேறோர் உருவம் நன்றாக இருக்குமென்று தோன்றினால் அந்த உருவத்தில் எழுதவேண்டும். இதற்கு, உருவத்தைப் பற்றிய உணர்வு எழுத்தாளனுக்கு இருக்கவேண்டியது அவசியம். உருவம் என்றால் என்ன? மையக் கருத்தைக் கச்சிதமாகவும், குன்றாமலும், குறையாமலும் சரியான இடத்தில் தொடங்கிச் சரியான இடத்தில் முடிப்பது உருவத்திற்கு மேற்போக்கான ஒரு விளக்கமாகும்.

வேண்டாத விளக்கங்களோ, வர்ணனைகளோ இருக்கக்கூடாது. வேண்டிய விளக்கங்களும், வர்ணனைகளும் இல்லாமல் போய்விடவும் கூடாது. உருவம் அமைவதற்கு இன்றியமையாத விஷயங்கள் இவை. கதையில் சில பகுதிகளைக் குறைத்து விட்டால் உருவம் கெடாது, அல்லது உருவம் அமையும், அல்லது உருவம் இன்னும் கச்சிதமாக அமையும் என்று தோன்றினால் அந்தப் பகுதிகளைக் குறைத்துவிட



வேண்டும். சொல்லப்போனால், ஒரு சிறுகதையில் தேவையில்லாமல் ஒரு பகுதி மட்டுமல்ல, ஒரு வார்த்தையோ, ஒரு காற்புள்ளியோ ('கமா') கூட இருக்கக்கூடாது. இருந்தால் அந்த அளவுக்கு அது கதைக்குக் கேடு செய்யும்.

கதையின் கருத்தும், உருவமும், நடையும் சிறப்பாக இருப்பதுடன், தங்குதடையற்ற ஓட்டமும் இருக்கிறதா என்று கவனிக்கவேண்டும். கதையை அந்தரத்தில் நிறுத்தி வைக்கும் எந்த அற்புத வியாக்கியானமும் சரி, வர்ணனையும் சரி கதைக்கு அறவே ஆகாத விஷயம் என்று கொள்ளவேண்டும்.

கடைசியாகச் சில முக்கிய கருத்துகள் பின்வருமாறு:

1. சிறு கதை எழுதுகிறவன் வாழ் நாளெல்லாம் மற்றவர்களுடைய சிறுகதைகளைப் படித்துக்கொண்டே இருக்க வேண்டும்.
2. சிறுகதைகளோடு, காவியம், நாவல், நாடகம் போன்ற இலக்கியங்களையும், உலக அனுபவங்களையும் கற்றுக்கொண்டே இருக்க வேண்டும்.
3. தான் காண்கிற, கேட்கிற, படிக்கிற, அனுபவிக்கிற ஒவ்வொன்றினுடைய உண்மையையும் சாரத்தையும் கண்டறிவதற்கு முயலவேண்டும்.
4. இலக்கியங்களைப் படிப்பதோடு, இலக்கிய விமர்சனங்களையும் படிக்க வேண்டும்.
5. பிறர் செய்யாத ஒரு காரியத்தை அல்லது ஒரு புதுமையைச் சாதிப்பதற்கு மட்டும்தான் சிறுகதை எழுத வேண்டும்.
6. சொந்தப் புத்தியை உபயோகிக்காமல் பிறர் கருத்தை அப்படியே ஏற்கும் கண்மூடித்தனமோ அல்லது அலட்சியமாக உதாசீனம் செய்யும் அகம்பாவமோ கூடவே கூடாது.
7. எழுதும் பயிற்சியை நிரந்தரமாக வைத்துக்கொள்ள வேண்டும். நீண்ட காலம் எழுதாமல் நிறுத்திவைப்பது தவறு. எழுத எழுதத்தான் எழுத்து சிறக்கும். 'சித்திரமும் கைப்பழக்கம்' என்பது போல், எழுத்துச் சித்திரமும் கைப்பழக்கத்தால் தான் சிறக்கும்.
8. நடைமுறை வாழ்க்கையை ஆதாரமாக வைத்து எழுதும் கதைகளில் நடக்கமுடியாத சம்பவங்களையும், காண முடியாத பாத்திரங்களையும், கேள்விப்படாத பெயர்களையும் புகுத்தவே கூடாது."

**– கு. அழகிரிசாமி**